இலங்கை மத்திய வங்கி

# ஆண்டிற்கான பொருளாதார மீளாய்வு 2024

# இலங்கை மத்திய வங்கி

## ஆண்டிற்கான பொருளாதார மீளாய்வு

2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 80 (3)ஆம் பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்ட நியதிச் சட்டத் தேவைப்பாட்டை நிறைவேற்றும் வகையில் இவ்வறிக்கை வெளியிடப்படுகிறது.

**2024**

கருமபீட விற்பனை - பிரதியொன்று ரூபா. 600

ISBN 978-624-5917-92-1

---

பிறின்ட்கேயார் யுனிவர்சல் (பிறைவேட்) லிமிடெட், 77, நுன்கமுகொட வீதி, களணியில் அச்சிடப்பட்டு
இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01 இலுள்ள இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டது.

**முனைவர். பி நந்தலால் வீரசிங்க**
**ஆளுநர்**

**இலங்கை மத்திய வங்கி**
30, சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01, இலங்கை.

2025 ஏப்பிறல் 02

**மாண்புமிகு அநுர குமார திஸாநாயக்க**
இலங்கையின் சனாதிபதியும்
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும்
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
செயலகம்
கொழும்பு 01.

அன்புள்ள ஐயா,

**<u>மத்திய வங்கியின் ஆண்டிற்கான பொருளாதார மீளாய்வு 2024</u>**

2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 80(3)ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம், ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்த பின்னர் நான்கு மாத காலப்பகுதியினுள், அதன் கொள்கைக் குறிக்கோள்களையும் நிதியியல் முறைமையின் நிலைமையையும் அழுத்திக்கூறி, அத்தகைய நிதியாண்டின்போது பொருளாதாரத்தின் நிலைமை பற்றி மத்திய வங்கியின் ஆளுகைச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட அறிக்கையொன்றை மத்திய வங்கியானது வெளியிடுவதற்கும், கௌரவ நிதி அமைச்சரினூடாக பாராளுமன்றத்தின் முன்னிலையில் சமர்ப்பிக்க வேண்டுமென்பதையும் தேவைப்படுத்துகின்றது. அத்தகைய நிதியாண்டின்போது பின்பற்றப்பட்ட மத்திய வங்கியின் கொள்கைகளின் மீளாய்வையும் மதிப்பீட்டையும் அவ்வறிக்கை உள்ளடக்குதல் வேண்டும்.

2024ஆம் ஆண்டு தொடர்பில், மத்திய வங்கியின் ஆளுகைச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட மத்திய வங்கியின் இரண்டாவது ஆண்டிற்கான பொருளாதார மீளாய்வானது இக்கடப்பாடுகளை நிறைவேற்றும் வகையில் இத்தால் சமர்ப்பிக்கப்படுகின்றது.

தங்கள் உண்மையுள்ள,

## உள்ளடக்கம்

முக்கியப் பொருளாதாரக் குறிகாட்டிகள்
முக்கிய சமூகக் குறிகாட்டிகள்
சுருக்க அறிக்கை

| | | பக்கம் |
|---|---|---|
| **1. பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள்** | | |
| | சுருக்கம் ... ... ... | 1 |
| 1.1 | பணவீக்கம் மற்றும் விலை அபிவிருத்திகள் ... ... ... | 2 |
| | 1.1.1 பணவீக்கம் ... ... ... | 2 |
| | 1.1.2 விலைகள் ... ... ... | 6 |
| | 1.1.3 நுகர்வோர் விலைச் சுட்டெண்கள் மற்றும் வாழ்க்கைச் செலவு ... ... | 7 |
| | 1.1.4 பணவீக்க எதிர்பார்ப்பு ... ... ... | 8 |
| | 1.1.5 கூலிகள் ... ... ... | 9 |
| 1.2 | உண்மைத் துறை அபிவிருத்திகள் ... ... ... | 11 |
| | 1.2.1 பொருளாதார வளர்ச்சி ... ... ... | 11 |
| | 1.2.2 உற்பத்தி ... ... ... | 12 |
| | 1.2.3 செலவினம் ... ... ... | 13 |
| | 1.2.4 வருமானம் ... ... ... | 14 |
| | 1.2.5 குடித்தொகை, தொழிற்படை, மற்றும் தொழில்நிலை ... ... ... | 15 |
| | 1.2.6 பொருளாதார உட்கட்டமைப்பு ... ... ... | 16 |
| | 1.2.7 சமூக உட்கட்டமைப்பு ... ... ... | 21 |
| 1.3 | நாணயத் துறை அபிவிருத்திகள் ... ... ... | 24 |
| | 1.3.1 சந்தை வட்டி வீதங்கள் ... ... ... | 24 |
| | 1.3.2 உள்நாட்டு பணச் சந்தை திரவத்தன்மை ... ... ... | 27 |
| | 1.3.3 கொடுகடன் கூட்டுக்கள் ... ... ... | 28 |
| | 1.3.4 நாணயக் கூட்டுக்கள் ... ... ... | 32 |
| 1.4 | வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகள் ... ... ... | 34 |
| | 1.4.1 சென்மதி நிலுவை ... ... ... | 34 |
| | 1.4.2 பன்னாட்டு முதலீட்டு நிலைமை, ஒதுக்குச் சொத்துக்கள் மற்றும் திரண்ட நிலுவை ... ... | 50 |
| | 1.4.3 வெளிநாட்டுப் படுகடன் மற்றும் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் ... ... | 53 |
| | 1.4.4 செலாவணி வீத அசைவுகள் ... ... ... | 56 |
| 1.5 | இறைத் துறை அபிவிருத்திகள் ... ... ... | 59 |
| | 1.5.1 முக்கிய இறை நிலுவைகள் ... ... ... | 59 |
| | 1.5.2 அரசிறை, செலவினம், மற்றும் தேறிய கடன்வழங்கல் ... ... ... | 59 |
| | 1.5.3 வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையினை நிதியிடல் ... ... ... | 62 |
| | 1.5.4 மத்திய அரச படுகடன் ... ... ... | 64 |

பக்கம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **2.** | **நிதியியல் முறைமையின் நிலைமைகள்** | | | | |
| | சுருக்கம் | ... | ... | ... | 67 |
| 2.1 | வங்கித்தொழில் துறை | ... | ... | ... | 68 |
| 2.2 | வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறை | ... | ... | ... | 76 |
| 2.3 | நிதியியல் சந்தைகளின் செயலாற்றம் | ... | ... | ... | 81 |
| 2.4 | நிதியியல் உட்சேர்க்கை | ... | ... | ... | 84 |
| 2.5 | நிதியியல் உட்கட்டமைப்பு | ... | ... | ... | 85 |
| 2.6 | நீடித்து நிலைத்திருக்கும் நிதி | ... | ... | ... | 89 |
| **3.** | **மத்திய வங்கிக் கொள்கைகளின் மீளாய்வு** | | | | |
| | சுருக்கம் | ... | ... | ... | 91 |
| 3.1 | நாணயக் கொள்கைக் கட்டமைப்பு | ... | ... | ... | 92 |
| 3.2 | நாணயக் கொள்கை நிலைப்பாடு மற்றும் வழிமுறைகள் | ... | ... | ... | 94 |
| 3.3 | வெளிநாட்டுத் துறைக் கொள்கைகள் | ... | ... | ... | 103 |
| 3.4 | நிதியியல் துறைக் கொள்கை வழிமுறைகள் | ... | ... | ... | 105 |
| **4.** | **பேரண்டப்பொருளாதாரத் தோற்றப்பாடு** | | | | |
| | சுருக்கம் | ... | ... | ... | 121 |
| 4.1 | உலகளாவிய பொருளாதாரச் சூழலும் தோற்றப்பாடும் | ... | ... | ... | 122 |
| 4.2 | உள்நாட்டுப் பொருளாதாரத் தோற்றப்பாடு | ... | ... | ... | 125 |
| | 4.2.1 பணவீக்கத் தோற்றப்பாடு | ... | ... | ... | 125 |
| | 4.2.2 நாணயத் துறைத் தோற்றப்பாடு | ... | ... | ... | 127 |
| | 4.2.3 வெளிநாட்டுத் துறைத் தோற்றப்பாடு | ... | ... | ... | 128 |
| | 4.2.4 நிதியியல் துறைத் தோற்றப்பாடு | ... | ... | ... | 130 |
| | 4.2.5 இறைத் துறைத் தோற்றப்பாடு | ... | ... | ... | 132 |
| | 4.2.6 வளர்ச்சி வாய்ப்புக்கள் | ... | ... | ... | 134 |
| 4.3 | முடிவுக் குறிப்புகள் | ... | ... | ... | 136 |

புள்ளிவிபரப் பின்னிணைப்பு

சிறப்பு புள்ளிவிபரப் பின்னிணைப்பு

## அட்டவணைகள்


பக்கம்

### 1. பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள்

1.1 பணவீக்கத்தின் அசைவுகள் (ஆண்டிற்கு ஆண்டு) ... ... ... 5
1.2 நிலையான (2015) விலைகளில் கைத்தொழில் மூலத்தின்படி மொத்த தேசிய வருமானம் ... ... 12
1.3 நடைமுறைச் சந்தை விலைகளில் கூட்டுக் கேள்வி மற்றும் சேமிப்புக்கள் ... ... 14
1.4 நடைமுறைச் சந்தை விலைகளில் பொருளாதாரத் துறையில் வருமானக் கூறுகள் ... ... 15
1.5 குடும்ப அலகுகளின் குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழிற்படை பங்கேற்பு ... ... 15
1.6 போக்குவரத்துத் துறையின் செயலாற்றம் ... ... ... 21
1.7 வட்டி வீதங்களின் அசைவுகள் ... ... ... 27
1.8 நாணயக் கூட்டுக்களின் அபிவிருத்திகள் ... ... ... 31
1.9 நடைமுறை மற்றும் மூலதனக் கணக்கு ... ... ... 35
1.10 வணிகப்பொருள் வர்த்தகச் செயலாற்றத்தின் சுருக்கம் ... ... ... 36
1.11 வர்த்தக மாற்று விகிதச் சுருக்கம் (2010=100) ... ... ... 39
1.12 இலங்கையின் முன்னுரிமை மற்றும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளுக்கு கீழான ஏற்றுமதிகள் ... 40
1.13 நிதியியல் கணக்கு ... ... ... 48
1.14 பன்னாட்டு முதலீட்டு நிலைமை (சுருக்கம்) ... ... ... 51
1.15 மொத்த அலுவல்சார் ஒதுக்குகள், மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் மற்றும் திரண்ட நிலுவை ... 53
1.16 வெளிநின்ற வெளிநாட்டு படுகடனின் நிலைமை ... ... ... 55
1.17 வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் ... ... ... 56
1.18 செலாவணி வீத அசைவுகள் ... ... ... 57
1.19 பெயரளவு மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதங்கள் . ... ... 58
1.20 அரசின் இறைத் தொழிற்பாடுகளின் சுருக்கம் ... ... ... 59
1.21 அரசின் வெளிநின்ற படுகடன் ... ... ... 64

### 2. நிதியியல் முறைமையின் நிலைமைகள்

2.1 நிதியியல் முறைமையின் மொத்தச் சொத்துக்கள் ... ... ... 68
2.2 வங்கிகள், வங்கிக் கிளைகள் மற்றும் ஏனைய வங்கிப்பணி நிலையங்களின் பரம்பல்கள் ... ... 69
2.3 வங்கித்தொழில் துறையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உள்ளமைப்பு ... ... 69
2.4 வங்கித்தொழில் துறையின் வைப்புக்களின் உள்ளமைப்பு ... ... ... 70
2.5 வங்கித்தொழில் துறையின் இலாபம் ... ... ... 71
2.6 வங்கித்தொழில் துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தின் உள்ளமைப்பு ... ... 72
2.7 ஊழியர் சேமலாப நிதியத்தின் ஐந்து ஆண்டுச் செயலாற்றச் சுருக்கம் ... ... 80

## வரைபடங்கள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1.1 | இலங்கையில் பணவீக்க இயக்கவாற்றல்கள் … … … | 4 |
| 1.2 | கொ.நு.வி. சுட்டெண் எதிர் முதன்மைப் பணவீக்கம் ..... … … | 7 |
| 1.3 | வாழ்க்கைச் செலவு … … … | 8 |
| 1.4 | முறைசாரா தனியார் துறைக் கூலி வீதச் சுட்டெண் (2018=100)இன் அசைவுகள் (ஆண்டிற்காண்டு) … | 9 |
| 1.5 | முறைசாரா தனியார் துறைக் கூலி வீதச் சுட்டெண் (2018=100)இன் அசைவுகள் (பெயரளவு) … | 9 |
| 1.6 | அரச துறை கூலி வீதச் சுட்டெண் (2016=100)இன் அசைவுகள் (ஆண்டிற்காண்டு).. … | 11 |
| 1.7 | அரச துறைக் கூலி வீதச் சுட்டெண் (2016=100)இன் அசைவுகள் (பெயரளவு) … … | 11 |
| 1.8 | உண்மை மொ.உ.உற்பத்தி ஆண்டு வளர்ச்சி வீதங்கள் … … … | 11 |
| 1.9 | 2024இல் பொருளாதார நடவடிக்கைகளின் வளர்ச்சி … … … | 13 |
| 1.10 | வலு மற்றும் சக்தித் துறை அபிவிருத்திகள் … … … | 18 |
| 1.11 | தேர்ந்தெடுக்கப்பட்ட சந்தை வட்டி வீதங்களின் அசைவுகள்.. … … | 25 |
| 1.12 | அரச பிணையங்களுக்கான இரண்டாந்தரச் சந்தை விளைவு வளையி … … | 26 |
| 1.13 | முக்கிய குறுங்கால வட்டி வீதங்கள் மற்றும் சந்தைத் திரவத்தன்மை வரைபடம்… … | 28 |
| 1.14 | உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் … | 29 |
| 1.15 | வங்கித்தொழில் முறைமையிலிருந்தான அரச துறைக்கான கொடுகடனின் வருடாந்த மாற்றம் … | 30 |
| 1.16 | விரிந்த பணத்தின் ($M_{2b}$) ஆண்டிற்காண்டு வளர்ச்சிக்கான பங்களிப்பு … … | 33 |
| 1.17 | ஏற்றுமதிகளின் உள்ளமைப்பு … … … | 37 |
| 1.18 | இறக்குமதிகளின் உள்ளமைப்பு … … … | 38 |
| 1.19 | இருபுடை வர்த்தக நிலுவைகள் … … … | 39 |
| 1.20 | பணிகள் உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்கள் … … … | 42 |
| 1.21 | நாளாந்த செலாவணி வீத அசைவுகள் … … … | 56 |
| 1.22 | தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் 24 - நாணயம் (2017=100) … … | 58 |
| 1.23 | அரசிறையின் உள்ளமைப்பு - 2024 … … … | 60 |
| 1.24 | அரச மீண்டெழும் செலவினத்தின் உள்ளமைப்பு - 2024 … … … | 62 |
| | | |
| 2.1 | 2024 இறுதியில் உள்ளவாறு வங்கித்தொழில் துறையின் ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகைகள் | 70 |
| 2.2 | வங்கித்தொழில் துறையின் இலாபத்தன்மை … … … | 71 |
| 2.3 | வங்கித்தொழில் துறையின் மூலதன போதுமாந்தன்மை … … … | 72 |
| 2.4 | சாதனங்கள் வாரியான மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் (தேறிய) … … | 76 |
| 2.5 | 2024 காலப்பகுதியில் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள், ஓரிரவுக் கொள்கை வீதம், துணைநில் வைப்பு வசதி வீதம், துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் மற்றும் பணச்சந்தை வட்டி வீதங்களின் நடத்தைகள் … | 81 |
| 2.6 | விலைச் சுட்டிகளின் அசைவும் சந்தை மூலதனமாக்கலும் … … … | 83 |
| 2.7 | கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் வெளிநாட்டுப் பங்கேற்பு (இரண்டாந்தரச் சந்தை) … | 84 |
| 2.8 | சில்லறை கொடுக்கல் வாங்கல்கள் … … … | 86 |
| | | |
| 4.1 | உலகளாவிய பொருளாதாரக் கொள்கை நிச்சயமற்றதன்மை சுட்டெண் … … | 123 |
| 4.2 | முதன்மைப் பணவீக்க எறிவுகள்ழூ (காலாண்டுச் சராசரி, கொ.நு.வி.சுட்டெண், ஆண்டிற்காண்டு, %) … | 126 |
| 4.3 | எறிவுசெய்யப்பட்ட காலாண்டுரீதியான உண்மை மொ.உ.உற்பத்தியின் வளர்ச்சி (ஆண்டிற்காண்டு, %)… | 134 |

## சிறப்பு குறிப்புக்கள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | வெளிநாட்டுத் துறை புள்ளிவிபரங்களை மேம்படுத்துதல்: பணிகள் வர்த்தகம் மீதான முக்கிய நுண்நோக்குகள் … | 43 |
| 2. | தாக்குப்பிடிக்கும் தன்மையினை வலுப்படுத்துவதற்கான அண்மைக்கால வங்கித்தொழில் துறை சீர்திருத்தங்கள் … | 73 |
| 3. | ஒற்றைக் கொள்கை வட்டி வீதப் பொறிமுறையொன்றிற்கான மாறுதல் … … | 95 |
| 4. | நாணயக் கொள்கைப் பொறுப்புக்கூறல் மற்றும் பணவீக்க இலக்குகள் … … | 99 |
| | விசேட சிறப்புக் குறிப்பு - இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அல்லது அதனுடன் தொடர்புடைய முக்கிய பொருளாதார கொள்கை வழிமுறைகள் … | 113 |


## சிறப்பு வரைபடங்கள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1.1 | உள்நாட்டு எரிபொருள் விற்பனைகளிலும் விலைகளிலுமுள்ள போக்குகள் … ..... | 17 |
| 1.2 | பயன்பாடுகளுக்கான செலவுப் பிரதிபலிப்பு விலையிடலின் முக்கியத்துவம் … … | 19 |
| 1.3 | மாதாந்த வெளிநாட்டு நாணயக் கணக்குப் புள்ளிவிபரங்கள் … … … | 34 |
| 1.4 | நெருக்கடிக்கு முன்னரான நடைமுறைக் கணக்கை நிதியிடல் மற்றும் நிதியியல் கணக்கின் நெருக்கடிக்கு பின்னரான இயக்கவாற்றல் … … … | 50 |
| 1.5 | இலங்கையின் ஒதுக்குப் போதுமை குறிகாட்டிகளை மேம்படுத்தல் .. … … | 52 |
| 1.6 | பன்னாட்டு ஒதுக்குகளின் நெருக்கடிக்கு பின்னைய திரும்பல் … … … | 54 |
| 1.7 | நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த செலாவணி வீதத்தின் கீழான செலாவணி வீத இயக்கவாற்றல் … | 57 |
| 1.8 | அரசிறை, செலவினம் மற்றும் முக்கிய இறை நிலுவைகள் … … … | 63 |

## புள்ளிவிபரப் பின்னிணைப்பு

அட்டவணை


**1. உண்மைத் துறை**

மொத்த உள்நாட்டு உற்பத்தி ... ... ... 1
குடித்தொகை, தொழிற்படை மற்றும் வெளிநாட்டுத் தொழில்நிலை .. ... ... 2
கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (2021 = 100) ... ... ... 3
தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (2021 = 100) ... ... ... 4
கூலி வீதச் சுட்டெண்கள் ... ... ... 5

**2. வெளிநாட்டுத் துறை**

ஏற்றுமதிகளின் உள்ளடக்கம் ... ... ... 6
இறக்குமதிகளின் உள்ளடக்கம் ... ... ... 7
வர்த்தகத்தின் போக்கு - ஏற்றுமதிகள் ... ... ... 8
வர்த்தகத்தின் போக்கு - இறக்குமதிகள் ... ... ... 9
சென்மதி நிலுவை - நடைமுறைக் கணக்கு ... ... ... 10
சென்மதி நிலுவை - நிதியியல் கணக்கு ... ... ... 11
பன்னாட்டு முதலீட்டு நிலைமை ... ... ... 12
வெளிநின்ற வெளிநாட்டு படுகடன் ... ... ... 13
செலாவணி வீத அசைவுகள் (வெளிநாட்டு நாணய அலகொன்றிற்கான ரூபா) ... ... 14

**3. இறைத்துறை**

அரச இறைத் தொழிற்பாடுகளின் பொருளாதாரப் பகுப்பாய்வு ... ... ... 15
மத்திய அரசின் வெளிநின்ற படுகடன் (ஆண்டின் இறுதியில் உள்ளவாறு) ... ... 16

**4. நாணய மற்றும் நிதியியல் துறை**

பண வீதங்கள்: மத்திய வங்கி மற்றும் வர்த்தக வங்கிகள் ... ... ... 17
ஒன்று திரட்டப்பட்ட நாணய அளவீடு - $M_{2b}$ ... ... ... 18
வர்த்தக வங்கிகளின் தனியார்துறைக்கான கடன்களும் முற்பணங்களும் ... ... 19
நிதியியல் ஆற்றல் குறிகாட்டிகள் - வங்கித்தொழில்துறை ... ... ... 20
நிதிக்கம்பனிகளின் விபரம் ... ... ... 21

## சிறப்புப் புள்ளிவிபரப் பின்னிணைப்பு

அட்டவணை


**1. உண்மைத் துறை**

குடித்தொகையும் தொழிற்படையும் ... ... ... 1

தேசிய வெளியீடு ... ... ... 2

விலைகள் ... ... ... 3

**2. வெளிநாட்டுத் துறை**

சென்மதி நிலுவை ... ... ... 4

ஒதுக்குகள், மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள், வெளிநாட்டுப் படுகடன் மற்றும் செலாவணி வீதங்கள் ... ... ... 5

**3. இறைத் துறை**

அரசின் இறைத் தொழிற்பாடுகள் ... ... ... 6

மத்திய அரச படுகடன் ... ... ... 7

**4. நாணயத் துறை**

வட்டி வீதங்கள் ... ... ... 8

நாணய அளவீடு ($M_{2b}$) ... ... ... 9


## புள்ளிவிபர அட்டவணைகள் மீதான வரைவிலக்கணங்களும் விளக்கக் குறிப்புக்களும்

பின்வரும் பொதுக் குறிப்புக்கள் தனிப்பட்ட அட்டவணைகளுக்குக் கீழே தரப்பட்டுள்ள அடிக்குறிப்புக்களைக் குறிக்கின்றன.

1. விபரச் சேர்க்கையைக் கால அடிப்படையில் நிறைவு செய்யும் முயற்சிகளின் பொருட்டு, சில அட்டவணைகளில் தற்காலிக எண் தொகைகள் சேர்க்கப்பட்டுள்ளன.
2. சில அட்டவணைகளில் உள்ள எண் தொகைகளில் இறுதி எண்ணானது அணித்தாகவுள்ள முழு எண்ணிற்கு மட்டந்தட்டப்பட்டுள்ளது. எனவே காட்டப்பட்ட மொத்தத் தொகைகளுக்கும் அம்மொத்தங்களின் கூறுகளினது கூட்டுத் தொகைக்கும் இடையே சிறு வேறுபாடுகள் இருக்கக்கூடும்.
3. காட்டப்பட்டுள்ள எண் தொகைகளுக்கும், முன்பு வெளியிடப்பட்ட எண் தொகைகளுக்கும் இடையே வேறுபாடு இருப்பின், அது எண் தொகைகள் திருத்தியமைக்கப்பட்ட காரணத்தால் ஏற்பட்டதாகும்.
4. அடைப்புக்குறிக்குள் காட்டப்பட்டுள்ள பெறுமதிகள் எதிர்மறைப் பெறுமதிகளைக் குறிக்கும். negative values.
5. பின்வரும் அடையாளங்கள் அட்டவணைகளில் கையாளப்பட்டுள்ளன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ... | = | புறக்கணிக்கத்தக்கவை | வே.எ.ப.இ | = | வேறு எங்கும் பகுப்பாய்வு செய்யப்பட இல்லை |
| - | = | யாதும் இல்லை | வே.எ.கு.இ | = | வேறு எங்கும் குறிப்பிடப்பட இல்லை |
| வி.கி | = | விபரம் கிடைக்கவில்லை | வே.இ.உ.இ | = | வேறு இடத்தில் உள்ளடக்கப்பட இல்லை |

## முதன்மைப் பொருளாதாரக் குறிகாட்டிகள்

| | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 | 2024(அ) |
|---|---|---|---|---|---|---|---|
| **குடித்தொகை** | | | | | | | |
| நடுவாண்டு குடித்தொகை ('000 ஆட்கள்) (ஆ)(இ) | 21,670 | 21,803 | 21,919 | 22,156 | 22,181 | 22,037 | **21,916** |
| நடுவாண்டு குடித்தொகையின் வளர்ச்சி (சதவீதம்) (ஆ) | 1.1 | 0.6 | 0.5 | 1.1 | 0.1 | -0.6 | **-0.5** |
| குடித்தொகை அடர்த்தி (ச.கி.மீற்றருக்கு ஆட்கள்) (ஆ) | 346 | 348 | 350 | 353 | 354 | 351 | **352** |
| தொழிற்படை ('000 ஆட்கள்) (ஈ) | 8,388 | 8,592 | 8,467 | 8,553 | 8,547 | 8,408 | **8,316 (உ)** |
| தொழிற்படை பங்கேற்பு வீதம் (சதவீதம்) (ஈ) | 51.8 | 52.3 | 50.6 | 49.9 | 49.8 | 48.6 | **47.4 (உ)** |
| தொழிலின்மை வீதம் (தொழிற்படையின் சதவீதமாக) (ஈ) | 4.4 | 4.8 | 5.5 | 5.1 | 4.7 | 4.7 | **4.4 (உ)** |
| **வெளியீடு (ஊ)** | | | | | | | |
| நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உ. (ரூ. பில்லியன்) | 15,352 | 15,911 | 15,646 | 17,612 | 24,063 (எ) | 27,420 (அ)(எ) | **29,899** |
| நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.தே.வ. (ரூ. பில்லியன்) | 14,962 | 15,470 | 15,223 | 17,217 | 23,446 (எ) | 26,586 (அ)(எ) | **29,154** |
| நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உ. (ஐ.அ.டொ. பில்லியன்) (ஏ) | 94.7 | 89.0 | 84.4 | 88.6 | 76.8 (எ) | 83.8 (அ)(எ) | **99.0** |
| நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.தே.வ. (ஐ.அ.டொ. பில்லியன்) (ஏ) | 92.4 | 86.5 | 82.1 | 86.6 | 75.0 (எ) | 81.2 (அ)(எ) | **96.5** |
| நடைமுறைச் சந்தை விலைகளில் தலைக்குரிய மொ.உ.உ. (ரூ.) (ஐ) | 708,442 | 729,761 | 713,821 | 794,926 | 1,084,855 (எ) | 1,244,262 (அ)(எ) | **1,364,235** |
| நடைமுறைச் சந்தை விலைகளில் தலைக்குரிய மொ.தே.வ. (ரூ.) (ஐ) | 690,463 | 709,516 | 694,520 | 777,073 | 1,057,035 (எ) | 1,206,441 (அ)(எ) | **1,330,255** |
| நடைமுறைச் சந்தை விலைகளில் தலைக்குரிய மொ.உ.உ. (ஐ.அ.டொ.) (ஏ)(ஐ) | 4,372 | 4,082 | 3,851 | 3,999 | 3,464 (எ) | 3,801 (அ)(எ) | **4,516** |
| நடைமுறைச் சந்தை விலைகளில் தலைக்குரிய மொ.தே.வ. (ஐ.அ.டொ.) (ஏ)(ஐ)(ஒ) | 4,263 | 3,968 | 3,747 | 3,910 | 3,379 (எ) | 3,685 (அ)(எ) | **4,404** |
| **உண்மை வெளியீடு (சதவீத மாற்றம்) (ஊ)** | | | | | | | |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 2.3 | -0.2 | -4.6 | 4.2 | -7.3 (எ) | -2.3 (அ)(எ) | **5.0** |
| மொ.உ.உ. இன் முக்கிய பொருளாதாரச் செயற்பாடுகள் | | | | | | | |
| வேளாண்மை | 6.3 | 0.5 | -0.9 | 1.0 | -4.1 (எ) | 1.6 (அ)(எ) | **1.2** |
| கைத்தொழில் | -1.1 | -4.1 | -5.3 | 5.7 | -16.0 (எ) | -9.2 (அ)(எ) | **11.0** |
| பணிகள் | 4.3 | 2.9 | -1.9 | 3.4 | -2.6 (எ) | -0.2 (அ)(எ) | **2.4** |
| மொத்த தேசிய வருமானம் | 2.2 | -0.5 | -4.5 | 4.7 | -7.6 (எ) | -2.8 (அ)(எ) | **5.5** |
| **கூட்டுக் கேள்வியும் சேமிப்புக்களும் (மொ.உ.உற்பத்தியின் சதவீதம்) (ஊ)** | | | | | | | |
| நுகர்வு | 68.9 | 71.7 | 73.3 | 70.7 | 76.3 (எ) | 77.6 (அ)(எ) | **75.7** |
| தனியார் | 60.3 | 62.7 | 62.9 | 61.2 | 69.1 (எ) | 70.8 (அ)(எ) | **68.7** |
| அரசு | 8.6 | 9.0 | 10.4 | 9.5 | 7.2 (எ) | 6.8 (அ)(எ) | **7.0** |
| முதலீடு | 38.1 | 34.1 | 32.9 | 36.7 | 27.3 (எ) | 24.6 (அ)(எ) | **27.0** |
| பொருட்கள் மற்றும் பணிகளின் தேறிய ஏற்றுமதிகள் | -6.9 | -5.8 | -6.2 | -7.4 | -3.6 (எ) | -2.2 (அ)(எ) | **-2.6** |
| பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகள் | 21.4 | 21.8 | 15.5 | 16.9 | 21.6 (எ) | 20.7 (அ)(எ) | **19.9** |
| பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகள் | 28.4 | 27.6 | 21.6 | 24.3 | 25.1 (எ) | 22.8 (அ)(எ) | **22.5** |
| உள்நாட்டுச் சேமிப்புக்கள் | 31.1 | 28.3 | 26.7 | 29.3 | 23.7 (எ) | 22.4 (அ)(எ) | **24.3** |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய முதலாந்தர மற்றும் இரண்டாந்தர வருமானம் | 4.0 | 3.7 | 4.7 | 3.6 | 2.3 (எ) | 3.9 (அ)(எ) | **4.0** |
| தேசிய சேமிப்புக்கள் | 35.1 | 32.0 | 31.3 | 33.0 | 26.0 (எ) | 26.3 (அ)(எ) | **28.3** |
| **விலைகளும் கூலிகளும் (சதவீத மாற்றம்)** | | | | | | | |
| கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் (2021 = 100) - ஆண்டுச் சராசரி | - | - | - | - | - | 17.4 | **1.2** |
| கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் (2021 = 100) - ஆண்டிற்காண்டு (கால முடிவில்) | - | - | - | - | - | 4.0 | **-1.7** |
| கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் (2013 = 100) - ஆண்டுச் சராசரி (ஓ) | 4.3 | 4.3 | 4.6 | 6.0 | 46.4 | - | **-** |
| கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் (2013 = 100) - ஆண்டிற்காண்டு (கால முடிவில்) (ஓ) | 2.8 | 4.8 | 4.2 | 12.1 | 57.2 | - | **-** |
| தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் (2021 = 100) - ஆண்டுச் சராசரி | - | - | - | - | - | 16.5 | **1.6** |
| தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் (2021 = 100) - ஆண்டிற்காண்டு (கால முடிவில்) | - | - | - | - | - | 4.2 | **-2.0** |
| தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் (2013 = 100) - ஆண்டுச் சராசரி (ஔ) | 2.1 | 3.5 | 6.2 | 7.0 | 50.4 | - | **-** |
| தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் (2013 = 100) - ஆண்டிற்காண்டு (கால முடிவில்) (ஔ) | 0.4 | 6.2 | 4.6 | 14.0 | 59.2 | - | **-** |
| உற்பத்தியாளர் விலைச்சுட்டெண் (கா4 2018 = 100) - ஆண்டுச் சராசரி | - | - | 5.8 | 10.9 | 74.0 | 11.5 | **...** |
| மொ.உ.உற்பத்திச் சுருக்கி (ஊ) | 4.3 | 3.9 | 3.1 | 8.0 | 47.5 (எ) | 16.7 (அ)(எ) | **3.8** |
| மொ.தே.வருமானச் சுருக்கி (ஊ) | 4.4 | 3.9 | 3.0 | 8.1 | 47.4 (எ) | 16.7 (அ)(எ) | **3.9** |
| பெயரளவு கூலி வீதச் சுட்டெண்கள் | | | | | | | |
| முறையான தனியார் துறை ஊழியர்கள் (1978 திசெ = 100) - ஆண்டுச் சராசரி (க) | 0.6 | 2.9 | 0.2 | 74.4 | 9.8 | 0.4 | **0.1** |
| அரச துறை ஊழியர்கள் (2016 = 100) - ஆண்டுச் சராசரி | 0.2 | 4.7 | 9.2 | - | 16.1 | - | **18.5** |
| முறைசாரா தனியார் துறை ஊழியர்கள் (2018 = 100) - ஆண்டுச் சராசரி | - | - | 6.4 | 9.2 | 24.5 | 11.4 | **6.0** |
| **வெளிநாட்டு வர்த்தகம்** | | | | | | | |
| வர்த்தக நிலுவை (ஐ.அ.டொ. மில்லியன்) | -10,343 | -7,997 | -6,008 | -8,139 | -5,185 | -4,900 | **-6,069** |
| ஏற்றுமதிகள் | 11,890 | 11,940 | 10,047 | 12,499 | 13,106 | 11,911 | **12,772** |
| இறக்குமதிகள் | 22,233 | 19,937 | 16,055 | 20,637 | 18,291 | 16,811 | **18,841** |
| வர்த்தக மாற்று விகிதம் (சதவீத மாற்றம்) | 0.02 | -1.6 | 2.5 | -8.6 | -11.6 | -0.6 | **1.3** |
| ஏற்றுமதி அலகுப் பெறுமதிச் சுட்டெண் (2010 = 100) (சதவீத மாற்றம்) | 4.2 | -6.3 | -6.8 | 5.4 | 0.9 | -11.3 | **-3.7** |
| இறக்குமதி அலகுப் பெறுமதிச் சுட்டெண் (2010 = 100) (சதவீத மாற்றம்) | 4.1 | -4.8 | -9.1 | 15.2 | 14.1 | -10.8 | **-4.9** |
| ஏற்றுமதி அளவுச் சுட்டெண் (2010 = 100) (சதவீத மாற்றம்) | 0.5 | 7.2 | -9.7 | 18.0 | 3.9 | 2.4 | **11.3** |
| இறக்குமதி அளவுச் சுட்டெண் (2010 = 100) (சதவீத மாற்றம்) | 1.8 | -5.8 | -11.4 | 11.5 | -22.4 | 3.0 | **17.9** |
| **வெளிநாட்டு நிதி (ஐ.அ.டொ. மில்லியன்)** | | | | | | | |
| பணிகள் மற்றும் முதலாந்தர வருமானக் கணக்கு (தேறிய) | 1,381 | 388 | -1,386 | -373 | 240 | 505 (எ) | **836** |
| நடைமுறை தனியார் மாற்றல்கள் (தேறிய) | 6,155 | 5,757 | 6,194 | 5,221 | 3,493 | 5,815 | **6,429** |
| நடைமுறை அலுவல்சார் மாற்றல்கள் (தேறிய) | 8 | 9 | 13 | 6 | 3 | 20 | **10** |
| நடைமுறை கணக்கு நிலுவை | -2,799 | -1,843 | -1,187 | -3,284 | -1,448 | 1,439 (எ) | **1,206** |
| திரண்ட நிலுவை | -1,103 | 377 | -2,328 | -3,967 | -2,806 | 2,826 | **2,890** |

(அ) தற்காலிகமானது
(ஆ) பதிவாளர் நாயகத் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டவாறு
(இ) 2012இன் குடித்தொகை மற்றும் வீடமைப்பு தொகைமதிப்பினை அடிப்படையாகக் கொண்டது
(ஈ) தொழிற்படையின் கணக்கீட்டிற்கு 15 வயதும் அதற்கு மேற்பட்ட வயதுடைய குடியிருப்புக் குடித்தொகை கருத்திற்கொள்ளப்படுகிறது.
(உ) நான்கு காலாண்டுச் சராசரியை அடிப்படையாகக் கொண்டது.
(ஊ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் 2025 மாச்சில் வெளியிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகள் (தள ஆண்டு 2015) பயன்படுத்தப்பட்டுள்ளன.
(எ) திருத்தப்பட்டது.
(ஏ) 2015இலிருந்து காலாண்டு சராசரி செலாவணி வீதத்தை பயன்படுத்தி கணிப்பிடப்பட்ட ஐ.அ.டொலர் நியதிகளின் மொ.உ.உ./ மொ.தே.வ. இனை அடிப்படையாகக் கொண்டது.
(ஐ) அண்மைக்கால குடித்தொகை புள்ளிவிபரங்களுடன் மதிப்பீடுகள் இற்றைப்படுத்தப்பட்டுள்ளன.
(ஒ) ஐ.அ.டொலர் நியதிகளில் மொ.தே.வருமானத்தை பெற்றுக் கொள்வதற்காக வருடாந்த சராசரி செலாவணி வீதங்களுடன் ஒப்பிடுகையில் காலாண்டு சராசரி செலாவணி வீதங்களை பயன்படுத்துவதில் காணப்படும் வேறுபாடுகள் காரணமாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட பெறுமதிகள் இத்தகைய பெறுமதிகளிலிருந்து வேறுபடலாம்.
(ஓ) 2023 பெப்புருவரி முதல் இந்தச் சுட்டெண்ணின் தொகுத்தல் நிறுத்தப்பட்டது.
(ஔ) 2023 சனவரி முதல் இந்த சுட்டெண்ணின் தொகுத்தல் நிறுத்தப்பட்டது.
(க) முறையான தனியார் துறை ஊழியர்களின் பெயரளவு கூலிகள், கூலிச் சபையினால் நிர்வகிக்கப்பட்டு குறைந்தபட்ச கூலி வீதச் சுட்டெண்ணால் அளவிடப்பட்டு (1978 திசெ = 100) தொழிலாளர் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்டுள்ளது.

## முதன்மைப் பொருளாதாரக் குறிகாட்டிகள் (தொடர்ச்சி)

| | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 | 2024(அ) |
|---|---|---|---|---|---|---|---|
| நடைமுறைக் கணக்கு மீதி (மொ.உ.உ இன் சதவீதமாக) (ஊ)(ங) | -3.0 | -2.1 | -1.4 | -3.7 | -1.9 | 1.7 (எ) | **1.2** |
| மொத்த வெளிநாட்டு சொத்துக்கள் (அதே ஆண்டு மாத இறக்குமதிகளில்) (ச) | 5.2 | 6.3 | 6.4 | 3.6 | 3.9 | 6.7 | **7.2** |
| மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் (அதே ஆண்டு மாத இறக்குமதிகளில்) | 3.7 | 4.6 | 4.2 | 1.8 | 1.2 | 3.1 | **3.9** |
| திரண்ட படுகடன் பணி விகிதம் (ஞ) | | | | | | | |
| பொருட்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதிகளின் சதவீதமாக | 28.9 | 29.7 | 35.2 | 30.7 | 15.4 | 15.9 | **21.1** |
| நடைமுறைப் பெறுகைகளின் சதவீதமாக | 21.3 | 21.8 | 22.6 | 22.3 | 12.3 | 11.6 | **15.4** |
| மொத்த வெளிநாட்டுப் படுகடன்: சந்தைப் பெறுமதியின் அடிப்படையில் (மொ.உ.உ. இன் சதவீதமாக) (ஊ)(ங) | 55.3 | 61.6 | 58.1 | 58.4 | 64.6 | 64.8 (எ) | **57.7** |
| **செலாவணி வீதங்கள்** | | | | | | | |
| ஆண்டு முடிவில் | | | | | | | |
| ரூ./ஐ.அ.டொ. | 182.75 | 181.63 | 186.41 | 200.43 | 363.11 | 323.92 | **292.58** |
| ரூ./சி.எ.உ. (ட) | 253.51 | 251.17 | 268.48 | 280.53 | 483.24 | 434.60 | **381.57** |
| ஆண்டுச் சராசரி | | | | | | | |
| ரூ./ஐ.அ.டொ. | 162.54 | 178.78 | 185.52 | 198.88 | 324.55 | 327.53 | **302.12** |
| ரூ./சி.எ.உ. (ஞ) | 229.90 | 246.97 | 258.61 | 283.18 | 431.91 | 436.88 | **401.07** |
| பெ.தா. செலாவணி வீதம் (2017 = 100) (24 - நாணயக் கூடை) (ண) | 94.05 | 88.17 | 85.93 | 78.64 | 53.99 | 53.30 | **58.56** |
| உ.தா. செலாவணி வீதம் (2017 = 100) (24 - நாணயக் கூடை) (ண)(த) | 95.45 | 90.42 | 91.52 | 83.58 | 77.49 | 71.73 | **74.77** |
| **அரச நிதி (மொ.உ.உற்பத்தியின் சதவீதம்) (ஊ)(ந)** | | | | | | | |
| அரசிறை மற்றும் கொடைகள் | 12.6 | 11.9 | 8.8 | 8.3 | 8.4 | 11.2 | **13.7** |
| அரசிறை | 12.5 | 11.9 | 8.7 | 8.3 | 8.2 | 11.1 | **13.5** |
| இதில் வரி அரசிறை | 11.2 | 10.9 | 7.8 | 7.4 | 7.3 | 9.9 | **12.4** |
| கொடைகள் | 0.1 | ... | ... | ... | 0.1 | 0.1 | **0.2** |
| செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்கல் | 17.5 | 21.0 | 19.4 | 20.0 | 18.6 | 19.5 | **20.5** |
| மீண்டெழும் செலவினம் | 13.6 | 15.2 | 16.3 | 15.6 | 14.6 | 17.1 | **17.9** |
| மூலதனச் செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்கல் | 3.9 | 5.7 | 3.1 | 4.4 | 4.0 | 2.4 | **2.6** |
| நடைமுறைக் கணக்கு மீதி | -1.1 | -3.4 | -7.5 | -7.3 | - 6.4 | - 6.0 | **- 4.4** |
| ஆரம்ப மீதி | 0.6 | -3.4 | - 4.4 | -5.7 | -3.7 | 0.6 | **2.2** |
| திரண்ட இறை மீதி | -5.0 | -9.0 | -10.7 | -11.7 | -10.2 | -8.3 | **- 6.8** |
| பற்றாக்குறையை நிதியிடல் | 5.0 | 9.0 | 10.7 | 11.7 | 10.2 | 8.3 | **6.8** |
| வெளிநாடு | 2.1 | 3.4 | - 0.5 | - 0.1 | 1.8 | 1.8 | **1.1** |
| உள்நாடு | 2.8 | 5.6 | 11.2 | 11.8 | 8.5 | 6.5 | **5.7** |
| மத்திய அரச படுகடன் (ப) | 78.4 | 81.9 | 96.6 | 100.0 | 114.2 (ம) | 104.7 (ம) | **96.1** (ம) |
| வெளிநாடு | 38.8 | 39.0 | 38.7 | 37.0 | 51.8 (ம) | 42.5 (ம) | **34.9** (ம) |
| உள்நாடு (ய) | 39.5 | 42.9 | 57.9 | 63.0 | 62.5 (ம) | 62.2 (ம) | **61.2** (ம) |
| **நாணயக் கூட்டுக்கள் (ஆண்டிற்காண்டு சதவீத மாற்றம்)** | | | | | | | |
| ஒதுக்குப்பணம் | 2.3 | -3.0 | 3.4 | 35.4 | 3.3 | -1.5 | **15.8** |
| குறுகிய பணம் ($M_1$) | 4.7 | 4.2 | 36.0 | 24.0 | - 0.4 | 14.1 | **16.1** |
| விரிந்த பணம் ($M_{2b}$) | 13.0 | 7.0 | 23.4 | 13.2 | 15.4 | 7.3 | **8.6** |
| வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் | -155.1 | 250.3 | -308.0 | -368.8 | -79.9 | 74.2 | **225.6** |
| வங்கித்தொழில் முறைமையின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் | 16.3 | 4.6 | 27.8 | 20.9 | 20.9 | -2.9 | **0.8** |
| வங்கித் தொழில்முறைமையிலிருந்தான உள்நாட்டுக் கொடுகடன் | | | | | | | |
| அரசு (தேறிய) | 16.1 | 11.1 | 62.7 | 28.2 | 28.1 | 10.9 | **- 0.2** |
| அரச கூட்டுத்தாபனங்கள்/ அரசிற்கு சொந்தமான வியாபாரத் தொழில் முயற்சிகள் | 40.7 | 8.3 | 22.5 | 18.6 | 47.3 | -56.0 | **-14.7** |
| தனியார் துறை | 15.9 | 4.2 | 6.5 | 13.1 | 6.2 | - 0.6 | **10.7** |
| $M_{2b}$ இற்கான பணப் பெருக்கி (ஆண்டு இறுதியில்) | 7.42 | 8.18 | 9.75 | 8.15 | 9.11 | 9.93 | **9.30** |
| $M_{2b}$ இன் சுழற்சி (ஆண்டிற்கான சராசரி) (ஊ) | 2.27 | 2.16 | 1.84 | 1.73 | 2.04 | 2.17 (எ) | **2.18** |
| **வட்டி வீதங்கள் (ஆண்டிறுதியில் ஆண்டொன்றிற்கான சதவீதம்)** | | | | | | | |
| ஓரிரவுக் கொள்கை வீதம் (ர) | - | - | - | - | - | - | **8.00** |
| துணைநில் வைப்பு வசதி வீதம் (ர) | 8.00 | 7.00 | 4.50 | 5.00 | 14.50 | 9.00 | **7.50** |
| துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் (ர) | 9.00 | 8.00 | 5.50 | 6.00 | 15.50 | 10.00 | **8.50** |
| வங்கி வீதம் (ல) | 15.00 | 15.00 | 8.50 | 9.00 | 30.22 | 14.50 | **10.00** |
| சட்ட வட்டி வீதம் / சந்தை வட்டி வீதம் (வ) | 9.08 | 11.50 | 11.64 | 10.12 | 7.48 | 16.97 | **15.15** |
| பணச் சந்தை வீதங்கள் | | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் | 8.95 | 7.45 | 4.55 | 5.95 | 15.50 | 9.24 | **8.00** |
| திறைசேரி உண்டியல் விளைவுகள் | | | | | | | |
| 91 நாட்கள் | 10.01 | 7.51 | 4.69 | 8.16 | 32.64 | 14.51 | **8.62** |
| 364 நாட்கள் | 11.20 | 8.45 | 5.05 | 8.24 | 29.27 | 12.93 | **8.96** |
| வைப்பு வீதங்கள் | | | | | | | |
| வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் | 8.81 | 8.20 | 5.80 | 4.94 | 14.06 | 11.64 | **7.53** |
| வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம் | 10.85 | 10.05 | 7.14 | 5.94 | 18.49 | 14.88 | **9.27** |
| வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் | 10.94 | 8.89 | 4.93 | 6.45 | 23.07 | 11.06 | **6.52** |
| வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட புதிய நிலையான வைப்பு வீதம் | 11.27 | 9.17 | 5.08 | 6.67 | 23.73 | 11.33 | **6.57** |
| தேசிய சேமிப்பு வங்கியின் சேமிப்பு வீதம் | 4.00 | 4.00 | 3.50 | 3.50 | 3.00 | 3.00 | **3.00** |
| தேசிய சேமிப்பு வங்கியின் 12 மாத நிலையான வைப்பு வீதம் | 10.50 | 9.83 | 5.25 | 5.50 | 12.00 | 8.00 | **7.00** |
| கடன் வழங்கல் வீதங்கள் | | | | | | | |
| வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மை கடன்வழங்கல் வீதம் - வாராந்தம் | 12.09 | 9.74 | 5.81 | 8.61 | 27.24 | 12.13 | **8.90** |
| வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதம் | 14.40 | 13.59 | 10.29 | 9.87 | 18.70 | 14.21 | **11.93** |
| வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன்வழங்கல் வீதம் | 14.54 | 12.80 | 8.38 | 9.48 | 26.20 | 14.38 | **10.77** |
| **மூலதனச் சந்தை** | | | | | | | |
| அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் (1985 = 100) | 6,052.4 | 6,129.2 | 6,774.2 | 12,226.0 | 8,489.7 | 10,654.2 | **15,944.6** |
| எஸ் அன்ட் பீ எஸ் எல் 20 சுட்டெண் (2004 திசெ = 1,000) | 3,135.2 | 2,937.0 | 2,638.1 | 4,233.3 | 2,635.6 | 3,068.4 | **4,862.1** |
| வர்த்தகப்படுத்தப்பட்ட பங்குகளின் பெறுமதி (ரூ. மில்லியன்) | 200,069 | 171,408 | 396,882 | 1,173,157 | 686,602 | 410,629 | **537,635** |
| இலங்கையல்லாதோரின் தேறிய கொள்வனவுகள் (ரூ. மில்லியன்) | -23,239 | -11,735 | -51,356 | -52,648 | 30,625 | 4,363 | **-10,479** |
| சந்தை மூலதனமாக்கல் (ரூ. பில்லியன்) | 2,839.5 | 2,851.3 | 2,960.7 | 5,489.2 | 3,847.2 | 4,248.9 | **5,695.6** |

(ங) ஐ.அ.டொலர்களிலுள்ள மொ.உ.உ. மதிப்பீடுகளின் அடிப்படையில்.

(ச) வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மற்றும் வர்த்தகக் கொடுகடன் மற்றும் பெறப்பட்ட முற்பணங்கள் வடிவிலுள்ள வெளிநாட்டுச் சொத்துக்கள் நீங்கலாக

(ஞ) பன்னாட்டு நாணய நிதியத்தின் வெளிநாட்டுப் படுகடன் புள்ளிவிபரங்கள் வழிகாட்டி (2003) இற்கு இணங்க படுகடன் தீர்ப்பனவுகளை உள்வாங்குவதற்காக ஒட்டுமொத்த படுகடன் தீர்ப்பனவுகள் விகிதங்கள் மீள்வகைப்படுத்தப்பட்டன.

(ட) ப.நா.நிதியத்தின் அலகு கணக்கிற்கான சிறப்பு எடுப்பனவு உரிமை.

(ண) செலாவணி வீதமானது சுட்டெண்களின் அடிப்படையில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டதனால் ஏனைய நாணயங்களுடன் ஒப்பிடும்போது ரூபாவின் பெறுமதி உயர்வு/பெறுமதித் தேய்வு என்பது தாக்கமுள்ள செலாவணி வீதங்களின் சுட்டெண்களின் பெறுமதிகளின் உயர்ச்சி/வீழ்ச்சியாக பிரதிபலிக்கப்படுகிறது.

(த) உண்மைத்தாக்கமுள்ள செலாவணி வீதத்தை கணிப்பிடுவதற்காக கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் பயன்படுத்தப்பட்டது. கூடையினுள் உள்ளடக்கப்பட்ட நாணயங்களின் நாடுகளுடனான பணவீக்க வேறுபாடுகளுக்கு பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீதத்தை சீராக்குவதன் மூலம் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் கணிப்பிடப்படுகின்றது.

(ந) நிதி அமைச்சின்படி 2020இற்கான வரவுசெலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு 2019இன் சில இறைத்துறை புள்ளிவிபரங்கள் மீள் எடுத்துரைக்கப்பட்டன.

(ப) 2014இல் பன்னாட்டு நாணய நிதியத்தால் வெளியிடப்பட்ட அரச நிதி புள்ளிவிபரவியல் கையேட்டிலுள்ள அரச படுகடன் புள்ளிவிபரங்களை தொகுப்பதற்கான வழிகாட்டுதல்களின்படி, 2019 முதல் வதியாதோர் வசமுள்ள வெளிநின்ற இலங்கை அபிவிருத்தி முறிகள் வெளிநாட்டு கடனின் கீழ்வகைப்படுத்தப்பட்டதுடன் வதிவோர் வசமுள்ள வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் உள்நாட்டு கடனின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் படுகடன் புள்ளிவிபரங்கள் தேறிய அடிப்படையில் (வைப்புக்கள் நீங்கலாக) சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தைத் தாபித்தலுடன் இலங்கையின் பொதுப்படுகடனில் பதிவுசெய்து வெளியிடுவதற்கான பொறுப்பு, 2004ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க பொதுப்படுகடன் முகாமைத்துவத்தின் ஏற்பாடுகளினால் கட்டாயப்படுத்தப்பட்டவாறு, பொதுப்படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தின் கீழ் தற்போது வீழ்ச்சியடைகின்றது. இதற்கமைய, பொதுப்படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தின் கீழ், வெளியிடப்பட்ட காலாண்டு புள்ளிவிபரப் படுகடன் திரட்டானது, படுகடன் புள்ளிவிபரத்தால் அலுவல்சார் மூலமாகச் செயல்படுகின்றது. தரவுகளின் தொடர்ச்சியை உறுதிசெய்வதற்கு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சிலிருந்து கிடைக்கப்பெற்ற தரவுகளை அடிப்படையாகக் கொண்ட இப்படுகடன் தரவுகளின் புள்ளிவிபரங்களை மத்திய வங்கி தொகுக்கின்றது.

(ம) நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் அறிவிக்கப்பட்ட இலங்கையின் வெளிநாட்டு பொதுப் படுகடனை தீர்ப்பனவு செய்வதுடன் தொடர்புடைய இடைக்காலக் கொள்கை திகதியான, 2022 ஏப்பிறல் 12 இற்கு பின்னர் பல்வேறு நிலுவையிலுள்ள படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகளை வெளிநின்ற மத்திய அரசு படுகடன் நீக்குகின்றது. இடைக்கால கொள்கைக்கு அமைவாக மூலதனவாக்கத்திற்கு உணரப்படும் பாதிக்கப்பட்ட படுகடனின் நிலுவையிலுள்ள வட்டிக் கொடுப்பனவுகளையும் அத்துடன் இலங்கை அபிவிருத்தி முறிகளுடன் தொடர்புடைய பல்வேறு நிலுவையிலுள்ள வட்டிக் கொடுப்பனவுகளையும் இத்தயை படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் உள்ளடக்குகின்றன. 2023இலிருந்து, இலங்கை அபிவிருத்தி முறிகளிற்கு ஏற்புடையதாகாது.

(ய) மத்திய வங்கியின் நாணய அளவீட்டில் அறிக்கையிடப்பட்டுள்ள வர்த்தக வங்கிகளுக்கான மத்திய அரசாங்கத்தின் பொறுப்புக்கள் 2022 வரை உள்நாட்டுப் படுகடனைத் தொகுப்பதற்கு பயன்படுத்தப்பட்டன. 2023இலிருந்து, உள்நாட்டுப் படுகடன் தொகுப்பானது மாற்றப்பட்டு, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட தரவுகளை அடிப்படையாகக்கொண்டுள்ளது.

(ர) 2024 நவெம்பர் 27 தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில், ஓரிரவு கொள்கை வீதம், மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதமாக வரையறுக்கப்பட்டுள்ளது. துணைநில் வைப்பு வசதி வீதமும், துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் மத்திய வங்கியினால் தீர்மானிக்கபட்டவாறு எல்லையொன்றுடன் ஓரிரவுகொள்கை வீதத்துடன் இணைக்ககப்பட்டுள்ளன.

(ல) இறுதிக்கடன் வழங்குனராக வங்கித்தொழில் நிறுவனங்களுக்கு மத்திய வங்கி முற்பணங்கள் வழங்கும் வீதம்.

(வ) சட்ட வீதமானது 1990ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை திருத்தச் சட்டத்தின் கீழ் வரைவிலக்கணப்படுத்தப்படுவதுடன் பணத்தொகையை மீட்டெடுப்பதற்கான எந்தவொரு சட்ட நடவடிக்கைகளுக்கும் இது பொருந்தும். சந்தை வீதமானது 1990ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க கடன் அறவீட்டு (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வரைவிலக்கணப்படுத்தப்படுவதுடன் இணங்கப்பட்ட வட்டி வீதம் அல்லாத வர்த்தக கொடுக்கல்வாங்கல்களிலிருந்து எழும் ரூ.150,000இற்கு அதிகமான படுகடனை மீட்டெடுப்பதற்காக கடன் வழங்கும் நிறுவனங்களால் நிறுவப்பட்ட எந்தவொரு சட்ட நடவடிக்கைகளுக்கும் இது பொருந்தும். மத்திய வங்கியின் ஆளுகைச் சபை சட்டவீதம் மற்றும் சந்தை வீதத்தை தீர்மானிக்கின்றதுடன் அரசாங்க வர்த்தமானியில் ஒவ்வொரு ஆண்டுக்கும் திசெம்பர் மாதத்தில் எதிர்வரும் ஆண்டிற்கு பிரயோகிக்கத்தக்கதாக வெளியிடுகின்றது. 2025இற்கான சட்டவீதம் மற்றும் சந்தை வீதம் ஆண்டிற்கு 12.12 சதவீதமாகும்.

# முதன்மைச் சமூகக் குறிகாட்டிகள்

## பௌதிக தோற்றமும் காலநிலையும்

**அமைவிடம்**

வடஅகலக்கோடு $5^0$ 55' இற்கும் $9^0$ 50' இற்குமிடையில்

கிழக்குநெடுங்கோடு $79^0$ 41' இற்கும் $81^0$ 53' இற்குமிடையில்

**தூரம்**

433 கி.மீ. (269 மைல்கள்) வடக்குத் தெற்காக (உயர்ந்தபட்ச நீளம்)

241 கி.மீ. (150 மைல்கள்) மேற்குக் கிழக்காக (உயர்ந்தபட்ச அகலம்)

**உயரம்**

ஆகக்கூடிய உயரம் 2,525 மீற்றர்கள் (8,284 அடி)

**பரப்பு**

| | | | |
|---|---|---|---|
| மொத்தப்பரப்பு | : 67,240 ச.கி.மீ. | நிலப்பரப்பு | : 62,302 ச.கி.மீ. |
| உள்நாட்டு நீர்ப்பரப்பு | : 3,186 ச.கி.மீ. | நீர்த்தேக்க பரப்பு | : 1,406.5 ச.கி.மீ. |
| விரிகுடாப் பரப்பு | : 345.5 ச.கி.மீ. | | |

**காலநிலை**

| | |
|---|---|
| தாழ் நிலம் | : ஆகக் குறைந்தது $25.1^\circ$ செ - ஆகக் கூடியது $32.5^\circ$ செ |
| மலை நாடு | : ஆகக் குறைந்தது $19.2^\circ$ செ - ஆகக் கூடியது $28.0^\circ$ செ |
| ஆண்டு மழைவீழ்ச்சி (சராசரி) மி.மீ | : 2024 : 2,371 |
| | 2023 : 2,536 |

## குடித்தொகையும் முக்கிய புள்ளிவிபரங்களும்

**குடித்தொகை புள்ளிவிபரங்கள் (அ)**

| | |
|---|---|
| நடுவாண்டுக் குடித்தொகை ('000) (2024) | : 21,916 |
| வயதுப் பரம்பல் ('000) (2024) | |
| 0 - 14 ஆண்டுகள் | : 5,538 |
| 15 - 64 ஆண்டுகள் | : 14,662 |
| 65 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேல் | : 1,716 |
| குடித்தொகை அடர்த்தி (2024) | : சதுர கிலோ மீற்றருக்கு 352 ஆட்கள் |
| செப்பமற்ற பிறப்பு வீதம் (2024) | : ஒவ்வொரு 1,000 ஆட்களிற்கு 10.1 |
| செப்பமற்ற இறப்பு வீதம் (2024) | : ஒவ்வொரு 1,000 ஆட்களிற்கு 7.8 |
| இயற்கை அதிகரிப்பு வீதம் (2024) | : ஒவ்வொரு 1,000 ஆட்களிற்கு 2.3 |
| சிசுமரண வீதம் (2020) | : ஒவ்வொரு 1,000 பிறப்புகளிற்கு 6.4 (திருத்தப்பட்டது) |
| தங்கியிருப்போர் வீதம் (2024) | : 49.5% |
| சராசரி குடியிருப்பு அளவு (2019) (ஆ) | : 3.7 ஆட்கள் |

**தொழில்நிலை (2024)**

| | |
|---|---|
| தொழிலிலுள்ள ஆட்கள் ('000) (ஈ) | : 7,910 |
| வேளாண்மை | : 25.7% |
| கைத்தொழில் | : 25.5% |
| பணிகள் | : 48.8% |
| அரச துறை ஊழியர்கள் ('000) (உ) | : 1,336 |
| அரச துறை | : 84.9% |
| அரசிற்கு சொந்தமான தொழில்முயற்சிகள் | : 15.1% |

**வருமானப் பங்கீடு (ஆ)**

| | |
|---|---|
| குடும்ப அலகுகளின் வருமான கினி குணகம் (2019) | : 0.46 |
| சராசரி குடும்ப அலகு வருமானம் (2019) | : மாதமொன்றிற்கு ரூ. 76,414 |
| இடைய குடும்ப அலகு வருமானம் (2019) | : மாதமொன்றிற்கு ரூ. 53,333 |

**வறுமை (ஆ)**

| | |
|---|---|
| நாளாந்தம் உட்கொள்ளும் சராசரி கிலோ கலோரி (2019) | : 2,120 |
| தலைக்குரிய வறுமைச் சுட்டெண் (இ) | : 14.3 (2019) |
| | : 16.0 (2016) |
| | : 22.5 (2012/13) |

| | |
|---|---|
| **மனித அபிவிருத்திச் சுட்டெண் (2022)** | : 0.780 |
| 193 நாடுகளிடையேயான நிலை | : 78 |
| **இலங்கை சுபீட்ச சுட்டெண் (2021)** | : 0.796 |
| பொருளாதார மற்றும் வணிக காலநிலை துணைச் சுட்டெண் | : 0.825 |
| மக்களின் நல்வாழ்வுத் துணைச் சுட்டெண் | : 0.786 |
| சமூக-பொருளாதார உட்கட்டமைப்புத் துணைச் சுட்டெண் | : 0.777 |
| **பிறப்பில் வாழ்நாள் எதிர்பார்ப்பு (2017)** | : 75.5 ஆண்டுகள் |
| **கல்வி அறிவு வீதம் (2023) (ஈ)** | |
| சராசரி | : 93.2% |
| ஆண் | : 94.0% |
| பெண் | : 92.6% |

## பௌதிக, சமூக மற்றும் நிதியியல் உட்கட்டமைப்பு வசதிகள்

| | அலகு | 2024 |
|---|---|---|
| **போக்குவரத்து** | | |
| தேசிய வீதிகளின் நீளம் (ஏ மற்றும் பீ) | கி.மீ. | 12,263 |
| கடுகதிப் பாதைகளின் நீளம் | கி.மீ. | 312.6 |
| தொழிற்பாட்டிலிருக்கும் புகைவண்டிப் பாதையின் நீளம் (2022) | கி.மீ. | 1,610.9 |
| **மின்வலு** | | |
| மின்னூட்டல் மட்டம் (2016) | சதவீதம் | 99.3 |
| தலைக்குரிய மின்வலுப் பாவனை | கிலோ வாற்று மணி | 693.2 |
| **தொடர்பூட்டல்** | | |
| தொலைபேசி அடர்த்தி | | |
| நிலையான இணைப்புக்கள் | ஒவ்வொரு 100 ஆட்களுக்கு | 9.7 |
| செலுலர் தொலைபேசி உட்பட | ஒவ்வொரு 100 ஆட்களுக்கு | 141.2 |
| இணைய அடர்த்தி (ஊ) | ஒவ்வொரு 100 ஆட்களுக்கு | 105.6 |
| ஒரு அஞ்சல் அலுவலகத்தினால் சேவையாற்றப்படும் சராசரி குடித்தொகை | எண்ணிக்கை | 5,296 |
| **நிதியியல் உட்கட்டமைப்பு** | | |
| வங்கிகள் | | |
| உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கிளைகள் (எ) | எண்ணிக்கை | 2,936 |
| உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் கிளைகள் (எ) | எண்ணிக்கை | 706 |
| பாவனையிலுள்ள கொடுகடன் அட்டைகள் | ஒவ்வொரு 100,000 ஆட்களுக்கு | 9,081 |
| வங்கித்தொழில் அடர்த்தி | ஒவ்வொரு 100,000 ஆட்களுக்கும் கிளைகள் | 17 |
| ஏனைய நிதியியல் நிறுவனங்கள் | | |
| உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் கிளைகள் | எண்ணிக்கை | 1,908 |
| சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் கிளைகள் (ஏ) | எண்ணிக்கை | 05 |
| உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளின் கிளைகள் | எண்ணிக்கை | 134 |
| தன்னியக்கக் கூற்றுப் பொறிகள், காசு மீள்சுழற்சி பொறிகள் மற்றும் காசு வைப்புப் பொறிகள் | ஒவ்வொரு 100,000 ஆட்களுக்கு | 33 |

| | அலகு | 2024 |
|---|---|---|
| **நீர் வழங்கலும் சுத்திகரிப்பும்** | | |
| பாதுகாப்பான குடிநீரைப் பெறுவோர் | சதவீதம் | 98.8 |
| குழாய் நீரைப் பெறுவோர் | சதவீதம் | 63.1 |
| **பொதுக் கல்வி (2023)** | | |
| பள்ளிக்கூடம் ஒன்று உள்ளடக்கும் பிரதேசம் (ஐ) | ச.கி.மீ. | 6.5 |
| மாணவர்/ஆசிரியர் விகிதம் (ஐ) | எண்ணிக்கை | 16.3 |
| வயது அடிப்படையில் அனுமதி பெற்ற விகிதம் (தரம் 1-9) | சதவீதம் | 89.1 |
| ஆரம்ப வகுப்புக்களில் அனுமதி பெற்றோரின் தேறிய விகிதம் | சதவீதம் | 83.1 |
| **பல்கலைக்கழக கல்வி (ஒ)** | | |
| மாணவர்/ஆசிரியர் விகிதம் | எண்ணிக்கை | 23.0 |
| வயது அடிப்படையில் அனுமதி பெற்ற விகிதம் (வயது 18-22 ஆண்டுகள்) (ஓ) | சதவீதம் | 9.9 |
| க.பொ.த உயர்தரத்திலிருந்து பல்கலைக்கழகத்திற்கு முன்னேற்றம் | | |
| பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றோர் | சதவீதம் | 64.3 |
| தகுதி பெற்றோரின் சதவீதமாக அனுமதி | சதவீதம் | 24.9 |
| கல்வி மீதான அரச செலவினம் (ஔ) (2023) | மொ.உ.உ இன் சதவீதமாக | 1.6 |
| **பொதுச் சுகாதாரம்** | | |
| வைத்தியசாலை படுக்கைகள் (க) | ஒவ்வொரு 1,000 ஆட்களுக்கு | 4.1 |
| வைத்தியர் ஒருவருக்கான நபர்கள் (க) | எண்ணிக்கை | 985 |
| தாதிகள் (க) | ஒவ்வொரு 10,000 ஆட்களுக்கு | 17.8 |
| சுகாதாரம் மீதான அரசின் செலவினம் (2023) | மொ.உ.உ. இன் சதவீதமாக | 1.5 |

குறிப்பு : 2024இற்கான தரவுகள் தற்காலிகமானவை

*மூலங்கள்:* தொடர்பான நிறுவனங்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட புள்ளிவிபரங்கள்

(அ) பதிவாளர் நாயகம் திணைக்களம்.

(ஆ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் குடியிருப்பாளர் அலகுகளின் வருமானம் மற்றும் செலவு அளவீட்டினை (2019) அடிப்படையாகக் கொண்டது.

(இ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் குடியிருப்பாளர் அலகுகளின் வருமானம் மற்றும் செலவு அளவீட்டில் 2019இல் மேற்கொள்ளப்பட்ட அளவீட்டுச் சுற்றில், முன்னர் 2002 ஆண்டின் குடியிருப்பாளர் அலகுகளின் வருமானம் மற்றும் செலவு அளவீட்டுத் தரவுகளின் அடிப்படையிலமைந்த உத்தியோகபூர்வ வறுமைக் கோடானது 2012/13 ஆண்டு குடியிருப்பாளர் அலகுகளின் வருமானம் மற்றும் செலவு அளவீட்டுத் தரவுகளைப் பயன்படுத்தித் திருத்தப்பட்டுள்ளது. உத்தியோகபூர்வ வறுமைக் கோட்டினது திருத்தத்துடன் தலைக்குரிய வறுமைச் சுட்டெண்ணும் திருத்தப்பட்டுள்ளது.

(ஈ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்ட 2024இன் காலாண்டு தொழிற்படை அளவீட்டின முதல் மூன்று காலாண்டுகளின் சராசரியை அடிப்படையாகக் கொண்டது.

(உ) நிதி அமைச்சின் முகாமைத்துவ பணிகள் திணைக்களத்தின் தரவினை அடிப்படையாகக் கொண்டது.

(ஊ) செல்லிட இணைய சேவைகள் உள்ளடங்கலாக.

(எ) மாணவ சேமிப்பு அலகுகள் நீங்கலாக அனைத்து வங்கித்தொழில் பிரிவுகளும்.

(ஏ) ஏனைய கிளைகளை உள்ளடக்கியுள்ளது.

(ஐ) அரச பாடசாலைகள் மட்டும்.

(ஒ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மேற்பார்வையின் கீழான பல்கலைக்கழகங்களின் விபரங்கள்.

(ஓ) மாணவர்களின் உள்ளக அனுமதிகளை மட்டும் உள்ளடக்கியுள்ளது.

(ஔ) பொது மற்றும் உயர்கல்வி மீதான அரச செலவினம்.

(க) 2023 யூன் இறுதியிலுள்ளவாறு.

# சுருக்க அறிக்கை

இலங்கைப் பொருளாதாரமானது இரு ஆண்டுகளுக்கு முன்னர் பதிவுசெய்யப்பட்ட அதன் மிக ஆழமான பொருளாதாரச் சரிவைத் தொடர்ந்து, 2024இல் தொடர்ந்து உறுதியுடன் மீட்சியடைந்தது. மீட்சிக்கான பாதை கடினமாக இருந்தபோதிலும், படுகடன் நெருக்கடியிலுள்ள ஏனைய பல நாடுகளுடன் ஒப்பிடுகையில் இது குறிப்பிட்டளவு துரிதமாகவிருந்தது. நெருக்கடிக்குப் பின்னரான சீர்திருத்தங்கள் சாதகமான பெறுபேறுகளைக் காண்பிக்கத் தொடங்கியுள்ளன. மேம்பட்ட பொருளாதார நடவடிக்கை, கொள்வனவு சக்தியில் ஏற்பட்ட ஓரளவு மீட்சி, மற்றும் குறைவடைந்த நிச்சயமற்றதன்மை என்பனவற்றின் அறிகுறிகள் புலப்படுகின்றன. சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டத்தின் தொடர்ச்சி மற்றும் ஒத்திசைவான கொள்கைகள் என்பவற்றின் அறிகுறிகள் தென்பட்டமையினால், 2024இன் பிற்பகுதியில் தேர்தலுடன் தொடர்புடைய நிச்சயமற்றதன்மைகள் இல்லாதொழிந்தன. இதனுடன் இணைந்து அண்மையில் நிறைவடையும் நிலையிலுள்ள வெளிநாட்டுப் படுகடன் மறுசீரமைப்புக்கள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட வங்குரோத்துத் தரமிடலிலிருந்து நாடு விடுபட்டமை போன்றவை முதலீட்டாளரினதும் ஆர்வலர்களினதும் நம்பிக்கையை மேம்படுத்தியுள்ளன.

பொருளாதார வளர்ச்சியினைப் பொறுத்தவரையில், இலங்கை 2024இல் எதிர்ப்பார்க்கப்பட்டதை விடவும் சிறப்பான செயலாற்றத்தை எடுத்துக்காட்டியது. பணவீக்கம் மெதுவடைந்ததுடன் வலு விலைகளில் ஏற்பட்ட பாரியளவிலான குறைப்புக்களினால் உந்தப்பட்டு 2024 செத்தெம்பரிலிருந்து பணச்சுருக்கம் பதிவுசெய்யப்பட்டது. இதன்விளைவாக, பணவீக்கம் அதன் இலக்கிலிருந்து கீழ்நோக்கி விலகலடைந்தது. குறைந்தளவான வட்டி வீதங்களினால் ஆதரவளிக்கப்பட்டு, 2024இல் வீட்டுத்துறைகளுக்கும் வியாபாரங்களுக்குமான கொடுகடன் விரிவடைந்தது. தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைமையானது உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கையின் துரித மீட்சிக்குப் பங்களித்து, உலகளாவிய நோய்த்தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காலப்பகுதியில் இழந்த உற்பத்தியை ஓரளவுக்கு மீட்டெடுக்கச் செய்தது. அதேவேளை, வெளிநாட்டுத் துறைச் செயலாற்றமானது ஆண்டுகாலப்பகுதியில் வலுவாகவிருந்தது. நாட்டிற்கான அதிகரித்த தேறிய வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களுடன் இணைந்து, வெளிநாட்டுத் தாங்கிருப்புக்களில் குறிப்பிடத்தக்க மேம்பாடொன்று அவதானிக்கப்பட்டது. வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு மிகையொன்றினைத் தொடர்ந்தும் பதிவுசெய்தது. நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த வெளிநாட்டுச் செலாவணி வீதக் கொள்கையின் கீழ் இலங்கை ரூபாவின் பெறுமதியுயர்வடைந்தது. நாணயத்தின் பெறுமதியுயர்வடைதலின் மூலம் ஏற்பட்ட நன்மையானது தாழ்ந்தளவிலான இறக்குமதி விலைகளினூடாக நுகர்வோருக்குப் பயனளித்திருந்தது. இருந்தபோதிலும், இது வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டுபவர்களின் மீது பாதமாகமான தாக்கங்களைக் கொண்டிருந்தது. தொடர்ச்சியாக இரு ஆண்டுகாலத்திற்கு முதலாந்தர நிலுவையில் பதிவுசெய்யப்பட்ட மிகையுடன், இறைத் துறைச் செயலாற்றமானது 2024இல் குறிப்பிடத்தக்களவில் முன்னேற்றமடைந்தது.

2023இல் அடையப்பட்ட முன்னேற்றங்களைத் தொடர்ந்து, உள்நாட்டு விலை உறுதிப்பாட்டையும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டையும் நிலைநிறுத்துவதில் மத்திய வங்கியின் கொள்கைகள் கவனம்செலுத்தின. நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் கீழான முன்னுரிமைகளுக்கமைய, சாதகமான பணவீக்கத் தோற்றப்பாட்டைக் கருத்திற்கொண்டு, அதன்மூலம் உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைக்கு ஆதரவளிக்கும் விதத்தில், தளர்த்தப்பட்ட

நாணயக் கொள்கை நிலைப்பாட்டை மத்திய வங்கி தொடர்ந்தும் பேணியது. அதேவேளை, மேம்பட்ட வெளிநாட்டுத் துறைச் செயலாற்றத்தின் காரணமாக மத்திய வங்கியுடனான கலந்தாலோசனைக்கமைய, இறக்குமதிகள் மற்றும் மூலதனப் பாய்ச்சல்கள் மீது காணப்பட்ட மீதமுள்ள கட்டுப்பாடுகள் அரசாங்கத்தினால் படிப்படியாக தளர்த்தப்பட்டன. உரிமம்பெற்ற வங்கிகளின் ஆளுகைக்கான சட்டக் கட்டமைப்பை வலுப்படுத்துகின்ற வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தின் சட்டவாக்கத்துடன் நிதியியல் முறைமை உறுதிப்பாடு வலுப்படுத்தப்பட்டது. மேம்பட்ட பேரண்டபொருளாதார நிலைமைகளினால் ஆதரவளிக்கப்பட்டு நிதியியல் துறையின் ஒட்டுமொத்த செயலாற்றமானது 2024 காலப்பகுதியில் படிப்படியாகத் தொடர்ந்தும் முன்னேற்றமடைந்தது. ஆண்டுகாலப்பகுதியில், இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் நிறுவன ஆளுகை என்பன மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்காக உரிமம்பெற்ற வங்கிகளில் வியாபார மீட்புப் பிரிவுகளைத் தாபிப்பதில் விசேட கவனம்செலுத்தப்பட்டது. நிதியியல் அறிவை மேம்படுத்துவதற்கும், நிதியியல் வசதிக்குட்படுத்தலை ஊக்குவிப்பதற்கும் மற்றும் நிதியியல் துறையில் இலத்திரனியல் உருமாற்றத்தினை மேம்படுத்துவதற்கும் மத்திய வங்கி அதன் முயற்சிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்தது.

2022இல் ஏற்பட்ட முன்னெப்பொழுதுமில்லாத பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து, ஆழமாக வேரூன்றிய கட்டமைப்புசார் பலவீனங்களைச் சரிசெய்வதனை நாட்டின் சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டமானது இலக்காகக் கொண்டிருந்தது. பொருளாதார மீட்சிக்கு ஆதரவளிக்கும் அதேவேளை படுகடன் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையை அடைவதற்குத் தொடர்ச்சியான இறைத் திரட்சிக்கான தேவைப்பாடானது முன்னுரிமைப்படுத்தப்பட்டது. சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் நடைமுறைப்படுத்தலின் ஊடாக ஏழ்மையிலுள்ளவர்களினதும் பாதிக்கப்படக்கூடியவர்களினதும் வாழ்வாதாரங்களை உயர்த்துவதற்கும் அரசாங்கத்தினால் விசேட கவனம் செலுத்தப்பட்டது. மேலும், ஊழலுடன் தொடர்புடைய பாதிக்கப்படக்கூடியதன்மைகளை நிவர்த்திசெய்வதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறைந்தளவிலான பணவீக்க மற்றும் குறைந்தளவிலான வட்டி வீதச் சூழல் உறுதியான நிதியியல் துறையொன்றுடன் இணைந்து இலங்கை அதன் உள்ளார்ந்த ஆற்றலை அடைவதற்குச் சாதகமான சூழலொன்றினை உருவாக்கியுள்ளது. மேலும், பேரண்டபொருளாதார கொள்கை ஒத்திசைவுகளுடன் இணைந்து, சாதகமான சந்தை மனோபாவங்கள் மற்றும் நிலையான அரசியல் நிலைமைகள் என்பன நாடு சுபீட்சமடைவதற்கான சூழலை அமைத்துள்ளன. இருப்பினும், உயர்வடைந்த உலகளாவிய புவிசார் அரசியல் நிச்சயமற்றத்தன்மைகள் குறிப்பாக, ஐக்கிய அமெரிக்காவினால் முன்மொழியப்பட்ட தீர்வைகளை விதித்தல் மற்றும் அதன் கசிவுத் தாக்கங்கள் வெளிநாட்டுத் துறையிலும் பரந்தளவிலான பொருளாதாரத் தோற்றப்பாட்டிலும் பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடும். எனவே, கொள்கை வகுப்பதில் தொடர்ச்சியான முன்மதிமிக்கதன்மைக்கும் வெளிநாட்டு மற்றும் இறைத் தாங்கிருப்புக்களை மேலும் வலுப்படுத்துவதற்குமான கட்டாயத் தேவைப்பாடொன்று காணப்படுகின்றது.

பொருளாதார நெருக்கடியிலிருந்து பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான உறுதியான படிமுறைகளை அரசாங்கமும் இலங்கை மத்திய வங்கியும் மேற்கொண்டுள்ளன. பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் மற்றும் படுகடன் மறுசீரமைப்பு முயற்சிகள் என்பன இம்மீட்சிப் பயணத்தின் முக்கிய தூண்களாகக் காணப்பட்டன. பேரண்டபொருளாதாரச் சீராக்க நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் உறுதிப்பாட்டை மீட்டெடுப்பதற்கான பெரும்பாலான முக்கிய சீர்திருத்தங்கள் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு நிறைவுசெய்யப்பட்டமை வரவேற்கத்தக்கதாகும். குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளபோதிலும், பயணம் இன்னமும் முடிவடையவில்லை. பேரண்டபொருளாதார உறுதிப்பாடு தற்போது பெருமளவிற்கு மீட்டெடுக்கப்பட்டுள்ளமையினால் அனைத்து பிரஜைகளின் சுபீட்சத்தினையும் நிச்சயப்படுத்துவதனை உறுதிப்படுத்துகின்ற நாட்டின் நீண்டகால வளர்ச்சிக்கு மிகவும் அவசியமான கட்டமைப்புசார் சீர்திருத்தங்களை முன்னெடுப்பதற்கான அர்ப்பணிப்பானது இன்றியமையாததொன்றாகும்.

அத்தியாயம் 1

# பேரண்டபொருளாதார அபிவிருத்திகள்

## சுருக்கம்

பல்வேறு துறைகளிடையே ஏற்பட்ட பரந்தளவிலான மீட்சியுடன் இலங்கை 2024ஆம் ஆண்டில் முன்னேற்றமடைந்தது. இரு ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட நாட்டின் சுதந்திரத்திற்கு பிந்தைய வரலாற்றில் பதிவாகிய மிகக் கடுமையான நெருக்கடியைத் தொடர்ந்து இச்சாதகமான நடவடிக்கை நிகழ்கின்றது. 2022ஆம் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்றிறன்மிக்க சரிப்படுத்தும் இறை மற்றும் நாணய கொள்கை வழிமுறைகளின் ஒன்றிணைவானது மிக உறுதியான பொருளாதாரச் சூழலைத் தோற்றுவித்து நிலைபெறத்தக்க வளர்ச்சிக்கு அடித்தளமிட்டது. தற்போதைய பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டம், அண்மையில் நிறைவடையும் நிலையிலுள்ள வெளிநாட்டுப் படுகடன் மறுசீரமைப்பு மற்றும் மீளப்புதுப்பிக்கப்படும் முதலீட்டாளரின் நம்பிக்கை என்பனவற்றின் மூலம் பொருளாதார முன்னேற்றம் ஆதரவளிக்கப்பட்டது. இதுபோன்ற சரிப்படுத்தும் வழிமுறைகளின் சாதகமான தாக்கமானது தற்போது பொருளாதாரத்தின் அனைத்து முக்கிய துறைகளிலும் தெளிவாகப் புலப்படுகின்றது. மத்திய வங்கியின் முக்கிய குறிக்கோளான உள்நாட்டு விலை உறுதிப்பாட்டை பேணுதலை அடைவதற்கான முயற்சிகளின் விளைவுகள் தெளிவாக புலப்பட்டது. பொருளாதார நெருக்கடி காலத்தில் முன்னெப்பொழுதுமில்லாத அளவில் காணப்பட்ட விலை அதிகரிப்புக்கள் மக்களுக்கும், தொழில்களுக்கும் மற்றும் ஒட்டுமொத்த பொருளாதாரத்திற்கும் சுமையை ஏற்படுத்தியிருந்தன. எனினும், இறுக்கமான இறைக்கொள்கையுடனும் சாதகமான உலகளாவிய விலை அபிவிருத்திகளுடனும் இணைந்து, சரியான நாணயக் கொள்கை வழிமுறைகளைக் கொண்டு, பணவீக்கமானது 2023இலிருந்து குறிப்பிடத்தக்க பணவீக்க வீழ்ச்சிப் போக்கினைக் காண்பித்துள்ளது. நிர்வாகரீதியாக நிர்ணயிக்கப்பட்டதும் செலவுப் பிரதிபலிப்புமிக்கதுமான வலு விலைகள் குறிப்பிடத்தக்களவில் குறைந்தமையானது 2024 செத்தெம்பலிருந்து பணவீக்கத்தை எதிர்மறையாக திரும்புவதற்கு வழிவகுத்தது. பணச்சுருக்கத்தின் தற்போதுள்ள தற்காலிக காலப்பகுதியானது வாழ்க்கைச் செலவையும் அதேபோன்று உற்பத்திச் செலவையும் ஓரளவிற்குத் தளர்த்துவதற்கு உதவும். தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கையானது வியாபாரங்கள் மற்றும் வீட்டுத்துறைகளின் நுகர்விற்கும் முதலீட்டிற்குமான கொடுகடனை ஊக்குவிக்கும் வகையில், பரந்தளவில் சந்தை வட்டி வீதங்களைக் குறைப்பதற்கு தூண்டியது. இதன்விளைவாக, குறிப்பாக 2024ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டில் நிதியியல் நிறுவனங்களினால் தனியார் துறைக்கான கடன்வழங்கல் அதிகரிக்கப்பட்டது. சவால்மிக்க உலகளாவிய சூழலுக்கு மத்தியில் பொருளாதாரத்தின் வெளிநாட்டுத் துறை பாரியளவிலான உறுதிப்பாட்டை காண்பித்தது. அதேவேளை, அண்மையில் நிறைவடையும் நிலையிலுள்ள வெளிநாட்டுப் படுகடன் மறுசீரமைப்பு மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் வெற்றிகரமானத் தொடர்ச்சியும் வெளிநாட்டுத் துறையை மேலும் வலுவடைவதற்கு உதவியது. வணிகப்பொருள் இறக்குமதிகளின் மீட்சியுடன் வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைந்திருந்தபோதிலும், 2024ஆம் ஆண்டில் சுற்றுலாத் துறை மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களிலிருந்து ஈட்டப்பட்ட வருவாய்களின் குறிப்பிடத்தக்க மேம்பாடு, தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டிலும் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு மிகையொன்றை பதிவுசெய்வதற்கு நாட்டை இயலச்செய்திருந்தது. நாட்டிற்கான குறிப்பிடத்தக்க வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணி சந்தையில் திரவத்தன்மையை அதிகரிக்கச்செய்வதற்கு உதவியது. 2024ஆம் ஆண்டில் மத்திய வங்கி வரலாற்றிலேயே உயர்ந்தளவான வெளிநாட்டுச் செலாவணியை கொள்வனவுசெய்வதற்கு இவ்

1

**உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தொடர்ச்சியான அரசிறை நிர்வாக மேம்பாடுகள் 2024ஆம் ஆண்டில் அதிகரித்த வரிச் சேகரிப்பிற்கு பங்களித்துள்ளன.** உயர் செல்வமுள்ள தனியாட்கள் பிரிவு (High Wealth Individual Unit), மற்றும் முற்பண வருமான வரி கண்காணிப்பு பிரிவினைத் தாபித்தல் மற்றும் இணங்குவித்தலை மேம்படுத்துவதற்கான கட்டாய வரியைப் பதிவுசெய்தல் தேவைப்பாடு என்பன முக்கிய முன்னெடுப்புக்களில் உள்ளடங்குகின்றன. மேலும், பதிவாளர் நாயகத் திணைக்களம், கம்பனிகள் பதிவாளர் திணைக்களம், போக்குவரத்துத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் உள்ளடங்கலாக அனைத்து நிதியியல் நிறுவனங்கள் மற்றும் கொழும்பு பங்கு பரிவர்த்தனை போன்றன வரித் தளத்தை விரிவுபடுத்துவதற்கு ஆதரவளிக்கும்வகையில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் தகவல்களைப் பரிமாற்றுவதற்கு தற்போது தேவைப்படுத்தப்படுகின்றன. 2023ஆம் ஆண்டின் 879,778 இலிருந்து 2024இன் இறுதியிளவில் 1,485,777 இற்கு நிறுவன மற்றும் நிறுவனம்சாரா வகைகள் ஆகிய இரண்டிலும் பதிவுசெய்யப்பட்ட வருமான வரி செலுத்துநர்களின் அதிகரிப்பில் இம்முயற்சிகள் பிரதிபலிக்கப்பட்டன. இதற்கமைய, 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2024ஆம் ஆண்டில் 12.6 சதவீதத்தினால் (ரூ.114.8 பில்லியனால்) வருமான வரிச் சேகரிப்பு அதிகரித்தது. அதேவேளை, 2024ஆம் ஆண்டில் பெறுமதி சேர் வரி அரசிறைச் சேகரிப்பின் அதிகரிப்பிற்கு பெரும்பாலான பெறுமதிசேர் வரி விலக்குகளை நீக்குதல், பெறுமதிசேர் வரிப் பதிவு எல்லையை ஆண்டிற்கு ரூ.80 மில்லியனிலிருந்து ஆண்டிற்கு ரூ.60 மில்லியனிற்கு குறைத்தல் மற்றும் நிலையான பெறுமதிசேர் வரி வீதத்தை 18 சதவீதமாக மேல்நோக்கி திருத்துதலுடன் இணைந்து இறக்குமதிக் கட்டுப்பாடுகளை நீக்குதல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளின் மீட்பு என்பன கணிசமானளவில் பங்களித்துள்ளன. இதன்விளைவாக, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2024ஆம் ஆண்டில் பெறுமதிசேர் வரிச் சேகரிப்பு 88.6 சதவீத வளர்ச்சியைப் (ரூ.615 பில்லியனால்) பதிவுசெய்தது. பெறுமதிசேர் சேகரிப்பை அதிகரிக்கின்றதை இலக்காகக் கொண்டு பெறுமதிசேர் இணங்குவிப்பு மேம்படுத்தல் செயற்றிட்டத்தை முன்னெடுப்பதில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் முயற்சிகளினால் இச்சீர்த்திருத்தங்கள் மேலும் மேம்படுத்தப்பட்டன. அதேவேளை, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2024ஆம் ஆண்டில் கலால் தீர்வையிலிருந்தான அரசிறை 27.4 சதவீதம் கொண்ட (ரூ.128.9 பில்லியன்) அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. 2023ஆம் ஆண்டு யூனிலிருந்து ஆண்டு பணவீக்கம் சீராக்கப்பட்ட சுட்டெண் முறையின் அறிமுகப்படுத்தலைத் தொடர்ந்து, ஆண்டின் தொடக்கத்தில் குடிவகை மீதான கலால் தீர்வையின் 14 சதவீத மேல்நோக்கிய திருத்தமே இவ் அதிகரிப்பிற்கு முக்கியமாகப் பங்களித்திருந்தது. மேலும், 2024ஆம் ஆண்டில் அனைத்து வகையான பெற்றோலிய உற்பத்தி வகைகளின் தேறிய அதிகரிப்பின் காரணமாக பெற்றோலியம் மீதான கலால் தீர்வை சேகரிப்பின் உயர்வும் இவ்வதிகரிப்பிற்கு பங்களித்திருந்தது. 2024ஆம் ஆண்டில் சுங்க இறக்குமதி வரிகள் மற்றும் சிறப்புப் பண்டத் தீர்வை உள்ளடங்கலாக பன்னாட்டு வர்த்தகத்துடன் தொடர்புடைய வரிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட அரசிறை முறையே, 5.7 சதவீதத்தினாலும் 124.4 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தது. 2023 மாச்சில் இடம்பெற்ற சுங்க இறக்குமதித் தீர்வைகளின் திருத்தத்தின் தாக்கத்தினாலும் உயர்ந்தளவான இறக்குமதி அளவுகளுடன் இணைந்து சீனி மற்றும் உருளைக் கிழங்குகளுக்கான சிறப்புப் பண்டத் தீர்வை

வீதங்களின் மேல்நோக்கிய திருத்தத்தின் மூலமும் இவ் அதிகரிப்பு தூண்டப்பட்டிருந்தது. அதேவேளை, இறக்குமதிகள் அதிகரித்ததினாலும் தெரிவுசெய்யப்பட்ட இறக்குமதிசெய்யப்பட்ட பொருட்களின் இறக்குமதி மீதான செஸ் வீதங்களின் மேல்நோக்கிய திருத்தம் ஆகியவற்றின் காரணமாக செஸ் அரசிறையும் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்து 41.9 சதவீத வளர்ச்சியைக் காண்பித்தது. எனினும், 2023ஆம் ஆண்டில் எதிர்வுத் தீர்வைகளை குறைப்பதற்கு 5 ஆண்டுகளுக்குள் துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தித் தீர்வையை கட்டம் கட்டமாக அகற்றுவது என்ற கொள்கை தீர்மானத்தை மேற்கொண்டதன் காரணமாக துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தித் தீர்வையிலிருந்து சேகரிக்கப்பட்ட அரசிறை 3.1 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. மேலும், 2022ஆம் ஆண்டின் பிற்பகுதியில் வருவாய் மேம்படுத்தல் பொதியின் பாகமாக அறிமுகப்படுத்தப்பட்ட புதிய வரியான சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு தீர்வை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024ஆம் ஆண்டில் 16.0 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இதற்கு முக்கியமாக 2024 சனவரி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் பதிவுசெய்தல் மட்டத்தைக் குறைப்பதன் மூலம் சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு தீர்வையுடன் தொடர்புடைய சீர்திருத்தங்கள் பங்களித்திருந்தது. 2024ஆம் ஆண்டில் வரி அரசிறை சேகரிப்பு குறிப்பிடத்தக்க அதிகரிப்பைப் பதிவுசெய்திருந்தபோதிலும், 2024 தேசிய வரவுசெலவுத் திட்டத்தின் அரசிறை மதிப்பீட்டை (ரூ.3,820 பில்லியன்) விட ரூ.115 பில்லியன் (3 சதவீதம்) குறைவாகவிருந்தது. எனினும், மத்திய அரச வரி அரசிறை பன்னாட்டு நாணய நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் கீழ் ரூ.3,700 பில்லியனாக நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விட அதிகமாகவிருந்தது. 2023இல் நடைமுறைப்படுத்தப்பட்ட வருமான வரி சீர்த்திருத்தங்களைத் தொடர்ந்து 2023ஆம் ஆண்டில் நேரடி மற்றும் மறைமுக வரிகளுக்கான விகிதம் நேரடி வரிகளை நோக்கி மாற்றமடைந்து 33:67 விகிதத்தை அடைந்திருந்தாலும் 2024ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட முக்கிய பெறுமதிசேர் வரி சீர்திருத்தங்களுடன் வரிக் கட்டமைப்பு மீண்டும் மறைமுக வரிகளை நோக்கி நகர்ந்து 28:72 என்ற விகிதத்தைப் பதிவுசெய்தது. வரித் தளத்தையும் இணக்கத்தையும் விரிவுபடுத்துவதற்கு தற்போது கருத்திற்கொள்ளப்படும் வழிமுறைகள் எதிர்காலத்தில் இவ்விகிதத்தை படிப்படியாக மேம்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**அதேவேளை, வரியல்லா அரசிறை பெயரளவு நியதிகளிலும் மொ.உ.உ.ற்பத்தியின் சதவீதத்திலும் சிறிதளவில் குறைவடைந்தமைக்கு முக்கியமாக அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் இலாபங்கள் மற்றும் பங்குலாபங்களிலிருந்தான அரசிறைகளின் குறைப்பு காரணமாக அமைந்தது.** 2024ஆம் ஆண்டில், அரசாங்கத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வட்டி வருமானம், அபராதங்கள், கட்டணங்கள் மற்றும் விதிப்புக்கள் என்பனவற்றிலிருந்தான வரியல்லா அரசிறையிலிருந்து பதிவுசெய்யப்பட்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியினால் இக்குறைப்பின் தாக்கம் மிதமடைந்திருந்தது.

## செலவினம், மற்றும் தேறிய கடன்வழங்கல்

**2024ஆம் ஆண்டின் பெயரளவு நியதிகளிலும் மொ.உ.உ.ற்பத்தியின் சதவீதத்திலும் தேசிய வரவுசெலவுத் திட்டத்தில் மதிப்பிடப்பட்ட செலவினத்துடன் ஒப்பிடுகையில் மொத்த செலவினமும் தேறிய கடன் வழங்கலும் குறிப்பிடத்தக்க குறைப்பைப் பதிவுசெய்திருந்தன.** 2024ஆம் ஆண்டிற்கான மொத்த செலவினமும் தேறிய கடன்வழங்கலும் வரவுசெலவு மதிப்பீட்டின் 88 சதவீதத்திற்கு மாத்திரம் வகைகூறிய அதேவேளை மொத்த செலவினமும் தேறிய கடன்வழங்கலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது பெயரளவு நியதிகளில் 14.5 சதவீதத்தினால் அதிகரித்திருந்தன. அதேவேளை, 2024ஆம் ஆண்டில் மொ.உ.உ.ற்பத்தியின் நியதிகளில் செலவினம் 20.5 சதவீதத்திற்கு சிறிதளவில் அதிகரித்தது. 2024ஆம் ஆண்டின் மொத்த மீண்டெழும் செலவினத்தின் 50.4 சதவீதம் கொண்ட பங்கொன்றுடன், வட்டிச் செலவினம் 2024ஆம் ஆண்டில் தொடர்ந்து உயர்வாக காணப்பட்டது. இது முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 52.3 சதவீதம் கொண்ட பங்குடன் ஒப்பிடுகையில் சிறிதளவு முன்னேற்றமாக விளங்குகின்றது. 2024ஆம் ஆண்டில் அரசப் பிணையங்கள் சந்தையில் நிலவிய குறைந்தளவான வட்டி வீதங்களுக்காக சீராக்கப்பட்டு, 2024ஆம் ஆண்டில் உள்நாட்டு வட்டிச் செலவினம் 1.8 சதவீதத்தினால் (ரூ. 43.1 பில்லியனளவில்) சிறிதளவில் வீழ்ச்சியடைந்த அதேவேளை 2024இல் வெளிநாட்டு

வரைபடம் 1.24: அரச மீண்டெழும் செலவினத்தின் உள்ளமைப்பு - 2024




*மூலம்:* நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

வட்டிச் செலவினம் ரூ.277.0 பில்லியனால் அதிகரித்தது. வெளிநாட்டுப் படுகடன் மறுசீரமைப்பின் கிட்டத்தட்ட இறுதிப்படுத்தலுடன் ஆண்டின் பிற்பகுதியில் வெளிநாட்டு வட்டி கொடுப்பனவின் அதிகரிப்பு பதிவுசெய்யப்பட்டது. அதேவேளை, பொருளாதாரச் சிக்கல்களின்போது பொருளாதாரத்தில் பாதிக்கப்படக்கூடிய மற்றும் ஓரங்கட்டப்பட்ட பிரிவுகளின் மீது சிறப்புகவனம் செலுத்தி, ஓய்வூதியக் கொடுப்பனவுகள், சமூகப் பாதுகாப்பு வலைகள் மற்றும் இலவச மருத்துவம் ஆகியவற்றிற்கான உயர்ந்தளவான செலவினங்கள் காரணமாக, 2024ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் உதவுதொகைகள் மற்றும் பரிமாற்றங்கள் 22.8 சதவீதத்தினால் (ரூ. 228.6 பில்லியன்) அதிகரித்தன. 2024ஆம் ஆண்டில், *அஸ்வெசும* நலத்திட்டத்திற்காக ரூ. 186.4 பில்லியன் செலவிடப்பட்டு, மொத்த உதவுதொகைகளும் மற்றும் பரிமாற்றல்களில் 15.1 சதவீதத்தை வகைகூறியது. இதில் 1,717,262 தெரிவுசெய்யப்பட்ட குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கான பணப் பரிமாற்றங்கள் மற்றும் முதியவர்கள், வலதுகுறைந்தவர்கள் மற்றும் சிறுநீரக நோயாளிகளுக்கு செய்யப்பட்ட வகைப்படுத்தப்பட்ட கொடுப்பனவுகள் ஆகியவை உள்ளடங்கும்.

**2024ஆம் ஆண்டில் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு அதிகரித்ததன் காரணமாக, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2024ஆம் ஆண்டில் சம்பளங்கள் மற்றும் கூலிகளுக்கான செலவினம் 13.5 சதவீதத்தினால் (ரூ.126.6 பில்லியன்) அதிகரித்திருந்தது.** மூலதனச் செலவு மற்றும் தேறிய கடன்வழங்கல் 2024ஆம் ஆண்டில் 20.4 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு அதிகரிப்பைப் பதிவு செய்திருந்தாலும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், மூலதனச் செலவு 15.0 சதவீதத்தினால் (ரூ. 137.0 பில்லியன்) வீழ்ச்சியடைந்தது. 2024ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு நிதியிடல் கிடைக்கப்பெறாததன் காரணமாக, மூலதனச் செலவு வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீட்டில் 61.6 சதவீதமாக மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்டதால், ரூ.1,260 பில்லியன் கொண்ட வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டை விடக் கணிசமாகக் குறைந்தது. இதற்கமைய, மூலதனச் செலவு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.6 சதவீதமாக மாத்திரமே காணப்பட்டது. இறைக் கட்டுப்பாடுகள் காரணமாக மூலதனத் செயற்றிட்டங்களுக்கான குறைந்த செலவினம் நாட்டின் பொருளாதார வளர்ச்சி வாய்ப்பு மற்றும் சமூக அபிவிருத்தியில் நீண்டகால பாதக விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.

## 1.5.3 வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை நிதியிடல்

**2024ஆம் ஆண்டில் அரசாங்கம் வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறைக்கு நிதியளிப்பதற்காக முக்கியமாக உள்நாட்டு மூலங்களைத் தொடர்ந்து தங்கியிருந்தமைக்கு பெரும்பாலும் வெளிநாட்டு நிதியுதவியை அணுகுவதிலுள்ள தடைகள் காரணமாக அமைந்தன.** மொத்த தேறிய உள்நாட்டு நிதியிடலானது முக்கியமாக அரசப் பிணையங்கள் மூலம் பெறப்பட்டது. இதற்கமைய, திறைசேரி உண்டியல்களிலிருந்தான தேறிய நிதியிடல் 2024 இல் ரூ. 266.1 பில்லியனாக விளங்கி, 2023இல் பதிவுசெய்யப்பட்ட ரூ. 2,058.6[24] பில்லியனிலிருந்து குறிப்பிடத்தக்க குறைப்பைப் பதிவுசெய்தது. அதே நேரத்தில், திறைசேரி முறிகளிலிருந்து தேறிய நிதியிடல் 2023இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.692.3 பில்லியனிலிருந்து 2024இல் ரூ.1,544.3[24] பில்லியனிற்கு அதிகரித்தது. அதேவேளை, வெளிநாட்டு நிதியிடல் தொடர்பில், ஆசிய அபிவிருத்தி வங்கி, மீள்கட்டடவாக்கம் மற்றும் அபிவிருத்திக்கான பன்னாட்டு வங்கி, யப்பான் அரசாங்கம் மற்றும் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு போன்றவற்றிலிருந்தான நிதியளித்தல் உள்ளடங்கலாக, இருதரப்பு மற்றும் பலதரப்பிலான கடன்கொடுநர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூ. 465.4 பில்லியனுக்கு மேலதிகமாக (ஏறத்தாழ

24 2023ஆம் ஆண்டிற்கான அரசப் பிணையங்களுடன் தொடர்புடைய எண்கள் உள்நாட்டு படுகடன் மேம்படுத்தல் திட்டத்துடன் தொடர்புடைய கொடுக்கல்வாங்கல்களின் தாக்கத்தை உள்ளடக்கவில்லை.

**சிறப்பு வரைபடம் 1.8:**
**அரசிறை, செலவினம் மற்றும் முக்கிய இறை நிலுவைகள்**



மூலம்: நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு



மூலம்: நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு



மூலம்: நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு



மூலங்கள்: நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

* ஆண்டிற்கான பொருளாதார மீளாய்வு 2024இன் அட்டவணை 1.21இன் அடிக்குறிப்புக்களைப் பார்க்கவும்.

பல தசாப்தங்களாக நீடித்த இறைத் துறை சமமின்மைகள் நாள்பட்ட வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறைகள் உள்ளடங்கலாக, 2022இல் உயர்வினை அடைந்தது. தொடர்ச்சியான இறைச் சரிவுகள், கொள்கைத் தவறுகள் மற்றும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுத்திலிருந்து பொருளாதார வீழ்ச்சி ஆகியவற்றால் நெருக்கடி உந்தப்பட்டது. இதற்கு பதிலளிக்கும் வகையில், அரசிறை அடிப்படையிலான இறைச் சீராக்கம் மீதான கவனம்செலுத்தலுடன், அரசாங்கம் 2022 நடுப்பகுதியிலிருந்து பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் ஒருங்கிணைப்பு முயற்சிகளை நடைமுறைப்படுத்தியது. இம்முயற்சிகள் வலுவான அரசிறை வளர்ச்சி, கட்டுப்படுத்தப்பட்ட செலவினங்கள் மற்றும் முக்கிய இறை நிலுவைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஆகியவற்றால் குறிப்பிடத்தக்க முழுமையான திருப்பத்திற்கு வழிவகுத்துள்ளன.

2024ஆம் ஆண்டளவில், இறைத் துறை தொடர்ச்சியாக இரு ஆண்டுகளுக்குச் சாதகமான முதலாந்தர நிலுவையொன்றினை அடைந்தது.

எதிர்பார்க்கப்படும் இறைத் திரட்சி மற்றும் படுகடன் குறைப்பு முயற்சிகளிலிருந்தான ஏதேனும் எதிர்பாராத விலகல்கள் கடின உழைப்பினால் பெறப்பட்ட பேரண்டபொருளாதார உறுதிப்பாட்டை குறைமதிப்பிற்கு உட்படுத்தக்கூடும் என்பதால், கொள்கை மீள்திரும்பல்களின்றி இவ் உத்வேகத்தைத் தக்கவைத்துக்கொள்வது மிகவும் முக்கியமானது.

ஐ.அ.டொலர் 1.5 பில்லியன்) வரவுசெலவுத் திட்ட ஆதரவின் மூலம் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் அரசாங்கம் ரூ.101.5 பில்லியனைப் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 336 மில்லியன்) பெற்றுக்கொண்டது. அரசாங்கத்தின் பொருளாதார உறுதிப்படுத்தல் திட்டத்தை ஆதரிப்பதற்கும், சமூக பாதுகாப்பு வலைகளை வலுப்படுத்துவதற்கும், மேம்பாட்டுத் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தவதை எளிதாக்குவதற்கும் இந்நிதிகள் வழங்கப்பட்டன.

1

## 1.5.4. மத்திய அரசப் படுகடன்[25]

**மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மத்திய அரசப் படுகடன் 2023இன் 104.7 சதவீதத்திலிருந்து 2024இறுதியளவில் 96.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு முக்கியமாக பெயரளவு மொ.உ.உற்பத்தி வலுவான வளர்ச்சியினால் தூண்டப்பட்டமையும் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட படுகடன் மீது இலங்கை ரூபா உயர்வடைந்ததன் தாக்கம் என்பனவும் காரணமாக அமைந்தன.** இதற்கமைய, 2024இறுதியளவில் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக உள்நாட்டுப் படுகடனும் வெளிநாட்டுப் படுகடனும் 2023இன் இறுதியில் முறையே 62.2 சதவீதத்துடனும் 42.5 சதவீதத்துடனும் ஒப்பிடுகையில் முறையே 61.2 சதவீதத்திற்கும் 34.9 சதவீதத்திற்கும் குறைவடைந்தன. எனினும், மீளாய்வுக்குரிய காலப்பகுதியில், உள்நாட்டு படுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு வெளிநாட்டுப் படுகடனின் வீழ்ச்சியை எதிரீடுசெய்தமையினால், பெயரளவு நியதிகளில், மொத்தப் படுகடன் 2024ஆம் ஆண்டில் ஏறத்தாழ ரூ.28.7 றில்லியனாக விளங்கி, பரந்தளவில் மாற்றமின்றி காணப்பட்டன. வெளிநாட்டு நிதியிடலுக்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகலுக்கு மத்தியில், அரசாங்கம் தமது வரவுசெலவுதிட்டப் பற்றாக்குறைக்கு நிதியளிப்பதற்காக உள்நாட்டுச் சந்தையில் அதிகமாக தங்கியிருந்தமை மொத்த உள்நாட்டுப் படுகடனில் பெயரளவிலான அதிகரிப்பிற்கு முக்கிய காரணமாகும். அரசியல் மற்றும் இறைத் துறைகளில் காணப்பட்ட நிச்சயமற்ற தன்மைகளின் நீக்கத்துடன், நீண்ட கால அரசப் பிணையங்களுக்கான சந்தை ஆர்வம் மேம்பட்டது. இது 2024ஆம் ஆண்டில் சந்தை வட்டி வீதங்கள் வீழ்ச்சியடைந்ததன் மூலம் நீண்ட முதிர்ச்சி காலங்களைக் கொண்ட சாதனங்களின் மூலம் படுகடனைத் திரட்டுவதற்கான அரசாங்கத்தின் முன்னுரிமைக்கு ஏற்ப அமைந்தது. நீட்டிக்கப்பட்ட முதிர்ச்சி காலங்களால் துணையளிக்கப்பட்டு மொத்த உள்நாட்டுப் படுகடனின் சதவீதமாக நடுத்தர மற்றும் நீண்ட கால உள்நாட்டுப் படுகடனின் பங்கு 2023 திசெம்பரின் 74.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், 2024ஆம் ஆண்டின் இறுதியில் 78.9 சதவீதமாக மேம்பட்டது. அதேவேளை, 2023இன் இறுதியுடன் ஒப்பிடுகையில், 2024இன் இறுதியில் பெயரளவு நியதிகளில் வெளிநாட்டுப் படுகடன் குறைவடைந்தமையானது முக்கிய வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராக இலங்கை ரூபா உயர்வடைந்ததன் மூலம் முக்கியமாக தூண்டப்பட்டது. இதன்விளைவாக, மொத்த மத்திய அரசப் படுகடனின்

### அட்டவணை 1.21: அரசின் வெளிநின்ற படுகடன் (அ)(ஆ)

| விடயம் | 2023 | 2024 (இ) |
|---|---|---|
| ரூ. பில்லியன் | | |
| உள்நாட்டு படுகடன் (ஈ) | 17,051.9 | 18,309.7 |
| முதிர்வு காலத்தின்படி | | |
| குறுங்காலம் (உ) | 3,616.2 | 3,220.1 |
| நடுத்தர மற்றும் நீண்டகாலம் (ஊ)(எ) | 13,435.6 | 15,089.6 |
| நிறுவனங்களின்படி | | |
| வங்கி | 9,102.8 | 9,411.2 |
| வங்கியல்லா | 7,506.3 | 8,158.5 |
| மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல் ஒதுக்கீடு (ஏ)(ஐ) | 442.7 | 739.9 |
| வெளிநாட்டு படுகடன் (ஒ)(ஓ)(ஔ) | 11,644.1 | 10,429.0 |
| பல்புடை | 3,817.0 | 3,773.5 |
| இருபுடை மற்றும் வர்த்தக | 7,827.1 | 6,655.6 |
| நாணயங்களின்படி | | |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | 1,737.1 | 1,651.1 |
| ஐ.அ.டொலர் | 7,943.9 | 7,133.4 |
| யப்பானிய யென் | 819.4 | 678.6 |
| யூரோ | 396.6 | 334.2 |
| ஏனையவை | 747.1 | 631.7 |
| மொத்த மத்திய அரசின் வெளிநின்ற படுகடன் | 28,695.9 | 28,738.7 |
| மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக (க) | | |
| மொத்த மத்திய அரசின் வெளிநின்ற படுகடன் | 104.7 | 96.1 |
| உள்நாட்டு படுகடன் | 62.2 | 61.2 |
| வெளிநாட்டு படுகடன் | 42.5 | 34.9 |

*மூலங்கள்:* நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: நிதி அமைச்சின் கீழ் பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம் தாபிக்கப்பட்டதுடன் தற்போது இலங்கையின் பொதுப் படுகடனை பதிவுசெய்து வெளியிடுவதற்கான பொறுப்பானது, 2024 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பொதுப்படுகடன் முகாமைத்துவச் சட்டத்தின் விதிகளால் ஆணையிடப்பட்டவாறு, பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தின் கீழ் வருகின்றது. இதற்கமைய, படுகடன் தரவுகளுக்கான உத்தியோகபூர்வ மூலமாக பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தினால் வெளியிடப்படும் காலாண்டு புள்ளிவிபர படுகடன் திரட்டு காணப்படுகின்றது. தரவுகளின் தொடர்ச்சியை உறுதி செய்வதற்காக, நிதி அமைச்சிலிருந்து பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இந்த அட்டவணை வடிவமைப்பினை மத்திய வங்கி தொகுக்கின்றது.

(அ) 2014 பன்னாட்டு நாணய நிதியத்தால் அரச நிதி புள்ளிவிபரங்களுக்கான கையேட்டில் அரச படுகடன் புள்ளிவிபரங்களை தொகுத்தல் தொடர்பான வழிகாட்டல்களுக்கு அமைய வதிவோர் வசமுள்ள இலங்கை அரசாங்கத்தின் வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் உள்நாட்டு படுகடனின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், படுகடன் புள்ளிவிபரங்கள் தேறிய அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன (வைப்புக்கள் நீங்கலாக).

(ஆ) இலங்கையின் வெளிநாட்டு பொதுப் படுகடன் பணிக்கொடுப்பனவுகள் தொடர்பில் 2022 ஏப்பிறல் 12 அன்று நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வெளியிடப்பட்ட இடைக்கால கொள்கை அறிவிப்பின் பின்னர் நிலுவையிலுள்ள பல்வேறு படுகடன் பணிக் கொடுப்பனவுகளை வெளிநின்ற மத்திய அரச படுகடன் உள்ளடக்கவில்லை. இப்படுகடன் பணிக்கொடுப்பனவுகள் இடைக்காலக் கொள்கையின் பிரகாரம் மூலதனமாக்கப்பட வேண்டுமெனக் கருதப்பட்டு பாதிக்கப்பட்ட படுகடனின் நிலுவையிலுள்ள வட்டிக் கொடுப்பனவுகளை உள்ளடக்கியுள்ளன.

(இ) தற்காலிகமானது

(ஈ) 2023 தொடக்கம், உள்நாட்டு படுகடன் தொகுப்பு முறை மாற்றப்பட்டதுடன் இது நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் உறுதிப்படுத்தப்படும் தரவுகளை அடிப்படையாகக் கொண்டதாகும்.

(உ) வதிவற்ற முதலீட்டாளர்கள் வசமிருந்த திறைசேரி உண்டியல்கள் நீங்கலாக

(ஊ) வதிவற்ற முதலீட்டாளர்கள் வசமுள்ள திறைசேரி முறிகள் நீங்கலாக

(எ) 2023இற்கு பின்னரான தரவுகள் மத்திய அரச படுகடனினுள் உள்ளீர்க்கப்பட்ட இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அரசினால் உத்தரவாதமளிக்கப்பட்ட வெளிநாட்டு நாணய படுகடனின் வெளிநின்ற நிலுவையினை உள்ளடக்குகின்றதுடன் 2024இற்கான தரவுகள் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வெளியிடப்பட்ட 2024இன் நான்காம் காலண்டிற்கான காலாண்டு புள்ளிவிபர படுகடன் திரட்டின்படி அபிவிருத்தித் திட்ட கடனாக வகைப்படுத்தப்பட்ட ரூபா 16,267 மில்லியன் வெளிநின்ற நிலுவையை உள்ளடக்குகின்றது.

(ஏ) உண்மையான சொத்துரிமை நிறுவப்பட முடியாதவைகளுக்கான மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழான பிணைய இருப்புக்கள் உள்ளடங்கலாக

(ஐ) திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுடன் தொடர்புடைய மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் கீழான வைப்புக்கள் உரிய உரிமம்பெற்ற வர்த்தக வங்கி அல்லது தனியான முதனிலை முகவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

(ஒ) 2023 மற்றும் 2024 இற்கான வெளிநாட்டு படுகடன் புள்ளிவிபரங்கள் மற்றும் வெளிநாட்டுப் படுகடன் வகைப்படுத்தல் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் பேணப்பட்டு வந்த பொதுநலவாய செயலக படுகடன் பதிவிடல் மற்றும் முகாமைத்துவ முறைமையிலிருந்து 2024 பெப்ரவரி 26 மற்றும் 2025 பெப்ரவரி 27 அன்று பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப்பட்டன.

(ஓ) இலங்கை மின்சார சபை, வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் மற்றும் இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் கீழ் முன்னர் வகைப்படுத்தப்பட்டிருந்த பல்வேறு வெளிநின்ற செயற்றிட்டக் கடன்கள் 2022 திசெம்பரிலிருந்து மத்திய அரச படுகடனின் கீழ் உள்ளீர்க்கப்பட்டன.

(ஔ) வெளிநாட்டுப் படுகடன் மறுசீரமைப்பின் தாக்கத்தினை 2024இன் தரவுகள் பிரதிபலிக்கின்றது.

(க) 2025 மார்ச் 18ஆம் நாளான்று தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகள் (அடிப்படையாண்டு 2015) பயன்படுத்தப்பட்டுள்ளன. 2023இற்கான மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகள் 2025 மாச்சு 18ஆம் நாளன்று வெளியிடப்பட்ட மொ.உ.உற்பத்தியினை அடிப்படையாகக்கொண்டு திருத்தப்பட்டது.

---

25 அரசாங்கத்தின் படுகடன் புள்ளிவிபரங்கள் அரசாங்கத்தின் தேறிய வங்கி வைப்புக்களில் எடுத்துக்காட்டப்படுகின்றதுடன் இலங்கையின் வெளிநாட்டு பொதுப் படுகடன் தீர்ப்பனவுகள் தொடர்பில் 2022 ஏப்பிறல் 12 அன்று நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வெளியிடப்பட்ட இடைக்கால கொள்கை அறிவிப்பின் பின்னர் நிலுவையிலுள்ள பல்வேறு படுகடன் தீர்ப்பனவுகளை வெளிநின்ற மத்திய அரச படுகடன் உள்ளடக்கவில்லை. இப்படுகடன் தீர்ப்பனவுகள் இடைக்காலக் கொள்கையின் பிரகாரம் மூலதனமாக்கப்பட வேண்டுமெனக் கருதப்பட்ட பாதிக்கப்பட்ட படுகடனின் நிலுவையிலுள்ள வட்டிக் கொடுப்பனவுகளை உள்ளடக்கின்றன.

வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடனின் பங்கு 2023இன் இறுதியில் 40.6 சதவீதத்திலிருந்து 2024இன் இறுதியில் 36.3 சதவீதமாகக் குறைவடைந்து, மிகவும் சமநிலையான படுகடன் உள்ளமைப்பை நோக்கிய மாற்றத்தையும் வெளிப்புற பாதிப்பைக் குறைத்ததையும் பிரதிபலித்தது.

**2024ஆம் ஆண்டில், இலங்கை அதன் படுகடன் மறுசீரமைப்புச் செயல்முறையை பெரும்பாலும் நிறைவுசெய்யும் கட்டத்திற்கு கொண்டுவந்தமையினால் இது குறிப்பிடத்தக்க மைல்கல்லாக அமைந்ததுடன், அதன் படுகடன் ஸ்தம்பித்த நிலையை முடிவுக்குக் கொண்டுவந்தது.** இலங்கை இரு ஆண்டு பேச்சுவார்த்தைகளை முடிவுக்குக் கொண்டுவந்து அலுவல்சார் கடன்கொடுநர் குழுக்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டு, சீன ஏற்றுமதி - இறக்குமதி வங்கியுடன் படுகடன் கையாளல் உடன்படிக்கையை இறுதிப்படுத்தியமை, 2024 யூனில் இச்செயன்முறையின் முக்கிய மைல்கல்லாக குறிக்கப்படுகின்றது. அன்றிலிருந்து, நாடுவாரியான படுகடன் கொடுப்பனவுகளை ஆரம்பிப்பதற்கு இருதரப்பு அடிப்படையில் கலந்துரையாடல்கள் தொடர்கின்றன. முதிர்ச்சி நீடிப்புகள், 2028 வரை காணப்படும் மூலதனத்திற்கான சலுகைக் காலப்பகுதி, குறைக்கப்பட்ட வட்டி வீதங்கள் மற்றும் 2043 இல் செலுத்தவேண்டிய இறுதி மீள்கொடுப்பனவுடன் கூடிய வளர்விகித தீர்ப்பனவு கட்டமைப்பு போன்ற படுகடன் நிவாரண வழிமுறைகளை அலுவல்சார் கடன்கொடுநர்களுடனான உடன்படிக்கை உள்ளடக்கியுள்ளது. மேலும், சீன அபிவிருத்தி வங்கி பொறுப்புகள் மறுசீரமைப்புச் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, 2024திசெம்பரில் நாட்டிற்கான பன்னாட்டு முறியின் பரிமாற்றத்தின் வெற்றிகரமான நிறைவின் மூலம் வெளிநாட்டுப்படுகடன் மறுசீரமைப்பில் மேலும் முன்னேற்றம் ஏற்பட்டது. நாட்டிற்கான பன்னாட்டு முறி மறுசீரமைப்பு ஐ.அ.டொலர் 3.0 பில்லியன் கொண்ட முன்கூட்டிய படுகடன் இருப்பு குறைப்பு உள்ளடங்கலாக இலங்கைக்கு குறிப்பிடத்தக்க நிதியியல் நிவாரணத்தை[26] வழங்கியது. இது பேரண்ட - இணைக்கப்பட்ட முறி[27] அம்சங்களின் நிபந்தனைகளுக்கமைய, பன்னாட்டு நாணய நிதிய அடிப்படையுடன் ஒப்பிடும்போது பொருளாதார வீழ்ச்சியில், ஐ.அ.டொலர் 4.3 பில்லியனிற்கு சாத்தியமானளவில் அதிகரித்து, பொருளாதாரத்தின் மிகையான செயற்றிறன் சந்தர்ப்பத்தில், ஐ.அ.டொலர் 1.8 பில்லியனிற்கு குறைவடைந்தது. இதற்குமேலதிகமாக, நாட்டிற்கான பன்னாட்டு முறி மறுசீரமைப்பு இலங்கைக்கு நான்கு ஆண்டுகால பன்னாட்டு நாணய நிதியத் திட்டக் காலப்பகுதியில் படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகளில் ஐ.அ.டொலர் 9.6 பில்லியன் குறைப்பினையும் இலங்கை முறிகளின் கூப்பன் வீதத்தின் 4.3 சதவீதத்திற்கான 33 சதவீத குறைப்பினையும் ஏறத்தாழ ஆறு ஆண்டுகாலங்களில் சராசரி முதிர்ச்சி கட்டமைப்பினை நீடிப்பதனையும் வழங்குகின்றது. நாட்டிற்கான பன்னாட்டு முறி மறுசீரமைப்பை வெற்றிகரமாக செயல்படுத்தியதையும், இறை உறுதிநிலைப்படுத்தல் தொடர்பில் இலங்கையின் முன்னேற்றத்தை அங்கீகரித்ததையும் தொடர்ந்து, முன்னணி பன்னாட்டு தரமிடல் நிறுவனங்கள் 2024 திசெம்பரில் நாட்டின் வெளிநாட்டு நாணய நாட்டிற்கான கொடுகடன் தரமிடல்களை தரமுயர்த்தின. இதற்கமைய, பிட்ச் தரமிடல்கள் இலங்கையின் மதிப்பீட்டை RD இலிருந்து CCC+ ஆகவும், மூடிஸ் தரமிடல்கள் அதன் தரமிடல்களை Caa1 இலிருந்து Ca ஆகவும் தரமுயர்த்தின. இந்நேர்மறையான முன்னேற்றங்கள் மற்றும் பன்னாட்டு நாணய நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஆதரவுடன்கூடிய சீர்திருத்த திட்டத்திற்கான அரசாங்கத்தின் தொடர்ச்சியான அர்ப்பணிப்புடன், இலங்கை கூறப்பட்ட திட்டத்தில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள படுகடன் உறுதிநிலை இலக்குகளை நோக்கி அதன் முன்னேற்றத்தை மேம்படுத்தி வருகிறது.

26 2025 சனவரி 02 அன்று திகதியிடப்பட்ட திறைசேரிச் செயலாளரால் வெளியிடப்பட்ட “இலங்கையின் பொதுப் படுகடன் மறுசீரமைப்பு: இறை மற்றும் படுகடன் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையை உறுதிப்படுத்துவதற்கான தேவை, ஒட்டுமொத்த பெறுபேறு, மற்றும் எதிர்கால கொள்கை வழிகாட்டுதல்” என்ற வெளியீட்டிற்கமைவாக.

27 பேரண்ட இணைப்பு முறி என்பது ஒரு படுகடன் சாதனமாவதுடன் இதன் கொடுப்பனவுகள் வழங்குபவரின் பொருளாதார செயலாற்றத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில், 2024 ஒத்தோபர் 4 அன்று திகதியிடப்பட்ட “இலங்கையின் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை மறுசீரமைத்தல் - அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்” என்ற நிதி அமைச்சின் ஊடக அறிக்கையிலிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

# அத்தியாயம் 2

# நிதியியல் முறைமையின் நிலைமைகள்

## சுருக்கம்

2024 காலப்பகுதியில் நிதியியல் துறையின் ஒட்டுமொத்தச் செயலாற்றம் தொடர்ந்தும் முன்னேற்றத்தினைக் காட்டிய அதேவேளையில் சில சவால்களும் காணப்பட்டன. மூலதனம் மற்றும் திரவத்தன்மை ஆகிய இரண்டு தாங்கியிருப்புக்களும் ஒழுங்குமுறைப்படுத்தல் அடிமட்டங்களுக்கு மேலே பேணப்பட்டதுடன் வங்கித்தொழில் துறையின் உறுதிப்பாடு பேணிப்பாதுகாக்கப்பட்ட அதேவேளையில் முன்மதியுடைய தேவைப்பாடுகளுடனான இணங்குவிப்பும் பேணப்பட்டது. இத்தகைய அபிவிருத்திகளின் மத்தியில் வங்கித்தொழில் துறையின் மொத்தச்சொத்துக்கள் இவ்வாண்டுப் பகுதியில் வளர்ச்சியடைந்தமைக்கு முதலீடுகளில் ஏற்பட்ட வளர்ச்சியுடன் சேர்ந்து கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் அதிகரித்தமையும் உதவியாக அமைந்தது. பொறுப்புக்களின் நியதிகளில், வங்கித்தொழில் துறைக்கான மிகப்பெருமளவான நிதியிடல் மூலத்தினை உள்ளடக்கியிருக்கும் வைப்புக்கள் 2024ஆம் ஆண்டு காலப்பகுதியில் தொடர்ந்தும் விரிவாக்கத்தினைப் பதிவுசெய்தது. செயற்படாக் கடன்கள் விகிதத்தின்[1] நியதிகளில் துறையின் கொடுகடன் தரம் இவ்வாண்டுப்பகுதியில் மேம்பட்ட போதும் செயற்படாக்கடன் விகிதம் இன்னமும் உயர்வான மட்டத்திலேயே காணப்படுகின்றது. அதேவேளை, வங்கித்தொழில் துறையின் இலாபத்தன்மை இவ்வாண்டுகாலப்பகுதியில் கணிசமானளவிற்கு மேம்பட்டமைக்கு அதிகரித்த தேறிய வட்டி வருமானமும் நாட்டிற்கான பன்னாட்டு முறியின் மறுசீரமைப்பிலிருந்து தோன்றிய பெறுமதி இழப்புக் கட்டணங்கள் மீள்திருத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்களவு காரணங்களாக அமைந்தன. ஆய்விற்குரிய இக்காலப்பகுதியில் நிதிக்கம்பனிகள் துறையும் சில சவால்களுக்கு மத்தியிலும் போதுமான மூலதனம் மற்றும் திரவத்தன்மை தாங்கியிருப்பு என்பனவற்றின் காரணமாக தொடர்ந்தும் தாக்குப்பிடிக்கும் தன்மையுடன் காணப்பட்டது. 2024 காலப்பகுதியில் நிதிக்கம்பனிகள் துறையின் சொத்துத்தளம் வளர்ச்சியடைந்தமைக்கு கடன்கள் மற்றும் முற்பணங்களின் சொத்துப் பட்டியல் கணிசமாக விரிவடைந்தமை காரணமாக அமைந்திருந்த அதேவேளையில் அரச பிணையங்களிலான முதலீடுகள் ஒரு கணிசமான வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. மேலும், 2024 காலப்பகுதியில் துறையின் சொத்துத் தரமும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினைப் பதிவுசெய்தமைக்கு மத்தியில் இலாபத்தன்மையும் அதிகரித்தது. அதேவேளை, நீண்டகால மற்றும் பொதுக் காப்புறுதித் துணைத்துறைகள் இரண்டினதும் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் 2024 காலப்பகுதியில் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது. நிதியியல் சந்தைகளுக்குள்ளே, பங்குரிமைச் சந்தை, சுட்டெண்கள் மற்றும் மொத்தப் புரள்வு ஆகிய இரண்டு நியதிகளினதும் அடிப்படையிலான சந்தைச் செயலாற்றத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை பதிவுசெய்தபோதும் இரண்டாந்தரச் சந்தையில் தேறிய வெளிநாட்டு வெளிப்பாய்ச்சலொன்று பதிவு செய்யப்பட்டது. அதேவேளை, 2024 காலப்பகுதியில் வங்கித்தொழில் துறையில் சமச்சீரற்ற திரவத்தன்மை பங்கீடு அவதானிக்கப்பட்டமைக்கிடையிலும் உள்ளூர் பணச் சந்தையில் திரவத்தன்மை நிலைமைகள் மேம்பாடடைந்தன. இடையிடையே அதிகரிப்புக்கள் காணப்பட்டபோதும், அரச பிணையங்கள் சந்தையானது முதலாந்தரச் சந்தை விளைவு வீதங்களில் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கினைக் காட்டிய அதேவேளையில் இவ்வாண்டுப்பகுதியில் இரண்டாந்தரச் சந்தை விளைவு வீதங்களும் வீழ்ச்சியடைந்தன. நாட்டின் நிதியியல் உட்கட்டமைப்பு தொடர்ந்து சுமூகமாக தொழிற்பட்டமையானது நிதியியல் துறையின் உறுதித்தன்மைக்கு வசதியளிப்பதாக அமைந்தது. கொடுப்பனவு உட்கட்டமைப்பிற்குள்ளே, எண்ணியல் (டிஜிட்டல்) கொடுப்பனவுமுறையின் கடைப்பிடித்தலானது தொடர்ச்சியாக அதிகரித்த அதேவேளையில் தேசிய கொடுப்பனவு உட்கட்டமைப்பானது பன்னாட்டு

1 கட்டம் 3 கடன் விகிதத்தினால் எடுத்துக்காட்டப்பட்டவாறு

2

அட்டவணை 2.1 : நிதியியல் முறைமையின் மொத்தச் சொத்துக்கள் (அ)

| | 2023 (ஆ) | | 2024 (இ) | |
|---|---|---|---|---|
| | ரூ. பில் | பங்கு (%) | ரூ. பில் | பங்கு (%) |
| **வங்கித்தொழில் துறை** | **24,599.9** | **73.9** | **26,051.8** | **72.7** |
| மத்திய வங்கி | 4,205.4 | 12.6 | 3,876.1 | 10.8 |
| உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் | 18,110.1 | 54.4 | 19,815.0 | 55.3 |
| உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | 2,284.4 | 6.9 | 2,360.7 | 6.6 |
| **வைப்புக்களை ஏற்கும் ஏனைய நிதியியல் நிறுவனங்கள்** | **1,930.2** | **5.8** | **2,195.1** | **6.1** |
| நிதிக் கம்பனிகள் | 1,695.5 | 5.1 | 1,930.7 | 5.4 |
| கூட்டுறவு கிராமிய வங்கிகள் (ஈ) | 222.1 | 0.7 | 248.3 | 0.7 |
| உரிமம்பெற்ற நுண்கடன் கம்பனிகள் | 11.7 | ... | 14.8 | ... |
| சிக்கன மற்றும் கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்கள் | 0.9 | ... | 1.3 | ... |
| **சிறப்பியல்பு வாய்ந்த நிதியியல் நிறுவனங்கள்** | **717.1** | **2.2** | **908.7** | **2.5** |
| சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் | 1.2 | ... | 1.3 | ... |
| முதனிலை வணிகர்கள் | 270.9 | 0.8 | 297.2 | 0.8 |
| பங்குத் தரகர்கள் | 24.3 | 0.1 | 44.9 | 0.1 |
| நம்பிக்கைக் கூறுகள் / நம்பிக்கை கூறு முகாமைத்துவக் கம்பனிகள் | 411.6 | 1.2 | 554.2 | 1.5 |
| சந்தை இடையீட்டாளர்கள் (உ) | 9.1 | ... | 11.1 | ... |
| **ஒப்பந்த அடிப்படையிலான சேமிப்பு நிறுவனங்கள்** | **6,028.3** | **18.1** | **6,678.7** | **18.6** |
| காப்புறுதிக் கம்பனிகள் | 1,133.1 | 3.4 | 1,223.0 | 3.4 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 3,927.7 | 11.8 | 4,420.2 | 12.3 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் | 524.5 | 1.6 | 591.3 | 1.7 |
| அனுமதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் மற்றும் சேமலாப நிதியங்கள் | 347.2 | 1.0 | 339.2 | 0.9 |
| அரச பணி சேமலாப நிதியம் | 95.8 | 0.3 | 105.0 | 0.3 |
| **மொத்தம்** | **33,275.5** | **100.0** | **35,834.3** | **100.0** |

(அ) துணிகர மூலதனக் கம்பனிகள் தரவு இன்மையால் இவ்வட்டவணையில் உள்ளடக்கப்படவில்லை.
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது
(ஈ) தரவு இல்லாமையால், கூட்டுறவு கிராமிய வங்கிகளின் 2024 ஆண்டு இறுதி சொத்துத் தளம் 2024 மூன்றாம் காலாண்டு இறுதியில் உள்ள சொத்துத் தளத்திற்கு சமமாகக் கொள்ளப்பட்டது.
(உ) சந்தை இடையீட்டாளர்களாக பதிவுசெய்யப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகள், நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் நீங்கலாக.

*மூலங்கள்:* இலங்கை மத்திய வங்கி
கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்
தொழில் திணைக்களம்
ஓய்வவூதியத் திணைக்களம்
ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை
இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு
சணச சம்மேளனம்
இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

**கொடுப்பனவு வலையமைப்புகளுடன் ஒருங்கிணைக்கப்படுவதும் 2024 காலப்பகுதியில் தொடர்ந்தது. மேலும், இலங்கை மத்திய வங்கி நிதியியல் துறையின் உறுதித்தன்மைக்கு வசதியளிப்பதற்காக அவசியமான சட்ட சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தல், நிதியியல் வசதிக்குட்படுத்தல் மற்றும் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பினை மேம்படுத்தல் என்பனவற்றை நோக்கமாகக் கொண்டு பல வழிமுறைகளை எடுத்தவேளையில் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நிதியளித்தலை ஒழித்தலிலும் வைப்புக் காப்புறுதி மற்றும் தீர்மான முன்னெடுப்புக்களிலும் ஈடுபட்டது.**

## 2.1 வங்கித்தொழில் துறை

**வங்கித்தொழில் துறை, மூலதனத்தினையும் திரவத்தன்மையினையும் மிகக்குறைந்த ஒழுங்குமுறைப்படுத்தல் மட்டத்திற்கு மிக மேலே பாதுகாத்துக் கொண்டமையின் மூலம் தொடர்ந்தும் உறுதித் தன்மையினை பேணிக் கொண்ட அதேவேளை, முன்மதியுடைய தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதனைப் பேணிக்கொண்டது.** வங்கித்தொழில் துறை, நிதியியல் துறையில் தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தி, 2024 இறுதியிலுள்ளவாறு மொத்தச் சொத்துக்களில் 61.9 சதவீதத்திற்கு வகைகூறியது. இது, 2024 இறுதியில் 30 உரிமம்பெற்ற வங்கிகளை, அதாவது வெளிநாட்டு வங்கிகளின் 11 கிளைகள் உட்பட 24 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் 6 உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும் உள்ளடக்கியிருந்தது. வங்கித்தொழில்துறை வலையமைப்பினை அதிகரித்தமையின் மூலமும் வங்கித்தொழில் சேவைகளை மேம்படுத்தியதன் மூலமும் துறையானது நிதியியல் வசதிக்குட்படுத்தலை தொடர்ச்சியாக

**அட்டவணை 2.2: வங்கிகள், வங்கிக் கிளைகள் மற்றும் ஏனைய வங்கிப்பணி நிலையங்களின் பரம்பல்கள்**

| வகை | 2023 முடிவில் (அ) | 2024 முடிவில் (ஆ) |
|---|---|---|
| **உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்** | | |
| I. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் மொத்த எண்ணிக்கை | 24 | 24 |
| உள்நாட்டு வங்கிகள் | 13 | 13 |
| வெளிநாட்டு வங்கிகள் | 11 | 11 |
| II. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிப்பணி நிலையங்களின் மொத்த எண்ணிக்கை | 6,816 | 6,907 |
| கிளைகள்(இ) | 2,934 | 2,936 |
| உள்நாட்டு வங்கிகளின் கிளைகள் | 2,889 | 2,895 |
| வெளிநாட்டு வங்கிகளின் கிளைகள் | 45 | 41 |
| மாணவர் சேமிப்பு பிரிவுகள் | 3,882 | 3,971 |
| III. தன்னியக்க கூற்றுப் பொறிகள் | 6,439 | 6,782 |
| **உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்** | | |
| I. உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் மொத்த எண்ணிக்கை | 6 | 6 |
| தேசிய மட்ட சேமிப்பு வங்கிகள் | 1 | 1 |
| வீடமைப்பு நிதி நிறுவனங்கள் | 2 | 2 |
| ஏனைய உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | 3 | 3 |
| II. உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிப்பணி நிலையங்களின் மொத்த எண்ணிக்கை | 705 | 706 |
| கிளைகள் (இ) | 705 | 706 |
| தேசிய மட்ட சேமிப்பு வங்கிகள் | 267 | 268 |
| வீடமைப்பு நிதி நிறுவனங்கள் | 64 | 64 |
| ஏனைய உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | 374 | 374 |
| III. தன்னியக்க கூற்றுப் பொறிகள் | 503 | 504 |
| **வங்கிக் கிளைகளினதும் ஏனைய பணி நிலையங்களினதும் மொத்த எண்ணிக்கை** | 7,521 | 7,613 |
| **தன்னியக்க கூற்றுப் பொறிகளின் மொத்த எண்ணிக்கை** | 6,942 | 7,286 |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) மாணவர் சேமிப்புப் பிரிவுகள் தவிர்ந்த அனைத்து வங்கிப்பணி நிலையங்கள்.

ஊக்குவிக்கின்றது. 2024இல் 13 வங்கிக்கிளைகளும் 368 தன்னியக்க கூற்றுப் பொறிகளும் நிறுவப்பட்ட வேளையில் 10 வங்கிக் கிளைகளும் 24 தன்னியக்க கூற்றுப் பொறிகளும் மூடப்பட்டன. இதன்படி, வங்கிக் கிளைகளினதும் தன்னியக்க கூற்றுப் பொறிகளினதும் மொத்த எண்ணிக்கை 2024இன் இறுதியில் முறையே 7,613 இற்கும் 7,286 இற்கும் அதிகரித்தன.

**2024 காலப்பகுதியில் முதலீடுகள் அதிகரித்ததன் பிரதான காரணத்தினால், வங்கித்தொழில் துறை அதன் சொத்துத்தள நியதிகளில் தொடர்ந்தும் விரிவடைந்தது.** இவ்வாண்டுப் பகுதியில் துறையின் மொத்த சொத்துத்தளம் ரூ1,781.3 பில்லியன்களினால் அதிகரித்து 2024இன் இறுதியில் ரூ.22.2 ரில்லியன்களை எட்டியதுடன், ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி 2023 இறுதியின் 5.0 சதவீதத்துடன் ஒப்பிடுமிடத்து 2024 இறுதியில் 8.7 சதவீதத்திற்கு அதிகரிப்பு ஒன்றினைப் பதிவு செய்தது. சொத்துக்களின் விரிவாக்கத்திற்குப் பிரதானமாக பங்களித்த முதலீடுகளானவை,

**அட்டவணை 2.3: வங்கித்தொழில் துறையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உள்ளமைப்பு**

| விடயம் | 2023 (அ) | | 2024 (ஆ) | | மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ.பில் | பங்கு (%) | ரூ.பில் | பங்கு (%) | 2023 | 2024 |
| **சொத்துக்கள்** | | | | | | |
| கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் | 11,020.8 | 54.0 | 11,473.7 | 51.7 | -2.6 | 4.1 |
| முதலீடுகள் | 7,299.9 | 35.8 | 9,083.7 | 41.0 | 23.1 | 24.4 |
| ஏனையவை (இ) | 2,073.7 | 10.2 | 1,618.2 | 7.3 | -4.5 | -22.0 |
| **பொறுப்புக்கள்** | | | | | | |
| வைப்புக்கள் | 16,630.5 | 81.5 | 17,969.4 | 81.0 | 8.7 | 8.1 |
| கடன் பெறுகைகள் | 1,397.4 | 6.9 | 1,280.0 | 5.8 | -25.3 | -8.4 |
| மூலதன நிதிகள் | 1,765.5 | 8.7 | 2,043.2 | 9.2 | 10.5 | 15.7 |
| ஏனையவை | 601.0 | 2.9 | 883.1 | 4.0 | -7.3 | 46.9 |
| **மொத்த சொத்துக்கள்/ பொறுப்புக்கள்** | 20,394.4 | 100.0 | 22,175.7 | 100.0 | 5.0 | 8.7 |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) காசு மற்றும் வங்கி மீதிகள், வைப்புகள், நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் மற்றும் நிலையான சொத்துக்கள் உள்ளடங்கலாக

2024 காலப்பகுதியில் ரூ.1,783.8 பில்லியனால் அதிகரித்ததுடன், ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி 2023 இறுதியின் 23.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2024 இறுதியில் 24.4 சதவீதத்தைப் பதிவுசெய்தது. மேலும், 2023 யூனிலிருந்து சந்தை திரவத்தன்மை கணிசமாக அதிகரித்தமையுடன் சேர்ந்து கொள்கை வீதம் தொடர்ச்சியாக குறைக்கப்பட்டமையினூடாக நாணயக் கொள்கை நிலைப்பாடானது தளர்த்தப்பட்டதுடன் இது, கொடுகடன் வளர்ச்சியில் காணப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கினை மாற்றியமைத்ததுடன் சொத்துக்களின் தரத்தில் காணப்பட்ட தேய்வினையும் மிதப்படுத்தியது. இதன் காரணமாக கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளினது ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி 2023 இறுதியில் காணப்பட்ட 2.6 சதவீத சுருக்கத்திற்கு மாறாக 2024 இறுதியில் 4.1 சதவீதத்திற்கு விரைவடைந்தது.

**வைப்புக்கள், வங்கித்தொழில் துறையின் முக்கிய நிதியிடல் மூலமாகத் தொடர்ந்தும் விளங்கி 2024 இறுதியிலுள்ளவாறான மொத்தப் பொறுப்புக்கள் மற்றும் பங்குரிமை மூலதனத்தில் 81.0 சதவீதத்தினைப் பிரசன்னப்படுத்தியதுடன், அதனைத் தொடர்ந்து பங்குரிமை மூலதனமும் கடன்பாடுகளும் முறையே 9.2 சதவீதத்தினையும் 5.8 சதவீதத்தினையும் காட்டின.** துறையின் மொத்த வைப்புக்கள் 2024 காலப்பகுதியில் ரூ.1,338.9 பில்லியனால் அதிகரித்தன. இவ்வதிகரிப்பில், தவணை வைப்புக்கள் மொத்த வைப்புக்களின் அதிகரிப்பில் 82.9 சதவீதத்திற்குப் பங்களித்தன.

2

**அட்டவணை 2.4: வங்கித்தொழில் துறையின் வைப்புக்களின் உள்ளமைப்பு**

| விடயம் | 2023 (அ) | | 2024 (ஆ) | | மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ.பில் | பங்கு (%) | ரூ.பில் | பங்கு (%) | 2023 | 2024 |
| கேள்வி வைப்புக்கள் | 1,082.5 | 6.5 | 1,109.6 | 6.2 | 1.7 | 2.5 |
| சேமிப்பு வைப்புக்கள் | 4,292.5 | 25.8 | 4,502.6 | 25.1 | 15.8 | 4.9 |
| தவணை வைப்புக்கள் | 11,045.8 | 66.4 | 12,155.9 | 67.6 | 6.3 | 10.1 |
| ஏனைய வைப்புக்கள் | 209.7 | 1.3 | 201.2 | 1.1 | 58.1 | -4.1 |
| மொத்த வைப்புக்கள் | 16,630.5 | 100.0 | 17,969.4 | 100.0 | 8.7 | 8.1 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

2024 இறுதியில் மொத்த வைப்புக்களில் தவணை வைப்புக்களின் பங்கு 67.6 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் சேமிப்பு மற்றும் கேள்வி வைப்புக்கள் முறையே 25.1 சதவீதத்திற்கும் 6.2 சதவீதத்திற்கும் வகைகூறின. நடைமுறை மற்றும் சேமிப்பு கணக்குகளின் விகிதம் 2023 இன் 32.3 சதவீதத்திலிருந்து 2024இல் 31.2 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. வங்கித்தொழில் துறையின் மொத்தக் கடன்பாடுகள் 2023இன் ரூ.474.2 பில்லியனால் எதிர்மறையான 25.3 சதவீதம் கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2024இல் ரூ.117.4 பில்லியனால் எதிர்மறையான 8.4 சதவீதத்திற்கு குறைவடைந்தது. இவ்வீழ்ச்சிக்கு ஐ.அ.டொலர் 281.8 மில்லியனால் வீழ்ச்சியடைந்து 27.0 சதவீதம் எதிர்மறையான வளர்ச்சியைப் பதிவுசெய்த வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் முக்கிய காரணமாக அமைந்த வேளையில், 2024 காலப்பகுதியில் ரூபாக் கடன்பாடுகள் 0.2 சதவீத எதிர்மறையான வளர்ச்சியுடன் ரூ.2.3 பில்லியனால் வீழ்ச்சி கண்டன.

**ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகைகள் 2023 காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட ரூ.496.0 பில்லியன் அதிகரிப்பினைக் கொண்ட 10.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2024 காலப்பகுதியில் 3.8 சதவீத வளர்ச்சியைக் கொண்ட ரூ.196.6 பில்லியன் அதிகரிப்பைப் பதிவுசெய்தது.** எடுப்பனவு செய்யப்படாத கொடுகடன் தொடர்கள், வெளிநாட்டுச் செலாவணியுடன் தொடர்பான ஐந்தொகைக்கு வெளியேயான விற்பனைகள், ஏற்றுக்கொள்ளல்கள், ஆவணக் கொடுகடன்கள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி தொடர்பான ஐந்தொகைக்கு வெளியேயான கொள்வனவுகள் முறையே ரூ.107.0 பில்லியன், ரூ.83.9 பில்லியன், ரூ.43.2 பில்லியன், ரூ.30.5 பில்லியன், ரூ.8.0 பில்லியன் ஆகியவற்றால் கணிசமாக அதிகரித்த அதேவேளையில் உத்தரவாதங்களும் முறிகளும் ரூ.84.3 பில்லியனால் 2024 காலப்பகுதியில் ஒரு வீழ்ச்சியை பதிவுசெய்தது.

**கட்டம் 3 கடன் விகிதத்தினால்[2] எடுத்துக்காட்டப்பட்ட வங்கித்தொழில் துறையின் செயற்படாக்கடன்கள் விகிதம் 2023 இறுதியுடன் ஒப்பிடுகையில் 2024 இறுதியில் வீழ்ச்சியடைந்ததெனினும் அதிகரித்த மட்டத்திலேயே காணப்பட்டது.** வங்கித்தொழில் துறையின் செயற்படாக்கடன்கள் விகிதம் 2023 இறுதியின் 12.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2024 இறுதியில் 12.3 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்து, 2024 காலப்பகுதியில் கொடுகடன் தரம் சிறிதளவில் மேம்பட்டமையினை எடுத்துக்காட்டியது. கொடுகடனின் தரம் மேம்பட்டமைக்கு 2024 இறுதியில் கொடுகடனில் ஏற்பட்ட விரிவாக்கமும் செயற்படாக்கடன்கள் சிறிதளவு சுருக்கமடைந்தமையும் முக்கிய காரணங்களாக அமைந்து கடன்பகிர்ந்தளிப்பு மற்றும் மீள்கொடுப்பனவு தொடர்பான மேம்பட்ட பேரண்டப் பொருளாதார நிலைமைகளின் தாக்கத்தினை எடுத்துக்காட்டியது. மேலும் செயற்படாக்கடன்கள் விகிதங்களுக்கான[2] ஒதுக்கு ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 10.1 சதவீதத்தினால் அதிகரித்து செயற்படாக் கடன்களுக்கான ஒதுக்கு காப்பு விகிதம் 2023 இறுதியின் 49.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2024 இறுதியில் 54.1 சதவீதத்திற்கு மேம்பட்டது.

2 எடுப்பனவு செய்யப்படாததொகை உட்பட

**வரைபடம் 2.1: 2024 இறுதியில் உள்ளவாறு வங்கித்தொழில் துறையின் ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகைகள்**




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**திரவத்தன்மை காப்பு விகிதம் மற்றும் தேறிய உறுதித்தன்மை நிதியிடல் விகிதத்தால் எடுத்துக்காட்டப்பட்டவாறு, வங்கித்தொழில் துறையின் திரவத்தன்மை 2024 காலப்பகுதியில் மேம்பாடடைந்தது.** துறையின் ரூபா திரவத்தன்மை காப்பு விகிதம் 2023 இறுதியின் 340.9 சதவீதத்திலிருந்து 2024 இறுதியில் 349.9 சதவீதத்திற்கு அதிகரித்தமை, வங்கிகள் அவற்றின் ரூபா திரவத்தன்மைத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட உயர்தர திரவத்தன்மை சொத்துக்களை தேவைக்கும் அதிகமானளவிற்கு உடமையில் வைத்திருந்தமையினை எடுத்துக்காட்டியது. உயர்தர திரவச்சொத்துகளின் அதிகரிப்பானது ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்களின் உடமைகளில் ஏற்பட்ட அதிகரிப்பினால் முக்கியமாக தூண்டப்பட்டு, ரூபா திரவத்தன்மை காப்பு விகிதங்களின் மேம்பாட்டிற்கு பங்களித்தது. அதேவேளை, துறையின் ஒட்டுமொத்த திரவத்தன்மையின் ஒரு குறிகாட்டியான அனைத்து நாணய திரவத்தன்மை காப்பு விகிதம் 2023 இறுதியின் 288.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2024 இறுதியில் 313.8 சதவீதத்திற்கு மேம்பட்டது. மேலும், போதியளவு உறுதியான நிதியிடல் மூலங்களைப் பேணுமாறு வங்கிகளை தேவைப்படுத்துகின்ற தேறிய உறுதித்தன்மை நிதியிடல் விகிதம் 2024 இறுதியில் 164.8 சதவீதமாக காணப்பட்டு குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடான 100.0 சதவீதத்திற்கு மிகமேலே காணப்பட்டது.

**ஆண்டுகாலப்பகுதியில் வங்கித்தொழில்துறையின் இலாபத்தன்மை குறிப்பிடத்தக்களவிற்கு மேம்பட்டமைக்கு தேறிய வட்டி வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பும் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் மறுசீரமைப்பிலிருந்து தோன்றிய பெறுமதி இழப்பு கட்டணங்களின் மீள்திருத்தமும் முக்கிய காரணங்களாக அமைந்தன.** 2024 காலப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் வட்டிவருமானம் 13.7 சதவீதத்தினால் குறைவடைந்த வேளையில் வட்டிச்செலவினங்கள் 29.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து தேறிய வட்டி வருமானத்தில் 28.2 சதவீத அதிகரிப்பினைத் தோற்றுவித்தது. இதன்விளைவாக தேறிய வட்டி எல்லை 2023 இறுதியின் 3.7 சதவீதத்திலிருந்து 2024 இறுதியில் 4.3 சதவீதத்திற்கு அதிகரித்தது. வட்டியல்லா செலவினங்கள் ரூ.73.9 பில்லியனால் அதிகரித்தமைக்கு அலுவலர் செலவுகள் ரூ.54.5 பில்லியனால் அதிகரித்தமை பெருமளவு காரணமாக அமைந்தவேளையில், 2024 காலப்பகுதியில் கடன்கள் மற்றும் ஏனைய இழப்புகளுக்கான பெறுமதி இழப்பு ரூ.238.1 பில்லியனால் வீழ்ச்சியடைந்தமைக்கு நாட்டிற்கான பன்னாட்டு முறிகளுடன் தொடர்பான பெறுமதி இழப்பு மீள்திருத்தமடைந்தமையே முக்கிய காரணமாகும். வங்கித்தொழில் துறையானது பெறுமதிசேர் வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி,

**அட்டவணை 2.5: வங்கித்தொழில் துறையின் இலாபம்**

| விடயம் | 2023 (அ) | | 2024 (ஆ) | |
|---|---|---|---|---|
| | தொகை (ரூ.பில்) | சராசரி சொத்துக்களின் % ஆக | தொகை (ரூ.பில்) | சராசரி சொத்துக்களின் % ஆக |
| **தேறிய வட்டி வருமானம்** | **714.6** | **3.7** | **916.0** | **4.3** |
| வட்டி வருமானம் | 2,610.2 | 13.4 | **2,252.0** | **10.5** |
| வட்டிச் செலவினம் | 1,895.6 | 9.7 | **1,336.0** | **6.2** |
| **வட்டியல்லா வருமானம்** | **207.4** | **1.1** | **183.8** | **0.9** |
| தேறிய கட்டண மற்றும் தரகு வருமானம் | 132.2 | 0.7 | **147.0** | **0.7** |
| **வட்டியல்லா செலவினம்** | **373.4** | **1.9** | **447.3** | **2.1** |
| ஊழியர் செலவுகள் | 189.9 | 1.0 | **244.4** | **1.1** |
| கடன்களுக்கும் ஏனைய இழப்புக்களுக்குமான பெறுமதியிழப்பு | 171.6 | 0.9 | **-66.5** | **-0.3** |
| **வரிக்கு முன்னரான இலாபம்** (பெறுமதிசேர் வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி, நிதியியல் சேவைகள் மீதான ஏனைய வரிகள் மற்றும் கூட்டாண்மை வரிக்கு முன்னராக) | **377.0** | **1.9** | **719.0** | **3.4** |
| பெறுமதிசேர் வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் நிதியியல் சேவைகள் மீதான ஏனைய வரிகள் | 85.9 | 0.4 | **155.9** | **0.7** |
| கூட்டாண்மை வரி | 98.5 | 0.5 | **253.4** | **1.2** |
| **வரிக்குப் பின்னரான இலாபம்** | **192.6** | **1.0** | **309.7** | **1.4** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2.2: வங்கித்தொழில் துறையின் இலாபத்தன்மை**




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 2.3: வங்கித்தொழில் துறையின் மூலதனப் போதுமாந்தன்மை




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

ஏனைய நிதிசார் சேவைகளுக்கான வரிகள் மற்றும் கூட்டாண்மை வரி உள்ளடங்கலாக 2023இன் ரூ.184.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 நிதியாண்டில் ரூ.409.3 பில்லியனை வரியாகக் கணக்கிட்டுள்ளது. 2024இல் கூட்டாண்மை வரிக்கு முன்னரான இலாபம் ஒழுங்குமுறைப்படுத்தல் அறிக்கையிடலின்படி ரூ.563.1 பில்லியனாகப் பதிவுசெய்யப்பட்டு, முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூ.272.0 பில்லியனால் அதிகரித்துக் காணப்பட்டது. 2024 காலப்பகுதியில் வங்கித்தொழில்துறையின் வரிக்குப் பின்னரான இலாபம் ரூ.309.7 பில்லியனாகும். இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 60.8 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. இலாபத்தின் அதிகரிப்பு வரிக்கு முன்னரான சொத்து மீதான வருவாயில் பிரதிபலிக்கப்பட்டது. இது 2023 இறுதியின் 1.5 சதவீதத்திலிருந்து 2024 இறுதியில் 2.6 சதவீதத்திற்கு அதிகரித்தவேளையில் வரிக்குப் பின்னரான பங்குரிமை மூலதனத்தின் மீதான வருவாய் 2023இன் 11.5 சதவீதத்திலிருந்து 2024இல் 15.6 சதவீதத்திற்கு அதிகரித்தது. மேலும், வங்கித்தொழில் துறையின் வினைத்திறன் 2023 இறுதியின் 40.5 சதவீதத்திலிருந்து 2024 இறுதியில் 40.7 சதவீதத்திற்கு சிறிதளவால் தேய்வடைந்தமைக்கு தொழிற்பாட்டு செலவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும்.

**2024 காலப்பகுதியில் வங்கித்தொழில் துறை மூலதனத் தேவைப்பாடுகளுடன் பெருமளவிற்கு இணங்கிக் காணப்பட்டது.** சவால்மிக்க வியாபார நிலைமைகளிலிருந்து தோன்றுகின்ற இடர்நேர்வுகளிலிருந்தான சாத்தியமான இழப்புக்களை உறிஞ்சிக்கொள்வதற்காகவும் துறையின் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினை மேம்படுத்துவதற்காகவும் உயர்தரத்திலான மூலதனத்தினை திரட்டுவதற்கு வங்கிகள் ஊக்குவிக்கப்பட்டன. இதன் விளைவாக, 2024 காலப்பகுதியில் வங்கிகள் பங்கு மூலதனத்தினை ரூ.30.3 பில்லியனால் அதிகரித்தமையினூடாக அடுக்கு I மூலதனத்தினை அதிகரித்துக்கொண்டன. வங்கித்தொழில் துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனம் இவ்வாண்டுக் காலப்பகுதியில் 6.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியை அறிக்கையிட்டது. இவ்வதிகரிப்பில் அடுக்கு I மூலதனம் 53.0 சதவீதமான அதிகரிப்பிற்கு பங்களித்தது. மேலும், கணக்காய்வு செய்யப்பட்ட இலாபத்தினை பிடித்து வைத்தலின் காரணமாக ஆண்டு இறுதியின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத் தொகைகள் மேலும் மேம்பாடடையலாம். அதேவேளை 2024 இறுதியில் மொத்த மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் 18.4 சதவீதத்தில் தொடர்ந்தும் காணப்பட்ட வேளையில் அடுக்கு I மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் 2023 இறுதியின் 15.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2024 இறுதியில் 14.9 சதவீதத்திற்கு சிறிதளவில் வீழ்ச்சியடைந்தது.

அட்டவணை 2.6 : வங்கித்தொழில் துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தின் உள்ளமைப்பு

| விடயம் | ரூ.பில் | | உள்ளடக்கம் (%) | |
|---|---|---|---|---|
| | 2023 (அ) | 2024 (ஆ) | 2023 (அ) | 2024 (ஆ) |
| அடுக்கு I: மூலதனம் | 1,395.1 | 1,455.5 | 100.0 | 100.0 |
| பங்கு மூலதனம் | 385.8 | 416.1 | 27.7 | 28.6 |
| நியதி ஒதுக்கு நிதிகள் | 87.7 | 88.7 | 6.3 | 6.1 |
| பிடித்து வைத்திருக்கப்பட்ட இலாபங்கள் | 720.0 | 710.5 | 51.6 | 48.8 |
| பொது மற்றும் ஏனைய ஒதுக்குகள் | 332.3 | 330.4 | 23.8 | 22.7 |
| ஏனையவை | 93.1 | 70.8 | 6.7 | 4.9 |
| ஒழுங்குமுறைப்படுத்தல் சீராக்கங்கள் | -223.8 | -161.0 | -16.0 | -11.0 |
| அடுக்கு II: மூலதனம் | 291.9 | 345.4 | 100.0 | 100.0 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்குகள் | 44.1 | 52.6 | 15.1 | 15.2 |
| கீழ்மட்ட தவணை படுகடன் | 147.9 | 196.8 | 50.7 | 57.0 |
| பொது ஏற்பாடுகள் மற்றும் ஏனையவை | 100.5 | 97.4 | 34.4 | 28.2 |
| ஒழுங்குமுறைப்படுத்தல் சீராக்கங்கள் | -0.6 | -1.5 | -0.2 | -0.4 |
| மொத்த ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத் தளம் | 1,687.0 | 1,800.9 | | |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

## சிறப்பு குறிப்பு 02
## தாக்குப்பிடிக்கும் தன்மையினை வலுப்படுத்துவதற்கான அண்மைக்கால வங்கித்தொழில் துறை சீர்திருத்தங்கள்

### 1. பின்னணி

வங்கிகள் நிதியியல் முறைமையின் முக்கிய அம்சமாக காணப்படுவதுடன், பிரதான நிதியியல் இடையேற்பாட்டாளராக பொருளாதார வளர்ச்சி மற்றும் நாட்டின் அபிவிருத்தி என்பனவற்றை தூண்டுவதில் பிரதான வகிபாகத்துடன் தொழிற்படுகின்றன. இலங்கையில் வங்கித்தொழில்துறை 2024இன் இறுதியில் ரூ.22 ரில்லியனுக்கு மேற்பட்ட சொத்துதளத்துடன்கூடிய 30 உரிமம்பெற்ற வங்கிகளை உள்ளடக்கியிருக்கிறது. மோசமான பேரண்டப் பொருளாதார நிலைமைகளினால் ஏற்படுத்தப்பட்ட சவால்களுக்குப் பதிலிறுத்தும் விதத்தில் இலங்கை மத்திய வங்கி பேரண்டப் பொருளாதாரத்தினை உறுதிப்படுத்துவதற்கான வழிமுறைகளுக்கு மேலதிகமாக, நிதியியல் துறை சீர்திருத்தங்களின் தொடரொன்றினை நடைமுறைக்கிட்டது. இத்தந்திரோபாயங்கள் சாத்தியமான நெருக்கடிகளைத் தடுப்பதையும் வங்கிகளின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை வலுப்படுத்துவதனையும் பரவுகின்ற இடர்நேர்வுகள் மற்றும் கசிவுத் தாக்கங்கள் போன்றவை பரந்த பொருளாதாரத்தில் ஏற்படுத்தும் தாக்கங்கள் ஆகியவற்றை தவிர்ப்பதனையும் நோக்கமாகக் கொண்டுள்ளன. இதற்கமைய, மோசமான பேரண்டப் பொருளாதார நிலைமைகளினால் ஏற்படுத்தப்பட்ட சவால்களுக்கு மத்தியிலும், இலங்கையின் வங்கித்துறை தொடர்ந்தும் தாக்குப்பிடிக்கும் தன்மையுடன் இருந்தது.

### 2. 2022 இலிருந்து இன்றுவரை இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வழிமுறைகள்

**நெருக்கடிக்கு தயாராகின்ற வழிமுறைகள்**

முக்கியமான நெருக்கடியொன்றுக்கு தயாராகின்ற வழிமுறையொன்றாக, ஏற்கனவேயுள்ள தற்காலிக திரவத்தன்மை இடர்பாடுகளுடன் கூடிய வங்கிகளுக்கு அவசரகால கடன்களையும் முற்பணங்களையும் வழங்குவது மீதான கட்டமைப்பு, நிதியியல் முறை உறுதித்தன்மை மீதான மோசமான நடைமுறைப்படுத்தலை தடுக்கும் பொருட்டு வலுப்படுத்தப்பட்டது. மேலும், இலங்கை மத்திய வங்கி உரிமம்பெற்ற வங்கிகளின் தீர்மானித்தல் கட்டமைப்பினை வலுப்படுத்துகின்ற அதேவேளையில், நெருக்கடி முகாமைத்துவக் கட்டமைப்பின் கீழ் அவசரமுன்னுரிமையொன்றாக நிதியியல் துறையின் பாதுகாப்பு வலையமைப்பு வழிமுறைகளை வலுப்படுத்துவதனையும் அடையாளம் கண்டது. இதன்படி, இலங்கை மத்திய வங்கி, வங்கிகளுக்கான தீர்மானித்தல் வழிமுறைகளையும் வைப்பாளர்களினதும் மற்றைய ஆர்வலர்களினதும் நல உரித்துக்களை பாதுகாப்பதனையும் முக்கிய கவனத்திற்கொண்டு 2023ஆம் ஆண்டின் 17ம் இலக்க வங்கித்தொழில் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தினை உருவாக்கியது. மேலும், நிதியியல் துறையின் பாதுகாப்பு வலையமைப்பினை வலுப்படுத்தும் நோக்கத்துடன், நிதியியல் உறுதிப்பாட்டு நிதியினை உருவாக்குவதற்கும் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் நிதியியல் இயலுமை மற்றும் நிறுவன ரீதியான



2

ஒழுங்கமைப்புக்களை மேம்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலதிகமாக, நிதியியல் துறை நெருக்கடி முகாமைத்துவம் தொடர்பில் தகுதிவாய்ந்த அதிகாரிகளிடையேயான கொள்கை இணைப்புக்களை வலுப்படுத்துகின்ற நோக்குடன் நெருக்கடிக்கு ஆயத்தமாக இருத்தல் மற்றும் நிதியியல் நெருக்கடிகளின் தாக்கத்தினைக் குறைப்பது என்பன மீது கவனம் செலுத்தும் விதத்தில் இலங்கை மத்திய வங்கிக்கும் நிதியமைச்சுக்குமிடையிலான கொள்கை இணைப்பினை உறுதிப்படுத்துவதற்காக வங்கித்தொழில் (சிறப்பு ஏற்பாடுகள்) திட்டத்தின் கீழ் நிதியியல் துறை நெருக்கடி முகாமைத்துவக் குழு நிறுவப்பட்டது.

**வங்கித் தொழில் (திருத்தம்) சட்ட உருவாக்கம்**

பொருளாதாரம் படிப்படியாக மீட்சியடைந்தமையினைத் தொடர்ந்து இலங்கை மத்திய வங்கி, வங்கித் தொழில் துறையின் தாக்குப் பிடிக்கும் தன்மையினை பேணுவதற்காக தீவிரப்படுத்தப்பட்ட மேற்பார்வையூடாக ஒழுங்குவிதிகளை விடுத்தல் மற்றும் மேற்பார்வை அணுகுமுறையினை வலுப்படுத்தல் என்பன உள்ளிட்ட, பல கொள்கை வழிமுறைகளை நடைமுறைக்கிட்டது. வங்கித்தொழில் துறையினை வலுப்படுத்துவதற்காக 2024இல் எடுக்கப்பட்ட மிக இன்றியமையாத நடவடிக்கையாக 2024ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தம்) சட்டம் விளங்குகிறது. 2024 யூன் 15ஆம் திகதி நடைமுறைக்குவந்த இச்சட்டம் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு ஏற்புடைத்தான சட்ட கட்டமைப்பினை வலுப்படுத்துவதில் முக்கியமான மைல்கல்லொன்றினை குறித்துநிற்கிறது. புதிய சட்டமானது உரிமம்பெறும் தேவைப்பாடுகள், இறுதி பயன்பெறுநர் சொத்துடமை உட்பட பங்குடமையாளர் பொருத்தத் தன்மைக்கான பிரமாணம், கம்பனி ஆளுகைத் தேவைப்பாடுகள், வங்கிச் சொத்துடமை, கையேற்பு, இணைப்புக்கள் மற்றும் கூட்டிணைத்தல், விகிதாசாரத் தன்மை, பாரிய கொடுகடன் வெளிப்படுத்துகை, தொடர்பான தரப்பினர் கொடுக்கல்வாங்கல்கள், கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரம், வெளிநாட்டு வங்கிகளை துணை நிறுவனப்படுத்தல், கணக்குகள் மற்றும் கணக்காய்வு மீதான தேவைப்பாடுகள் உள்ளிட்ட பல முக்கிய துறைகள் மீதான சட்ட ஏற்பாடுகளை வலுப்படுத்தியிருக்கிறது.

**ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பை வலுப்படுத்தல்**

வங்கித்தொழில் (திருத்தச்) சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு வசதியளிக்கும் விதத்தில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு பல புதிய ஒழுங்குவிதிகள்/ வழிகாட்டல்களை இலங்கை மத்திய வங்கி விடுத்தது. இதற்கமைய, வங்கித்தொழில் துறை மீது பாரிய கம்பனி கடன்பாட்டாளர்களினாலும் அதேபோன்று அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளினாலும் தோற்றுவிக்கப்படுகின்ற கொடுகடன் திரட்சி இடர்நேர்வினை தணிக்கின்ற நோக்குடன் உரிமம்பெற்ற வங்கிகளின் பாரிய கொடுகடன் வெளிப்படுத்துகை மீது திருத்தப்பட்ட பணிப்புரைகள் விடுக்கப்பட்டன. திருத்தப்பட்ட பணிப்புரைகள் முன்மதியுடைய வரையறைகளைச் சுருக்குதல், சிறந்த பன்னாட்டு நடைமுறைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் கடன்பாட்டாளர்களிடேயேயான இடைத்தொடர்புகளைத் தீர்மானிப்பதன் மீதான பிரமாணங்கள் வலுப்படுத்தப்பட்டமை என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. இப்பின்னணியில் பாரிய கம்பனிகளும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளும் அவற்றின் நிதி மூலங்களை பன்முகப்படுத்துமாறும் நிதி நிலைமைக் கூற்றினை மறுசீரமைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படவுள்ளன.

மேலும், உரிமம்பெற்ற வங்கிகளுக்கான நியதிச்சட்ட திரவத்தன்மை விகிதமாக திரவத்தன்மை உள்ளடக்கல் விகிதம் மற்றும் தேறிய நிலையான நிதியிடல் விகிதம் என்பனவற்றை நிர்ணயிக்கின்ற விதத்தில் வங்கித்தொழில்சட்ட தீர்மானங்கள் விடுக்கப்பட்ட வேளையில், நியதி திரவத்தன்மை சொத்து விகிதத்தினை பேணுவது நிறுத்தப்பட்டது. மேலும், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரங்கள் மீதான வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் மற்றும் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரங்களுக்காக வெளிநாட்டு நாணயங்களை குறித்துரைத்தல் உள்ளிட்ட, வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தின் நடைமுறைப்படுத்தலுக்கு வசதியளிப்பதற்காக ஏனைய பல ஒழுங்குகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. மேலும், உரிமம்பெற்ற வங்கிகளின் பணிப்பாளர்கள், முதன்மை நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை ஆற்றுகின்ற அலுவலர்களின் பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடுவது தொடர்பில் வங்கித்தொழில்சட்ட பணிப்புரைகளும் தீர்மானங்களும் விடுக்கப்பட்டன. அதுமட்டுமன்றி, உரிமம்பெற்ற வங்கிகளின் தொடர்பான தரப்பினரை குறித்துரைக்கின்ற ஒழுங்குவிதிகளும் அத்தகைய தொடர்பான தரப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் தொடர்பிலான ஒப்புதலளிக்கப்பட்ட பிணைகள் மற்றும் வரையறைகளும் விடுக்கப்பட்டன.

**சொத்து தர மீளாய்வு மற்றும் வங்கி மீள்மூலதன மயப்படுத்தல் உபாயத்தின் அபிவிருத்தி**

இலங்கை மத்திய வங்கி, வங்கித்தொழில் துறையினால் எதிர்நோக்கப்பட்ட தொடர்ச்சியான பேரண்டப் பொருளாதார சவால்களுக்கு மத்தியிலும் உரிமம்பெற்ற வங்கிகளின் வலுவானதும் போதுமானதுமான மூலதன மயப்படுத்தலினை உறுதிப்படுத்தும் நோக்குடன், 9 பாரிய வங்கிகளின் சொத்து தர மீளாய்வினை நிறைவுசெய்ததுடன் அத்தகைய வங்கிகளின் மறுசீரமைப்பு மற்றும் மீள்மூலதன மயப்படுத்தலுக்கான வழிகாட்டல்களையும் உருவாக்கியிருக்கிறது. மேலும், இலங்கை மத்திய வங்கி நிதியமைச்சுடன் இணைந்து வங்கிகளின் மீள்மூலதனமயப்படுத்தல் உபாயத்தினை உருவாக்கியது. இது, தனியார் மூலங்களிலிருந்து மூலதனப் பற்றாக்குறைகளை பூர்த்தி செய்ய இயலாமல் இருக்கும் ஆற்றல் வாய்ந்த வங்கிகளின் அரசமீள மூலதன மயப்படுத்தலுக்கான அளவு, நேரம், சாதனங்கள் மற்றும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. இந்நோக்கத்திற்காக 2024 வரவுசெலவுத்திட்டத்தில் ரூ.450 பில்லியன் ஒதுக்கப்பட்டது. எனினும், அத்தகைய நிதியினைப் பயன்படுத்தும் தேவை 2024இல் எழவில்லை. இவ்வுபாயத்தின் ஒரு பகுதியாக 9 வங்கிகள் மீள்மூலதன மயப்படுத்தும் திட்டத்தினை மத்திய வங்கிக்கு சமர்ப்பித்ததுடன் அத்தகைய திட்டங்களின் மதிப்பீடும் நிறைவடைந்தது. இத்திட்டங்களின் நடைமுறைப்படுத்தல் தொடர்பான முன்னேற்றங்கள் தொடர்ந்தியங்கிவரும் அடிப்படையில் கண்காணிக்கப்பட்டன.

**நிறுவன ஆளுகையை வலுப்படுத்தல்**

தற்போதைய சந்தை அபிவிருத்திகள், பன்னாட்டு சிறந்த நடைமுறைகள் மற்றும் பரிணாமமடைந்துவரும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு உரிமம்பெற்ற வங்கிகளின் நிறுவன ஆளுகை செய்முறைகளையும் நடைமுறைகளையும் மேலும் வலுப்படுத்தும் பொருட்டு வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன. இப்பணிப்புரைகள் முக்கியமாக பணிப்பாளர் சபையின் உள்ளமைப்பினையும் சுயாதீனத்தினையும் மேம்படுத்தல், பணிப்பாளர்கள், முதன்மை நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினரின் தகுதிவாய்ந்த தன்மையினையும் தொழில்சார் நிபுணத்துவ நேர்மையினையும் வலியுறுத்தல், சபைக் துணைக்குழுக்களின் காத்திரமான தொழிற்பாடுகளை உறுதிப்படுத்தல் என்பன மீது கவனம் செலுத்துகின்ற அதேவேளையில் தொடர்பான தரப்பினரின் கொடுக்கல்வாங்கல் மேற்பார்வை உள்ளிட்ட இடர்நேர்வு மேற்பார்வையினையும் பொறிமுறைக் கட்டுப்பாடுகளையும் முன்னேற்றுவதிலும் கவனம் செலுத்தின.

**உரிமம்பெற்ற வங்கிகளில் வியாபார மீளெழுச்சி அலகுகளை நிறுவுதல் மற்றும் நிவாரண வழிமுறைகள்**

அசாதாரணமான பேரண்டப் பொருளாதார சூழ்நிலைகளினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களின் நீடித்து நிலைத்திருக்கும் பொருளாதார மீளெழுச்சிக்கு வசதியளிக்கும் பொருட்டும் உரிமம்பெற்ற வங்கிகளின் சொத்துத் தரங்களை மேம்படுத்துவதற்காகவும் இலங்கை மத்திய வங்கி 2024 மாச்சில் வியாபார மீளெழுச்சி அலகுகளை நிறுவுதல் தொடர்பான வழிகாட்டல்களை விடுத்தது. வியாபார மீளெழுச்சி அலகுகளின் நோக்கம் அசாதாரணமான பேரண்டப் பொருளாதார சவால்களிலிருந்து தோன்றிய வருமானக்குறைப்பு, காசுப்பாய்ச்சல் அல்லது விற்பனைகள் குறைவடைந்தமை, வியாபாரத் தொழிற்பாடுகள் குறைவடைந்தமை அல்லது பாதிக்கப்பட்டமை அல்லது வியாபாரம் தற்காலிகமாக மூடப்பட்டமை என்பனவற்றின் காரணமாக மற்றைய விடயங்களுடன் சவால்களை எதிர்நோக்குகின்ற அல்லது சாத்தியமான நிதியியல் பிரச்சினைகளை எதிர்நோக்கக்கூடிய உரிமம்பெற்ற வங்கிகளின் செயற்படுகின்ற, செயற்படாத கடன்பாட்டாளர்களை அடையாளம் கண்டு உதவியளிப்பதேயாகும். பராட்டே நடவடிக்கையினை இடைநிறுத்துதல் முடிவிற்கு வருவதனைத் தொடர்ந்து, இலங்கை மத்திய வங்கி உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று, மற்றும் அண்மைய அசாதாரண பேரண்டப் பொருளாதார நிலைமைகள் என்பவற்றினால் பாதிக்கப்பட்ட சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான நிவாரண வழிமுறைகளை வழங்குவதன்மூலம் பொருளாதாரத் துறைக்கு ஆதரவளிப்பதற்கான அதன் முயற்சிகளை தொடர்ந்தது.

## 3. 2025இற்கும் அதற்கு அப்பாலுக்குமான கொள்கை வழிமுறைகள்

ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை மேலும் வலுப்படுத்துவதனையும் மற்றும் வங்கித்தொழில் முறையின் பாதுகாப்பினையும் ஆற்றல்வாய்ந்த தன்மையினையும் உறுதிப்படுத்துகின்ற நோக்குடன் 2025இலும் அதற்கு அப்பாலும் பல கொள்கை வழிமுறைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. வங்கி மீள்மூலதன மயப்படுத்தல் உபாயத்தின் கீழ் ஒன்பது பாரிய வங்கிகளினால் தயாரிக்கப்பட்ட மீள் மூலதனமயப்படுத்தல் திட்டத்தின் நடைமுறைப்படுத்தல் அனைத்து வங்கிகளுக்கும் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்காக தற்போது இடம்பெற்றுவரும் மேற்பார்வையுடன் சேர்த்து அரையாண்டிற்கொருமுறை கண்காணிக்கப்படும். மேலும், நிதியியல் முறைமையானது போதுமான மூலதனத்துடன் வலுவானதும் தாக்குப்பிடிக்கக்கூடியதுமான வங்கிகளை உள்ளடக்கியிருக்கிறது என்பதனை உறுதிப்படுத்துவதற்காக உரிமம்பெற்ற வங்கிகளின் சந்தைத்தூண்டல் ஒன்றிணைப்பு மீதான கட்டமைப்பொன்று நிறுவப்படவுள்ளது என்பதுடன் ஒன்றிணைப்பதற்கு ஒவ்வொரு விடயங்களின் அடிப்படையில் வசதியளிக்கப்படும். மேலும், அதிகரிக்கப்பட்ட நெருக்கடி முகாமைத்துவம் மற்றும் தீர்மானிப்பு வழிமுறைகளினூடாக நிதியியல் முறைமையின் தாக்குப்பிடிக்கும் தன்மையை வலுப்படுத்துவதுடன் மத்திய வங்கி, நிதியியல் துறை நெருக்கடி முகாமைத்துவக் குழுவின் தொழிற்பாடுகளை இணைப்புச்செய்து உதவுவதில் தொடர்ந்தியங்கும் அடிப்படையில் உதவும்.

மற்றைய விடயங்களுடன், பாரிய கொடுகடன் வெளிப்படுத்துகை, நிறுவன ஆளுகை, திரவத்தன்மை விகிதங்கள், தொடர்பான தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரம் போன்ற துறைகளை உள்ளடக்குகின்ற விதத்தில் வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட பணிப்புரைகளின் நடைமுறைப்படுத்தல் 2025இல் கண்காணிக்கப்படும். மேலதிகமாக ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு மேலும் வலுப்படுத்தப்பட்டிருப்பதனை உறுதிப்படுத்துவதற்காக தற்போதுள்ள ஒழுங்குவிதிகள், சந்தை அபிவிருத்தி மற்றும் பன்னாட்டு சிறந்த நடைமுறைகளுக்கு இசைவாக மீளாய்வு செய்யப்படும். மேற்பார்வை கட்டமைப்பினை மேம்படுத்துவதன் மூலமும் தொடர்ச்சியான வங்கிகளின் கண்காணிப்புக்கள் மூலமும் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வையின் காத்திரமான தன்மை அதிகரிக்கப்பட்டு செறிவுபடுத்தப்படும். மேலும், மத்திய வங்கி, நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் நியதிகளில் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட வங்கிகளில் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதங்களுக்கு நிதியளித்தலை ஒழித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதனை மேலும் வலுப்படுத்தப்படுத்துவதற்கான அதன் நடவடிக்கைகளைத்.தொடரும்.

மேற்குறிப்பிட்டவற்றை கருத்திற்கொண்டு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்காக வங்கித்தொழில் துறையினை தொழிற்பாட்டு ரீதியான தாக்குப்பிடிக்கும் தன்மையுடன் சேர்த்து ஆற்றல்வாய்ந்த நிதியியல், வலுவான முன்மதியுடைய விகிதங்கள் என்பனவற்றுடன் தொழிற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

## 2.2 வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறை

### நிதிக் கம்பனிகள்

**நிதிக்கம்பனிகள் துறை 2024இல் கணிசமான விரிவாக்கத்தினைப் பதிவுசெய்த வேளையில் மூலதனத்தையும் திரவத்தன்மையையும் குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் மட்டத்திற்கு மிக மேலே பேணியமையின் மூலம் தாக்குப்பிடிக்கும் தன்மையினை எடுத்துக் காட்டியது.** கடன்கள் மற்றும் முற்பணங்கள், படுகடன் மற்றும் வைப்புக்களின் நியதிகளில் நிதிக் கம்பனிகள் துறை வளர்ச்சியடைந்தது. மேலும் கட்டம் 3 கடன்களினால் எடுத்துக்காட்டப்பட்டவாறு செயற்படாக்கடன்களில் ஏற்பட்ட குறைப்பினால் பிரதிபலிக்கப்பட்டவாறு துறையினது சொத்துக்களின் தரம் மேம்பட்டது. 2024 இறுதியில் துறையானது 32 நிதிக் கம்பனிகளை[3] உள்ளடக்கி மொத்த நிதியியல் துறை சொத்துக்களில் 5.4 சதவீதத்திற்கு வகைகூறியது. 1,908 கிளைகள் காணப்பட்டதுடன் அவற்றுள் 1,265 கிளைகள் பல்வேறு பிரிவினருக்குமான நிதியியல் தேவைகளை பூர்த்திசெய்யும் விதத்தில் மேல் மாகாணத்திற்கு வெளியே அமைந்திருந்தமையின் மூலம் நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கும் வசதியளித்தன. 2024 திசெம்பரில் நிதிக் கம்பனிகள் துறையின் திரட்சிப்படுத்தலுக்கான முதன்மைத் திட்டத்தின் கட்டம் II இற்கான திருத்தப்பட்ட கட்டமைப்பொன்று நடுத்தரத்திலிருந்து நீண்டகாலப்பகுதியில் நிதிக்கம்பனிகள் துறையின் கூடுதலான தாக்குப்பிடிக்கும் தன்மையினை விருத்தி செய்யும் நோக்குடன் அறிமுகப்படுத்தப்பட்டது. இது 2025 மாச்சு 31 இலிருந்து ஆரம்பமாகும் மூன்றாண்டு நிறைவேற்றுத் திட்டத்தினையும் உள்ளடக்கியிருந்தது[4].

**2024இல் துறையின் சொத்துத்தளம் ரூ.235.2 பில்லியனால் அதிகரித்து ரூ.1,930.7 பில்லியனை எட்டியதுடன் 2023இன் இறுதியின் 5.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுமிடத்து 2024இன் இறுதியில் 13.9 சதவீதம் கொண்டதொரு வளர்ச்சியைப் பிரதிபலித்தது.** சொத்தின் வளர்ச்சிக்கு கடன்கள் மற்றும் முற்பணங்களின் சொத்துப்பட்டியல் கணிசமாக விரிவடைந்தமை முக்கிய தூண்டுதலாக அமைந்தது. தேறிய கடன்கள் மற்றும் முற்பணங்கள் துறையின்

வரைபடம் 2.4: சாதனங்கள் வாரியான மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் (தேறிய)




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

மொத்தச் சொத்துக்களில் 74.1 சதவீதத்திற்கு வகை கூறின. 2024 காலப்பகுதியில் துறையின் கடன்கள் மற்றும் முற்பணங்களின் சொத்துப்பட்டியல் ரூ.265.4 பில்லியனால் அதிகரித்து ரூ.1,430.2 பில்லியனை அடைந்து 2023இன் 2.6 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2024 இறுதியில் 22.8 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது. நிதிக்குத்தகைகள் மற்றும் ஊர்திக் கடன்கள், துறையின் கடன்கள் மற்றும் முற்பணங்களின் சொத்துப்பட்டியலில் ஆதிக்கம் செலுத்தி 2024 இறுதியில் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களில் 64.0 சதவீதத்திற்கு வகைகூறி இருந்ததுடன் 2023 இறுதியில் இவை 66.2 சதவீதத்திற்கு வகைகூறின. அவற்றை அடுத்து தங்கத்தினால் பிணையிடப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் 2023 இறுதியின் 18.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2024 இறுதியில் மொத்தக்கடன்கள் மற்றும் முற்பணங்களில் 19.8 சதவீதத்தினைப் பிரசன்னப்படுத்தின. நிதிக்குத்தகைகள் மற்றும் ஊர்திக் கடன்கள் மற்றும் தங்கத்தினால் பிணையிடப்பட்ட கடன்கள் என்பன 2024இல் முறையே 18.7 சதவீதம் மற்றும் 30.4 சதவீதமான வளர்ச்சி வீதங்களைப் பதிவுசெய்தன. நிதியியல் சொத்துக்களில் தேய்மானக் கிரயத்தில் அளவிடப்பட்ட படுகடன் மற்றும் ஏனைய நிதியியல் சாதனங்கள் 2023இன் 71.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2024இல் 39.9 சதவீதத்தினால் சுருக்கமடைந்தமைக்கு அரச பிணையங்களில் முதலீடுகள் வீழ்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும்.

**2023 இறுதியின் 18.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2024 இறுதியில் 11.3 சதவீதமாகக் கொண்ட மொத்த செயற்படாக்கடன்கள் விகிதம் குறைந்தமையினால் எடுத்துக்காட்டப்பட்டவாறு நிதிக் கம்பனிகள் துறையின்**

3 ஈரிஜ பினான்ஸ் லிமிடெட் நீங்கலாக (கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்றம் தனது மேற்பார்வைக்கு உட்பட்டு 2023 திசெம்பர் 15 ஆம் நாளன்று ஈரிஜ பினான்ஸ் மூடப்பட கட்டளையிட்டது).

4 முதன்மைத் திட்டத்தின் செயற்படுத்தலுடன் 2024 இறுதியில் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையில் ஒரேயொரு கம்பனி மாத்திரமே காணப்பட்டது.

**கொடுகடனின் தரம் மேம்பட்டது.** அதேவேளை, துறையானது 2023 இறுதியில் அறிக்கையிடப்பட்ட 32.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2024 இறுதியில் செயற்படாக் கடன்களுக்கு 41.9 சதவீதம் கொண்ட ஒதுக்கு காப்பு விகிதமொன்றினைப் பதிவுசெய்தது. இதன்படி, தேறிய செயற்படாக்கடன்கள் விகிதம் 2023 இறுதியின் 12.1 சதவீதத்திலிருந்து 2024 இறுதியளவில் 6.6 சதவீதத்திற்கு மேம்பாடடைந்தது.

**நிதிக்கம்பனிகள் துறை 2024 காலப்பகுதியில் திரவத் தன்மை நிலைமையினை குறைந்தபட்ச தேவைப்பாட்டு மட்டங்களுக்கு மிக மேலேயே பேணியது.** 2024 இறுதியில் உள்ளவாறு, துறையின் கிடைக்கத்தக்க ஒட்டுமொத்த ஒழுங்குமுறைப்படுத்தல் திரவச்சொத்துக்கள் குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச தேவைப்பாடான ரூ.115.8 பில்லியனுக்கெதிராக ரூ.220.9 பில்லியன்களாக விளங்கி 2023 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.151.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 இறுதியில் ரூ.105.1 பில்லியன் கொண்ட திரவத்தன்மை மிகையைப் பதிவுசெய்தது. 2024 இறுதியில் வாடிக்கையாளர் வைப்புக்கள் நிதிக்கம்பனிகள் துறையின் பொறுப்புக்களில் தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தி 54.7 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் அதனையடுத்து பங்குரிமை மூலதனமும் கடன்பாடுகளும் முறையே 24.3 சதவீதத்திற்கும் 15.8 சதவீதத்திற்கும் வகை கூறின. 2024 காலப்பகுதியில் வைப்புக்கள் 13.0 சதவீதத்தால் ரூ.121.4 பில்லியன் அதிகரித்து 2024 இறுதியில் ரூ.1,056.4 பில்லியனை அடைந்தது. அதேவேளை 2024 காலப்பகுதியில் கடன்பாடுகள் 15.3 சதவீதத்தால் ரூ.40.5 பில்லியன் அதிகரித்து ரூ.305.4 பில்லியனை அடைந்தது.

**துறையின் வரிக்குப் பின்னரான இலாபம் 2023இன் ரூ.49.4 பில்லியனிலிருந்து 2024இல் ரூ.59.7 பில்லியனுக்கு 20.9 சதவீதத்தால் அதிகரித்தமைக்கு உயர்ந்த தேறிய வட்டி வருமானம் முக்கிய தூண்டுதலாக அமைந்தது.** 2024 காலப்பகுதியில் துறையின் தேறிய வட்டி வருமானம் ரூ.191.8 பில்லியனாக விளங்கி கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 24.3 சதவீதத்தினால் கவனிக்கத்தக்க வளர்ச்சியைப் பதிவுசெய்து, துறையில் அதிகரித்த இலாபத்திற்கு முக்கிய காரணியாக அமைந்தது. மேலும், துறையின் வட்டியல்லா வருமானம் ரூ.33.8 பில்லியனாக விளங்கி 2023 உடன் ஒப்பிடுகையில் 2024இல் 1.4 சதவீத சிறியளவான வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. இலாபத்தன்மையில் ஏற்பட்ட அதிகரிப்பு சொத்துக்கள் மீதான வருவாய் மற்றும் பங்குரிமை மூலதனத்தின் மீதான வருவாய் என்பவற்றில் பிரதிபலித்து 2023இன் 5.2 சதவீதம் மற்றும் 12.7 சதவீதங்களுடன் ஒப்பிடுகையில் 2024இல் முறையே 6.1 சதவீதத்திற்கும் 13.5 சதவீதத்திற்கும் உயர்வடைந்தது. வினைத்திறன் விகிதம் 2023இன் 52.8 சதவீதத்திலிருந்து 2024இல் 50.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமையில் பிரதிபலிக்கப்பட்டவாறு துறையின் வினைத்திறன் மேம்பாடடைந்தது.

**நிதிக்கம்பனிகள் துறையின் மூலதனத்தளம் 2023 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.329.1 பில்லியனிலிருந்து 2024 இறுதியில் ரூ.357.4 பில்லியனுக்கு ரூ.28.3 பில்லியனால் மேம்பாடடைந்து ஆண்டுக் காலப்பகுதியில் 8.6 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது.** இரண்டு நிதிக்கம்பனிகள்[5] தவிர ஏனைய அனைத்து நிதிக் கம்பனிகளும் குறைந்தபட்ச மைய மூலதனத் தேவைப்பாடுகள் அத்துடன்/அல்லது மூலதனப் போதுமாந்தன்மை தேவைப்பாடுகளுடன் இணங்கியிருந்தன. துறையின் மைய மூலதன மற்றும் மொத்த மூலதன விகிதங்கள் 2023 இறுதியின் முறையே 21.1 சதவீதம் மற்றும் 22.3 சதவீதத்திடனும் ஒப்பிடுயைில் 2024 இறுதியில் முறையே 20.4 சதவீதத்திற்கும் 21.2 சதவீதத்திற்கும் சிறிதளவால் வீழ்ச்சியடைந்த போதிலும் குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாட்டைவிடவும் மிக மேலே காணப்பட்டன.

## முதனிலை வணிகர் கம்பனிகள்

**2024 இறுதியில் 5 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும்[6] 5 முதனிலை வணிகர் கம்பனிகளும்[7] அரச பிணையங்கள் சந்தையில் முதனிலை வணிகர்களாகச் செயற்பட்டன.** முதனிலை வணிகர் கம்பனிகளின் மொத்தச் சொத்துக்கள் 2023இன் ரூ.270.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024இல் ரூ.297.2 பில்லியனுக்கு 9.7 சதவீதத்தினால் அதிகரித்தன. அரச பிணையங்களில் மொத்த முதலீட்டு சொத்துப்பட்டியல்

5 2024 இறுதியில் நிதிக் கம்பனிகள் துறையில் 0.7 சதவீதத்திற்கு அத்தகைய கம்பனிகள் வகைகூறின. குறைந்தபட்ச மைய மூலதனத் தேவைப்பாடு அத்துடன்/அல்லது மூலதன போதுமாந்தன்மை தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகாத நிதிக்கம்பனிகள் மீது வைப்புக்கள் மற்றும் கொடுகடன் மீதான உச்ச எல்லைகள், புதிய வைப்புக்களை ஏற்றுகொள்வதை நிறுத்துதல். புதிய கடன் வழங்கல் மீதான வரம்புகள் போன்ற ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

6 பான்ஏசியா பாங்கிங் கோப்பரேஷன் நீங்கலாக. (அரச பிணையங்களின் முதலாந்தர ஏலங்களில் பங்குபற்றுவது 2017.08.15 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இடைநிறுத்தப்பட்டது)

7 என்ரஸ்ட் செக்குறிட்டீஸ் பிஎல்சி (முதலாந்தர ஏலங்களில் அரச பிணையங்களில் பங்கேற்பது 2017.07.24 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் தடைசெய்யப்பட்டது. கடன் வழங்கியவரை கலைத்துவிடுவது பிணையுறுதியற்ற முதலீட்டாளர்களிரொருவரினால் வழக்குத் தொடுக்கப்பட்டதுடன் 2022.06.17 அன்று கலைத்துவிடும் கட்டளை நீதிமன்றத்தினால் வழங்கப்படுகிறது. எது எவ்வாறாயினும் கலைத்துவிடும் வழக்கு, ஏனைய சட்ட ரீதியான விசாரணைகளின் காரணமாக நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ளது) மற்றும் பேர்பேஜ்ஜுவல் றெசறீஸ் லிமிடெட் (வியாபாரம் ஆரம்பத்தில் 2017.07.06 அன்று இடைநிறுத்தப்பட்டதுடன் 2025.01.05 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் மேலும் 6 மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது.) நீங்கலாக.

2023இன் ரூ.262.9 பில்லியனிலிருந்து 2024 இறுதியில் ரூ.277.9 பில்லியன்களாக அமைந்து ஆண்டிற்காண்டு அடிப்படையில் 5.7 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தது.

2

**முதனிலை வணிகர் கம்பனிகள் 2024இல் வரிக்குப் பின்னரான இலாபமாக ரூ.9.7 பில்லியன்களைப் பதிவுசெய்து, 2023இன் ரூ.30.4 பில்லியனிலிருந்து கணிசமாக வீழ்ச்சியடைந்தமையினை எடுத்துக் காட்டியது.** இலாபத்தன்மையில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சிக்கு இலாபம் அல்லது இழப்பு ஊடாக சந்தைப்பெறுமதியில் அளவிடப்பட்ட வர்த்தகத்திற்காக வைக்கப்பட்டிருந்த நிதியியல் சொத்துக்களின் மீது ஏற்பட்ட உயர் மீள் மதிப்பீட்டு இழப்புக்களுடன் சேர்ந்து வட்டி வருமானத்திலும் மூலதன இலாபங்களிலும் ஏற்பட்ட வீழ்ச்சி முக்கிய காரணங்களாக அமைந்தன. மேலும் முதனிலை வணிகர்களின் சொத்துக்கள் மீதான வருவாய் மற்றும் பங்குரிமை மூலதனத்தின் மீதான வருவாய் என்பன 2023இன் முறையே 31.9 சதவீதம் மற்றும் 113.9 சதவீதத்திலிருந்து 2024 இறுதியில் முறையே 7.9 சதவீதத்திற்கும் 30.9 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தன.

**முதனிலை வணிகர் கம்பனிகளின் பங்குரிமை மூலதனம் 2.3 சதவீதத்தினால் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தமைக்கு இலாபத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாகும்.** முதனிலை வணிகர்களின் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமாந்தன்மை விகிதமானது குறைந்தபட்ச தேவைப்பாடான 10.0 சதவீதத்திற்கு மிக மேலே காணப்பட்டமைக்கிடையிலும் 2023 இறுதியளவில் அறிக்கையிடப்பட்ட 22.3 சதவீதத்திலிருந்து 2024 இறுதியில் 18.7 சதவீதத்திற்கு சிறிதளவால் குறைவடைந்தது.

**திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளுக்கான முதலாந்தர ஏலங்களில் முதனிலை வணிகர்களின் பங்கேற்பானது 2024 காலப்பகுதியில் கலப்பான செயலாற்றத்தினைக் காட்டியது.** 2024 இல் முதனிலை வணிகர் கம்பனிகளினால் அரச பிணையங்களின் இரண்டாந்தரச் சந்தையில் 72.9 சதவீதத்திற்கு வகைகூறிய மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களுடன் சேர்த்து செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் (பெறுமதி நியதிகளில்) 25.4 சதவீதத்தினால் குறைவடைந்து ரூ.18,639.9 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன. 2024 காலப்பகுதியில் உடனடிக் கொள்வனவுகளும் விற்பனைகளும் 2023 உடன் ஒப்பிடுகையில் முறையே 28.8 சதவீதத்தினாலும் 11.3 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன.

## உரிமம்பெற்ற நுண்பாக நிதிக்கம்பனிகள்

**உரிமம்பெற்ற நுண்பாக நிதிக்கம்பனிகள் துறை 4 கம்பனிகளை உள்ளடக்கியிருந்ததுடன் அதன் சொத்துத் தளத்தில் 27.0 சதவீதம் கொண்ட வளர்ச்சியை அறிக்கையிட்டு 2024 இறுதியில் ரூ.14.8 பில்லியனை அடைந்தது.** மொத்தச் சொத்துக்களில் நுண்பாக கடன்கள் மிகப்பெரும் பங்கிற்கு வகைகூறி 2023 இறுதியின் ரூ.7.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 இறுதியில் ரூ.11.4 பில்லியனாக விளங்கி 49.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பிரதிபலித்தது. துறையின் மொத்த வைப்புத்தளம் 2023இன் ரூ.828.9 மில்லியனிலிருந்து 2024இல் 35.7 சதவீதத்தினால் ரூ.1,124.4 மில்லியனுக்கு வளர்ச்சியடைந்தது. துறையின் மைய மூலதன மட்டம் 2024 இறுதியளவில் ரூ.3.3 பில்லியனாக வளர்ச்சியடைந்ததுடன் அனைத்து உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளும் மைய மூலதனம் மீதான குறைந்தபட்ச முன்மதியுடைய ஒழுங்குவிதிகளுடன் இணங்கிக்கொண்டிருந்தன.

## கூறு நம்பிக்கைகள்

**கூறு நம்பிக்கைத்துறை, சொத்துத் தளத்தில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்புடன் 2024இல் தொடர்ச்சியான வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது.** தொழிற்பாட்டிலுள்ள கூறு நம்பிக்கைகளின் எண்ணிக்கை 2023 இறுதியின் 84இலிருந்து 2024 இறுதியில் 90 இற்கு அதிகரித்தவேளையில், கூறு நம்பிக்கை முகாமைத்துவக் கம்பனிகளின் எண்ணிக்கை 2023 இறுதியுடன் ஒப்பிடுயையில் 2024 இறுதியில் 16 ஆக மாற்றமின்றிக்காணப்பட்டது. எனினும், வழங்கப்பட்ட கூறுகளின் எண்ணிக்கை 2023 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 13,371 மில்லியன்களுடன் ஒப்பிடுகையில் 2024 இறுதியில் 30,260 மில்லியன்களுக்கு 126.3 சதவீதத்தினால் அதிகரித்தது. மேலும், கூறு உடமையாளர்களின் மொத்த எண்ணிக்கை 2023 இறுதியின் 93,450இலிருந்து 2024 இறுதியில் 114,898 இற்கு அதிகரித்தது. கூறு நம்பிக்கைகளின் மொத்தச் சொத்துக்கள் 2023 இறுதியில் அறிக்கையிடப்பட்ட ரூ.406.5 பில்லியன்களுடன் ஒப்பிடுகையில் 2024 இறுதியில் ரூ.547.4 பில்லியன்களுக்கு 34.7

சதவீதத்தினால் அதிகரித்தது. 2024 இறுதியில் பணச்சந்தை நிதியங்களும் வருமான நிதியங்களும் கூறு நம்பிக்கை நிதியங்களின் பெரும் பங்கிற்கு வகைகூறியதுடன் கூட்டுமொத்தமாக தொழில்துறையின் 83.9 சதவீதத்தினைப் பிரசன்னப்படுத்தின. மொத்தச் சொத்துக்களின் சதவீதமாக கூறு நம்பிக்கைகளினால் அரச பிணையங்களில் செய்யப்பட்ட முதலீடுகளின் பங்கு 2023 இறுதியில் அறிக்கையிடப்பட்ட 77.2 சதவீதத்திலிருந்து 2024 இறுதியில் 67.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மேலும், கூறு நம்பிக்கை சொத்துக்களின் பங்கொன்றாக பங்குரிமை மூலதனத்தில் முதலீடுகள் 2023 இறுதியில் அறிக்கையிடப்பட்ட 4.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2024 இறுதியில் 5.7 சதவீதத்திற்கு உயர்வடைந்தது.

## காப்புறுதித் துறை[8]

**நீண்டகால மற்றும் பொதுக் காப்புறுதி துணைத் துறைகளை உள்ளடக்கிய காப்புறுதித் துறை 2024 காலப்பகுதியில் மொத்தக் காப்புறுதித் துறையின் சொத்துக்கள் விரிவடைந்தமைக்கிடையிலும் கலப்பான செயலாற்றத்தினைக் காட்டியது.** இத்துறையானது நீண்டகால காப்புறுதிக் கம்பனிகளாக தொழிற்படும் 15 கம்பனிகளையும் பொதுக் காப்புறுதிக் கம்பனிகளாக தொழிற்படும் 14 கம்பனிகளையும் உள்ளடக்கியிருந்தது. மேலும், 2024 இறுதியில் 81 காப்புறுதித் தரகுக்கம்பனிகள் தொழிற்பாட்டிலிருந்தன.

**2024 காலப்பகுதியில், காப்புறுதித் துறை 2023 உடன் ஒப்பிடுகையில் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணத்தில் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது.** இவ்வாண்டுப் பகுதியில் நீண்டகால மற்றும் பொதுக் காப்புறுதித் துணைத் துறைகளின் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் முறையே 20.4 சதவீதத்தினாலும் 11.7 சதவீதத்தினாலும் அதிகரித்தது. அதேவேளை, நீண்டகால காப்புறுதித் துணைத் துறையின் சொத்துக்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 12.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த வேளையில் பொதுக் காப்புறுதி துணைத் துறையின் சொத்துக்கள் 2024 இறுதியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 5.3 சதவீதத்தினால் சுருக்கமடைந்தன. எவ்வாறாயினும், நீண்டகால காப்புறுதி துணைத் துறை உயர்ந்த சொத்துத் தளத்தினை கொண்டிருந்தமையால் 2024இல் மொத்த காப்புறுதித் துறையின் சொத்துக்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 7.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன.

**நீண்டகால காப்புறுதித் துணைத் துறையின் வரிக்கு முன்னரான இலாபம் 2023 உடன் ஒப்பிடுகையில் 2024இல் 6.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த வேளையில் பொதுக் காப்புறுதித் துணைத் துறையின் வரிக்கு முன்னரான இலாபம் 2024 காலப்பகுதியில் 2.4 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது.** நீண்டகால காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதித் துணைத் துறைகள் இரண்டினதும் சொத்துக்கள் மீதான வருவாய் 2023 உடன் ஒப்பிடுகையில் 2024இல் குறைவடைந்தது. மேலும், நீண்டகால மற்றும் பொதுக் காப்புறுதித் துணைத் துறைகளின் கோரல்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024 இறுதியில் முறையே 9.4 சதவீதத்தினாலும் 2.2 சதவீதத்தினாலும் அதிகரித்தன.

**2024இல் பொதுக் காப்புறுதித் துணைத் துறையின் மூலதன நிலைமை மேம்பட்ட வேளையில் நீண்டகால காப்புறுதித் துணைத் துறையின் மூலதன நிலைமையில் ஓர் வீழ்ச்சி காணப்பட்டதெனினும் அது குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாட்டிற்கு மேலேயே தொடர்ந்தும் காணப்பட்டது.** இதன்படி, பொதுக் காப்புறுதியின் மூலதன போதுமாந்தன்மை விகிதம் 2023 இறுதியின் 252.0 சதவீதத்திலிருந்து 2024 இறுதியில் 322.0 சதவீதத்திற்கு அதிகரித்தது. நீண்டகால காப்புறுதியின், மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் 2013 இறுதியின் 358.3 சதவீதத்திலிருந்து 2024 இறுதியில் 338.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எவ்வாறாயினும், நீண்டகால மற்றும் பொதுக் காப்புறுதி துணைத் துறைகளின் மொத்த சொத்துக்களுக்கான மூலதனம் 2023 இறுதியின் முறையே 0.22 மற்றும் 0.51 இலிருந்து 2024 இறுதியில் முறையே 0.19 மற்றும் 0.44 இற்கு வீழ்ச்சியடைந்தது.

## ஊழியர் சேமலாப நிதியம்

**ஊழியர் சேமலாப நிதியம் ஓய்வுகால நிதியத் துறையில் தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தி 2024இன் இறுதியில் அத்துறையின் மொத்த சொத்துக்களில் 81.0 சதவீதத்தினைக் கொண்டிருந்தது.** ஊழியர் சேமலாப நிதியத்தின் தேறிய பெறுமதி 2023 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.3,886.7 பில்லியனிலிருந்து 2024 இறுதியில் ரூ.4,375.7

2

8 இப்பகுதி தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் மீள்காப்புறுதி வியாபாரத்தை உள்ளடக்கவில்லை.

**அட்டவணை 2.7: ஊழியர் சேமலாப நிதியத்தின் ஐந்து ஆண்டுச் செயலாற்றச் சுருக்கம்**

| விடயம் | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 (அ) |
|---|---|---|---|---|---|
| நிதியத்தின் தேறிய பெறுமதி (ரூ.பில்) | 2,824.3 | 3,166.1 | 3,459.9 | 3,886.7 | **4,375.7** |
| உறுப்பினர்களுக்கான மொத்த பொறுப்பு (ரூ.பில்) | 2,767.8 | 3,066.9 | 3,380.6 | 3,817.9 | **4,289.5** |
| மொத்த பங்களிப்புக்கள் (ரூ.பில்) | 150.7 | 165.7 | 194.6 | 210.6 | **234.4** |
| மொத்த மீளளிப்புக்கள் (ரூ.பில்) | 109.7 | 118.2 | 163.0 | 215.9 | **188.1** |
| தேறிய பங்களிப்பு (ரூ.பில்) | 41.0 | 47.5 | 31.6 | -5.3 | **46.3** |
| அங்கத்தவர் மீதிகளுக்கான வட்டிவீதம் (%) | 9.00 | 9.00 | 9.00 | 13.00 | **11.00** |
| அங்கத்தவர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை (மில்) | 19.8 | 20.3 | 20.4 | 21.5 | **21.5** |
| பங்களிக்கின்ற அங்கத்தவர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை (மில்) | 2.6 | 2.5 | 2.7 | 2.6 | **2.6** |

(அ) தற்காலிகமானது

*மூலம்:* ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

பில்லியனுக்கு ஆண்டிற்காண்டு அடிப்படையில் 12.6 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. நிதியத்தில் ஏற்பட்ட இவ்வளர்ச்சிக்கு முதலீடுகளூடாக உருவாக்கப்பட்ட வருமானமும் 2024இல் செய்யப்பட்ட நேர்க்கணியமான தேறிய பங்களிப்புக்களும் முக்கிய காரணங்களாக அமைந்தன. இச்சமகாலத்தில் உறுப்பினர்களுக்கான மொத்தப் பொறுப்புக்களும் இக்காலப்பகுதியில் 12.4 சதவீதத்தினால் அதிகரித்தன. 2024ஆம் ஆண்டிற்காக பெறப்பட்ட மொத்தப் பங்களிப்புக்கள் 11.3 சதவீதத்தினால் ரூ.234.4 பில்லியனுக்கு அதிகரித்த வேளையில் உறுப்பினர்களுக்கும் அவர்களது சட்டபூர்வ வாரிசுகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்ட மீளளிப்பின் மொத்தத் தொகை ரூ.188.1 பில்லியனுக்கு 12.9 சதவீதத்தினால் குறைவடைந்தது. நிதியத்தின் தேறிய பங்களிப்பானது 2023இல் அறிக்கையிடப்பட்ட ரூ.5.3 பில்லியன் கொண்ட ஓர் எதிர்மறையான பங்களிப்புடன் ஒப்பிடுகையில் 2024இல் ரூ.46.3 பில்லியன் கொண்ட ஒரு நேர்க்கணிய பங்களிப்பினைப் பதிவுசெய்தது.

**நிதியத்தின் மொத்த முதலீட்டு வருமானம் 2024இல் ரூ.513.8 பில்லியனாக காணப்பட்டதோடு 2023இன் ரூ.481.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 6.8 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பினை பதிவுசெய்தது.** நிதியத்திற்கான வருமானத்தின் ஆதிக்கம் பெற்ற மூலமாக வட்டி வருமானம் தொடர்ந்தும் விளங்கி 2023இன் ரூ.442.4 பில்லியனிலிருந்து 2024இல் ரூ.455.1 பில்லியனுக்கு 2.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. பங்கிலாப வருமானம் 2023இன் ரூ.3.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024இல் ரூ.5.5 பில்லியனுக்கு 82.9 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. பட்டியலிடப்பட்ட பங்குரிமை மூதலீட்டின் மீதான தேறிய உண்மைப் பெறுமதியிலான இலாபம் 2023இன் ரூ.23.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024ஆம் ஆண்டில் ரூ.49.2 பில்லியனைப் பதிவுசெய்தது. நிதியம், மொத்த வருமானத்திற்கான தொழிற்பாட்டு செலவினத்தினை 2024இல் 0.6 சதவீதத்தில் பேணியது. இருப்பினும்கூட, நிதியத்தின் வரிச்செலவினம் ரூ.64.1 பில்லியனுக்கு அதிகரித்தமைக்கு 2024 காலப்பகுதியில் அதிகரித்த முதலீட்டு வருமானமே காரணமாகும். மத்திய வங்கியின் ஆளுகைச் சபை தொழில் துறைக்குப் பொறுப்பான மாண்புமிகு அமைச்சரினதும் நிதித் துறைக்கு பொறுப்பான மாண்புமிகு அமைச்சரினதும் ஒப்புதலை பெறுவதற்கு உட்பட்டு, 2024 இற்கான உறுப்பினர் நிலுவைகளின் மீது 11.00 சதவீதம் கொண்ட வட்டியைச் செலுத்த ஒப்புதலளித்தது.

## ஊழியர் நம்பிக்கை நிதியம்

**ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் சொத்துத்தளம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 12.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து 2024 இறுதியில் ரூ.591.3 பில்லியனை அடைந்தது.** ஊழியர் நம்பிக்கை நிதியத்தினால் செய்யப்பட்ட முதலீடுகள் 2024 இறுதியில் ரூ.581.1 பில்லியனுக்கு 12.8 சதவீதத்தினால் அதிகரித்தது. இம்முதலீடுகளின் 94.7 சதவீதம் அரச பிணையங்களில் முதலீடு செய்யப்பட்டதுடன் இது 14.7 சதவீதத்தினால் அதிகரித்து 2024 இறுதியில் ரூ.550.5 பில்லியனை அடைந்தது. 2024இல் ஊழியர் நம்பிக்கை நிதியம் அதன் உறுப்பினர் நிலுவைகளின் மீது 11.9 சதவீதம் கொண்ட முதலீட்டின் மீதான வருவாயை உழைக்கக்கூடியதாக இருந்தது. ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் 16.3 மில்லியன் கொண்ட உறுப்பினர் கணக்குகளில் 2.3 மில்லியன் கணக்குகள் மட்டுமே 2024 இறுதியில் செயற்பாட்டில் இருந்தன. நிதியத்திற்கு பங்களிக்கின்ற தொழில்தருநர்களின் எண்ணிக்கை 2023 இறுதியில் 74,927 இலிருந்து 2024 இறுதியில் 80,008 இற்கு அதிகரித்தது. ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் மொத்த உறுப்பினர் நிலுவை 2024 இறுதியில் 11.9 சதவீதத்தினால் அதிகரித்து ரூ.564.3 பில்லியனை அடைந்தது. ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்குப் பெறப்பட்ட மொத்தப் பங்களிப்புகள் 12.9 சதவீதத்தினால் அதிகரித்து ரூ.42.0 பில்லியனை அடைந்தவேளையில் உறுப்பினர்களுக்கு செலுத்தப்பட்ட மொத்த ஓய்வுகால நன்மைகள் 12.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து, 2024 காலப்பகுதியில் ரூ.33.4 பில்லியனை அடைந்தது.

## ஏனைய ஓய்வுகால நிதியங்கள்

**ஓய்வுகால நிதித் துறையில் 1.9 சதவீதத்திற்கு வகைகூறும் பொதுச் சேவைகள் ஊழியர் சேமலாப நிதியம் 2024 இறுதியில் சொத்துக்கள் மற்றும் முதலீட்டு நியதிகளில் அதிகரித்தது.** நிதியத்தின் மொத்தச் சொத்துக்கள் 9.6 சதவீதத்தினால் அதிகரித்து 2024 இறுதியில் ரூ.105.0 பில்லியனை அடைந்தது. நிதியத்தின் செயற்படுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 2023 இறுதியில் அறிக்கையிடப்பட்ட 272,630 உடன் ஒப்பிடுகையில் 2024 இறுதியில் 272,575 ஆகக் காணப்பட்டது. அதேவேளை, 2024 இறுதியிலுள்ளவாறு நிதியத்தின் மொத்த முதலீடுகளும் ரூ.113.4 பில்லியனுக்கு 10.7 சதவீதத்தினால் அதிகரித்தது. பொதுச் சேவைகள் ஊழியர் சேமலாப நிதியம் 2024 இறுதியில் அதன் முதலீட்டில் 41.7 சதவீதத்தினை அரச பிணையங்களில் முதலீடு செய்தவேளையில் ஏனைய முதலீடுகள் 58.3 சதவீதத்திற்கு வகைகூறின. 2024இல் உறுப்பினர் நிலுவைகள் மீதான வருவாய் வீதம் 10.00 சதவீதமாகக் காணப்பட்டது.

**ஒப்புதலளிக்கப்பட்ட ஓய்வூதியம் மற்றும் சேமலாப நிதியங்கள் 2024 இறுதியில் ஓய்வுகால நிதியத் துறையின் 6.2 சதவீதத்திற்கு வகைகூறியது.** ஒப்புதலளிக்கப்பட்ட ஓய்வூதியம் மற்றும் சேமலாப நிதியங்களினால் உள்ளடக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை 2024 இறுதியில் 108,651ஆக இருக்கும் என மதிப்பிடப்பட்டது. மேலும், நிதியங்களின் மொத்தச் சொத்துக்கள் 2024 இறுதியில் ரூ.339.2 பில்லியனுக்கு அதிகரித்த அதேவேளை மொத்த முதலீடும் இதே காலப்பகுதியின் இறுதியில் ரூ.263.9 பில்லியனுக்கு அதிகரித்தது.

## 2.3 நிதியியல் சந்தைகளின் செயலாற்றம்

2

### உள்ளூர் பணச் சந்தையின் அபிவிருத்திகள்

**2024இல் உள்ளூர் பணச் சந்தையின் திரவத்தன்மை மேம்பட்டது.** குறிப்பிட்ட உள்நாட்டு தனியார் வங்கிகள் காலத்திற்குக் காலம் திரவத்தன்மை பற்றாக்குறையினை அனுபவித்த வேளையில் அரச வங்கிகளும் பெரும்பாலான வெளிநாட்டு வங்கிகளும் குறிப்பிடத்தக்களவு திரவத்தன்மை மிகையை பதிவு செய்ததன் காரணமாக 2024இலும் வங்கித்தொழில் முறைமைக்கிடையே சமச்சீரற்ற திரவத்தன்மை பங்கீடொன்று அவதானிக்கப்பட்டது. சமச்சீரற்ற திரவத்தன்மைப் பங்கீட்டினை கவனத்திற்கொண்ட மத்திய வங்கி திறந்த சந்தைத் தொழிற்பாடுகளூடாக உள்ளூர் பணச்சந்தையில் தொடர்ந்து தலையிட்டது. எவ்வாறாயினும், குறிப்பாக 2024இன் இறுதிப்பகுதியில் சந்தைத் திரவத்தன்மை மேம்பட்டமையினைத் தொடர்ந்து மத்திய வங்கி அதன் சந்தைத்

வரைபடம் 2.5: 2024 காலப்பகுதியில் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள், ஓரிரவுக் கொள்கை வீதம், துணைநில் வைப்பு வசதி வீதம், துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் மற்றும் பணச்சந்தை வட்டி வீதங்களின் நடத்தைகள்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

*திரவத்தன்மை உட்செலுத்தல் தொழிற்பாடுகள் எதிர்மறை பக்கத்தில் காணப்படுகின்றன.

தொழிற்பாடுகளை குறைத்துக் கொண்டதுடன் நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களை தேவையின் அடிப்படையில் மாத்திரம் நடத்தியது. ஏறத்தாழ 50 அடிப்படைப் புள்ளிகளினால் குறைக்கப்பட்ட கொள்கை வீதங்களுடன் சேர்ந்து ஓரிரவு கொள்கை வீதம் அறிமுகப்படுத்தப்பட்டமையும் பொருத்தமான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளும் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதத்தை 8.55 சதவீதத்திலிருந்து 2024 திசெம்பர் இறுதியில் 8.00 சதவீதத்திற்கு ஓரிரவு கொள்கை வீதத்திற்கு நெருங்கச் செய்ததது. இதேபோன்று சராசரி நிறையேற்றப்பட்ட மீள்கொள்வனவு வீதமும் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் நகர்ந்து 2024 திசெம்பர் இறுதியில் 8.11 சதவீதத்தினைப் பதிவுசெய்தது.

## உள்ளூர் வெளிநாட்டு செலாவணிச் சந்தை

**மத்திய வங்கி ஆண்டு முழுவதும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தேவையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட முன்மதியுடைய தலையீடுகளினூடாக எந்தவொரு மிகையான தளம்பல்களையும் கட்டுப்படுத்திக் கொண்டது.** இந்த உபாயம், மத்திய வங்கி குறைந்த செலாவணி வீத தளம்பல்களுடன் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை கட்டியெழுப்புவதற்கு ஆதரவாக அமைந்தது. 2024 காலப்பகுதியில் மத்திய வங்கி 3,028.6 மில்லியன் ஐ.அ.டொலர்களை உள்ளீர்த்துக்கொண்ட வேளையில் ஐ.அ.டொலர் 183.0 மில்லியனை சந்தைக்கு வழங்கியது. ஆண்டின் தொடக்க பகுதியில் மத்திய வங்கி ஒரு நாளுக்குள்ளேயான தளம்பலைக் கட்டுப்படுத்துவதற்காக சந்தையிலிருந்து தீவிரமாக கொள்வனவுகளை மேற்கொண்டதன் மூலம் இலங்கை ரூபாவின் கடுமையான உயர்வு அழுத்தம் தணிக்கப்பட்டது. 2024 இறுதியளவில் வருடாந்த தேறிய கொள்வனவுகள் ஐ.அ.டொலர் 2,845.6 மிகையொன்றினைப் பதிவுசெய்தன. இது மத்திய வங்கியின் வரலாற்றில் முன்னொருபோதுமில்லாத தேறிய வருடாந்த கொள்வனவாக அமைந்ததுடன் பன்னாட்டு நாணய நிதியம் - விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான தேறிய பன்னாட்டு ஒதுக்கு இலக்கினை கணிசமானளவிற்கு கடந்துசெல்ல ஆதரவாக அமைந்தது. அதேவேளை உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் திரவத்தன்மை நிலையாகக் காணப்பட்டது. மேலும், வங்கிகளுக்கிடையிலான உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் விற்பனையளவுகள் 2023இன் ரூ.15.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024இல் ரூ.16.3 பில்லியனுக்கு 9.0 சதவீதத்தால் அதிகரித்தது.

## அரச பிணையங்கள் சந்தை

**குறிப்பிட்ட சில காலப்பகுதிகளில் இடையிடையே அதிகரிப்புக்கள் அவதானிக்கப்பட்ட போதும் 2024இல் திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளின் முதலாந்தரச் சந்தை விளைவு வீதங்கள் வீழ்ச்சியடைந்துசெல்லும் போக்கினைக் காட்டின.** தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலை, குறைந்த பணவீக்க எதிர்பார்ப்புக்கள், காசு தாங்கியிருப்பின் பேணலுடன் இணைந்த பரந்தளவிலான இறை ஒழுக்கம், இடர்நேர்வு மீதான எதிர்பார்ப்புக்கள் படிப்படியாக மறைந்தமை என்பன விளைவு வீதங்கள் கணிசமாக வீழ்ச்சியடைவதற்கு முக்கியமாக பங்களித்தன. மேலும், பணச்சந்தைத் திரவத்தன்மையின் மேம்பட்ட நிலைமைகளும் அரச பிணையங்களுக்கான நிலையான கேள்வியும் விளைவு வீதங்களின் கீழ்நோக்கிய போக்கிற்குப் பங்களித்தன. இந்த கீழ்நோக்கிய போக்கு, 2024 யூலையிலிருந்து செத்தெம்பர் வரையான காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட குறுகிய காலப்பகுதியில் இடம்பெற்ற மேல்நோக்கிய போக்கினைத் தொடர்ந்து, சனாதிபதி தேர்தலுக்குப் பின்னர் நிச்சயமற்ற தன்மைகள் குறைவடைந்தமையினால், வலுவடைந்தது. அதற்கிணங்க, 2024 காலப்பகுதியில் 91-நாள், 182-நாள் மற்றும் 364-நாள் திறைசேரி உண்டியல்களின் முதலாம் தர சந்தை விளைவு வீதங்கள் முறையே 589, 539 மற்றும் 397 அடிப்படைப்புள்ளிகளினால் வீழ்ச்சியடைந்தன.

**2024ஆம் ஆண்டு காலப்பகுதியில் முதலாந்தர சந்தையில் காணப்பட்ட அபிவிருத்திகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் அரச பிணையங்களின் இரண்டாந்தர சந்தை விளைவு வீதங்களும் அனைத்து முதிர்ச்சிகளிலும் வீழ்ச்சியடைந்தன.** மேலும், விளைவு வளையியின் வடிவம் இவ்வாண்டுப் பகுதியில் அதன் வழமையான வடிவத்திற்கு திரும்பியது. எனினும், வளையியின் குறுங்கால முதிர்ச்சிகளின் கீழ் நோக்கிய சீராக்கம் நீண்ட முதிர்ச்சிகளுடன் ஒப்பிடுகையில் உயர்வாக காணப்பட்டதுடன் இது தவணை மிகையை

தோற்றுவித்தது. நாளாந்த சராசரி வர்த்தகப்படுத்தல் அளவுகளின் நியதிகளில் அளவிடப்படும்போது இரண்டாந்தரச் சந்தை நடவடிக்கைகள் 2023இன் ரூ.25.7 பில்லியனிலிருந்து 2024 இல் ரூ.27.0 பில்லியனுக்கு சிறிதளவில் அதிகரித்தது. எனினும், 2024 ஓகத்திலிருந்து ஒத்தோபர் வரையான காலப்பகுதியில் குறைந்த மொத்தப் புரள்வினால் தூண்டப்பட்டு 2023இன் 41.5 சதவீதத்திலிருந்து 2024இல் 37.2 சதவீதத்திற்கு சராசரி மொத்தப் புரள்வு விகிதம்[9] வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக மாதாந்த மொத்தப் புரள்வு விகிதத்தின் நியதிகளில் சந்தைத் திரவத் தன்மை குறைவடைந்தது.

**திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளுக்கான வெளிநாட்டு முதலீட்டாளர்களின் கேள்வி செத்தெம்பர் வரை குறைவடைந்து காணப்பட்டதெனினும் 2024இன் இறுதிப் பகுதியில் அதிகரித்தது.** இதன்படி, 2023இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 210 மில்லியன் கொண்ட தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சல்களுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 178.9 மில்லியன்களைக் கொண்ட தேறிய வெளிநாட்டு வெளிப்பாய்ச்சல் 2024இல் பதிவுசெய்யப்பட்டது. எனினும், தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் 2024இன் இறுதிக் காலாண்டுப்பகுதியில் மொத்தமாக ஐ.அ.டொலர் 77.4 மில்லியன்களாக பதிவுசெய்யப்பட்டது.

## பங்குரிமைச் சந்தை

**விலைச்சுட்டெண்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அசைவுகள் மற்றும் சந்தையின் மொத்தப் புரள்வில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்புடன் சேர்ந்து, 2024 காலப்பகுதியில் பங்குரிமைச்சந்தை குறிப்பிடத்தக்க செயலாற்றமொன்றை காட்டியது.** 2024 திசெம்பர் 31இல் உள்ளவாறு கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் அனைத்துப் பங்கு விலைச்சுட்டெண் மற்றும் ஸ்டான்டாட் அன்ட் புவர் இலங்கை 20 சுட்டெண் முறையே 49.7 சதவீதம் மற்றும் 58.5 சதவீதம் கொண்ட ஆண்டிற்கான வளர்ச்சியைப் பதிவுசெய்தன. 2024 காலப்பகுதியில் அனைத்து பங்கு விலைக்சுட்டெண் ஸ்டான்டாட் அன்ட் புவர் இலங்கை 20 சுட்டெண்ணின் அசைவுகளுடன் நெருக்கமாக இணைந்திருந்தமையானது பரந்தளவிலான சந்தைப் போக்குகளை தூண்டுவதில் முக்கிய கம்பனிகளின் கணிசமான பங்களிப்புக்களை வலியுறுத்துவதாக இருந்தது. 2024இன் நான்காம் காலாண்டுப் பகுதியில் அனைத்து பங்குவிலைச் சுட்டெண்ணும் ஸ்டான்டாட் அன்ட் புவர் இலங்கை 20 சுட்டெண்ணும் 2024ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டுப்பகுதியின் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 11.3 சதவீதம் மற்றும் 12.6 சதவீதம் கொண்ட மிதமான ஆண்டிற்கான வளர்ச்சி வீதங்களுடன் ஒப்பிடுகையில் 2024இன் நான்காம் காலாண்டில் முறையே 34.5 சதவீதம் மற்றும் 40.8 சதவீதம் கொண்ட கணிசமான வளர்ச்சி வீதத்தினைப் பதிவுசெய்தமைக்கு உள்நாட்டு முதலீட்டாளர்கள் நடவடிக்கைகளின் தூண்டுதல்களே முக்கிய காரணமாகும். மேலும், சந்தை மூலதனமாக்கல் 2023 இறுதியில் ரூ.4248.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 இறுதியில் 34.1 சதவீதத்தினால் அதிகரித்து, ரூ.5,695.6 பில்லியனாக விளங்கியது. அதேவேளை, 2024 காலப்பகுதியில் பங்கு வர்த்தகத்தில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை ரூ.2,240.2 மில்லியன் கொண்ட சராசரி நாளாந்த புரள்வினைப் பதிவுசெய்தது. இது 2023இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.1,696.2 மில்லியனுடன் ஒப்பிடுகையில் கணிசமானதொரு அதிகரிப்பாகும். எனினும், சந்தையில் நாளாந்த கொடுக்கல்வாங்கல்களின் சராசரி 2023இன் 14,972 வர்த்தகங்களிலிருந்து 14,684 வர்த்தகங்களுக்கு சிறிதளவில் வீழ்ச்சியடைந்தமைக்கு 2024இன் மூன்றாம் காலாண்டுப் பகுதியில் முதலீட்டாளர்களின் சந்தை ஈடுபாடுகள் குறைவடைந்தமையே முக்கிய காரணமாகும்.

**சுட்டெண்கள் மற்றும் மொத்தப் புரள்வு நியதிகளில் சந்தைச் செயலாற்றத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்ட போதிலும், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் இரண்டாந்தர பங்குச் சந்தையில் தேறிய வெளிநாட்டு வெளிப்பாய்ச்சல்கள் காணப்பட்டன.** 2024 காலப்பகுதியில், கொழும்புப்

**வரைபடம் 2.6: விலைச் சுட்டிகளின் அசைவும் சந்தை மூலதனமாக்கலும்**




*மூலம்* : கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை

9 மாதாந்த இரண்டாந்தர சந்தைப் புரள்வினை மாத இறுதியில் நிலுவையில் உள்ள பிணையங்களில் வகுத்து அதை வருடாந்த அடிப்படைக்கு மாற்றுவதன் மூலம் மொத்தப் புரள்வு விகிதம் கணக்கிடப்படுகின்றது.

வரைபடம் 2.7: கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் வெளிநாட்டுப் பங்கேற்பு (இரண்டாந்தரச் சந்தை)




*மூலம்* : கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

பங்குப் பரிவர்த்தனை இரண்டாந்தரப் பங்குச் சந்தையில் 2023இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.4.3 பில்லியன் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 13.3 மில்லியன் கொண்ட உட்பாய்ச்சலொன்றுடன் ஒப்பிடுகையில் மொத்தமாக ரூ.9.9 பில்லியன் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 32.6 மில்லியன் கொண்ட மொத்தத் தேறிய வெளிநாட்டு வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தது. எனினும், பங்குரிமைச் சந்தை ஆண்டின் இறுதியில் ஒட்டுமொத்த தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சலைப் பதிவுசெய்தமைக்கு முதலாந்தர சந்தைக்கான அதிகரித்த உட்பாய்ச்சல் காரணமாக விளங்கியதுடன் இது, ரூ.20.3 பில்லியன்களாக ஏறத்தாழ ஐ.அ.டொலர் 65.5 மில்லியனாக விளங்கியது.

**பங்குரிமைச் சந்தையில் சாத்தியமான வளர்ச்சியின் நியதிகளில் முதலீட்டாளர்களிடையேயான நேர்க்கணியமான தோற்றப்பாட்டினை பிரதிபலிக்கின்ற விதத்தில், ஏட்டுப்பெறுமதிக்கான விலை 2024 காலப்பகுதியில் நேர்க்கணியமான போக்கினை எடுத்துக்காட்டியது.** 2024 திசெம்பர் இறுதியில் ஏட்டுப் பெறுமதிக்கான விலை 2023 திசெம்பர் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 0.9 இலிருந்து 1.2 இற்கு உயர்வடைந்தது. இதற்கு மாறாக சந்தையின் விலை வருவாய் விகிதம் 2023 திசெம்பர் இறுதியின் 11.1 இலிருந்து வீழ்ச்சியடைந்து, 2024 திசெம்பர் இறுதியில் 8.9 ஆக விளங்கியது. அதேவேளை, பங்குச் சந்தை 2023 காலப்பகுதியில் இரண்டு பொதுமக்களுக்கான ஆரம்பப் பங்கு வழங்கலூடாக திரட்டிய ரூ.0.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப் பகுதியில் ரூ.2.8 பில்லியனை பொதுமக்களுக்கான நான்கு ஆரம்ப வழங்கலினூடாகத் திரட்டியது.

## கூட்டாண்மை படுகடன் பிணையங்கள் சந்தை

**2024இல் வர்த்தகப் பத்திரங்களின் வழங்கல்கள் 2023 உடன் ஒப்பிடுகையில் உயர்வாகக் காணப்பட்டு ஆண்டுக்காலப்பகுதியில் வலுவான செயலாற்றத்திறனை எடுத்துக்காட்டியது.** 2024 காலப்பகுதியில், வர்த்தகப் பத்திரங்களூடாகத் திரட்டப்பட்ட தொகை 2023 திரட்டப்பட்ட ரூ.1.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.3.1 பில்லியனாகக் காணப்பட்டது. வர்த்தகப் பத்திரங்களின் வட்டி வீதங்கள் முன்னைய ஆண்டின் அறிக்கையிடப்பட்ட 17.00 சதவீதத்திலிருந்து 26.50 சதவீதம் வரையான வீச்சுடன் ஒப்பிடுகையில் 2024 காலப்பகுதியில் 12.00 சதவீதத்திற்கும் 13.75 சதவீதத்திற்குமிடையில் வேறுபட்டன.

**2024இல் கூட்டாண்மைத் தொகுதிக் கடன் சந்தையின் நடவடிக்கைகள் 2023 உடன் ஒப்பிடுகையில் கணிசமான அதிகரிப்பொன்றைப் பதிவு செய்தமைக்கு சாதகமான பொருளாதார நிலைமைகளிலிருந்து தோன்றிய அதிகரித்த முதலீட்டாளர் ஈர்ப்பே காரணமாகும்.** 2023 காலப்பகுதியில் ஐந்து வங்கிகள் 15 கூட்டாண்மை தொகுதிக் கடன்களின் பொதுமக்களுக்கான ஆரம்ப பங்கு வழங்கல் ஊடாக கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் ரூ.34.6 பில்லியன் படுகடன் மூலதனத்தைத் திரட்டியது. மாறாக, 2024இல் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையிலுள்ள ஒன்பது கம்பனிகள் 28 தொகுதிக் கடன்களின் பொதுமக்களுக்கான ஆரம்ப பங்கு வழங்கலூடாக ரூ.94.8 பில்லியனை கூட்டாகத் திரட்டிக் கொண்டதன் மூலம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கணிசமான அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. 2024இல் நிலையான வட்டி வீதங்களுடன் கூடிய தொகுதிக் கடன்கள் பொதுமக்களுக்கான ஆரம்ப பங்கு வழங்கலூடாக வழங்கப்பட்டதுடன் வட்டி வீத வீச்சானது முன்னைய ஆண்டின் 13.50 சதவீதத்திலிருந்து 29.50 சதவீதம் வரையான வீச்சுடன் ஒப்பிடுகையில் 12.00 சதவீதத்திலிருந்து 15.25 சதவீதம் வரையில் வேறுபட்டது.

## 2.4 நிதியியல் வசதிக்குட்படுத்தல்

**2024 காலப்பகுதியில் மத்திய வங்கி நாடளாவிய ரீதியில் நிதியியல் வசதிக்குட்படுத்தலை முன்னேற்றுவதற்கு அதன் முன்னெடுப்புக்களை தீவிரப்படுத்தியது.** தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல்

2

உபாயம் 2021-2024 இனால் இடப்பட்ட அத்திவாரத்தின் மீது நிதியியல் கல்வி அறிவினையும் நிதியியல் வசதிக்குட்படுத்தலையும் முன்னேற்றுவதில் கணிசமான முன்னேற்றங்கள் அடையப்பட்டதுடன் எண்ணியல் நிதி மற்றும் கொடுப்பனவுகள், நுண்பாக, சிறிய, நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான நிதியியல், வாடிக்கையாளர் பாதுகாப்பு மற்றும் நிதியியல் அறிவு போன்ற முக்கிய தூண்களின் மீதும் கவனம் செலுத்தப்பட்டது. 2024இல் மத்திய வங்கி அதன் பிரதேச அலுவலகங்களின் ஒத்துழைப்புடன் நாடளாவிய ரீதியில் 400இற்கும் மேற்பட்ட நிதியியல் அறிவு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது. 2024 மேயில் நிதியியல் அறிவு வழிகாட்டல் வெளியிடப்பட்டமையானது "நிதியியல் அறிவான இலங்கை" நோக்கிய பயணத்தில் முக்கியமான மைல் கல்லாகக் காணப்படுகிறது. இம்முன்னெடுப்புக்களின் ஒரு பகுதியாக நாடளாவிய ரீதியில் நிதியியல் கல்வியறிவின் பயிற்சியாளர்களுக்கான தரத்தினை அதிகரிப்பதற்காக "நிதியியல் அறிவில் சான்றிதழ் அளிக்கப்பட்ட பயிற்சியாளர்" என்ற நிகழ்ச்சித்திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளதுடன் "நிதியியல் அறிவு மாதம்" என்ற நிகழ்ச்சித்திட்டம் 2025 செத்தெம்பரில் தொடங்கப்படவுள்ளது. தனிப்பட்டவர்கள் நுண்பாக, சிறிய, நடுத்தர தொழில்முயற்சிகளை நிதிகளை முகாமைப்படுத்தல் கடன்படு தன்மையினைக் குறைத்தல், கொடுகடன் புள்ளிகளை மேம்படுத்தல் மற்றும் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய நிதியியல் நடத்தைகளை கடைப்பிடித்தல் என்பனவற்றிற்கும் இறுதியாக நிதியியல் துறை உறுதித்தன்மைக்கும் ஆதரவளிக்கும் விதத்தில் கொடுகடன் ஆலோசனை மையம் மீள நிறுவப்பட்டது.

## 2.5 நிதியியல் உட்கட்டமைப்பு

### கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள்

**எண்ணியல் கொடுக்கல்வாங்கல்கள் அதிகரித்தளவில் கடைப்பிடிக்கப்பட்டமையின் காரணமாக 2024இல் நாட்டின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் எந்தவொரு பாரிய இடையூறுகளுமின்றி சுமுகமாகவும் வினைத்திறனுடனும் தொழிற்பட்டன.** மேலும், பாரிய பெறுமதி மற்றும் சில்லறை எண்ணியல் கொடுப்பனவு முறைமைகள் இரண்டினையும் கடைப்பிடிப்பது காசோலை போன்ற கைகளால் மேற்கொள்ளப்படும் கொடுப்பனவு சாதனங்களுடன் ஒப்பிடுகையில் தொடர்ந்தும் அதிகரித்தது. இவ்வதிகரிப்பானது எண்ணியல் கொடுப்பனவு முறைகளினால் வழங்கப்படும் சௌகரியத்தினையும் பாதுகாப்பினையும் அதிகரித்தது. எண்ணியல் கொடுப்பனவு முறைகளை பயன்படுத்துவதில் பொதுமக்களின் நம்பிக்கையினை மேலும் அதிகரிக்கும் நோக்குடன் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் மீதான தொழில்துறை ஆலோசனைக் குழுவான தேசிய கொடுப்பனவுச் சபை, இவ்வாண்டுப் பகுதியில் பல வழிமுறைகளை எடுத்தது. அத்தகைய முக்கிய வழிமுறைகளில் ஒன்றாக செல்லிடத் தொலைபேசி கொடுப்பனவு செயலி ஒன்றுடன் நடைமுறைக் கணக்கினை அல்லது சேமிப்புக் கணக்கினை இணைக்கும் போது செல்லிடத் தொலைபேசி இலக்கத்துடன் அதனை சரிபார்ப்பது 2025 மாச்சு 31 இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் கட்டாயமாக்கப்பட்டது.

**2024 காலப்பகுதியில் நாட்டின் உடனடிக் கொடுப்பனவு முறைமையான[10] பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினூடாக எண்ணியல் கொடுப்பனவு கையாளலின் உயர்ந்தளவிலான மட்டம் எடுத்துக் காட்டப்பட்டது.** பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியூடாக மேற்கொள்ளப்படும் சில்லறை எண்ணியல் கொடுப்பனவுகள் மொத்த வங்கிகளுக்கிடையிலான சில்லறைக் கொடுப்பனவுகளின் பெறுமதியில் 50.0 சதவீதமாக விளங்கி சில்லறைக் கொடுப்பனவுகளுக்காக பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு மாற்றல்கள் உயர்மட்டத்தில் பயன்படுத்தப்பட்டமையினை எடுத்துக்காட்டின. பொதுவான இலத்திரனியல் நிதியமாற்றல் ஆளி பொதுமக்கள், அரச நிறுவனங்களுக்கு வரிகள், சுங்கத் தீர்வைகள் போன்ற பணம் செலுத்துவதற்கு இயலுமைப்படுத்தும் லங்கா பே நிகழ்நிலைக் கொடுப்பனவுத் தளம் விரைவுப் பதிலிறுப்புக் குறியீட்டினைப் பயன்படுத்தி வங்கிகளுக்கான கொடுப்பனவுகளை வசதிப்படுத்தும் லங்கா கியூஆர் ஏதேனும் நிதி நிறுவனத்திடமிருந்து நடைமுறை அல்லது சேமிப்புக் கணக்குகளை ஜஸ்ட் பே செயற்படுத்தப்பட்டுள்ள செல்லிடத் தொலைபேசி செயலிகளுக்கு இணைப்பதன் மூலம் செல்லிட செயலிகளூடாக கொடுப்பனவுகளுக்கு வசதியளிக்கும் ஜஸ்ட் பே என்பனவற்றை உள்ளடக்கி வசதியளித்தது.

10 உடனடி கொடுப்பனவு முறைமை துரித கொடுப்பனவுகள் எனவும் குறிப்பிடப்படுவதுடன் வாடிக்கையாளர்களிடையே நிதியை உடனடியாக பரிமாற்றுகிறது.

2

**இவ்வண்டுக் காலப்பகுதியில், பன்னாட்டு நியமங்களுக்கான அமைப்பு 20022 இன் நியமத்துடன் இணங்கியொழுகும் புதிய அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமையான “லங்கா அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமை” ஊடாக பாரிய தொழிற்பாட்டு வினைத்திறனும் சிறந்த இடர்நேர்வு முகாமைத்துவ இயலாற்றலும் அறிமுகப்படுத்தப்பட்டன.** மேலும், கொடுக்கல்வாங்கல்களின் அளவு மற்றும் பெறுமதி நியதிகள் இரண்டிலும், முறையே 10.1 சதவீதம், 25.7 சதவீதம் ஆண்டு வளர்ச்சி வீதங்களினால் பிரதிபலிக்கப்பட்டவாறு வாடிக்கையாளர்கள் அவர்களது நேர முக்கியத்துவம் வாய்ந்த பாரியளவு கொடுப்பனவுகளுக்காக அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் ஊடாக பாரிய பெறுமதிகளைக் கொண்ட கொடுப்பனவுகளை மேற்கொள்ளப்பட்டமையினைக் காண முடிந்தது.

**இவ்வாண்டுப் பகுதியில், பன்னாட்டு கொடுப்பனவு வலையமைப்புக்களுடன் தேசிய கொடுப்பனவு உட்கட்டமைப்பினை ஒருங்கிணைப்பதற்காக அநேக முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.** மத்திய வங்கி சில்லறைக் கொடுப்பனவு வலையமைப்பு தொழிற்பாட்டாளரான லங்காபே (பிறைவேட்) லிமிடெட்டிற்கு (லங்கா பே) பன்னாட்டு அட்டைத் திட்டமொன்றான யூனியன் இன்ரநெஷனல் (யூனியன் பே) உடன் தேசிய அட்டை திட்டத்தின் கீழ் லங்கா பே/யூனியன் பே இணை நாமமாகக் கொண்ட அட்டையை வழங்குவதற்கான பங்காளராக செயற்படுவதற்கான ஒப்புதலை வழங்கியது. இதன்படி, உள்நாட்டு கொடுக்கல்வாங்கல்களை லங்கா பே ஊடாக உள்நாட்டு வழிப்படுத்தல்களுக்கு வசதியளிப்பதற்காக தேசிய அட்டைத் திட்டத்தின் அட்டைகளை ஜே.சி.பி. இன்ரநெஷனல் அல்லது யூனியன் பே உடன் இணை வர்த்தக நாமமிட முடியும். தேசிய அட்டைத் திட்டம் நாட்டின் கொடுப்பனவு உட்கட்டமைப்பிற்கு பெருமளவு சுயாதீனத்தைக் கொண்டு வருவதனையும் உள்நாட்டு கொடுப்பனவுகளைச் செய்யும்போது சேவைக்கட்டணமாக வெளிநாட்டுச் செலாவணி வெளிப்பாய்வதனை குறைப்பதனையும் நோக்கமாகக் கொண்டிருக்கிறது. மத்திய வங்கி லங்கா கியூஆர் உடன் இணைப்பதற்காக நேபால்பே மற்றும் விசட் (WeChat) கொடுப்பனவு பணப்பைகளுக்கும் ஒப்புதலளித்தது. இப்புதிய இணைப்புக்கள் இந்தியாவின் ஒருமுகப்படுத்தப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் சீனாவின் யூனியன் பே உடன் ஒருங்கிணைக்கப்பட்டமையானது லங்கா கியூஆர் ஊடாக ஏற்கனவே அடையத்தக்கதாக இருந்தவற்றை விரிவுபடுத்தியதுடன் இலங்கையில் லங்கா கியூஆர் ஊடாக கொடுப்பனவுகளை செய்ய சுற்றுலாப் பயணிகள் அவர்களது சொந்த செல்லிடத் தொலைபேசி செயலிகளைப் பயன்படுத்தி தடங்கலற்ற கொடுப்பனவுகளை செய்ய வசதியளிக்கின்றது. மேலும், இணையவழி மோசடிகளிலிருந்து தோன்றுகின்ற ஏதேனும் இடர்நேர்வுகளையும் இழப்புக்களையும் தணிப்பதற்காக மத்திய வங்கி, கொடுப்பனவுத் துறையின் ஆர்வலர்களுடன் சேர்ந்து பொதுமக்களது எண்ணியல் கொடுக்கல்வாங்கல்களைப் பாதுகாப்பாகவும் கட்டுக்காப்புடனும் நடத்தும் வழி பற்றிய பொதுமக்களின் விழிப்புணர்வினை அதிகரிப்பதில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது.

**வரைபடம் 2.8: சில்லறை கொடுக்கல் வாங்கல்கள்**




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

### பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல்

**நிதியியல் துறையின் ஒருமைப்பாட்டினையும் தாக்குப்பிடிக்கும் தன்மையினையும் வலுப்படுத்துவதற்காக நிதியியல் உளவறிதல் பிரிவானது பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாத நிதியிடலை ஒழித்தல் பன்னாட்டு நியமங்களுடன் இணங்கியொழுகும் விதத்தில் தொடர்ந்தும் செயற்பட்டது.** அறிக்கையிடும் நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் பகுப்பாய்தல், சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் முகவர்களுடனும் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபைகளுடனும் நுண்ணறிவைப் பகிர்ந்துகொள்தல், பணம் தூயதாக்கலைத் தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுக நிதியியல் நிறுவனங்கள் மற்றும் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்சார் நிறுவனங்களை வலியுறுத்தல் மூலம் நிதியியல் உளவறிதல் பிரிவானது 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட அதன் கடமைகளை மேற்கொண்டது. 2024இல் நிதியியல் உளவறிதல் பிரிவு அதன் மேற்பார்வைச் சோதனைகள் மூலம் பணம் தூயதாக்கலுக்குகெதிரான மற்றும் பயங்கரவாத நிதியிடலை ஒழித்தலை இணங்கியொழுகாத ஆறு நிதி நிறுவனங்கள் மற்றும் ஒரு குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில்சார் நிறுவனத்திற்கு எதிராக மொத்தமாக ரூ.8.75 மில்லியன் வரை நிர்வாகப்பூர்வ நிதி அபராதத்தை விதித்தது. மேலும், தேசிய ஒருங்கிணைப்பு அமைப்பான பணம் தூயதாக்குதலுக்கெதிரான மற்றும் பயங்கரவாத நிதியிடலை ஒழித்தலுக்கான தேசிய ஒருங்கிணைப்பு ஆணைக்குழுவினால், இலங்கையின் பணம் தூயதாக்குதலுக்கெதிரான மற்றும் பயங்கரவாத நிதியிடலை ஒழித்தல் கட்டமைப்பு வலுவூட்டப்படுகின்றது. ஆளுநர் தலைவராக செயல்படும் இத்தேசிய ஒருங்கிணைப்பு ஆணைக்குழு, பணம் தூயதாக்குதலுக்கெதிரான மற்றும் பயங்கரவாத நிதியிடல் ஒழித்தல் கட்டமைப்பை செயற்படுத்துவதற்கு கொள்கை வழிகாட்டல் வழங்குவதுடன் ஆர்வலர்களுக்கிடையிலான தேசிய மட்ட ஒருங்கிணைப்பினையும் வசதிப்படுத்துகின்றது. மேலும், ஆண்டுக்காலப்பகுதியில் 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்திலும், 2005இன் 25ஆம் இலக்க பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்திலும் மற்றும் 2006இன் 05ஆம் இலக்க பணம் தூயதாக்கல் தடைச் சட்டத்திலும் திருத்தங்களை இறுதிப்படுத்தும் பணிகளை நிதியியல் உளவறிதல் பிரிவு தொடர்ந்தும் முன்னெடுத்தது. நிதியியல் உளவறிதல் பிரிவானது மேலும், குற்றச் செயல்களின் வருவாய்ச் சட்டமூலம், கம்பனி (திருத்த) சட்டமூலம், தன்னார்வ சமூக சேவை நிறுவனங்கள் பதிவு மற்றும் மேற்பார்வை சட்டமூலம், சூதாட்ட விளையாட்டு ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு சட்டமூலம் ஆகியவை உள்ளிட்ட புதிய சட்டவாக்க முன்மொழிவுகளுக்கு சட்ட வரைவாக்கக் குழுக்களுடன் ஈடுபாட்டுடன் பங்கேற்று திருத்தங்களை பரிசீலனை செய்து முன்மொழிந்தது. மேலும் நிதியியல் உளவறிதல் பிரிவு உண்மைச் சொத்து துறைக்கான ஒழுங்குமுறைச் சூழலை உருவாக்கும் பணிக்குழுவின் செயல்பாடுகளில் பங்கேற்றது.

### நிதியியல் துறையுடன் தொடர்பான சட்ட சீர்திருத்தங்கள்

**நிதியியல் முறைமையின் உறுதித் தன்மையினை பலப்படுத்துவதற்காக மத்திய வங்கி தொடர்ந்தும் அவசியமான சட்ட சீர்திருத்தங்களில் ஈடுபட்டது.** 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளை மேலும் வலுப்படுத்தி ஒழுங்குமுறைப்படுத்தும் நோக்குடன் 2024ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டம் இயற்றப்பட்டதுடன் அது 2024 யூன் 15 அன்று தொழிற்பாட்டிற்கு வந்தது. மேலும், நுண்பாக நிதி மற்றும் கொடுகடன் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரச் சபை மற்றும் நிதியியல் சொத்து முகாமைத்துவ கம்பனிச் சட்டம் என்பனவற்றை வரைவதற்குத் தேவையான உதவிகள் வழங்கப்படுகின்றமைக்குப் புறம்பாக, 2024ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க பொதுத் தனிசு முகாமைத்துவச் சட்டத்தினையும் 2024ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்தினையும் இறுதிப்படுத்துவதற்காக மத்திய வங்கியினால் நிதி அமைச்சிற்குத் தேவையான உதவிகள் வழங்கப்பட்டன. மேலும், 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழிற்சட்டம், 2000ஆம்

ஆண்டின் 56ஆம் இலக்க குத்தகைக்குவிடுதல் சட்டம், 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைச் சட்டம் மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் என்பனவற்றிற்கான வரைவு செய்யப்பட்ட திருத்தங்கள் 2024ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டன.

2

## நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு

| 2024 யூலை 01 | - முன்னைய விதிகளில் குறித்துரைக்கப்பட்டிருந்த, அடுத்துவரும் மாதத்தின் 07ஆம் நாளைக் கொண்ட காலப்பகுதிக்கு எதிராக கிடைப்பனவு திகதியிலிருந்து மூன்று நாற்காட்டி மாதங்களின் முடிவடைதலைத் தொடர்ந்துவரும் (கிடைக்கப்பெறும் மாதம் உள்ளடங்கலாக) மாதத்தின் 10ஆம் நாளுக்கான கட்டாய மாற்றுத் தேவைப்படுத்தல் காலப்பகுதியை நீடித்து, 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க மத்திய வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 2391/02 ஆம் இலக்க 2024 யூலை 01 அன்று திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட "2024ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல் விதிகள்" வழங்கப்பட்டன. பாராளுமன்ற அங்கீகாரத்தின் பின்னர், 2024 செத்தெம்பர் 04 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் இவ்விதிகள் நடைமுறைக்கு வந்தன. |

2024 ஒகத்து 01 - குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட விசேட விசா நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வதிவிட விசாவினைப் பெற்றுக்கொள்கின்ற வெளிநாட்டவர்கள் மேற்கொள்ளும் கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்தி, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 2024ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க பணிப்புரைகள் மற்றும் 2024ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

2024 திசெம்பர் 19 - 2389/08ஆம் இலக்க 2024 யூன் 18 அன்று திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட முன்னைய கட்டளையின் கீழ் விதிக்கப்பட்ட மூலதனப் பாய்ச்சல் வழிமுறைகளை மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்கும் அதேவேளை அவ்வழிமுறைகளின் குறிப்பிட்ட குறைபாடுகளை நிவர்த்திசெய்து, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ் 2415/56ஆம் இலக்க 2024 திசெம்பர் 19 அன்று திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை வழங்கப்பட்டது.

3

**படுகடன் முகாமைத்துவம்**

2024 மாச்சு 11 - திறைசேரி உண்டியல் ஏலங்களின் கட்டம் IIஇன் போது வழங்கப்பட்ட தொகை, 2024 மாச்சு 07 அன்று வழங்கப்பட்ட திருத்தப்பட்ட பணிப்புரைகளின் நியதிகளில், கட்டம் Iஇல் கூட்டு ஏலப் பற்றாக்குறை மற்றும் வழங்கப்பட்ட கூட்டுத்தொகையின் 10 சதவீதம் அல்லது ரூ. 5.0 பில்லியனாக (இதில் எது உயர்வாக காணப்படுகின்றதோ அது) குறைக்கப்பட்டு 2024 மாச்சு 11 அன்று தொடக்கம் நடைமுறைக்கு வந்தது.

- திறைசேரி முறி ஏலங்களின் நேரடி வழங்கல் இடைவெளியில் முன்வைக்கப்பட்ட தொகை, 2024 மாச்சு 11 தொடக்கம் நடைமுறைக்கு வந்த 2024 மாச்சு 07 அன்று வழங்கப்பட்ட திருத்தப்பட்ட பணிப்புரைகளின் நியதிகளில் கட்டம் Iஇல் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கங்களிலிருந்து முன்வைக்கப்பட்ட தொகையின் 10 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டுள்ளது.

2024 ஏப்பிறல் 01 - அரசப் பிணையங்களின் முதலீடுகளின் அச்சிடப்பட்ட காலாந்திர கூற்றுக்களை அனுப்புவது நிறுத்தப்பட்டு, லங்காசெக்குயர் முறைமையிலுள்ள அனைத்துப் பிணையங்கள் கணக்கு உடைமையாளர்களுக்கும் செல்லுபடியாகும் மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவுசெய்வது கட்டயமாகவுள்ள இ-கூற்று வசதிக்கு முழுமையாக மாற்றுவதன் மூலம் பதிலீடு செய்யப்பட்டது.

2024 திசெம்பர் 20 - வெளிநாட்டுப் படுகடன் மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் பரிமாற்றம் தகைமையுடைய முறி உடைமையாளர்களின் 97.86 சதவீதம் கொண்ட பங்கேற்புடன் செயற்படுத்தப்பட்டது.

- பரிமாற்றத்தின் போது, கீழே கொடுக்கப்பட்டவாறு நான்கு (04) படிப்படியாக அதிகரிக்கும் பேரண்ட இணைக்கப்பட்ட முறிகள், ஒரு படிப்படியாக அதிகரிக்கும் ஆளுகை இணைக்கப்பட்ட முறி, ஒரு படிப்படியாக அதிகரிக்கும் ஐ.அ.டொலர் முறி மற்றும் 2028ஆம் ஆண்டில் முதிர்ச்சியடைகின்ற கடந்த செலுத்தவேண்டிய வட்டியை ஈடுசெய்வதற்கான முறி போன்றன முறி உடைமையாளர்களுக்கு வழங்கப்பட்டன.

| விபரம் | நறுக்கு வீதம் (%) | முதன்மை தொகை (ஐ.அ.டொலர்கள்) |
|---|---|---|
| 2028இல் செலுத்தவேண்டிய கடந்த வட்டி முறிகள் | 4.0 | 1,647,735,257 |
| 2030இல் செலுத்தவேண்டிய படிப்படியாக அதிகரிக்கும் பேரண்ட இணைக்கப்பட்ட முறிகள் | 3.1 | 1,086,993,557 |
| 2033இல் செலுத்தவேண்டிய படிப்படியாக அதிகரிக்கும் பேரண்ட இணைக்கப்பட்ட முறிகள் | 3.35 | 2,132,120,275 |
| 2036இல் செலுத்தவேண்டிய படிப்படியாக அதிகரிக்கும் பேரண்ட இணைக்கப்பட்ட முறிகள் | 3.6 | 999,165,345 |
| 2038இல் செலுத்தவேண்டிய படிப்படியாக அதிகரிக்கும் பேரண்ட இணைக்கப்பட்ட முறிகள் | 3.6 | 1,999,171,191 |
| 2035இல் செலுத்தவேண்டிய படிப்படியாக அதிகரிக்கும் ஆளுகை இணைக்கப்பட்ட முறிகள் | 3.6 | 1,439,672,065 |
| 2038இல் செலுத்தவேண்டிய படிப்படியாக அதிகரிக்கும் ஐ.அமெ.டொலர் முறிகள் | 1.0 | 1,126,487,250 |

*மூலம்:* நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

மேலே குறிப்பிட்டதற்கு மேலதிகமாக, வழங்கப்பட்ட தற்போதுள்ள முறிகளின் தொகுதியுடன் தொடர்புடைய பரிவர்த்தனை வழங்கலின் காலக்கெடுவில் அல்லது அதற்கு முன்னதாக செல்லுபடியாகும் வகையில், அறிவுறுத்திய முறி உடைமையாளர்களுக்கு பரிவர்த்தனை கட்டணத்தை வழங்குவதற்கு, 2024ஆம் ஆண்டில் செலுத்தவேண்டிய ஐ.அ.டொலர் 215,237,873 இற்கு ஐ.அ.டொலர் பெயர்குறிக்கப்பட்ட "செலாவணி கட்டண" முறிகள் வழங்கப்பட்டன. மேலும், நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் மறுசீரமைப்பிற்கான உள்நாட்டு தெரிவை நடைமுறைப்படுத்துவதற்கு, ரூ.155,728.6 மில்லியன் கொண்ட தொகைக்கு துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்துடன் இணைக்கப்பட்ட எட்டு (08) புதிய திறைசேரி முறிகள் வழங்கப்பட்டன.

2024 திசெம்பர் 30 - இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனக் கடன்களை மறுசீரமைப்பதில் ஐந்து (05) புதிய துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்துடன் இணைக்கப்பட்ட திறைசேறி முறிகளை வழங்குவதன் மூலம் இலங்கை ரூபா கடன் தீர்ப்பனவை நடைமுறைப்படுத்தல்.

## நிதியியல் துறை

### உரிமம்பெற்ற வங்கிகள்

2024 மார்ச் 25 - வங்கித்தொழில் துறையின் பாதுகாப்பு மற்றும் ஆற்றல்வாய்ந்ததன்மையை உறுதிசெய்து பொதுமக்கள் நம்பிக்கையைப் பாதுகாக்கும் பொருட்டு, கொடுகடன் திரட்சி இடர்நேர்வுகளை தணிப்பதை நோக்காகக்கொண்டு, 2026 சனவரி 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில் "உரிமம்பெற்ற வங்கிகளின் பாரியளவிலான கொடுகடன் வெளிப்படுத்துகைகள்" மீது வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

2024 மார்ச் 28 - அசாதாரண பேரண்டப் பொருளாதார சூழ்நிலைகளினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களின் நிலைபெறத்தக்க பொருளாதார மீட்பினை வசதிப்படுத்தி, உரிமம்பெற்ற வங்கிகளின் அதிகரித்த அளவிலான பெறுமதியிழக்கப்பட்ட சொத்துத்தரத்தை உரியவாறு கையாளுவதை உறுதிசெய்கின்ற அதேவேளை வியாபார மீட்புப் பிரிவுகளாக உரிமம்பெற்ற வங்கிகளின் கொவிட்-19இற்கு பின்னர் ஏற்கனவே தாபிக்கப்பட்டுள்ள மீட்புப் பிரிவுகளை வலுப்படுத்தி மீளஉருவாக்குவதை நோக்காகக் கொண்டு, "உரிமம்பெற்ற வங்கிகளின் வியாபார மீட்புப் பிரிவுகளை தாபிப்பதற்கான வழிகாட்டல்கள்" மீதான சுற்றறிக்கை வழங்கப்பட்டது.

2024 யூன் 13 - 2024ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தம்) மூலம் திருத்தப்பட்டவாறு, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 21(1) மற்றும் 76(ஏ)ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம், நியதி திரவத்தன்மைச் சொத்துக்களின் விகிதங்களைப் பேணுவதை இடைநிறுத்தி, வங்கிகளின் நியதித் திரவத்தன்மை விகிதங்களாக, திரவத்தன்மை உள்ளடக்க விகிதத்தையும் தேறிய நிலையான நிதியிடல் விகிதத்தையும் ஒவ்வொரு உரிமம்பெற்ற வங்கியும் பேணுதல் வேண்டும் என்பதை தீர்மானித்து, "உரிமம்பெற்ற வங்கிகளின் நியதித் திரவத்தன்மை விகிதங்கள்" மீதான வங்கித்தொழில் சட்டத் தீர்மானம் வழங்கப்பட்டது.

2024 யூன் 14 - 2024ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தம்) சட்டத்தை நடைமுறைப்படுத்துவதுடன், "உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் கரைகடந்த வங்கித்தொழில்" மீது வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன. அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரங்கள், கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தை கொண்டு நடத்தும் நோக்கத்திற்காக தகைமையுடைய வாடிக்கையாளர்கள், அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள், மற்றும் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தின் கீழ் கடன்வசதியை வழங்குதல் போன்றனவும் இப்பணிப்புரைகளில் குறித்துரைக்கப்படுகின்றன. மேலும், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளுக்கு ஏற்புடைய கட்டளைகள் மற்றும் ஏனைய அறிவுறுத்தல்களை இடைநிறுத்தி, (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத் திட்டம்) வங்கித்தொழில் சட்டக்கட்டளை வழங்கப்பட்டது.

2024 யூன் 15 - உரிமம்பெற்ற வங்கிகளுக்கான சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கு வரைவுசெய்யப்பட்ட வங்கித்தொழில் (திருத்த) சட்டமூலமானது 2024 ஏப்பிறல் 02 அன்று பாராளுமன்றத்தினால் அனுமதியளிக்கப்பட்டு 2024 யூன் 15ஆம் நியமனத் திகதி அன்று 2024ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்த) சட்டமாக தொழிற்பாட்டிற்கு வந்தது. ஏனையவற்றுக்கு மத்தியில், குறைந்தபட்ச உரிமப்படுத்தல் தேவைப்பாடுகள், ஆர்வலர் பொருத்தப்பாட்டிற்கான பிரமாணம், வங்கி சொத்துடைமை, கையேற்புகள், இணைப்புகள் மற்றும் ஒருங்கிணைப்பு, ஒருங்கிணைக்கப்பட்ட மேற்பார்வை, விகிதாசாரத்தன்மை, கணக்குகள் மற்றும் கணக்காய்வு மீதான தேவைப்பாடுகள், பாரிய கொடுகடன் வெளிப்படுத்துகை, தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல்வாங்கல்கள், நிறுவன ஆளுகை, கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரம் போன்ற விடயப் பரப்புகளை இத்திருத்தங்கள் வலுப்படுத்துகின்றன.

3

| | | |
|---|---|---|
| 2024 யூலை 19 | - | தேசிய கொடுகடன் உத்தரவாத நிறுவனத்தினால் உத்தரவாதம் வழங்கப்பட்ட கொடுகடன்களுக்கு 20 சதவீத இடர்நேர்வு நிறையேற்றத்தை ஏற்படுத்துவதுடன், நிதியியல் நிறுவனங்களின் குறிகாட்டி பட்டியலிலுள்ள வரையறுக்கப்பட்ட தேசிய கொடுகடன் உத்தரவாத நிறுவனம் உள்ளடங்கலாக, "உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள் போன்றவற்றுக்கான பாசல்III இன் கீழ் மூலதனத் தேவைப்பாடுகள்" மீது 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளுக்கான திருத்தங்கள் வழங்கப்பட்டன. |
| 2024 செத்தெம்பர் 30 | - | தொடர்புடைய தரப்பினர்களுக்கான மேம்படுத்தப்பட்ட மேற்பார்வை உள்ளடங்கலாக, பிரதானமாக, பணிப்பாளர் சபையின் உள்ளமைப்பு மற்றும் சுயாதீனத்தை மேம்படுத்தல், சபையினுடைய துணைக்குழுக்களின் செயற்றிறன்மிக்க தொழிற்படுத்தலை உறுதிசெய்தல், இடர்நேர்வு மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டு தொழிற்பாடுகளை மேம்படுத்தல், என்பனவற்றின் மூலம் உரிமம்பெற்ற வங்கிகளில் நிறுவன ஆளுகைச் செயன்முறைகள் மற்றும் நடைமுறைகளை மேலும் வலுப்படுத்தும் நோக்குடன் "உரிமம்பெற்ற வங்கிகளுக்கான நிறுவன ஆளுகை" மீது வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |
| 2024 ஒத்தோபர் 01 | - | சாத்தியமான ஆர்வ முரண்பாடுகளை தணித்து, உரிமம்பெற்ற வங்கிகளின் தொடர்புடைய தரப்பினர்களுக்கான மிகவும் சாதகமான நடத்தையை நீடிப்பதை தடுக்கும் நோக்குடன், உரிமம்பெற்ற வங்கிகளின் தொடர்புடைய தரப்பினர்களையும் அத்தகைய தரப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கொடுகடன்வசதி தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட பிணையங்களை குறித்துரைத்தும் வங்கித்தொழில் சட்டத் தீர்மானம் வழங்கப்பட்டது. மேலும், இது தொடர்பில் வழங்கப்பட்ட முன்னைய பணிப்புரைகள் இரத்துச்செய்யப்பட்டன. |
| 2024 ஒத்தோபர் 03 | - | உரிமம்பெற்ற வங்கிகளினால் அவ்வங்கிகளுடன் தொடர்புடைய தரப்பினர்களுக்கு வழங்கப்படும் கடன்வசதி தொடர்பில் அனுமதிக்கப்பட்ட வரையறைகளை குறித்துரைத்து வர்த்தமானி வெளியிடப்பட்டது. |
| 2024 திசெம்பர் 19 | - | சிறிலங்கா பாங்க்ஸ் அசோசியேசன் (கரன்டி) லிமிடெட்டினால் இணங்கப்பட்டவாறு, உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று மற்றும் கடந்தகாலத்தில் நிலவிய அசாதாரண பேரண்டபொருளாதார நிலைமைகள் என்பன காரணமாக பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தரதொழில் முயற்சிகளுக்கு வழங்கப்படவேண்டிய நிவாரண வழிமுறைகளை எடுத்துக்காட்டி சுற்றறிக்கை வழங்கப்பட்டது. |
| 2025 சனவரி 01 | - | சீரான முறையில் குறித்துரைக்கப்பட்ட நிவாரண வழிமுறைகளினை அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் செயற்றிறனோடு நடைமுறைப்படுத்துதலை உறுதிப்படுத்தும் நோக்குடன் சுற்றறிக்கையின் உள்ளடக்கத்தை மேலும் தெளிவுபடுத்தி, "பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான நிவாரண வழிமுறைகள்" மீதான 2024ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க சுற்றறிக்கைக்கான பின்னிணைப்பு வழங்கப்பட்டது. |
| இனிவரவிருப்பவை | - | உரிமம்பெற்ற வங்கிகளுக்கான நிறுவன ஆளுகை தொடர்பான பணிப்புரைகளுக்கான பின்னிணைப்பு. வெளியிலிருந்து வியாபாரத் தொழிற்பாட்டு பணிகளைப் பெற்றுக்கொள்ளுதல் மீதான பணிப்புரைகள். சந்தைத் தூண்டல் ஒன்றிணைப்பு மீதான கட்டமைப்பு. |

**நிதிக் கம்பனிகள், சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனி, உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் மற்றும் முதனிலை வணிகர் கம்பனிகள்**

| | | |
|---|---|---|
| 2024 பெப்புருவரி 13 | - | நிதிக் கம்பனிகளின் தொழில் மற்றும் கம்பனித் தொழிற்பாடுகள் நடத்தப்படும் விதம் பற்றி அல்லது வேறு ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நோக்கம் பற்றி கண்டறிவதற்காக நிதிக் கம்பனிகளின் தகவல்களை உரிய நேரத்தில், துல்லியமாகவும், சீராகவும் மற்றும் முழுமையாகப் பெற்றுக்கொள்வதை குறிக்கோளாகக் கொண்டு, காலாந்திர அறிக்கையிடல் தேவைப்பாடுகள் தொடர்பான பணிப்புரையொன்று வழங்கப்பட்டுள்ளது. |
| 2024 மே 03 | - | முன்மதிமிக்க வரையறைகள் உள்ளடங்கலாக கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவ உபாயம், கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கை, கொடுகடன் இடர்நேர்வு ஆளுகைக் கட்டமைப்பு போன்றவற்றை வகுப்பதன் மூலம் ஆற்றல்வாய்ந்த கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பை தாபித்து கொடுகடன் இடர்நேர்வை இனங்காண்பதற்கும், அளவிடுவதற்கும், கண்காணிப்பதற்கும் மற்றும் கட்டுப்படுத்துவதற்கும் செயற்றிறன்மிக்க முறைமை இருப்பதை உறுதிசெய்யும் நோக்குடன் கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்பான பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. |
| 2024 ஒத்தோபர் 23 | - | நிதிக் கம்பனியின் பணிப்பாளர்கள் மற்றும் மூத்த முகாமைத்துவத்தின் ஊதியத்தில் நிலையான, நியாயமான மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துகின்ற குறிக்கோளுடன் ஊதியக் கொள்கைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| 2024 நவெம்பர் 21 | - | வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதல், விளம்பரங்களை வெளியிடுதல் மற்றும் வைப்புக்களின் கோரிக்கைக்கான ஊக்குவிப்புத் திட்டங்களை வழங்குதல் போன்றவற்றுக்கான நிபந்தனைகளை குறித்துரைப்பதன் மூலம் வைப்பாளர்களைப் பாதுகாத்தல், நிதிக் கம்பனிகளின் மத்தியில் நியாயமானப் போட்டித்தன்மையை ஊக்குவித்தல் போன்றவற்றை நோக்காகக் கொண்டு நிதிக் கம்பனிகளால் வைப்புக் கோருவது தொடர்பான பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. |
| 2024 நவெம்பர் 29 | - | தொழிற்பாட்டு இடர்நேர்வை அடையாளம் காணுதல், மதிப்பீடுசெய்தல், கண்காணித்து அறிக்கையிடல் அத்துடன் கட்டுப்படுத்தி குறைத்தல் என்பவற்றுக்காக நிதிக் கம்பனி தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவ கொள்கை மற்றும் நடைமுறையை வடிவமைத்தல், தொழிற்பாட்டு இடர்நேர்வு ஆளுகைக் கட்டமைப்பு மற்றும் செயற்றிறன்மிக்க தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவச் செயன்முறைகள் என்பனவற்றின் மூலம் ஆற்றல்மிக்க தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பை தாபிக்கின்ற அதேவேளை வாடிக்கையாளர்களுக்கு தங்குதடையற்ற பணிகளை வழங்குவதை உறுதிப்படுத்துவதற்கு தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்பான பணிப்புரை வழங்கப்பட்டது. |
| 2024 திசெம்பர் 27 | - | ஒருங்கிணைப்பதற்கான முதன்மைத்திட்டத்தின் பாகம் 1இனை நிறைவுசெய்தவுடன், நடுத்தரகாலம் தொடக்கம் நீண்டகாலப்பகுதியில் மிகவும் நெகிழ்ச்சிதன்மைவாய்ந்த நிதிக் கம்பனித் துறையை உருவாக்குவதை இலக்காகக் கொண்டு முதன்மைத் திட்டத்தின் பாகம் IIஇன் திருத்தப்பட்ட கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. திருத்தப்பட்ட கட்டமைப்பானது 2025 மாச்சு 31 தொடக்கம் 2028 மாச்சு 31 வரையான மூன்று ஆண்டுகள் செயற்பாட்டுக் காலமாகக் கொண்டுள்ளது. |
| இனிவரவிருப்பவை | - | நடப்பு சந்தை அபிவிருத்திகளுக்கமைவாக நிதித்தொழில் சட்டம் மற்றும் நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டம் என்பவற்றிற்கான திருத்தங்கள் உள்ளடங்கலாக தற்போதுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினைத் திருத்தம்செய்தல். |

**ஏனைய நிதியியல் துறையுடன் தொடர்புடைய கொள்கை வழிமுறைகள்**

| | | |
|---|---|---|
| | | **உலக வங்கியின் நிதியியல் துறை பாதுகாப்பு வலை வலுப்படுத்தல் செயற்றிட்டம்.** உலக வங்கியின் நிதியியல் துறை பாதுகாப்பு வலை வலுப்படுத்தல் செயற்றிட்டத்தின் கீழ் உலக வங்கியின் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு[4] மற்றும் இலங்கை மத்திய வங்கிக்கிடையில் பின்வரும் கடன் உடன்படிக்கைகள் கைச்சாதிடப்பட்டன. |
| 2024 சனவரி 31 | | பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு மற்றும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கிடையில்[4] கைச்சாத்திடப்பட்ட நிதியியல் உடன்படிக்கை |
| 2024 பெப்புருவரி 01 | - | பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு மற்றும் இலங்கை மத்திய வங்கிக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட செயற்றிட்ட உடன்படிக்கை |
| 2024 பெப்புருவரி 06 | - | நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு[4] மற்றும் இலங்கை மத்திய வங்கிக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட துணை உடன்படிக்கை |
| 2024 ஏப்பிறல் 10 | - | ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வையை வலுப்படுத்தி இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நிதியியல் நிறுவனங்களினால் சந்தை நடத்தை நியமங்களுடன் இணங்கி, கண்காணித்தல், மதிப்பீடுசெய்தல் மற்றும் நிறைவேற்றுதல் என்பனவற்றினூடாக நிதியியல் வாடிக்கையாளர்களின் நியாயமான கையாளுகையை உறுதிப்படுத்துவதற்கு நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளின் கீழ் சந்தை நடத்தை மேற்பார்வை பிரிவு தாபிக்கப்பட்டுள்ளது. |
| 2024 மே 21 | - | இலங்கையின் நிதியியல் நடத்தையையும் தாக்குபிடிக்கும் தன்மையையும் மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டு, நிதியியல் அறிவு முன்னெடுப்புக்களில் ஆர்வலர்களுக்காக ஒரே கொள்கை பணிப்புரையை வழங்குவதற்கு தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் கீழ் இலங்கையின் நிதியியல் அறிவு வழிகாட்டல் தொடங்கி வைக்கப்பட்டது. |
| 2024 யூலை 17 | - | **நிதியியல் துறை உறுதிப்பாடு மற்றும் நெருக்கடி முகாமைத்துவம்.** நெருக்கடி தயார்ப்படுத்தலை மேம்படுத்துவதற்கு 2023ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) கீழ் தீர்மான கட்டமைப்பை இலங்கை மத்திய வங்கி வலுப்படுத்தியது. இடர்பாடான நிதியியல் நிறுவனங்களை கையாள்வதற்கான முன்கூட்டிய அணுகுமுறையை உறுதிப்படுத்தி, உலகளாவிய சிறந்த நடைமுறைகளுடன் இலங்கையின் நிதியியல் உறுதிப்பாட்டு கட்டமைப்பு, அனைத்தையுமுள்ளடக்கிய தீர்மானக் கொள்கையின் அபிவிருத்தியுடன் அணிசேர்கின்றது. |

4 கைச்சாத்திடும் உடன்படிக்கையின் போது, அமைச்சின் பெயர் 'நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு' என்று காணப்பட்டது.

3

| | | |
|---|---|---|
| 2024 ஓகத்து 08 | - | 2023ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு ஒழுங்குவிதி 2023 ஓகத்து 08 அன்று வழங்கப்பட்டு, 2024 பெப்புருவரி 08 தொடக்கம் பகுதியளவில் நடைமுறைக்குவந்ததுடன் 2024 ஓகத்து 08 அன்று முழுமையாக நடைமுறைக்குவந்தது. |
| 2024 நவெம்பர் 01 | - | இலங்கை பாங்க்ஸ் அசோசியேஷன்ஸ் லிமிடெட்டுடன் கொடுகடன் ஆலோசனை நிலையத்தின் நடவடிக்கைகளை மீளத்திருத்துவதற்கு தேவையான ஒருங்கேற்பாடுகளை இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் மேற்கொண்டது. இதன்மூலம், 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை உறுதிப்படுத்தும் குறிக்கோளிற்கு பங்களிப்புச்செய்கின்றது. |

3

அத்தியாயம் 4

# பேரண்டப் பொருளாதாரத் தோற்றப்பாடு


## சுருக்கம்

பேரண்டப் பொருளாதார உறுதித்தன்மை பழைய நிலைக்கு மீண்டமை மற்றும் உள்நாட்டு நிச்சயமற்ற தன்மைகள் படிப்படியாக மறைந்து போனமை என்பனவற்றின் காரணமாக இலங்கையின் பொருளாதாரம் அதன் மீட்சிப்பாதையில் தொடர்ந்து முன்னேறும் என எதிர்பார்க்கப்படுகிறது. உலகளாவிய பொருளாதாரத்திலிருந்து தோன்றுகின்ற பாதகமான தாக்கங்கள் பொருளாதார தோற்றப்பாட்டில் தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடுமெனினும், உரிய நேரத்தில் எடுக்கப்படுகின்ற முன்கூட்டிய நடவடிக்கைகளும் எதிர்வினையான கொள்கை வழிமுறைகளும் ஒரு மோசமான தாக்கத்தினை இலகுபடுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. அண்மைய காலத்திலிருந்து நடுத்தர காலப்பகுதிவரை பொருளாதார வளர்ச்சியானது, தாழ்ந்ததும் உறுதியானதுமான பணவீக்கம், குறைந்த வட்டிவீதச் சூழல், சாதகமான சந்தை மனோபாவம் மற்றும் உறுதியான பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைகள் என்பனவற்றின் காரணமாக செழிப்புறும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதைய பணச்சுருக்க நிலைமைகள் 2025இன் முதலரைப்பகுதிக்குள் படிப்படியாக மறையும் என எதிர்பார்க்கப்படுவதுடன் பணவீக்கம் நடுத்தரகாலத்தில் ஏறத்தாழ இலக்கிடப்பட்ட 5 சதவீத மட்டத்தில் உறுதியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. புவிசார் அரசியல் மோதல்கள், ஐக்கிய அமெரிக்காவின் கொள்கைச் சீராக்கங்களின் தாக்கம், மற்றைய முக்கிய நாடுகளினால் எடுக்கப்படும் பதில் வழிமுறைகள் அதேபோன்று வானிலை குழப்பங்களைத் தூண்டுகின்ற காலநிலை மாற்றங்கள் என்பன வளர்ச்சி மற்றும் பணவீக்க எதிர்வுகூறல்களுக்கு இடர்நேர்வுகளை தோற்றுவிக்கக்கூடும். மத்திய வங்கியின் நாணயக் கொள்கை வழிமுறைகள் முன்னோக்கிய பார்வையுடன் தொடரக்கூடும் என்பதுடன் தரவினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையுடன் தொடரும். தாழ்ந்த வட்டி வீதங்கள் மற்றும் அரச படுகடன் தனியார் துறையைப் பாதிக்கக்கூடிய அழுத்தங்கள் தளர்வடைந்தமை என்பனவற்றின் பின்னணியில் தனியார் கொடுகடன் வளர்ச்சி தொடர்ந்தும் ஆரோக்கியமாக விளங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இறைச் செயலாற்றத்தில் எதிர்பார்க்கப்படும் மேம்பாடுகளினால் பெருமளவிற்கு ஆதரவளிக்கப்பட்டு அரச துறைக்கான வங்கித்தொழில் துறையின் கடன்கள் மிதமாக தொடர்ந்தும் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. வெளிநாட்டுப் பக்கத்தில் உந்து ஊர்திகளின் இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டமை மற்றும் பொருளாதார செயற்பாட்டு மீட்சியுடன் வர்த்தகப் பற்றாக்குறை விரிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றதெனினும் வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களில் எதிர்பார்க்கப்படும் ஆரோக்கியமான வளர்ச்சியுடன் முகாமைப்படுத்தத்தக்க மட்டத்தில் தொடந்தும் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. சுற்றுலா வருவாய்களில் ஏற்படுகின்ற உயர்வு, ஏனைய பணிகளின் ஏற்றுமதிகளின் வலுவான செயலாற்றம், பணவனுப்பல்களில் காணப்படும் உறுதியான வளர்ச்சி, படுகடன் மறுசீரமைப்பின் பின்னர் ஆரம்ப வருமானக் கணக்கின் மீதான சுமை குறைவடைந்தமை என்பனவற்றின் ஆதரவுடன் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக 2025இலும் சிறிய அளவிலேனும் மிகையை பதிவுசெய்யக்கூடும். 2025 இற்கு அப்பால் வெளிநாட்டு நடைமுறைக்கணக்கு எதிர்க்கணியமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றதெனினும் உறுதியானதொரு மட்டத்தில் காணப்படும். அதேவேளை வெளிநாட்டு நிதியியல் கணக்கு தேறிய உட்பாய்ச்சலை பிரதிபலிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதுடன் படுகடன் உறுதித்தன்மை பழைய நிலையை அடைதல் மற்றும் பன்னாட்டு நாணய நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய நிகழ்ச்சித்திட்டம் தொடர்கின்றமை என்பன இதற்கு பக்கபலமாக அமையும்

**என எதிர்பார்க்கப்பட்டது. மத்திய வங்கி நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த செலாவணி வீத முறையினைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தும் என்பதுடன் நடுத்தரகாலப்பகுதியில் வெளிநாட்டுத் தாங்கிருப்பும் கட்டியெழுப்பப்பட்டு வெளிநாட்டு அதிர்வுகளுக்கு தாக்குபிடிக்கும் விதத்தில் பாதுகாப்பான தன்மையினை உருவாக்கும். கடந்த இரண்டாண்டு காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு திருப்பத்தினைப் பதிவுசெய்த இறைத்துறை அதன் ஆரோக்கியமான செயலாற்றத்தினை இனிவரும் ஆண்டுகளிலும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றதுடன் இதற்கு, பொது நிதியியல் முகாமைத்துவத்திற்கான புதிய சட்டவாக்கக் கட்டமைப்பும் பன்னாட்டு நாணய நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தற்போது இடம்பெற்றுவரும் சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டமும் சுமுகமான நிலையொன்றினை வழங்கும். அதேவேளை மேம்பட்ட பேரண்ட நிதியியல் நிலைமைகளுடன் சேர்ந்து நிதியியல் துறைச் செயலாற்றம் இனிவரும் காலப்பகுதியிலும் தொடர்ந்தும் ஆரோக்கியமானதாக விளங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. உறுதியான பொருளாதார விரிவாக்கம் மற்றும் குறைந்த வட்டி வீத அமைப்பு என்பனவற்றின் விளைவாகவும் கடன்பாட்டாளர்களின் மீள்கொடுப்பனவு இயலாற்றல் மேம்பட்டமையின் காரணமாகவும் நிதியியல் நிறுவனங்களின் கொடுகடன் சொத்துப்பட்டியலின் இடர்நேர்வு மட்டங்கள் குறைவடையும். சட்டவாக்கம் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கான மத்திய வங்கியின் தொடர்ச்சியான முயற்சிகள், நிதியியல் துறையின் மேற்பார்வை மற்றும் திரட்சிப்படுத்தலின் மேம்படுத்தல் என்பன நிதியியல் முறைமையின் உறுதித்தன்மையையும் தாக்குப்பிடிக்கும் தன்மையினையும் பலப்படுத்தும். பொருளாதாரத்தின் உறுதித்தன்மை பழைய நிலைக்கு மீண்டமை, பன்னாட்டு நாணய நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய நிகழ்ச்சித்திட்டத்தின் தொடர்ச்சி, அவசியமான கட்டமைப்பு சீர்திருத்தங்களின் நடைமுறைப்படுத்தல் போன்றவை இலங்கையின் பொருளாதாரம் நடுத்தரகாலத்தில் நீடித்திருக்கும் வளர்ச்சியை எய்துவதற்கு உதவும்.**



## 4.1 உலகளாவிய பொருளாதாரச் சூழல் மற்றும் தோற்றப்பாடு

**வர்த்தக கொள்கை இயலாற்றலில் ஏற்பட்ட நகர்வு மற்றும் உயர்வடைந்துவரும் புவிசார் அரசியல் பதட்டங்கள் புவிசார் பொருளாதாரம் உடைந்துபோகும் தன்மையினை அதிகரித்து உலகளாவிய வளர்ச்சி வாய்ப்புகள், நிதியியல் நிலைமைகள் மற்றும் பன்னாட்டு ஒத்துழைப்பு மீது சுமையினை ஏற்படுத்துகின்றமையால் உலகளாவிய பொருளாதார நிச்சயமற்ற தன்மை அதிகமாக விளங்குகிறது.** இற்றைப்படுத்தப்பட்டு 2025 சனவரியில் வெளியிடப்பட்ட பன்னாட்டு நாணய நிதியத்தின் உலகளாவிய பொருளாதார தோற்றப்பாட்டின்படி, உலகளாவிய வளர்ச்சி 2023இன் 3.3 சதவீதத்திலிருந்து 2024இல் 3.2 சதவீதத்திற்கு மிதமடைந்ததாக மதிப்பிடப்பட்டிருக்கின்றதுடன் இது வரலாற்றுச் சராசரியான 3.7 சதவீதத்திற்குக் கீழ் (2000-2019) 2025 இலும் 2026 இலும் 3.3 சதவீதத்திற்கு தொடர்ந்தும் குறைவடையுமென எறிவு செய்யப்பட்டது. எனினும், உலகளாவிய அரசியல் மற்றும் பொருளாதார தோற்றப்பாடு குறிப்பிடத்தக்களவிற்கு மாற்றமடைந்தமையின் காரணமாக இவ்வெறிவுகளில் சாத்தியமான திருத்தங்களை எதிர்காலத்தில் செய்ய யோசனை தெரிவிக்கப்பட்டது. ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் கொள்கை மாற்றங்களின் அளவு மற்றும் வேகம் மற்றும் மற்றைய நாடுகளினால் எடுக்கப்பட்ட பதில் நடவடிக்கைகளிலிருந்தும் இந்த நிச்சயமற்ற தன்மையின் நீடிப்பு முக்கியமாக தோன்றியது. இவ் அறிக்கையை இறுதிப்படுத்தும் காலம் வரை முறையான அறிவிப்பு எதுவும் வெளியிடப்படவில்லை என்றாலும், பரஸ்பர தீர்வை ஆட்சிக்கான அறிகுறிகள் உள்ளன. மேலும், ஐக்கிய அமெரிக்க நிர்வாகம் ஐக்கிய அமெரிக்காவின் உற்பத்திகளை உத்வேகப்படுத்துவதனையும் வர்த்தகப் பற்றாக்குறையினைக் குறைப்பதனையும் நோக்கமாகக் கொண்டு இறக்குமதி பதிலீட்டு நிகழ்ச்சி நிரலொன்றினை உருவாக்கியுள்ள வேளையில் வெளிநாட்டு உதவி, காலநிலை மாற்றம் மற்றும் நீடித்துநிலைத்திருக்கும் அபிவிருத்தி தொடர்பான சில பன்னாட்டு கடப்பாடுகளிலிருந்து விலகிக்கொள்வதற்கும் திட்டமிட்டுவருகிறது.

**நிச்சயமற்ற வர்த்தகம், வழங்கல்சங்கிலி இடையூறுகள் பணவீக்க அழுத்தம் மற்றும் வெளிநாட்டு உதவி பகிர்ந்தளிப்புக்களில் ஏற்பட்டுவரும் மாற்றம் மற்றும் மூலதன பாய்ச்சல் என்பனவற்றின் தூண்டுதல் காரணமாக உலகளாவிய பொருளாதார தோற்றப்பாட்டினை மீளவடிவமைக்கும் விதத்தில்**

வரைபடம் 4.1: உலகளாவிய பொருளாதாரக் கொள்கை நிச்சயமற்றதன்மை சுட்டெண்




*மூலம்:* பெடரல் றிசேவ் பொருளாதார தரவுகளின் மூலம் Baker, Scott R.; Bloom, Nick; Davis, Stephen J.

**தற்போது இடம்பெற்றுவரும் உலகளாவிய கொள்கையில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.** ஐக்கிய அமெரிக்க கொள்கை மாற்றங்களின் காரணமாக உடனடியாக ஏற்பட்ட விளைவு வர்த்தகத்தின் நிச்சயமற்ற தன்மை உயர்வடைந்தமையாகும். இது உலகளாவிய பெறுமதிச் சங்கிலிக்கு இடையூறுகளை ஏற்படுத்தி உலகளாவிய வர்த்தகப் பாய்ச்சலையும் சிதைத்துவிடக்கூடும். ஐக்கிய அமெரிக்காவின் தீர்வை அதிகரிப்புக்கள் பாதிக்கப்பட்ட பொருளாதாரங்களின் பதில் வர்த்தக நடவடிக்கைகளை தூண்டி பின்தங்கக்கூடிய குறிப்பாக உலகளாவிய முதலீடு மற்றும் வர்த்தகங்களில் பாதிப்புக்களை ஏற்படுத்தி மெதுவான உலகளாவிய வளர்ச்சிக்கு வழிவகுக்கக்கூடிய சாத்தியங்களைக் கொண்டிருக்கிறது. 2025 மாச்சில் வெளியிடப்பட்ட பெடரல் றிசேர்வின் பிந்திய பொருளாதார எறிவுகள் ஐக்கிய அமெரிக்காவின் பொருளாதாரம் 2024இன் வளர்ச்சி வீதமான 2.5 சதவீதத்திலிருந்து 2025இல் 1.7 சதவீதத்திற்கு மெதுவாக வளர்ச்சியடையும் என்ற எதிர்பார்ப்பினை எடுத்துக்காட்டியதுடன், புதிய ஐக்கிய அமெரிக்க தீர்வைகளில் எதிர்பார்க்கப்படும் தாக்கத்தினையும் பதில் விளைவுகளையும் பிரதிபலித்தது. ஐக்கிய அமெரிக்காவுடன் வலுவான வர்த்தக இணைப்புக்களைக் கொண்ட நாடுகள் உயர்வடைந்துவரும் செலவுகள், வீழ்ச்சியடைந்துவரும் ஏற்றுமதி போட்டித்தன்மை என்பனவற்றின் காரணமாக பொருளாதார பாதிப்புக்களை உணரும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஐரோப்பிய வலயப் பொருளாதாரங்கள் தீர்வை வழிமுறைகளிலிருந்து மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான நேரடி பொருளாதார தாக்கங்களை அனுபவிக்கப்பதுடன் உயர்வடைந்த புவிசார் அரசியல் நிலைமை மற்றும் நிச்சயமற்ற கொள்கை என்பன பிராந்தியத்தின் வளர்ச்சிவாய்ப்புக்களுக்கு இன்னமும் சில சவால்களை ஏற்படுத்துகின்றன. சீனாவின் சாத்தியமான தீவிரமான இறைத்தளர்த்தல் குறுங்கால வளர்ச்சி வாய்ப்புகளை ஆதரிக்கும். மேலும், பன்னாட்டு அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர், உலக சுகாதார அமைப்பு மற்றும் காலநிலை மீதான பாரிஸ் உடன்படிக்கை உள்ளிட்ட பன்னாட்டு கடப்பாடுகளிலிருந்து விலகிக்கொள்ளும் ஐக்கிய அமெரிக்காவின் திட்டங்கள் காலநிலை மாற்றம், சுகாதார நெருக்கடிகள் மற்றும் நீடித்துநிலைத்திருக்கும் அபிவிருத்தி போன்ற முக்கிய பிரச்சனைகளைக் கட்டுப்படுத்தும் உலகளாவிய முயற்சிகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்தும்.

**தீர்வைகள் தொடர்ந்தும் உயர்வடைந்துவருவதனால் உலகளாவிய பணவீக்க வீழ்ச்சி தடங்கலுக்குள்ளாக்கி பணவீக்க அழுத்தங்கள் மீண்டும் புதுப்பிக்கப்பட வழிவகுக்கின்றன.** மூலப் பொருட்கள் மற்றும் உருக்குகள், மற்றும் அலுமினியம் போன்ற பண்டங்கள் உள்ளிட்ட முக்கிய இறக்குமதிகள் மீதான தீர்வைகள் விலைத்தளம்பல்களுக்கும் பணவீக்க அழுத்தங்களுக்கும்

வழிவகுக்கக்கூடும். தீர்வையினால் பாதிக்கப்பட்ட சில பொருளாதாரங்கள் பலயீனமான நுகர்வோர் கேள்வி மற்றும் மெதுவான வளர்ச்சி என்பன காரணமாக குறைந்த பணவீக்க தாக்கங்களைக் கொண்டிருக்கும் வேளையில் சில நாடுகள் பதில் தீர்வைகள், நிரம்பல் இடையூறுகள் மற்றும் பலயீனமான நாணயங்கள் என்பனவற்றின் காரணமாக பணவீக்க அழுத்தங்களுக்கு உட்படக்கூடிய தன்மை காணப்படுகிறது. எனினும், பலயீனமான சீனாவின் கேள்வி, வலுவிற்கான உலகளாவிய கேள்வி நலிவடைவதற்கான சாத்தியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா உட்பட எண்ணெய் ஏற்றுமதி நாடுகளிலிருந்தான உயர்ந்த வழங்கல் எதிர்பார்ப்புக்கள் என்பனவற்றை பிரதிபலிக்கின்ற விதத்தில் அடுத்த இரண்டாண்டு காலப்பகுதியில் உலகளாவிய வலுவிலைகள் வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. உலகளாவிய ரீதியில் மத்திய வங்கிகள் உயர்வடைந்த நிச்சயமற்ற தன்மை உயர்ந்தளவு வர்த்தகச் செலவுகளுக்கான சாத்தியம் என்பன கூலிகளையும் விலை அதிகரிப்புக்களையும் உயர்வடையச் செய்யுமென்பதனை கருத்திற்கொண்டு தொடர்ந்தும் விழிப்புணர்வுடன் இருந்துவருகின்றன. தீர்வையினால் பாதிக்கப்பட்ட நாடுகளிலுள்ள சில மத்திய வங்கிகள் வளர்ச்சியைத் தூண்டுவதற்கு குறைந்த வட்டி வீதங்களை தேர்வுசெய்துள்ள வேளையில், மற்றையவை முக்கியமாக பணவீக்க அழுத்தங்கள் நீண்டகாலத்திற்கு கட்டுப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் நாணயக் கொள்கையினை இறுக்கமாக்குவது பற்றி பரிசீலித்து வருகின்றன. எனினும், கடுமையான உயர்ந்த வட்டிவீத இடர்நேர்வுகள் உலகளாவிய நிதியியல் நிலைமைகளுக்கும் மூலதனச் சந்தைகளுக்குமான பாதிப்புக்களை மேலும் அதிகரிக்கக்கூடும்.

**2024இன் ஆரம்பத்தில் பெருமளவிற்கு இறுக்கமாக காணப்பட்ட உலகளாவிய நாணயக் கொள்கை நிலை ஆண்டின் பின்னரைப்பகுதியிலும் 2025இன் தொடர்ச்சியிலும் படிப்படியாக தளர்த்தப்பட்டமைக்கு மெதுவான பொருளாதார நடவடிக்கைக்கு மத்தியிலும் பணவீக்க கரிசனைகள் மிதமடைந்தமையே காரணமாகும்.** மிதமான முதன்மைப் பணவீக்கத்திற்கு மத்தியிலும் முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களின் மத்திய வங்கிகள் பணவீக்க அழுத்தங்கள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதற்கு வலுவான சான்றுகளை காணும்வரை நாணயக் கொள்கையினை தளர்த்துவதற்கு தயக்கம் கொண்டிருந்தன. மேலும், நெகிழ்ச்சித்தன்மையற்ற மையப் பணவீக்கமும் வலுவான தொழிலாளர் சந்தை நிலைமைகளும் முன்னேற்றம் கண்ட பொருளாதாரங்களின் மத்திய வங்கிகள் 2024 தொடக்கப்பகுதியில் அவற்றின் நாணயக் கொள்கை வகுப்பில் மிகக் கவனமான அணுகுமுறையினை கடைப்பிடிக்க அவற்றை இட்டுச்சென்றன. எனினும், பணவீக்கம் மீதான சாதகமான தோற்றப்பாட்டுடன பொருளாதார நடவடிக்கை மெதுவடைந்தமையினால் நாணயக் கொள்கையின் படிப்படியான தளர்த்தல் 2024இன் பின்னரைப்பகுதியிலும் 2025இன் முற்பகுதியிலும் மேற்கொள்ளப்பட்டது. அதேவேளை, தோற்றம்பெற்று வரும் சந்தைப் பொருளாதாரங்களின் நாணயக் கொள்கை நிலை 2024 மற்றும் 2025 தொடக்கப்பகுதியில் கலப்பானதாகக் காணப்பட்டது. பலயீனமான உள்நாட்டு கேள்வியும் குறைக்கப்பட்ட பணவீக்கமும் காணப்படுகின்ற வேளையில், தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலையினை கடைப்பிடிப்பதற்கு சில மத்திய வங்கிகளை தூண்டியவேளையில் தளம்பல் உணவு மற்றும் வலு விலைகளிலிருந்து தோன்றிய பணவீக்க அழுத்தங்களை முகாமைப்படுத்துவதற்கு மற்றையவர்கள் இறுக்கமான நாணயக் கொள்கையினை பேணியதுடன் உலகளாவிய பொருளாதார நிச்சயமற்ற தன்மைக்கிடையிலும் உள்நாட்டு நாணயங்கள் உறுதியடைந்தன. முன்னோக்கிப் பயணிக்கையில் புவிசார் அரசியல் நிச்சயமற்ற தன்மைகள், உலகளாவிய வழங்கல் சங்கிலி இடையூறுகள், நாணயத் தளம்பல்கள் மற்றும் பணவீக்கத்தின் மீதான அவற்றின் தாக்கம் என்பன உலகளாவிய ரீதியில் மத்திய வங்கியினால் பின்பற்றப்படும் கொள்கை நடவடிக்கைகளின் மீது செல்வாக்கினைச் செலுத்தக்கூடும்.

**உயர்வடைந்து வரும் பாதுகாப்புத்தன்மை கொள்கை, புவிசார் அரசியல் நிச்சயமற்ற தன்மை மற்றும் பலயீனமான உலகளாவிய வளர்ச்சி வாய்ப்புக்கள் என்பன பல்வேறு மார்க்கங்களினூடாக இலங்யைின் பொருளாதாரத்தின் மீது தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடும்.** வளர்ச்சியடைந்துவரும் ஐக்கிய அமெரிக்க தீர்வைக் கொள்கைகள் இலங்கையில் ஏற்றுமதி இயக்கவாற்றல் மீது சிக்கலான தன்மையைக் கொண்டிருக்கலாம் என்பதால் கரிசனைக்குரிய முதன்மையான மார்க்கங்களில் ஒன்று வர்த்தகம் ஆகும். சராசரியாக, இலங்கையின் ஐக்கிய அமெரிக்காவிற்கான ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகள் முறையே சுமார் ஐ.அ.டொலர்கள் 3 பில்லியன்

மற்றும் ஐ.அ.டொலர்கள் 0.5 பில்லியன் என்பதுடன் இதன் விளைவாக சுமார் இலங்கைக்கு ஆதரவாக ஐ.அ.டொலர்கள 2.5 பில்லியன் வர்த்தக மிகை ஏற்படுகிறது. ஐக்கிய அமெரிக்காவால் இலங்கையின் ஏற்றுமதிகள் மீது விதிக்கப்பட்டு செயல்படுத்தப்படும் எந்தவொரு பரஸ்பர தீர்வையும் நாட்டின் ஏற்றுமதித் துறையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். இலங்கையின் பிற முக்கிய வர்த்தக பங்காளிகள் மீது ஐக்கிய அமெரிக்காவின் கொள்கை மாற்றங்களின் சாத்தியமான தாக்கம் இலங்கையின் ஏற்றுமதிகளை எதிர்மறையாக பாதிக்கலாம். உலகளாவிய எண்ணெய் விலைகளில் ஏற்படக்கூடிய வீழ்ச்சி வர்த்தக இருப்பின் மீது நேர்மறையாக இருக்கலாம். எனினும், ஐக்கிய அமெரிக்காவின் தீர்வை கொள்கைகளால் உலகளவில் ஏற்படக்கூடிய பொருளாதார மந்தநிலை காரணமாக இலங்கைக்கான தொழிலாளர் பணவனுப்பல்கள் பாதிக்கப்படக்கூடும். இலங்கையின் சுற்றுலாத் தொழில்துறையில், சுற்றுலாப் பயணிகளுக்கான மூல நாடுகளின் நீண்டகால குறைந்த பொருளாதார வளர்ச்சி, சுற்றுலாத் துறையில் தற்போது அவதானிக்கப்பட்ட சாதகமான போக்கினைப் பாதிக்கக்கூடும். ஐக்கிய அமெரிக்காவின் கொள்கை மாற்றத்தினால் உலகளாவிய நாணயக் கொள்கையில் ஏற்பட்டுள்ள மாற்றம் நாணய நிலைமைகளில் தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடும் என்பதுடன் இலங்கையின் மூலதன சந்தைகளுக்கான நிதியியல் பாய்ச்சல்களிலும் தாக்கம் செலுத்தக்கூடும். இவ் அறிக்கையை இறுதிப்படுத்தும் நேரத்தில் ஐக்கிய அமெரிக்க கொள்கைகள் மற்றும் அவற்றின் விளைவுகள் நிச்சயமற்றனவாகவும் ஊகிக்கமுடியாதனவாகவும் விளங்கின.

**பரிணாமமடைந்து வரும் உலகளாவிய கொள்கை நகர்வுகளையும் அவற்றின் சாத்தியமான தாக்கங்களையும் வழிநடத்திச்செல்லும் விதத்தில் உலகளாவிய ரீதியில் நாடுகள் எச்சரிக்கையுடன்கூடிய அணுகுமுறைகளைக் கடைப்பிடித்து வருகின்றன.** உலகளாவிய சூழலின் நிச்சயமற்ற தன்மையினைக் கருத்திற்கொண்டு வர்த்தகப் பன்முகப்படுத்தல் வாய்ப்புக்களை பயன்படுத்திக்கொள்வதற்கு புதிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை தீவிரமாக தொடரும் தன்மையும் அதிகரித்த கொள்கை தயார்நிலையும் மிக முக்கியமானதாகும். நேரகாலத்துடன் தலையிடுவதற்கேற்ற விதத்தில் தோற்றம்பெற்று வரும் பேரண்டப் பொருளாதாரத்தின் பாதிக்கப்படும் தன்மையினை நெருக்கமாக கண்காணிப்பதுடன் சேர்த்து, பரஸ்பர தீர்வையினை எதிர்பார்த்து தீர்வை அமைப்பினை மீளாய்வு செய்வதும் முக்கியமானதாகும். பொருளாதாரம் உடைந்துபோகும் தன்மை தீவிரமடைந்து வருவதனால், நாடுகள் பிராந்திய வர்த்தக அணிசேரல்களை பலப்படுத்துவது பற்றியும் குறிப்பிட்ட சந்தையில் தங்கியிருப்பதனைக் குறைப்பதற்கான பரஸ்பர ஒத்துழைப்பினையும் பிராந்தியங்களுக்குள்ளேயான வர்த்தகங்களை பேணி வளர்ப்பதனையும் பரிசீலித்து வருகின்றன. மறுபுறத்தில், எதிர்கால அதிர்வுகளுக்கு எதிர்வினையாற்றவும், தற்போதைய மற்றும் எதிர்கால செலவிடல் அழுத்தங்களுக்கு இடமளிக்கவும் ஏற்றவிதத்தில் இயலாற்றலை பேணுவதற்கு உரியவாறு படுகடன் உறுதித்தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு இறை ஒழுங்கு அவசியமாகும்.

## 4.2 உள்நாட்டு பொருளாதாரத் தோற்றப்பாடு

4

### 4.2.1 பணவீக்கத் தோற்றப்பாடு

**2024இன் பிற்பகுதியிலிருந்து 2025 தொடக்கப்பகுதி வரை காணப்பட்ட பணச்சுருக்கக் காலப்பகுதியினைத் தொடர்ந்து, முதன்மைப் பணவீக்கம் பொருத்தமான கொள்கை வழிமுறைகளின் ஆதரவுடன் 2025இன் நடுப்பகுதியில் சாதகமான நிலைக்குத்திரும்பி நடுத்தரகாலப்பகுதியில் இலக்குமட்டமான ஏறத்தாழ 5 சதவீதத்தில் உறுதியடையுமென எறிவுசெய்யப்பட்டது.** 2024இன் இறுதிப்பகுதியில் காணப்பட்ட பணச்சுருக்க நிலைமை 2025இன் முதல் மூன்று மாதகாலப்பகுதியிலும் தொடர்ந்தது. 2025இன் முதற்காலாண்டில் பணச்சுருக்கம் 2024இன் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட பணச்சுருக்கத்தினை விட (ஆண்டுக்கு ஆண்டு) ஆழமாகக் காணப்பட்டது. இதற்கு, ஆண்டிற்கு ஆண்டு பணவீக்கம் குறைவடைவதற்கு பங்களித்த புள்ளிவிபரவியல் தளத்தாக்கம் செல்வாக்குச் செலுத்தியது. மேலும், 2025 சனவரியிலிருந்து நடைமுறைக்குவந்த மின் தீர்வையில் செய்யப்பட்ட கணிசமான குறைப்பும் 2025இன் முதற்காலாண்டின் பணச்சுருக்கத்திற்கு பங்களித்தது. எனினும், முதன்மைப் பணவீக்கம் பணச்சுருக்க நிலைமைகளிருந்து அதிகரித்து ஏறத்தாழ 2025 நடுப்பகுதியில் நேர்க்கணியத்திற்குத் திரும்புமென எதிர்வுகூறப்பட்டிருக்கிறது. முதன்மைப் பணவீக்கத்தின் இவ்வுயர்விற்கு, உலக உணவுப் பணவீக்கத்தில் ஏற்பட்ட விரைந்த அதிகரிப்பு, கேள்வி அழுத்தங்களில்

**வரைபடம் 4.2: முதன்மைப் பணவீக்க எறிவுகள்* (காலாண்டுச் சராசரி, கொ.நு.வி.சுட்டெண், ஆண்டிற்காண்டு, %)**




*வீச்சு வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள 2022 காலாண்டு 4இல் அடையப்பட்ட தரவு கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2013=100, பருவகால ரீதியில் சீராக்கப்பட்ட) அடிப்படையிலமைந்துள்ள வேளையில் இக்காலப்பகுதிக்குப் பின்னரான தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100, பருவகால ரீதியில் சீராக்கப்பட்ட) அடிப்படையிலமைந்துள்ளன.

*குறிப்பு:* **எதிர்வுகூறல் என்பது வாக்குறுதியோ அன்றில் கடப்பாடோ அல்ல**
2025 மாச்சு மாத எதிர்வுகூறல் சுற்றில் கிடைக்கப்பெறுகின்ற தரவுகள், மேற்கொள்ளப்பட்ட ஊகங்கள் மற்றும் தீர்மானங்கள் என்பவற்றை எறிவுகள் பிரதிபலிக்கின்றன.
வீச்சு வரைபடமானது படிப்படியாக மங்கலடைகின்ற நிறங்களின் நம்பிக்கை இடைவெளிகளைப் பயன்படுத்தி அடிப்படை எறிவுப்பாதையைச் சூழ்ந்துள்ள நிச்சயமற்றதன்மையைத் தெளிவுபடுத்துகின்றது. வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள நம்பிக்கை இடைவெளிகள் நடுத்தர காலத்தில் பணவீக்கம் தளம்பலடையக்கூடிய பெறுமதிகளுக்குள்ளான வீச்சுகளை எடுத்துக்காட்டுகின்றன. உதாரணமாக, தடிப்பான பச்சை நிறப்படுத்தப்பட்ட பகுதியானது 50 சதவீத நம்பிக்கை இடைவெளிகளை எடுத்துக்காட்டி உண்மையான பணவீக்க விளைவு இவ் இடைவெளிகளினுள் அமையப்பெறும் என்ற 50 சதவீத நிகழ்தகவினை உணர்த்துகின்றது. நம்பிக்கை இடைவெளி நீண்ட காலத்தில் பணவீக்கத்தின் எதிர்வுகூறலின் அதிகரிக்கின்ற நிச்சயமின்மையினைக் காட்டுகின்றது.

*மூலம்:* மத்திய வங்கி அலுவலர் எறிவுகள்

ஏற்பட்ட படிப்படியான அபிவிருத்தி மற்றும் புள்ளிவிபரத் தளத்தாக்கம் என்பன பங்களிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதைய எறிவுகள் 2026இன் இரண்டாமரைப்பகுதி வரை முதன்மைப் பணவீக்கத்தில் படிப்படியான அதிகரிப்புக்கள் ஏற்படும் என்பதனை எடுத்துக்காட்டுகிறது. எனினும், முதன்மைப் பணவீக்கத்தில் காணப்படும் அதிகரித்துச்செல்லும் போக்கு தொடர்ந்து காணப்படும் என எதிர்பார்க்கப்படவில்லை என்பதுடன் பொருத்தமான கொள்கை வழிமுறைகளின் ஆதரவுடன், 2026இன் பிற்பகுதியிலிருந்து இது படிப்படியாக வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுவதுடன், இறுதியாக நடுத்தர காலப்பகுதியில் இலக்கிடப்பட்ட மட்டமான 5 சதவீதத்தில் உறுதியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, விலைத் தளம்பல்களுடன்கூடிய பொருட்களையும் சேவைகளையும் நீக்குவதால் பெறப்படும் பொருளாதாரத்தில் முக்கியமான கேள்வி அழுத்தங்களை வெளிப்படுத்தும், மையப் பணவீக்கம் நடுத்தரகாலப்பகுதியில் பெருமளவிற்கு உறுதியாகக் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. முதன்மைப் பணவீக்கத்தினைப் போன்றே மையப் பணவீக்கமும் 2025இன் முதல் காலாண்டுப்பகுதியில் புள்ளிவிபரத் தளத்தாக்கத்தினால் பாதிக்கப்பட்டது. இது, மையப்பணவீக்கத்தில் தற்காலிக குறைப்பினை ஏற்படுத்தியிருக்கிறது எனினும், மையப் பணவீக்கச் சுட்டெண், முதன்மைப் பணவீக்கத்தினைக் குறைப்பதற்கு கருவியாக விளங்குகின்ற வலு மற்றும் போக்குவரத்துடன் தொடர்பான வகையிலுள்ள விடயங்களை மையப் பணவீக்கம் பெருமளவிற்கு நீக்கிவிடுகின்றமையினால், முதன்மைப் பணவீக்கத்தில் அண்மையில் ஏற்பட்ட குறைப்பு மையப் பணவீக்கத்தில் அதே அளவிற்குப் பிரதிபலிக்கப்படவில்லை. முன்னோக்கிப் பார்க்கையில், மையப் பணவீக்கம் முதன்மைப் பணவீக்கத்திற்கான இலக்குடன் ஒத்துச்செல்லும் விதத்தில், குறைந்தளவு தளம்பல்களுடன் இனிவரும் காலப்பகுதியில்

வழமைக்குத்திரும்பும் என எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்பார்க்கப்பட்ட உறுதியான பொருளாதார மீட்சியின் காரணமாக கேள்வி நிலைமையில் ஏற்பட்ட படிப்படியான முன்னேற்றங்கள் மையப் பணவீக்கத்தின் போக்கை ஆதரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**தற்போது காணப்படும் உலகளாவிய பொருளாதாரத்தின் நிச்சயமற்ற தன்மைகள் சாதகமற்ற உள்நாட்டு, வானிலை நிலைமைகளுடன் சேர்ந்து, தற்போதைய எறிவுகளுக்கான இடர்நேர்வுகள் வழமையான நேரத்துடன் ஒப்பிடுகையில் தொடர்ந்தும் உயர்மட்டத்தில் விளங்குகிறது.** இவ்வெறிவுகள் உலகளாவிய வலு மற்றும் உணவு விலைகளின் எறிவுகள், இலங்கையின் முக்கிய வர்த்தக பங்காளர் நாடுகளின் பொருளாதாரத்தில் எதிர்பார்க்கப்படும் உத்வேகம், பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி எறிவுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் எதிர்பார்க்கப்பட்ட உள்நாட்டு இறைப்பாதை, மின்சாரம் மற்றும் பெற்றோலிய விலை சரிசெய்தல்கள் செலவினைப் பிரதிபலிக்கும் என்ற அனுமானம், மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் நாணயக் கொள்கை நிலையினால் சுட்டப்படும் உலகளாவிய நிதி நிலைமைகளுடன் இணக்கப்பட்டிருக்கிறது. மேலும், எறிவுகள், மாதிரி - நிலையான வட்டிவீத பாதையில் காணப்படும் நிபந்தனைகளைக் கொண்டதாக இருந்தததுடன், பேரண்டப் பொருளாதார பதிலிறுப்புக்களையும் தோற்றுவித்தது. மேலும், அடிப்படை எறிவுகளில் முக்கிய பேரண்டப் பொருளாதார கொள்கை மாற்றங்களெதுவும் எதிர்பார்க்கப்படவில்லை. அடிப்படை அனுமானங்கள் மற்றும் நியாயப்படுத்தல்களுக்கு இடம்பெறக்கூடிய ஏதேனும் குறிப்பிடத்தக்க மாற்றமும் எறிவுசெய்யப்பட்ட பாதையிலிருந்து அடையப்பட்ட பணவீக்கப் பாதையினை விட்டுவிலகிச்செல்வதற்கு வழிவகுத்துவிடும். ஏதேனும் எதிர்பாராத நிகழ்வுகளின் காரணமாக தோற்றப்பாட்டிற்கான இடர்நேர்வுகள் பல்வேறு காரணிகளின் சாத்தியம் காரணமாக ஒன்றில் வெளிப்படையாகவோ அல்லது உட்கிடையாகவோ எறிவு செய்யப்பட்ட மட்டங்களிலிருந்து விலகுவதனால் தோற்றுகிறது. குறிப்பாக, சாத்தியமான உயர்கூலிகளினால் ஏற்படும் கேள்வியின் தாக்கம் வேளாண்மை உற்பத்திகளைப் பாதிக்கின்ற மோசமான வானிலை நிலைமைகளின் சாத்தியமான தாக்கம், எதிர்பார்க்கபட்ட இறைத்திரட்சி பாதையிலிருந்து விலகுகின்ற ஏதேனும் சாத்தியம் மற்றும் உயர்மட்டத்தில் இடம்பெறக்கூடிய ரூபா தேய்வடையக்கூடிய சாத்தியம் போன்ற காரணங்களிலிருந்து தோன்றிய கணிசமான மேல்நோக்கிய இடர்நேர்வுகள் பணவீக்க எறிவுகளுக்கு காணப்படுகின்றன. அதேவேளை பணவீக்க எறிவுகளுக்கான கீழ்நோக்கிய இடர்நேர்வுகள் மற்றைய விடயங்களுடன் சாத்தியமான உலகளாவிய வளர்ச்சி மெதுவடைந்தமையின் காரணமாக உலகளாவிய பண்ட விலைகள் மேலும் மெதுவடைந்தமையை உள்ளடக்கியிருந்தது. மத்திய வங்கி ஒவ்வொரு நாணயக் கொள்கைச் சுற்றிலும் நிலையான பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பிற்குள் தரவுத் தூண்டல் நாணயக் கொள்கை வடிவமைப்பின் மூலமாக பக்கபலத்துடன் உள்நாட்டு மற்றும் உலகளாவிய பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்படக்கூடிய மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு பணவீக்கத் தோற்றப்பாட்டில் ஏற்படக்கூடிய சாத்தியமான விலகல்களை பொதுமக்களுக்கு தொடர்பூட்டும்.

### 4.2.2 நாணயத் துறைத் தோற்றப்பாடு

**மத்திய வங்கி உள்நாட்டு துறையின் அபிவிருத்திகளையும் இயக்கவாற்றல் மிக்க உலகளாவிய பொருளாதார நிலைமைகளின் சாத்தியமான தாக்கங்களையும் பரிசீலனையில்கொண்டு அதன் நாணயக் கொள்கை பகுப்பாய்வில் முன்னோக்கிச்செல்லும் விதத்தில் தரவுத் தூண்டல் அணுகுமுறையை தொடர்ந்தும் பின்பற்றும்.** தற்காலிக நிரம்பல் தூண்டல் பணச்சுருக்கத்தினை தொடர்ந்து, 2025 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் பணவீக்கம் இலக்கை நோக்கி நகரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, மேலும் பணவீக்க இலக்கை அடைய எந்தவொரு நடுத்தர கால இடையூறுகளையும் தடுக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க, மத்திய வங்கி கேள்விப்பக்க அழுத்தங்களின் சாத்தியமான அபாயங்களை உன்னிப்பாகக் கண்காணிக்கும். மேலும், ஐக்கிய அமெரிக்காவினால் கடைப்பிடிக்கப்பட்டுவரும் கொள்கைகள் மற்றும் அதனைச் சூழ்ந்து காணப்படும் நிச்சயமற்ற தன்மை என்பன காரணமாக உலகளாவிய இயக்கவாற்றல்வாய்ந்த பொருளாதாரம் மற்றும் நிதியியல் சூழல், உள்நாட்டுப் பொருளாதாரத்தின் மீதும் நாணயக் கொள்கை வடிவமைப்பிலும் சில தாக்கங்களைக் கொண்டிருக்கக்கூடும். அதேவேளை, இதுவரை இனிவரும் காலப்பகுதியில் உள்நாட்டு சந்தை வட்டி வீதங்கள் உறுதியாக தாழ்ந்த

மட்டங்களில் காணப்படும் வாய்ப்புள்ளது, தற்பொழுது ஏற்றுக்கொள்ளத்தக்க வட்டி வீதங்களுக்கும் மேலே காணப்படும் தெரிவுசெய்யப்பட்ட கடன் சாதனங்களுக்கான வட்டி வீதங்களிலும் மேலும் கீழ்நோக்கிய சரிசெய்தல்கள் இருக்கும். மேலும், அரச பிணையங்கள் மீதான விளைவுகள் தொடர்ந்தும் வழமையான நிலையில் காணப்படுவதற்கு தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை, மேம்பட்ட இறைச் செயலாற்றம் மற்றும் நாட்டிற்கான தரமிடல் உயர்த்தப்பட்டமையினைத் தொடர்ந்து இடர்நேர்வு மிகைக் கட்டணம் குறைவடைந்தமை என்பன உதவியாக அமையும்.

**நாணய விரிவாக்கம், தளர்த்தப்பட்ட நாணய நிலைமைகளினால் வழங்கப்பட்ட உதவியுடன் எதிர்வரும் காலத்தில் தொடர்ந்தும் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.** குறைந்தவட்டி வீதங்கள் வியாபாரம் மற்றும் வீட்டுத்துறைகளுக்கான கடன்பாடுகளின் செலவினைக் குறைத்து அதன் மூலம் இறக்குமதிக்கான கேள்வியில் எதிர்பார்க்கப்பட்ட விரிவாக்கம் மற்றும் மேம்பட்ட உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகளுக்கு மத்தியில் பொருளாதாரத்தின் நுகர்வு மற்றும் ஏனைய உற்பத்தித் துறைகள் இரண்டிற்குமான கொடுகடன் பாய்ச்சலைத் தூண்டும். அதேநேரம் அரச துறைக்கான வங்கித்தொழில் துறையின் வெளிப்படுத்துகை மிதமானதாக இருக்கும் போல் தெரிவதுடன், இதற்கு, தற்பொழுது இடம்பெற்றுவரும் அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் மறுசீரமைப்புடன் இறைத் துறையின் செயலாற்றத்தில் எதிர்பார்க்கப்பட்ட மேம்பாடுகள் இணைந்து கொண்டமையின் மூலமும் தனியார் துறைக்கு அதிகளவு கொடுகடன் கிடைத்தமையும் பெருமளவிற்கு ஆதரவளித்தது. அரசாங்க பிணையங்களின் மீதான விளைவுகளில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களைச் சரிசெய்ய, அரசாங்கத்தால் போதுமான நிதி தாங்கியிருப்புக்களைப் பராமரிப்பது அவசியம். அதேவேளை, பன்னாட்டு ஒதுக்கு நிலைமையினை வலுப்படுத்துவதற்காக மத்திய வங்கியினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவுகள் எதிர்வரும் காலத்தில் வங்கித்தொழில் முறைமையின் வெளிநாட்டுச் சொத்துக்களை மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் வெளிநாட்டு அதிர்வுகளை எதிர்த்து நிற்கக்கூடிய விதத்தில் தாங்கிருப்பு அதிகரிக்கும். நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த செலாவணி வீத சூழலில் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் கீழ் முன்கூட்டியே மேற்கொள்ளப்படும் நாணயக் கொள்கை வகுப்பின் ஒரு பகுதியாக, வெளிப்படைத்தன்மையினை அதிகரிப்பதற்காகவும் பொதுமக்களின் நம்பகத்தன்மையினை பேணுவதற்ககாவும் மத்திய வங்கி தொடர்ந்தும் அதன் கொள்கைகளையும் எதிர்பார்க்கப்படும் பேரண்டப் பொருளாதார பெறுபேறுகளையும் தொடர்ந்தும் தொடர்பூட்டும். பொதுமக்களின் எதிர்பார்ப்புக்களை முகாமைப்படுத்துவதில் தொடர்பூட்டல் முயற்சிகளை வலுப்படுத்துவது முக்கியமான வகிபாகத்தினை ஆற்றும் என்பதுடன் இதன் மூலம் விலை உறுதிப்பாட்டினையும் பரந்தளவில் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினையும் எய்த உதவும். இம்முன்னெடுப்புக்களின் ஒரு பகுதியாக, மத்திய வங்கி ஏனைய காலாந்தர வெளியீடுகளுக்குப் புறம்பாகவும் அனைத்து ஆர்வலர்களும் தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் விதத்திலும் அதன் நாணயக் கொள்கை அறிக்கையினை அரையாண்டிற்கொரு தடவை தொடர்ச்சியாக வெளியிட்டு வருகின்றது.

### 4.2.3 வெளிநாட்டுத் துறை தோற்றப்பாடு

**இலங்கையின் வெளிநாட்டுத் துறை அண்மைக் காலத்தில் அதன் தாக்குப்பிடிக்கும் தன்மையினை தொடர்ந்தும் கொண்டிருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில், சவால்மிக்க உலகளாவிய பொருளாதார தோற்றப்பாடு ஏதேனும் மோசமான விளைவுகளை எதிர்கொள்ள சரியான நேரத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியதையும் அவசியமாக்குகிறது.** பன்னாட்டு நாணய நிதிய – விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டம் வெற்றிகரமாக தொடர்வதும் வெளிநாட்டுப் படுகடன் மறுசீரமைப்பு செய்முறை நிறைவடைந்திருப்பதும் அண்மைய காலத்தில் வெளிநாட்டுத் துறையின் தோற்றப்பாட்டிற்கு உதவியளிக்கும் என எதிர்பார்க்கப்படுவதுடன் உறுதியான உள்நாட்டு சமூக பொருளாதாரத்திற்கும் அரசியல் சூழலுக்கும் காரணமாகவும் அமையும். எனினும், ஐக்கிய அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கையில் எதிர்பார்க்கப்படும் மாற்றங்கள் அண்மைய காலத்தில் வெளிநாட்டுத் துறைப் பக்கத்தில் நிச்சயமற்ற தன்மைகளை ஏற்படுத்தக்கூடும். இதன் நேரடியான மற்றும் கசியும் தாக்கங்கள் இலங்கையின் வெளிநாட்டுத் துறையில் நிச்சயமற்ற தன்மையினை கொண்டது. வெளிநாட்டு நடைமுறைக் கணக்கின் அண்மைய செயற்பாடுகளும் தற்பொழுது கிடைக்கின்ற தகவல்களும் நடைமுறைக் கணக்கு 2025 இலும் மிகையைப் பதிவுசெய்யும் என்பதனைக்

காட்டுகின்றது. எனினும், இத்தோற்றப்பாடு உலகளாவிய தாக்கங்களுக்கும் இச்சவால்களுக்கான உள்நாட்டு பதிலிறுப்புக்களுக்கும் உட்பட்டதாகும்.

**2025இல், தளர்த்தப்பட்ட நாணய நிலைமைகளின் காரணமாக மேம்பட்ட பொருளாதார நடவடிக்கை மற்றும் வியாபாரங்கள் மற்றும் வீட்டுத் துறையினரின் உயர்வடைந்த செலவிடல் இயலாற்றல் என்பனவற்றுடன் சேர்த்து இறக்குமதிக் கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டமையினை பிரதிபலிக்கின்ற விதத்தில், அதிகரித்த இறக்குமதிக்கான கேள்வியின் காரணமாக வணிக வர்த்தகப் பற்றாக்குறை விரிவடையுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது.** ஊர்தி இறக்குமதிக்கான உடனடிக் கேள்வி எதிர்பார்த்ததிலும் பார்க்க குறைவாகவே காணப்பட்ட போதும் கேள்வியில் படிப்படியான அதிகரிப்பொன்று ஏற்படும் என்பதனை மறுப்பதற்கில்லை. 2025இல் உலகளாவிய மசகெண்ணெய் விலைகள் குறைவாகக் காணப்படுமென எதிர்வுகூறப்பட்ட போதும் 2024 உடன் ஒப்பிடுகையில் 2025இல் பெற்றோலிய இறக்குமதிச் செலவினம் ஓரளவு உயர்வாக இருக்குமென மதிப்பீடு செய்யப்பட்டமைக்கு உள்நாட்டு பொருளாதார நிலைமையில் எதிர்பார்க்கப்படும் மீட்சி மற்றும் புவிசார் அரசியல் பதற்றங்களின் காரணமாக சாத்தியமான மோசமான விலைத்தளம்பல்களை கணக்கிடுவதன் மூலம் ஏற்படக்கூடிய அளவுகளின் அதிகரிப்பு காரணமாக அமையும். இதேபோன்று பொருளாதார நடவடிக்கைகளில் எதிர்பார்க்கப்படும் மீட்சியுடன் இசைந்துசெல்லும் விதத்தில் 2025இல் ஏனைய இடைநிலைப் பொருட்கள் மற்றும் முதலீட்டுப் பொருட்களின் மீதான செலவினம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பொதுவாக, இறக்குமதியில் தொடர்ச்சியான வளர்ச்சி காணப்படுகின்றமைக்கு மத்தியிலும் ஏற்றுமதியின் உறுதியான விரிவாக்கத்தின் உதவியுடன் நடுத்தரகாலத்தில் வர்த்தகப் பற்றாக்குறை முகாமைப்படுத்தத்தக்க மட்டத்தில் தொடர்ந்தும் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. நடுத்தரகாலப்பகுதியில் பணிகள் கணக்கின் மிகை 2025இல் வலுவடையும் என எதிர்பார்க்கப்படுவதுடன் உயர்வடைந்துவரும் சுற்றுலா வருவாய்கள் மற்றும் ஏனைய பணித் துறைகளின் போட்டித்தன்மை என்பனவும் இதற்கு தூண்டுதலாக அமையும். தற்பொழுது இடம்பெற்றுவரும் சுற்றுலா செழிப்பிலிருந்து இலங்கை நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் என்பதுடன் இலங்கையின் சுற்றுலாவிற்குக் கிடைத்த உலகளாவிய அங்கீகாரமும் இத்துறையின் உள்ளார்ந்த வளத்தினை உச்சப்படுத்துவதற்கான தொடர்ச்சியான முயற்சிகளும் இதற்கு உதவியிருக்கிறது. மேலும், பணிகள் கணக்கின் மிகைக்கு கடல் மற்றும் வான் போக்குவரத்து பணிகளின் மீளெழுச்சியும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் வியாபரப் பணிகளை வெளிமூலங்களிலிருந்து பெற்றுக்கொள்ளும் துறையின் வலுவான செயலாற்றமும் பக்கபலமாக அமைந்துள்ளன. கட்டுமானம், முகாமைத்துவ ஆலோசனை, கட்டடங்கள் மற்றும் பொறியியல் பணிகள் போன்ற ஏனைய பணிகள் துறைகளும் நடுத்தரகாலப்பகுதியில் முனைப்பான வகிபாகத்தினை ஆற்றும் போல் தெரிகிறது. உயர்ந்த உள்ளார்ந்த ஆற்றலுடன்கூடிய இத்தோற்றம் பெற்றுவரும் துறைகளுக்கான ஊக்குவிப்பும் வசதியளிப்பும் சரியான நேரத்தில் கிடைப்பது நாட்டிற்கு முழு நன்மைகளையும் கொண்டுவரும். வெளிநாட்டுப் படுகடன் மறுசீரமைப்பினைத் தொடர்ந்து வட்டிக் கொடுப்பனவுகள் குறைவடைந்தமையின் காரணமாக 2025இல் ஆரம்ப வருமானம் கணக்கின் பற்றாக்குறை குறுக்கமடையும் போல் தெரிகிறது. எனினும், இலங்கையில் முதலீடு செய்யப்பட்டிருக்கின்ற நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளிலிருந்தான வட்டி மற்றும் பங்கிலாபங்கள் தொடர்ச்சியாக வெளிப்பாய்ந்ததன் காரணமாக ஆரம்ப வருமானக் கணக்கிலிருந்தான வெளிப்பாய்ச்சல் படிப்படியாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை 2025 இலும் அதற்கு அப்பாலும் தொழிலாளர் பணவனுப்பல்கள் உறுதியாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றமைக்கு தொழிலுக்காக வெளிநாட்டிற்கு செல்பவர்களின் தொடர்ச்சியான அதிகரிப்பும் பணத்தினை மாற்றல் செய்வதற்கு புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் முறைசார்ந்த மார்க்கங்களை கடைப்பிடித்து வருவதும் உதவியாக அமையும். பொதுவாக நடைமுறைக் கணக்கு 2025இல் மிகையினைப் பதிவுசெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றமை ஊர்திகளின் இறக்குமதிகள் தளர்த்தப்பட்டமையின் தாக்கத்தின் அளவினைப் பொறுத்ததாக இருக்கும். நடுத்தரகாலத்தில் நடைமுறைக் கணக்கு உறுதியான பற்றாக்குறையினைப் பதிவுசெய்யும் போல் இருப்பது நீண்டகால வெளிநாட்டுத் துறை உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்துவதாக இருக்கிறது.

**நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சல்களுக்கு, நேர்மறையான முதலீட்டாளர் மனோபாவம் மற்றும் வியாபாரச் சூழலை அதிகரிப்பது மீதான உத்தேச சீர்திருத்தங்கள் என்பனவற்றின் மூலம் உதவியளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.** எனினும், உலகளாவிய வளர்ச்சி மற்றும் நிதியியல் நிலைமைகளின் தோற்றப்பாட்டில் காணப்படும் தெளிவின்மையுடன் சில முதலீட்டு நிச்சயமற்ற தன்மைகள் இருக்கக்கூடுமென்பதனால் அண்மியகாலத்தில் நிதியியல் கணக்கிற்கான ஒட்டுமொத்த உட்பாய்ச்சல் தொடர்ந்தும் மிதமானதாகக் காணப்படும் போல் தோன்றுகிறது. இத்தகைய தாக்கங்கள் காணப்பட்டமைக்கிடையிலும் எதிர்வரும் காலப்பகுதியில் இருபுடை நிதியிடல் மீண்டும் ஆரம்பமாகும் என்ற எதிர்பார்ப்புடன் சேர்ந்து அண்மைய மற்றும் நடுத்தரகாலம் இரண்டிலும் பல்புடை முகவர்களிடமிருந்தான வெளிநாட்டு நிதியிடல் உதவி எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வுட்பாய்ச்சல்கள் நிதியியல் கணக்கிற்கு உதவியளிப்பது மட்டுமன்றி 2025 இலும் அதற்கு அப்பாலும் மொத்த வெளிநாட்டு ஒதுக்குகள் வலுவடைவதற்கும் பங்களிக்கும். முதலீட்டுச் சூழலை மேம்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த முயற்சி நடைமுறைச் சாத்தியமானமை, படுகடனை உருவாக்காத வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் குறிப்பாக, அண்மைய ஆண்டுகளில் மிதமான மட்டத்தில் தொடர்ந்தும் காணப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகளை கவரும். அதேவேளை, அரச பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்பு பங்குப்பரிவர்த்தனையில் வெளிநாட்டு முதலீடுகள் தொடர்ந்தும் மிதமாகக் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, மத்திய வங்கியின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து எதிர்பார்க்கப்படும் கொள்வனவுகளின் தூண்டல் காரணமாக படிப்படியாக மேம்படும் என எறிவு செய்யப்பட்டுள்ள அதேவேளை, அதன் வெளிநாட்டுப் பொறுப்புக்களும் தொடர்ந்தும் குறைவடைந்து வருகின்றது. இறக்குமதிகளில் ஏற்படக்கூடிய உயர்வு, இனிவரப்போகின்ற படுகடன் மீள்கொடுப்பனவு கடப்பாடுகள் மற்றும் சென்மதிநிலுவையின் மீதும் நடுத்தரகாலத்தில் செலாவணி மீதும் அழுத்தத்தினை ஏற்படுத்தக்கூடிய உலகளாவிய புவிசார் அரசியல் அபிவிருத்திகள் என்பனவற்றிலிருந்து தோன்றக்கூடிய சாத்தியமான வெளிநாட்டுத் துறை இடர்நேர்வுகளைத் தணிப்பதற்காக, வெளிநாட்டு ஒதுக்கு தாங்கிருப்புக்களை கட்டியெழுப்புவதில் மத்திய வங்கி தொடர்ந்தும் விழிப்புடன் இருக்கும்.

### 4.2.4 நிதியியல் துறைத் தோற்றப்பாடு

**பேரண்டப் பொருளாதார மீட்சியின் நேர்க்கணிய தாக்கம், கொள்கை நடவடிக்கைகள் மற்றும் சீர்திருத்தங்கள் என்பனவற்றின் தூண்டுதல்களினால் நிதியியல் துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மை 2025இல் மேலும் வலுவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.** வங்கித்தொழில் மற்றும் நிதிக் கம்பனித் துறைகளின் கொடுகடன் வளர்ச்சியானது தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை, வர்த்தகத்துடன் தொடர்பான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமை மற்றும் பேரண்டப் பொருளாதாரச் சூழலில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் என்பனவற்றின் காரணமாக 2024இல் படிப்படியாக மீட்சியடையத் தொடங்கியது. தனியார் துறைக் கொடுகடன் நீண்டகால சுருக்கத்தினைத் தொடர்ந்து மீண்டும் வளர்ச்சியடைந்தமையினால் கொடுகடன் சுழற்சி வட்டம் விரிவாக்கக் கட்டமொன்றிற்கு மாற்றமடைந்தது. தொடர்ச்சியான சாதகமான பேரண்டப் பொருளாதார தோற்றப்பாடு மற்றும் தாழ்ந்த வட்டி வீதங்கள் என்பன தனியார் துறைக் கொடுகடனின் விரிவாக்கத்திற்கு மேலும் ஆதரவளிக்குமென எதிர்பார்க்கப்பட்டதுடன் கொடுகடன் சுழற்சி வட்டத்தின் விரிவாக்கக் கட்டத்தினையும் நிலைநிறுத்தும். இதன்விளைவாக, வங்கித்தொழில் மற்றும் நிதிக் கம்பனிகள் துறை இரண்டினதும் கொடுகடன் தொடர்ச்சியாக வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்குப் பதிலிறுத்தும் விதத்தில் மத்திய வங்கி கொடுகடன் சுழற்சி வட்டத்தின் விரிவாக்கக் கட்டத்தில் தோன்றக்கூடிய ஏதேனும் முறைமையியல் சார்ந்த இடர்நேர்வுகளின் வெளிப்பாட்டிற்காக நிதியியல் முறைமையினை தொடர்ந்தும் விழிப்புடன் கண்காணிக்கும் என்பதுடன் தேவையானவிடத்து அத்தகைய இடர்நேர்வுகளைத் தணிக்க அதன் பேரண்ட முன்மதியுடைய கொள்கைகளையும் பயன்படுத்தும். மேலும், 2024 காலப்பகுதியில் தனியார் துறைக் கொடுகடன் அதிகரித்ததன் காரணமாக நிதியியல் நிறுவனங்களின் கடன்வழங்கல் வெளிப்படுத்துகையில் காணப்பட்ட அரசாங்கத்தினை நோக்கிய சாய்வுத் தன்மையில் திருத்தங்கள் ஏற்படுவதற்கான சமிக்ஞைகளை வெளிக்காட்டியது. வீட்டுத்துறை மற்றும் கூட்டாண்மைகளிலிருந்தான கொடுகடனுக்கான கேள்வியில் எதிர்பார்க்கப்படும் உயர்வுடன் அரசுக்கான இக்கொடுகடன் வெளிப்படுத்துகைகள் மேலும் வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

பாரிய வெளிப்படுத்துகை வழிமுறைகளை கட்டம் கட்டமாக அனுசரித்துக்கொள்வதனால், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான உரிமம்பெற்ற வங்கிகளின் வெளிப்படுத்துகைகளில் படிப்படியான குறைப்பினை உறுதிசெய்து கொள்ளும் என்பதுடன் இது அரசு மற்றும் வங்கிகளுக்குமிடையிலான இடைத்தொடர்புகளைக் குறைவடையச் செய்யும். அரச தொழில்முயற்சிகளுக்கான படுகடனை உள்ளடக்கிய அரச படுகடனின் மறுசீரமைப்பு வங்கித்தொழில் துறைக்கான குறைந்தபட்ச தாக்கங்களுடன் நிறைவடைந்த போதும், அரசு மற்றும் வங்கிகளுக்கு இடையேயான இடைத்தொடர்புகள் பற்றி வங்கிகள் தொடர்ந்தும் கவனமாக இருத்தல் வேண்டும். ஒப்பீட்டு ரீதியில் குறைந்த வட்டி வீத சூழலில், அதிகரிக்கும் கடன்பாட்டாளர்களின் மீள்கொடுப்பனவு இயலாற்றல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளின் உறுதியான மீட்சி என்பனவற்றின் காரணமாக உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகளின் கொடுகடன் சொத்துப்பட்டியலின் தரம் மேலும் மேம்பாடடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. திரவத்தன்மையற்ற வெளிநாட்டு நாணய நாட்டிற்கான சாதனங்கள் திரவத்தன்மையுள்ள நாட்டிற்கான சாதனங்களுக்காக பரிமாற்றம் செய்யப்பட்டமையால் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் மறுசீரமைப்பானது வங்கிகளின் வெளிநாட்டு நாணயத்திலான திரவத்தன்மை மட்டங்களில் நேர்கணியமான தாக்கத்தினைக் கொண்டிருந்தது. எவ்வாறாயினும், வங்கிகள் செலாவணி வீத தளம்பல்கள், வெளிநாட்டு நிலையற்ற தன்மைகள் மற்றும் வெளிநாட்டு நாணய நிதியிடல் இடைவெளி என்பனவற்றுடன் இணைந்த இடர்நேர்வுகளுக்கெதிராக பாதுகாத்துக்கொள்ள அவர்களது வெளிநாட்டு நாணய திரவத்தன்மை நிலையினை முன்மதியுடன் முகாமை செய்தல் வேண்டும். வங்கித்தொழில் துறையின் இலாபத்தன்மை 2024இல் மீண்டும் உத்வேகம் பெற்றதுடன் சாதகமான பேரண்ட – நிதியியல் நிலைமைகளின் காரணமாக துறைக்கான இலாபத் தோற்றபாடு தொடர்ந்தும் நேர்க்கணியமாகக் காணப்படுகின்றது. மேலும், வங்கிகளினால் அண்மையில் அறிக்கையிடப்பட்ட தொழிற்பாட்டு இடர்நேர்வுச் சம்பவங்களின் பின்னணியில் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட வங்கித்தொழில் தீர்வுகளில் தங்கியிருப்பதும் அதிகரித்து வருவதன் காரணமாக தகவல் தொழில்நுட்ப முறைமைகளிலும் இணையவழி பாதுகாப்பிலும் தொடர்ந்தும் முதலீடுகளை மேற்கொள்வது தகவல் தொழில்நுட்பங்களுடன் தொடர்பான இடர்நேர்வுகளைக் குறைப்பதற்கு இன்றியமையாததாகும்.

**நிதியியல் உறுதிப்பாட்டிற்கான நிதியத்தை அரசாங்க ஆதரவுடன் வலுப்படுத்துவதற்கான வழிமுறைகளுடன் சேர்த்து வங்கிகளுக்கான தீர்மானத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு வருகின்ற அதேவேளை நிதிக் கம்பனிகளுக்கான தீர்மானக் கட்டமைப்பொன்றை நிறுவுவதற்கு நிதித்தொழில் சட்டத்திற்கான திருத்தங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.** இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் நிதிசார் மற்றும் நிறுவனசார் இயலளவு உலக வங்கியின் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பிடமிருந்து கிடைக்கும் முதலீட்டு கருத்திட்ட நிதியிடல் மற்றும் நிதியியல் துறை பாதுகாப்பு வலைக் கருத்திட்டத்தின் கீழ் கொள்கை அடிப்படையிலமைந்த மேம்படுத்தல்கள் என்பன ஊடாக வலுப்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும், முறைப்பாடு கையாளுதல் செயன்முறைகள், சந்தை நடத்தை மேற்பார்வை மற்றும் நிதியியல் வாடிக்கையாளர் கல்வி என்பவற்றை முன்னேற்றுவதன் மூலம் மத்திய வங்கி, நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பை தொடர்ந்தும் வலுப்படுத்தும்.

**நிதியியல் முறைமையின் உறுதித்தன்மையினை பாதுகாப்பதற்காக பரந்த வீச்சிலான அமைப்பியல், சட்டம் மற்றும் கொள்கை மட்டச் சீர்திருத்தங்களும் புத்தாக்கங்களும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.** திரட்சிப்படுத்தலுக்கான முதன்மைத் திட்டத்தின் கட்டம் I வெற்றிகரமாக நிறைவடைந்தமையுடன் கட்டம் II 2024 திசெம்பரில் ஆரம்பித்ததுடன் 2025 இலும் தொடர்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளபட்டுள்ளமையானது நிதிக் கம்பனிகள் துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மையினையும் வினைத்திறனையும் மேலும் வலுப்படுத்தும். இணையவழி வங்கித்தொழில் மற்றும் செல்லிடத்தொலைபேசிக் கொடுப்பனவுச் செயலிகளூடாக வசதிப்படுத்தப்பட்ட நாட்டின் உடனடி கொடுப்பனவு முறைமையினைப் பின்பற்றுவது வளர்ச்சியடைந்து வருவதன் ஊடாக பெருமளவாகத் தூண்டப்பட்டு எண்ணியல் கொடுக்கல்வாங்கலில் கணிசமான அதிகரிப்புடன் கொடுப்பனவுகளுக்காக காசு மற்றும் காசோலையைப் பயன்படுத்துவது நடுத்தரகாலத்திலிருந்து நீண்டகாலப்பகுதியில் படிப்படியாக குறைவடையும்

4

என எதிர்பார்க்கப்படுகின்றது. எண்ணியல் கொடுப்பனவு முறைகள் தொடர்பில் மத்திய வங்கி பொதுமக்கள் விழிப்புணர்வு முன்னெடுப்புக்களை அதிகரிக்கத் திட்டமிட்டிருப்பதுடன் எண்ணியல் கொடுப்பனவு தீர்வுகளை ஊக்குவிப்பதற்கு நிதியியல் நிறுவனங்களுடன் ஒன்றிணையும் என்பதுடன் அவற்றின் பாதுகாப்பான பயன்பாட்டினையும் உறுதிப்படுத்துகின்ற அதேவேளையில் கொடுப்பனவு சேவைகளை மலிவாக்கும் மற்றும் அணுகத்தக்கதாக்கும். எவ்வாறாயினும், கணிசமான சவால்களை ஏற்படுத்துகின்ற இணைய வழி அச்சுறுத்தல்கள் மற்றும் இணையவழி மோசடிகள் உட்பட்ட, உலகளாவிய இடைத்தொடர்புகளுடன் இணைந்த இடர்நேர்வுகள் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டிற்கு கணிசமான அச்சுறுத்தல்களை ஏற்படுத்துகின்றன. தொழில்நுட்பத்துடன் இணைந்த இத்தகைய இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கு கொடுப்பனவு மற்றும் தகவல் உட்கட்டமைப்பினைத் தொடர்ச்சியாக மேம்படுத்துவதும் ஆர்வலர்களிடையேயான இணைப்பு முயற்சிகளை பேணி வளர்ப்பதும் வாடிக்கையாளர் விழிப்புணர்வினை வலுப்படுத்துவதும் இன்றியமையாததாகும். மேலும் நாட்டின் கொடுப்பனவு முறைமைகளை பலப்படுத்துவதற்கும் அதனுடன் இணைந்த இடர்நேர்வுகளை தணிப்பதற்கும் சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு, இடம்பெற்றுவரும் தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்கும் வாடிக்கையாளர் கேள்விகளுக்கும் சமாந்தரமாக இற்றைப்படுத்தப்படல் வேண்டும். இதற்கமைவாக, புதிய கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டம் இயற்றப்பட்டு கொடுப்பனவு முறைமைகளுக்கும் அத்துடன் இணைந்த கொடுப்பனவுப் பணிகளுக்கும் ஏற்புடைத்தான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு மேலும் வலுப்படுத்தப்படும். இவ்வழிமுறைகள் கொடுப்பனவு முறைமை உறுதித்தன்மையினை உறுதிப்படுத்துகின்ற அதேவேளையில் இலங்கையில் பின்பற்றத்தக்க எண்ணியல் கொடுப்பனவுகளின் தொடர்ச்சியான வளர்ச்சியையும் உறுதிப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கட்டமைப்பை உலகளாவிய தரநியமங்களுக்கமைவாக வலுப்படுத்துவதற்கான அதன் கடமைப்பொறுப்பை எடுத்துக்காட்டும் விதத்தில் 2026இல் இலங்கை அதன் மூன்றாவது பரஸ்பர மதிப்பீட்டிற்கு தயாராகின்றது.** இது தொடர்பிலான இலங்கையின் செயலாற்றமானது இணங்கியொழுகுவதற்கும் நிதியியல் நடவடிக்கைச் செயலணியின் குறிப்பிடத்தக்க பாதகமான நிதி, பொருளாதார மற்றும் நற்பெயரைக் களங்கமாக்கும் விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய சாம்பல் நிறப்பட்டியலில் இடம்பெறுவதைத் தவிர்ப்பதற்கும் இன்றியமையாததாகும். மேலும், ஏற்கனவே காணப்படுகின்ற நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயங்களினது ஒட்டுமொத்த தாக்கத்தினை மதிப்பிடுவதற்காக நடைமுறைப்படுத்தலுக்குப் பிந்திய பகுப்பாய்வொன்றினை நடாத்துவதற்கும் அதனைத் தொடர்ந்து தேசிய மட்டத்திலான கேள்விப் பக்க மதிப்பாய்வினைச் செய்வதற்கும் மத்திய வங்கி எதிர்பார்க்கின்றது. 2026இன் நடுப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் கட்டம் II, சான்று அடிப்படையிலமைந்த கொள்கைக் கட்டமைப்பொன்றாக உருவாக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்தின் உதவியுடன் உருவாக்கப்பட்ட நிலைபேறான நிதி வழிகாட்டல் 2.0, 2025இல் தொடங்கப்பட்டு ஐந்து வருடங்களுக்கு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இது முக்கிய நிதியியல் துறை ஆர்வலர்களுடனான ஒன்றிணைப்புடன் நிலைபேறான நிதியிடலின் முன்னுரிமையிலான சுற்றாடல் மற்றும் சமூக நோக்கு விடயங்களை கையாளும்.

### 4.2.5 இறைத் துறைத் தோற்றப்பாடு

**அரசிறையினை அடிப்படையாகக் கொண்ட இறைத் திரட்சி மற்றும் இறை ஒழுங்குகளைப் பேணுதல் என்பன தொடர்பான அரசாங்கத்தின் கடப்பாடும் விடா முயற்சியும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.** வருடாந்த இறை உபாய அறிக்கையொன்றினை வெளிப்படுத்தல் மற்றும் ஐந்தாண்டு நடுத்தர கால இறைக் கட்டமைப்பினை ஆரம்பித்தல் என்பன 2024ஆம் ஆண்டின் 44ஆவது இலக்க பொது நிதியியல் முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் கட்டாயமானவைகளாகும். தற்போதைய இறை உபாயம் அரசிறையினை அடிப்படையாகக் கொண்ட திரட்சியைச் சுற்றி நிலைநிறுத்தப்பட்டதுடன் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித் திட்டத்துடனும் பொது நிதியியல் முகாமைத்துவ சட்டத்தின் தேவைப்பாடுகளுடனும் இணைக்கப்பட்டது. இதன்படி, நிதிய திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வெளியிடப்பட்ட

வரவுசெலவுத்திட்டம், பொருளாதாரம் மற்றும் இறை நிலைமை அறிக்கை 2025இல் காணப்படும் நடுத்தர கால இறைக் கட்டமைப்பு 2024-2029 நடுத்தர காலத்தில் அரசாங்கத்தின் இறை இலக்குகள் பற்றி எடுத்துக்காட்டுகிறது. அரசிறையினை 2025இல் மொ.உ. உற்பத்தியின் 15.0 சதவீதத்திற்கு அதிகரிப்பதனையும் நடுத்தர காலத்தில் இதனை மேலும் அதிகரிப்பதனையும் அதேவேளை ஆரம்ப செலவினங்களை மொ.உ. உற்பத்தியின் 13.0 சதவீதத்திற்கு கீழே பேணுவதையும் அரசாங்கம் இலக்காகக் கொண்டிருந்தது. 2026 இலிருந்து ஒட்டுமொத்த வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையினை மொ.உ.உற்பத்தியின் 5.0 சதவீதத்திற்கு கீழே கட்டுப்படுத்துவதனை நோக்கி நெறிப்படுத்த முயற்சிக்கப்பட்ட வேளையில் 2025 இலிருந்தும் அதற்கு அப்பாலும் ஆரம்ப மிகையினைக் குறைந்தபட்சம் மொ.உ.உற்பத்தியின் 2.3 சதவீதத்தில் பேண கடுமையாக முயற்சிக்கப்பட்டது. பொது நிதியியல் முகாமைத்துவச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு, இறை விதிகளைப் பின்பற்றுவதன் மூலம் இறை ஒழுங்குகளைப் பேணுவதும் ஆரம்ப மிகைகளை எய்துவதும் படுகடன் மட்டங்களை நீடித்துநிலைத்திருக்கும் பாதைக்கு கொண்டுவருவதற்கும் இறை நீடித்து நிலைத்திருக்கும் தன்மையினைப் உறுதிப்படுத்துவதற்கும் மிக முக்கியமானதாகும். இதன்படி, தற்போதைய நடுத்தரகால இறைக் கட்டமைப்பும் நடுத்தரகாலத்தில் மத்திய அரசாங்கத்தின் படுகடனை நிலைத்திருக்கக்கூடிய மட்டத்திற்கு படிப்படியாக குறைப்பதன் மீது கவனத்தினைச் செலுத்தியது. பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதியிடல் வசதி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சீர்த்திருத்தச் சீராக்கங்களின் தொடர்கள் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டில் நேர்க் கணிய பெறுபேறுகளை விளைவித்ததுடன் நீண்டகால இறை மற்றும் படுகடன் நீடித்து நிலைத்திருக்கும் தன்மையினை உறுதிப்படுத்துகின்றது.

**தற்போது இடம்பெற்றுவரும் சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டத்தினை தொடர்வது அரசாங்கத்தின் அரசிறை இலக்குகளை எய்துவதற்கும் அதேபோன்று எதிர்வரும் காலப்பகுதியில் இறை இடர்நேர்வுகளைக் குறைப்பதற்கும் மிக இன்றியமையாததாகும்.** பொருளாதார நெருக்கடியின் உச்ச கட்டத்திற்கு மத்தியில் 2022இன் நடுப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட இலங்கையின் இறைச் சீர்திருத்தப் பயணம் புலப்படக்கூடிய பெறுபேறுகளை விளைவிக்கத் தொடங்கியது. கடந்த இரண்டு ஆண்டுகாலப்பகுதியில், தொடர்ச்சியாக இரு ஆண்டுகளாக காணப்பட்ட நேர்க்கணிய ஆரம்ப நிலுவை நிலை, வரி அரசிறை சேகரிப்பின் கணிசமான அதிகரிப்பு மற்றும் சிக்கனப்படுத்தப்பட்ட செலவினம் என்பனவற்றால் அரச நிதியங்கள் வலுவடைந்தன. இது, அண்மைக் காலத்தில் முன்னொருபோதுமில்லாத போக்காகும். முக்கிய வரிச் சீர்திருத்தங்களை ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பதனை பரிசீலனையில் கொள்கையில் அரசிறைச் சேகரிப்பில் எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்படும் எதிர்கால வளர்ச்சி வரி நிருவாக சீர்திருத்தங்களூடாக எய்தப்பட வேண்டும். இது தொடர்பில் குறிப்பாக, மேம்படுத்தப்பட்ட பெறுமதிசேர் வரியினைக் கடைப்பிடிப்பதனூடாக வரி இணங்குவிப்பை அதிகரிப்பது இன்றியமையாததாகும். மேலும், தனிப்பட்டவர்களின் வரி தாக்கல்செய்வதற்கான இலகுவாக்கப்பட்ட நிகழ்நிலை வாயில் அறிமுகப்படுத்தப்பட்டமை, அரசிறை நிருவாகம் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமையினூடாக வரிச் சேகரிப்பின் ஒருங்கிணைப்பு என்பன அரச டிஜிட்டல் மயப்படுத்தலுடன் சேர்ந்து அரசிறைச் சேகரிப்பினை வலுப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. ஊர்திகளின் இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள் தாராள மயப்படுத்தப்பட்டமையிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட அரசிறைச் சேகரிப்புக்களுடன் சேர்ந்து வரிச்சேகரிப்பினை 2025ஆம் ஆண்டுக்கான மொ.உ.உற்பத்தியின் 15 சதவீதம் கொண்ட இலட்சியமிக்க இலக்கினை அடைய இவ்வழிமுறைகள் அவசியமானதாகும். மேலும், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் சீர்த்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவது அவற்றின் நிதியியல் ஆற்றல்வாய்ந்த தன்மையினை மேம்படுத்துவதற்கும் ஆளுகையினை வலுப்படுத்துவதற்கும் அவற்றினால் ஏற்படுத்தப்படும் இடர்நேர்வுகளைக் குறைப்பதற்கும் மிக இன்றியமையாததாகும். பொதுப் பயன்பாடுகளுக்காக செலவினைப் பிரதிபலிக்கும் விலையிடல் பொறிமுறையினைக் கடைப்பிடிப்பது அரசாங்கத்தின் எதிர்பாராத பெறுப்புக்களை தவிர்ப்பதற்கும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் அதிகரித்த கடன்பாடுகளூடாக உள்நாட்டு நிதியியல் முறைமையின் மீது ஏற்படக்கூடிய அழுத்தங்களைத் தவிர்ப்பதற்கும் முக்கியமானதாகும்.

**வரைபடம் 4.3: எறிவுசெய்யப்பட்ட காலாண்டுரீதியான உண்மை மொ.உ.உற்பத்தியின் வளர்ச்சி (ஆண்டிற்காண்டு, %)**




*குறிப்பு:* எதிர்வுகூறல் என்பது வாக்குறுதியோ அன்றில் கடப்பாடோ அல்ல

2025 மாச்சு மாத எதிர்வுகூறல் சுற்றில் கிடைக்கப்பெறுகின்ற தரவுகள், மேற்கொள்ளப்பட்ட ஊகங்கள் மற்றும் தீர்மானங்கள் என்பவற்றை எறிவுகள் பிரதிபலிக்கின்றன.

வீச்சு வரைபடமானது படிப்படியாக மங்கலடைகின்ற நிறங்களின் நம்பிக்கை இடைவெளிகளைப் பயன்படுத்தி அடிப்படை எறிவுப்பாதையைச் சூழ்ந்துள்ள நிச்சயமற்றதன்மையைத் தெளிவுபடுத்துகின்றது. வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள நம்பிக்கை இடைவெளிகள் நடுத்தர காலத்தில் மொ.உ.உற்பத்தியின் வளர்ச்சி தளம்பலடையக்கூடிய பெறுமதிகளுக்குள்ளான வீச்சுகளை எடுத்துக்காட்டுகின்றன. உதாரணமாக, தடிப்பான நீல நிறப்படுத்தப்பட்ட பகுதியானது 50 சதவீத நம்பிக்கை இடைவெளியினை எடுத்துக்காட்டி உண்மையான மொ.உ.உற்பத்தியின் வளர்ச்சி விளைவு இவ் இடைவெளியினுள் அமையப்பெறும் என்ற 50 சதவீத நிகழ்தகவினைக் குறித்துக்காட்டுகின்றது. நம்பிக்கை இடைவெளி நீண்ட காலத்தில் பேரண்ட மாறிகளின் எதிர்வுகூறலின் அதிகரிக்கின்ற நிச்சயமின்மையினைக் காட்டுகின்றது. தளம்பலடைகின்ற உலகளாவிய சூழல் மற்றும் உள்நாட்டுப் பொருளாதாரத்தில் உள்ள நிச்சயமின்மைகள் என்பவற்றினைக் கருத்திற்கொள்கையில் அடிப்படை எதிர்வுகூறல்கள் பல்வேறு உள்ளார்ந்த ஆற்றல்வாய்ந்த மேல்நோக்கிய மற்றும் கீழ்நோக்கிய இடர்நேர்வுகளுக்கு வெளிப்படுத்தலுக்குட்பட்டுள்ளன. ஏதேனும் குறிப்பிடத்தக்க மாற்றம் எறிவுசெய்யப்பட்ட பாதையிலிருந்து அடையப்பட்ட வளர்ச்சிப் பாதை விலகுவதற்கு வழிவகுக்கக்கூடும்.

*மூலம்:* மத்திய வங்கி அலுவலர் எறிவுகள்

## 4.2.6 வளர்ச்சி வாய்ப்புக்கள்

**பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடு பழைய நிலைக்குத் திரும்பியமையின் காரணமாக, 2024இல் கணிசமான மாற்றங்களைப் பதிவுசெய்த இலங்கையின் பொருளாதாரம் நடுத்தர காலப்பகுதியில் சாதகமான வளர்ச்சி உத்வேகத்தினைப் பேணும் என எதிர்பார்க்கப்படுகிறது.** பொருளாதாரம் மற்றும் அரசியல் உறுதித்தன்மை, குறைந்த வட்டி வீதம் மற்றும் பணவீக்கச் சூழல் மற்றும் நேர்க்கணியமான முதலீட்டாளர் மனோபாவம் என்பன நடுத்தரகாலத்தில் வளர்ச்சியை உத்வேகப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. இறக்குமதிக் கட்டுப்பாடுகள் முழுமையாக அகற்றப்பட்டமையினைத் தொடர்ந்து உள்ளீடுகளின் கிடைப்பனவு மேம்பட்டிருப்பதனை தொடர்ந்து, விசேடமாக, கைத்தொழில்துறை அதன் வளர்ச்சி உத்வேத்தினை பலப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக, கட்டுமானத் துறை, குறைந்த வட்டி வீதங்கள், மூலப்பொருட்களை பெறக்கூடியதன்மை மேம்பட்டமை, நன்கொடையாளர்களினால் நிதியிடப்படும் கட்டுமானங்கள் மீளத்தொடங்குவதற்கான சாத்தியத்தன்மை மற்றும் தனியார் துறை மற்றும் வீட்டுத்துறையினரின் கட்டுமானங்கள் என்பனவற்றின் ஆதரவுடன் உறுதியான வளர்ச்சியை பதிவுசெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. அண்மைக் காலத்திலிருந்து நடுத்தர காலப்பகுதி வரையில் பணிகள் துறையின் தோற்றப்பாடு ஆரோக்கியமானதாகக் காணப்பட்டது. இதற்கு குறிப்பாக சுற்றுலாத்தொழில் துறையில் காணப்படும் வாய்ப்புக்களும் மற்றைய துறைகளின் மீட்சியிலிருந்து கசியும் தாக்கம் என்பன பக்கபலமாக விளங்கின. எனினும், 2024இன் பிற்பகுதியிலும் 2025இன் முற்பதியிலும் வானிலை இடையூறுகளின் காரணமாக வேளாண்மைத் துறை குறிப்பிடத்தக்க பின்னடைவுகளை எதிர்நோக்கியதுடன் இது துறையில் செயலாற்றத்தின் மீது எதிர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்தும். அண்மைக் காலத்திலும் நீண்ட காலத்திலும் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் தாக்கத்தின் வானிலை இடையூறுகளினால் வழங்கல்பக்க

அதிர்வுகள் பொருளாதாரச் செயலாற்றத்தின் மீது பல்வேறு முனைகளில் பாதிக்கப்படும் தன்மையினை உருவாக்கும் என்பதனால் முன்கூட்டிய கண்காணிப்பு மேற்கொள்ளப்படவேண்டும். அதேவேளை, இறைத்திரட்சி முயற்சிகளில் எதிர்பார்க்கப்படும் தொடர்ச்சி சுருக்கத்தினை ஏற்படுத்தக்கூடும். மறுபுறத்தில், இறைத்திரட்சி மற்றும் அரசதுறை சீர்திருத்தங்களினூடாக மேம்பட்ட இறைச் செயலாற்றம் உற்பத்தியாக்கம் மிக்க தனியார் துறைக்கு கூடியளவு மூலவளங்களை விடுவித்து, பொருளாதார வினைத்திறனையும் முதலீட்டாளர் மனோபாவங்களையும் உத்வேகப்படுத்துவதன் மூலம் இறையின் கடுமையான சுருக்க தாக்கத்தினை மட்டுப்படுத்துகிறது.

**சவாலான உலகளாவிய சூழலுக்கு மத்தியில் நிலையான மற்றும் உள்ளடக்கிய முறையில் பொருளாதார விரிவாக்கத்தை வலுப்படுத்த, நீண்டகாலமாக நிலுவையில் உள்ள சீர்திருத்தங்கள் வரும் காலங்களில் தீவிரமாக செயல்படுத்தப்பட வேண்டும்.** குறிப்பாக, பாதுகாப்பு சார்ந்த கொள்கைகள் மற்றும் புவிசார் பொருளாதாரங்கள் கூறாக்கல் நடவடிக்கை என்பனவற்றின் காரணமாக வெளிநாட்டுத் தாக்கங்கள் தொடர்ந்து காணப்படுகின்றன. இது, ஏற்றுமதிகளைப் பன்முகப்படுத்தல், இலங்கையின் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் மற்றும் பிராந்திய ஒருங்கிணைப்பினை வலுப்படுத்தல் போன்ற இலங்கையின் ஏற்றுமதிச் செயலாற்றத்தினை மேம்படுத்தக்கூடிய வழிமுறைகளூடாக நாட்டின் வெளிப்புறத் தாக்குப்பிடிக்கும் தன்மையினை மேம்படுத்துகின்ற முயற்சிகளின் முக்கியத்துவத்தை மீண்டும் வலியுறுத்துகிறது. குடித்தொகை வயது முதிர்ந்துவரும் இந்நேரத்தில், விசேடமாக இளமையும் தேர்ச்சியும் பெற்ற தொகுதி தொழிலாளர்களின் புலம்பெயர்வு, பொருளாதாரத்தின் மனித மூலதனத் தளத்திற்கு சில சவால்களை தோற்றுவிக்கின்றன. மேலும், பெண்களின் தொழிற்படைப் பங்கேற்பு வீதம் கணிசமானளவிற்கு குறைவாகக் காணப்படுகின்றமை மற்றும் கல்விகற்ற இளைஞர்களுக்கிடையே காணப்படும் உயர்ந்த தொழிலின்மை வீதம் என்பனவற்றினால் பிரதிபலிக்கப்பட்டவாறு, தொழிலாளர் மூலவள வழங்கல்களின் குறைப் பயன்பாடு பொருளாதாரம் அதன் உண்மையான உள்ளார்ந்த வளத்தினை அணுகுவதற்கு முட்டுக்கட்டையாகக் காணப்படுகிறது. இப்பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்குப் பொருத்தமான அண்மைய மற்றும் நடுத்தரகாலக் கொள்கை வழிமுறைகள், குறிப்பாக, இலங்கையின் குடித்தொகை விரைவாக வயது முதிர்ச்சியடைந்துவரும் பின்னணியில் தேவைப்படுகின்றன. குடித்தொகையினரின் கணிசமான அளவினர் வறுமையின் விளிம்பில் தொடர்ந்தும் வாழ்ந்து வருவதனையும் பொருளாதாரத்தின் வளர்ச்சி உத்வேகத்திற்கு முழுமையாக பங்களிக்கின்ற அவர்களின் செயலாற்றம் வரையறுக்கப்பட்டிருப்பதனையும் பரிசீலனையில் கொள்கையில் அண்மைய காலத்தில் பாதுகாப்பு வலையமைப்பினை பலப்படுத்துவதற்கு முன்னுரிமையளிக்கயளிக்கப்பட வேண்டும். எதிர்பார்க்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல்களும் தற்போதுள்ள தொழிற்சட்டங்களின் நவீனமயப்படுத்தல்களை பன்னாட்டு நியமங்களுக்கு இணையாக தொழில்நிலைச் சட்டத்துடன் ஒருங்கிணைப்பதும் தொழிலாளர் உற்பத்தித்திறனை உயர்த்தி ஒட்டுமொத்த பொருளாதார வினைத்திறனுக்கும் பங்களிக்கும். மேலும், எதிர்பார்க்கப்படும் காணிச் சீர்திருத்தங்கள், கைத்தொழில் அபிவிருத்திக்கான புதிய தேசியக் கொள்கை மற்றும் நாட்டின் தயாரிப்பு மற்றும் வெளிநாட்டுத் துறை செயலாற்றத்தினை உத்வேகப்படுத்துவதற்கான நடுத்தர கால உபாயத்திட்டம் என்பன டிஜிட்டல் பொருளாதாரமொன்றினை கட்டியெழுப்புவதில் அரசாங்கத்தின் வலுவான திட்டங்களுடன் சேர்த்து இலங்கையின் பொருளாதாரத்தின் பரிமாணத்தில் உன்னத நிலையொன்றினைத் தோற்றுவிக்கும். மேலும், மனித வளங்களின் திறனைப் பயன்படுத்த கல்வி, திறன் மேம்பாடு மற்றும் ஆய்வு ஆகியவற்றில் முதலீடு செய்வது மிக முக்கியமான அதே வேளை தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மூலம் அனைத்து துறைகளிலும் உற்பத்தித்திறனை அதிகரிக்க புதுமைகளை வளர்ப்பதும் அவசியம். மேலும், சிறந்த வள ஒதுக்கீடு மற்றும் சேவை வழங்கலை உறுதி செய்வதற்கு அரசதுறை செயற்றிறனில் உள்ள சிக்கல்களை நிவர்த்தி செய்வது மிகவும் முக்கியமானது. மேலும், நிறுவன சீர்திருத்தங்கள் மூலம் சாதகமான முதலீட்டு சூழலை உருவாக்குவது, வளர்ச்சியை துரிதப்படுத்த வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஈர்ப்பதற்கு மிகவும் முக்கியமானது. இவ்வழிமுறைகள் பொருளாதார உள்ளடக்க வசதிகளை விரிவுபடுத்துவதன் மீதும் உயர்ந்த வருமான அந்தஸ்த்திற்கு உயர்த்தும் விதத்தில் பின்தங்கிய

வசதி குறைந்த பிரிவினருக்கு வலுவூட்டுவதன் மீதும் கவனம் செலுத்துதல் வேண்டும். இதன்மூலம் அவர்கள் வறுமைநச்சு வட்டத்திலிருந்து தப்பித்துக்கொள்வதனை இயலுமைப்படுத்துகிறது. மேலும், பொருளாதார வளர்ச்சியை நிலைநிறுத்துவதற்கும் முதலீட்டாளர் நம்பிக்கையை வளர்ப்பதற்கும் கொள்கை நிலைத்தன்மையும் உறுதியும் இன்றியமையாததாகும். அனைத்தையுமுள்ளடக்கிய மற்றும் நீடித்துநிலைத்திருக்கும் வளர்ச்சி உத்வேகத்தின் மீதான பொருளாதார முன்னேற்றத்தினை உறுதிப்படுத்துவதற்கு முறைமையியல் சார்ந்த ஆளுகைப் பலவீனங்களையும், ஊழலையும் சட்ட நடைமுறைப்படுத்தல்களையும் சரியான நேரத்தில் கட்டுப்படுத்துவது பேரண்ட முகாமைத்துவம் வாய்ந்த விடயமாகும்.

4

## 4.3 முடிவுக் குறிப்புக்கள்

*எதிர்வரும் காலத்தில், இலங்கையின் பொருளாதார சுபீட்சமானது பாடுபட்டு உழைத்த பேரண்டபொருளாதார உறுதிப்பாட்டைப் பாதுகாப்பதிலும் பொருத்தமான வளர்ச்சி சார்ந்த சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதிலும் பெரிதும் தங்கியிருக்கும். பொருத்தமற்ற கொள்கைகளினாலும் மீண்டும் மீண்டும் மேற்கொள்ளப்பட்ட கொள்கைத் திரும்பல்களினாலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் இலங்கைப் பொருளாதாரம் பல ஆண்டுகள் பின்நோக்கி நகர்த்தப்பட்டுள்ளது. பொருளாதார சரிவு, அண்மைய நெருக்கடி காலப்பகுதியில் பிரஜைகள் அனுபவித்த இன்னல்கள், அத்துடன் ஒன்றுசேர்ந்த பொருளாதார பாதிப்புக்கள் போன்றன மேலும் கொள்கைத் தவறுகள் ஏற்படுவதற்கு இடமளிக்காது. தற்போதைய சீர்திருத்த முயற்சிகள் இறை மற்றும் படுகடன் நிலைத்தன்மைக்கு தேவையான கட்டமைப்பை வழங்குவதுடன் நிலையான பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் வளர்ச்சி மீதான நீண்டகால கட்டமைப்புத் தடைகளை சரிசெய்கின்றன. இப்பின்னணியில், பொருளாதாரத்தின் அனைத்து ஆர்வலர்களுக்குமான நீண்டகால நன்மைகளை உறுதிசெய்வதற்கு தற்போதைய பேரண்டபொருளாதார சீராக்கத்தையும் வளர்ச்சியை மேம்படுத்தும் கட்டமைப்புசார் சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டத்தையும் பின்பற்றுவதில் உறுதியான அர்ப்பணிப்பு இன்றியமையாததாகும். குறிப்பாக உலகளாவிய ரீதியில் காணப்படும் பாதுகாப்புவாத கொள்கைகள் மற்றும் புவிசார் பொருளாதார கூறாக்கல் நடவடிக்கை காரணமாக அண்மையில் உயர்வடைந்த வெளிப்புற சவால்கள் இலங்கையின் வெளிநாட்டுத் துறையின் பாதிக்கப்படையும் தன்மையை அதிகரிக்கச்செய்யலாம். வணிகப்பொருள் மற்றும் பணிகள் ஏற்றுமதிகளைப் பன்முகப்படுத்தல் மற்றும் நாட்டின் உலகளாவிய மற்றும் பிராந்திய ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவதன் மூலம் வெளிநாட்டுத் துறையின் செயலாற்றத்தையும் தாக்குபிடிக்கும் தன்மையையும் மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தை இது மீண்டும் வலியுறுத்துகின்றது. வெளிநாட்டுத் தாங்கிருப்புகளை மேலும் கட்டியெழுப்புவதை வசதிப்படுத்துவதன் மூலம், அதிகரித்த வெளிநாட்டுச் செலாவணி வருவாய் இயலாற்றலை இது உறுதிசெய்யும். அதேவேளை, நாட்டின் நெருக்கடிக்கு பிந்திய மீட்பின் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையானது, வெளிநாட்டு உற்பத்தித்திறன் வாய்ந்த மற்றும் வெளிநாட்டுச் செலாவணியை உருவாக்கும் துறைகளில் முதலீடுகளைக் கவர்வதில் தங்கியிருக்கின்றது. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கான ஊழலின் பாதிப்பினைக் கொண்டிராத நியாயமான மற்றும் பாதுகாப்பான வியாபாரச் சூழல் மற்றும் வினைத்திறன்மிக்க சட்ட முறைமை போன்றவற்றை உறுதிசெய்வது வியாபாரம் செயற்படக்கூடிய சூழலுக்கான உடனடி சீர்த்திருத்தங்களைத் தேவைப்படுத்துகின்றது. பொருளாதாரத்தின் உள்ளார்ந்த ஆற்றலை விரிவுபடுத்துவதற்கு குறிப்பாக, தொழில்நுட்பத்தை தழுவுதல், டிஜிட்டல் வசதிக்குட்படுத்தும் தன்மை, மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றின் மூலம் கட்டமைப்புசார் பொருளாதார மாற்றத்தை இலக்காகக் கொண்டுள்ள கொள்கைகள் முக்கியமானவையாகும். நீண்டகால இறை நீடித்துநிலைத்திருக்கும் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் குறுகிய இறை இடைவெளிக்குள் பயணிக்க வேண்டியிருப்பதனால், இறை விரிவாக்கத்தினூடாக பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கான ஆற்றல் அண்மைய மற்றும் நடுத்தர காலத்தில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆகையினால், நிலையான கொள்கைகள் மற்றும் தேவையான சட்ட, ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் நிறுவனரீதியிலான ஆதரவு என்பனவற்றின் மூலம் தனியார் துறை பங்கேற்பினைப் பேணி பொருளாதார விரிவாக்கத்தை ஊக்குவித்தல் அவசியமாகும். எனவே, உள்நாட்டு பொருளாதார உறுதிப்பாட்டை நிலைநிறுத்துவதற்கும், அத்துடன் பொருளாதார வளர்ச்சியின் அனைத்தையுமுள்ளடக்கியதும் நிலைபெறத்தக்க வளர்ச்சியை நோக்கி நாட்டின் முன்னேற்றத்திற்கு வழியமைப்பதற்கும் இவ் எதிர்பார்க்கப்பட்ட கட்டமைப்புசார் சீர்த்திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதும் தொடர்வதும் மிகமுக்கியமானதாக விளங்கும்.*

# புள்ளிவிபரப் பின்னிணைப்பு[1]

*அட்டவணை இல.*


| | | |
|---|---|---|
| 1. | உண்மைத் துறை | 1 - 5 |
| 2. | வெளிநாட்டுத் துறை | 6 - 14 |
| 3. | இறைத் துறை | 15 - 16 |
| 4. | நாணய மற்றும் நிதியியல் துறை | 17 - 21 |


[1] புள்ளிவிபரப் பின்னிணைப்பின் இணையதள வடிவம் “எக்சல்” தரவுத்தள வடிவத்தில் கிடைப்பனவாக இருப்பதுடன் மேலதிக தரவுகளை உள்ளடக்குகின்றது.

**வழி** - பிரதான பட்டியல் → வெளியீடுகள் → பொருளாதார மற்றும் நிதியியல் அறிக்கைகள் → ஆண்டிற்கான பொருளாதார மீளாய்வு → ஆண்டிற்கான பொருளாதார மீளாய்வு 2024 → புள்ளிவிபரப் பின்னிணைப்பு

## நிறுத்தலளவையும் முகத்தலளவையும்

### மாற்றல் காரணிகள்

**பிரித்தானிய முறையிலிருந்து மெற்றிக் அலகுகட்கு**

| | | | |
|---|---|---|---|
| 1 ஏக்கர் | | 0.405 | எக்டேயர்கள் (எ.டே) |
| 1 இறாத்தல் (இறா) | = | 0.454 | கிலோ கிறாம்கள் (கி.கி) |
| 1 லோங் தொன் (2,240இறா.) | = | 1.016 | மெற்றிக் தொன்கள் (மெ.தொன்) |
| 1 அந்தர் நிறை | = | 50.802 | கி.கி |
| 1 மைல் | = | 1.609 | கிலோ மீற்றர்கள் (கி.மீ) |
| 1 லோங் தொன் மைல் | = | 1.635 | மெ.தொன் கி.மீ |
| 1 இறா/ஏக்கரிற்கு | = | 1.121 | கி.கி/எக்டேயர் |
| 1 அந்தர்/ஏக்கரிற்கு | = | 125.535 | கி.கி/எக்டேயர் |
| 1 இம்பீரியல் பைந்து | = | 0.568 | இலிற்றர்கள் |
| 1 இம்பீரியல் கலன் | = | 4.55 | இலிற்றர்கள் |

**மெற்றிக் முறையிலிருந்து பிரித்தானிய அலகுகட்கு**

| | | | |
|---|---|---|---|
| 1 எக்டேயர் | = | 2.471 | ஏக்கர்கள் |
| 1 கிலோ கிறாம் | = | 2.205 | இறாத்தல்கள் |
| 1 மெற்றிக் தொன் (1,000 கி.கி) | = | 0.984 | லோங் தொன் |
| 1 மீற்றர் | = | 3.281 | அடி |
| 1 கிலோ மீற்றர் | = | 0.612 | மைல் |
| 1 மெற்றிக் தொன் கிலோ மீற்றர் | = | 0.612 | லோங் தொன் மைல் |
| 1 இலிற்றர் | = | 1.76 | பைந்துகள் = 0.220 இம்பீரியல் கலன்கள் |
| 1 கி.கி/எக்டேயரிற்கு | = | 0.892 | இறா./ஏக்கர் |

**நெல்/அரிசி மாற்றியமைத்தல்**

| | | | |
|---|---|---|---|
| 1 புசல் நெல் (46இறா) | = | 20.87 | கி.கி |
| 1 மெற்றிக் தொன் நெல் | = | 47.92 | புசல்கள் நெல் |
| | = | 0.7 | மெ.தொன். அரிசி |
| 1 மெற்றிக் தொன் அரிசி | = | 68.46 | புசல்கள் நெல் |
| | = | 1.43 | மெ.தொன் நெல் |
| 1 புசல் நெல்/ஏக்கர் | = | 51.55 | கி.கி. நெல்/எக்டேயர் |

**தெங்கு மற்றும் தெங்கு உற்பத்தி மாற்றல்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1 மெ.தொ. தேங்காய் துருவல் | = | 8,960 | காய்கள் |
| 1 மெ.தொ. தேங்காய் எண்ணெய் | = | 9,250 | காய்கள் |
| 1 மெ.தொ. உலர்த்திய தேங்காய் | = | 5,500 | காய்கள் |
| 1 மெ.தொ. தேங்காய் பால் | = | 4,000 | காய்கள் |

## மொத்த உள்நாட்டு உற்பத்தி (அ)

ரூ. மில்லியன்

| பொருளாதார நடவடிக்கை | நடைமுறை சந்தை விலைகள் | | | நிலையான (2015) விலைகள் | | |
|---|---|---|---|---|---|---|
| | 2022 (ஆ) | 2023 (ஆ)(இ) | 2024 (இ) | 2022 (ஆ) | 2023 (ஆ)(இ) | 2024 (இ) |
| **உற்பத்தி அணுகுமுறை** | | | | | | |
| தானியப் பயிர்ச்செய்கை | 1,365,181 | 1,382,566 | **1,605,597** | 619,859 | 634,559 | **633,802** |
| விலங்கு உற்பத்தி | 258,897 | 382,836 | **419,913** | 83,307 | 83,587 | **95,363** |
| காடாக்கலும் குத்திகளும், தாவர இனவிருத்தி, மற்றும் வேளாண்மை ஆதரவு நடவடிக்கைகள் | 143,234 | 162,991 | **171,304** | 84,958 | 80,838 | **78,702** |
| மீன்பிடி | 265,532 | 299,168 | **284,672** | 123,128 | 126,838 | **129,237** |
| சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும் | 450,746 | 401,517 | **438,501** | 198,613 | 154,303 | **184,166** |
| உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலைப் பொருட்களின் உற்பத்தி | 1,703,904 | 1,923,757 | **2,052,231** | 869,371 | 899,739 | **954,409** |
| புடவைகள், அணியும் ஆடை மற்றும் தோல் பொருட்களின் உற்பத்தி | 1,516,471 | 1,432,788 | **1,607,073** | 511,860 | 450,438 | **500,210** |
| ஏனைய தயாரிப்புகள் | 1,508,290 | 1,592,886 | **1,600,388** | 581,223 | 550,105 | **590,681** |
| மின்வலு உருவாக்கம், நீர்வழங்கல் மற்றும் வடிகால் | 71,457 | 298,251 | **290,787** | 220,188 | 213,563 | **226,202** |
| கட்டடவாக்கம் | 1,921,358 | 1,420,359 | **1,643,766** | 927,319 | 734,821 | **877,339** |
| மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம் | 3,343,974 | 3,861,799 | **3,960,306** | 1,675,528 | 1,677,941 | **1,700,232** |
| போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல் | 2,643,732 | 3,519,313 | **3,614,826** | 1,384,456 | 1,443,136 | **1,485,924** |
| தங்குமிடம் மற்றும் உணவுப் பணி நடவடிக்கைகள் | 350,893 | 517,808 | **695,044** | 166,030 | 209,172 | **274,921** |
| தகவல் மற்றும் தொடர்பூட்டல் | 575,546 | 559,246 | **606,743** | 416,328 | 361,295 | **379,388** |
| நிதியியல் மற்றும் காப்புறுதி நடவடிக்கைகள் | 1,701,400 | 2,133,830 | **2,218,227** | 607,931 | 578,719 | **571,587** |
| உண்மைச் சொத்து நடவடிக்கைகள் மற்றும் தொழில்சார், அறிவியல், தொழில்நுட்ப, நிர்வாக மற்றும் ஆதரவுப் பணி நடவடிக்கைகள் | 1,461,506 | 1,713,972 | **1,774,120** | 802,923 | 775,823 | **806,648** |
| பொது நிர்வாக, பாதுகாப்பு, கல்வி, மனிதநலம் மற்றும் சமூகப் பணி நடவடிக்கைகள் | 1,947,558 | 2,055,872 | **2,231,482** | 1,169,143 | 1,162,341 | **1,149,427** |
| ஏனைய பணிகள் (சுய பணிகள் நீங்கலாக) | 1,707,403 | 2,046,582 | **2,081,811** | 995,147 | 998,069 | **1,012,933** |
| **அடிப்படை விலையில் மொத்தப் பெறுமதி கூட்டப்பட்டது** | **22,937,082** | **25,705,544** | **27,296,792** | **11,437,311** | **11,135,286** | **11,651,170** |
| பொருட்கள் மீது வரிகள் கழித்த மானியங்கள் | 1,126,080 | 1,714,260 | **2,601,772** | 723,576 | 742,270 | **821,299** |
| **சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி** | **24,063,162** | **27,419,804** | **29,898,564** | **12,160,886** | **11,877,556** | **12,472,469** |
| **செலவின அணுகுமுறை** | | | | | | |
| நுகர்வுச் செலவினம் | 18,358,203 | 21,270,344 | **22,623,016** | 9,411,644 | 9,184,423 | **9,477,522** |
| தனியார் | 16,618,427 | 19,411,969 | **20,542,233** | 8,054,637 | 7,901,238 | **8,218,038** |
| அரசு | 1,739,776 | 1,858,375 | **2,080,782** | 1,357,007 | 1,283,184 | **1,259,484** |
| மொத்த மூலதன உருவாக்கம் | 6,562,445 | 6,741,168 | **8,060,344** | 2,749,748 | 2,592,539 | **3,138,991** |
| **சந்தை விலையில் மொத்த உள்நாட்டு செலவினம்** | **24,920,648** | **28,011,512** | **30,683,360** | **12,161,392** | **11,776,962** | **12,616,512** |
| பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதி | 5,187,912 | 5,672,921 | **5,945,724** | 2,370,906 | 2,684,186 | **3,019,623** |
| பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதி | 6,045,399 | 6,264,628 | **6,730,520** | 2,371,412 | 2,583,592 | **3,163,665** |
| **சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி** | **24,063,162** | **27,419,804** | **29,898,564** | **12,160,886** | **11,877,556** | **12,472,469** |
| **வருமான அணுகுமுறை** | | | | | | |
| ஊழியருக்கான இழப்பீடு | 6,688,065 | 7,270,257 | **7,645,273** | 3,516,316 | 3,404,991 | **3,529,469** |
| மொத்த தொழிற்பாட்டு மிகை | 7,625,306 | 8,631,351 | **9,217,760** | 3,603,536 | 3,423,908 | **3,643,586** |
| தேறிய தொழிற்பாட்டு மிகை | 6,735,091 | 7,656,785 | **8,236,091** | 3,025,375 | 2,855,691 | **3,087,518** |
| நிலையான மூலதன நுகர்வு | 890,215 | 974,567 | **981,669** | 578,161 | 568,217 | **556,068** |
| மொத்த கலப்பு வருமானம் | 8,567,000 | 9,621,580 | **10,196,011** | 4,280,357 | 4,224,267 | **4,399,538** |
| தேறிய கலப்பு வருமானம் | 8,219,750 | 9,232,833 | **9,804,865** | 4,107,414 | 4,054,659 | **4,232,693** |
| நிலையான மூலதன நுகர்வு | 347,250 | 388,747 | **391,146** | 172,943 | 169,608 | **166,845** |
| உற்பத்தி மீது ஏனைய வரிகளை கழித்த மானியங்கள் | 56,712 | 182,356 | **237,748** | 37,103 | 82,120 | **78,577** |
| **அடிப்படை விலையில் மொத்த பெறுமதி கூட்டப்பட்டவை** | **22,937,082** | **25,705,544** | **27,296,792** | **11,437,311** | **11,135,286** | **11,651,170** |
| பொருட்கள் மீது வரிகள் கழித்த மானியங்கள் | 1,126,080 | 1,714,260 | **2,601,772** | 723,576 | 742,270 | **821,299** |
| **சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி** | **24,063,162** | **27,419,804** | **29,898,564** | **12,160,886** | **11,877,556** | **12,472,469** |

(அ) மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது (அடிப்படையாண்டு 2015)
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

## குடித்தொகை, தொழிற்படை மற்றும் வெளிநாட்டுத் தொழில்நிலை

| விடயம் | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 (அ) |
|---|---|---|---|---|---|
| **குடித்தொகையியல்** | | | | | |
| நடுவாண்டு குடித்தொகை, '000 (ஆ) | 21,919 | 22,156 | 22,181 | 22,037 | **21,916** |
| ஆண் | 10,613 | 10,727 | 10,740 | 10,670 | **10,611** |
| பெண் | 11,306 | 11,429 | 11,441 | 11,367 | **11,305** |
| நடுவாண்டுக் குடித்தொகை வளர்ச்சி, % | 0.5 | 1.1 | 0.1 | -0.6 | **-0.5** |
| குடித்தொகை அடர்த்தி, சதுர கிலோ மீற்றர் ஒன்றிற்கு ஆட்கள் | 350 | 353 | 354 | 351 | **352** (இ) |
| **தொழிற்படைப் போக்குகள் (ஈ)** | | | | | |
| தொழிற்படை, '000 | 8,467 | 8,553 | 8,547 | 8,408 | **8,316** (உ) |
| தொழிற்படை பங்கேற்பு வீதம் (ஊ) | 50.6 | 49.9 | 49.8 | 48.6 | **47.4** (உ) |
| பால் அடிப்படையில் | | | | | |
| ஆண் | 71.9 | 71.0 | 70.5 | 68.6 | **வி.கி.** |
| பெண் | 32.0 | 31.8 | 32.1 | 31.3 | **வி.கி.** |
| தொழில்நிலை தகைமை | | | | | |
| அரசதுறை ஊழியர்கள் | 14.8 | 15.2 | 15.1 | 14.6 | **வி.கி.** |
| தனியார்துறை ஊழியர்கள் | 42.7 | 42.0 | 42.9 | 44.5 | **வி.கி.** |
| தொழில் தருநர் | 2.5 | 2.7 | 2.9 | 2.6 | **வி.கி.** |
| சுயதொழில் புரிவோர் | 33.2 | 33.4 | 33.1 | 32.8 | **வி.கி.** |
| கொடுப்பனவற்ற குடும்பத் தொழிலாளர் | 6.8 | 6.6 | 5.9 | 5.5 | **வி.கி.** |
| மொத்தம் | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | **வி.கி.** |
| பொருளாதார நடவடிக்கையின்படி தொழில்நிலை (எ) | | | | | |
| வேளாண்மை | 27.1 | 27.3 | 26.5 | 26.1 | **வி.கி.** |
| கைத்தொழில் | 26.9 | 26.0 | 26.5 | 25.5 | **வி.கி.** |
| பணிகள் | 46.0 | 46.7 | 47.0 | 48.4 | **வி.கி.** |
| தொழிலின்மை, தொழிற்படையின் % ஆக | 5.5 | 5.1 | 4.7 | 4.7 | **4.4** (உ) |
| பால் அடிப்படையில் | | | | | |
| ஆண் | 4.0 | 3.7 | 3.7 | 3.6 | **வி.கி.** |
| பெண் | 8.5 | 7.9 | 6.5 | 7.0 | **வி.கி.** |
| இளைஞர் தொழிலின்மை (15-24 வயதுடையோர்) | 26.5 | 26.5 | 22.8 | 23.0 | **வி.கி.** |
| **வெளிநாட்டுத் தொழில்நிலை** | | | | | |
| மொத்த வேலைவாய்ப்புகள் | 53,711 | 122,264 | 310,953 | 297,656 | **314,828** |
| பால் அடிப்படையில் | | | | | |
| ஆண் (%) | 60.5 | 66.3 | 60.1 | 55.3 | **59.3** |
| பெண் (%) | 39.5 | 33.7 | 39.9 | 44.7 | **40.7** |
| மனிதவலு வகையின்படி | | | | | |
| தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் (%) | 74.0 | 74.1 | 66.1 | 70.1 | **72.2** |
| குறைந்த அளவிலான தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் (%) | 26.0 | 25.9 | 33.9 | 29.9 | **27.8** |

*மூலங்கள்:* பதிவாளர் நாயகத் திணைக்களம்
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

(அ) தற்காலிகமானது
(ஆ) தரவுகள் குடித்தொகை மற்றும் வீடமைப்பின் தொகைமதிப்பு - 2012இனை அடிப்படையாகக் கொண்டுள்ளன
(இ) குடித்தொகை அடர்த்தி நடுவாண்டுக்குடித்தொகையை மொத்த நிலப்பரப்பால் வகுப்பதன் மூலம் கணிக்கப்படுகின்றது. இலங்கை நில அளவைத்துறை 2024 ஆம் ஆண்டில் நாட்டின் நிலப்பரப்பை 67,240 சதுர கி.மீ (நிலப்பரப்பு: 62,302 சதுர கி.மீ) ஆக மீண்டும் கணக்கிடப்பட்டது. இது முன்னர் 65,610 சதுர கி.மீ (நிலப்பரப்பு: 62,705 சதுர கி.மீ) ஆக அறிவிக்கப்பட்டது.
(ஈ) 15 வயதிற்கும் அதற்கு மேற்பட்டதுமான வீட்டலகு குடித்தொகை
(உ) நான்கு காலாண்டுகளின் சராசரி
(ஊ) வீட்டலகு குடித்தொகையின் சதவீதமாக தொழிற்படை
(எ) பன்னாட்டு நியம கைத்தொழில் வகைப்படுத்தல் - திருத்தம் 4இனை அடிப்படையாகக் கொண்டது
வி.கி. - விபரம் கிடைப்பனவாகவில்லை

## கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (கொ.நு.வி.சு, 2021 = 100)

| காலம் | | சுட்டெண் | | மாதத்திற்கு மாதம் சதவீத மாற்றம் | | ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம் | | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | கொ.நு.வி.சு | கொ.நு.வி.சு (மையம்) | கொ.நு.வி.சு | கொ.நு.வி.சு (மையம்) | கொ.நு.வி.சு | கொ.நு.வி.சு (மையம்) | கொ.நு.வி.சு | கொ.நு.வி.சு (மையம்) |
| 2024 | சனவரி | 200.7 | 176.2 | 2.9 | 2.1 | 6.4 | 2.2 | 14.2 | 11.3 |
| | பெப்புருவரி | 200.6 | 177.2 | 0.0 | 0.6 | 5.9 | 2.8 | 11.3 | 8.5 |
| | மாச்சு | 196.7 | 177.3 | -1.9 | 0.1 | 0.9 | 3.1 | 8.0 | 6.1 |
| | ஏப்பிறல் | 195.2 | 177.3 | -0.8 | 0.0 | 1.5 | 3.4 | 5.7 | 4.4 |
| | மே | 194.1 | 177.0 | -0.6 | -0.2 | 0.9 | 3.5 | 3.9 | 3.3 |
| | யூன் | 195.6 | 177.4 | 0.8 | 0.2 | 1.7 | 4.4 | 3.1 | 2.8 |
| | யூலை | 194.7 | 177.9 | -0.5 | 0.3 | 2.4 | 4.4 | 2.8 | 2.7 |
| | ஓகத்து | 191.1 | 177.3 | -1.8 | -0.3 | 0.5 | 3.6 | 2.5 | 2.7 |
| | செத்தெம்பர் | 190.9 | 177.6 | -0.1 | 0.2 | -0.5 | 3.3 | 2.4 | 2.8 |
| | ஒத்தோபர் | 189.9 | 177.5 | -0.5 | -0.1 | -0.8 | 3.0 | 2.2 | 2.9 |
| | நவெம்பர் | 189.4 | 177.1 | -0.3 | -0.2 | -2.1 | 2.7 | 1.7 | 3.1 |
| | திசெம்பர் | 191.7 | 177.1 | 1.2 | 0.0 | -1.7 | 2.7 | 1.2 | 3.3 |

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

அட்டவணை 4

## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு, 2021 = 100)

| காலம் | | சுட்டெண் | | மாதத்திற்கு மாதம் சதவீத மாற்றம் | | ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம் | | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தே.நு.வி.சு | தே.நு.வி.சு (மையம்) | தே.நு.வி.சு | தே.நு.வி.சு (மையம்) | தே.நு.வி.சு | தே.நு.வி.சு (மையம்) | தே.நு.வி.சு | தே.நு.வி.சு (மையம்) |
| 2024 | சனவரி | 215.0 | 193.9 | 3.0 | 2.2 | 6.5 | 2.2 | 13.4 | 12.3 |
| | பெப்புருவரி | 214.5 | 194.6 | -0.2 | 0.4 | 5.1 | 2.7 | 10.2 | 9.2 |
| | மாச்சு | 210.0 | 194.5 | -2.1 | -0.1 | 2.5 | 3.4 | 7.2 | 6.5 |
| | ஏப்பிறல் | 208.2 | 193.9 | -0.9 | -0.3 | 2.7 | 3.0 | 5.2 | 4.6 |
| | மே | 206.3 | 193.6 | -0.9 | -0.2 | 1.6 | 3.1 | 3.7 | 3.3 |
| | யூன் | 208.1 | 193.7 | 0.9 | 0.1 | 2.4 | 3.9 | 3.0 | 2.7 |
| | யூலை | 206.9 | 193.7 | -0.6 | 0.0 | 2.5 | 3.0 | 2.9 | 2.5 |
| | ஓகத்து | 204.1 | 193.0 | -1.4 | -0.4 | 1.1 | 2.3 | 2.8 | 2.3 |
| | செத்தெம்பர் | 203.1 | 192.5 | -0.5 | -0.3 | -0.2 | 1.9 | 2.7 | 2.3 |
| | ஒத்தோபர் | 202.1 | 192.4 | -0.5 | -0.1 | -0.7 | 1.7 | 2.5 | 2.4 |
| | நவெம்பர் | 202.4 | 192.2 | 0.1 | -0.1 | -1.7 | 1.5 | 2.2 | 2.5 |
| | திசெம்பர் | 204.6 | 192.1 | 1.1 | -0.1 | -2.0 | 1.3 | 1.6 | 2.5 |

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

# கூலி வீதச் சுட்டெண்கள்

| | சுட்டெண் | | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|
| | பெயரளவு | உண்மை (அ) | பெயரளவு | உண்மை (அ) |
| **அரச துறை ஊழியர்களின் கூலி வீதச் சுட்டெண் (2016=100) (ஆ)** | | | | |
| 2020 | 114.6 | 94.8 | 9.2 | 2.9 |
| 2021 | 114.6 | 88.7 | 0.0 | -6.4 |
| 2022 | 133.1 | 70.5 | 16.1 | -20.6 |
| 2023 | 133.1 | 58.1 | 0.0 | -17.5 |
| **2024 (இ)** | **157.8** | **67.9** | **18.5** | **16.8** |
| **முறைசார் தனியார் துறை ஊழியர்களின் குறைந்தபட்ச கூலி வீதச் சுட்டெண் (திசெம்பர் 1978=100) (ஈ)** | | | | |
| 2020 | 4,282.0 | 88.8 (உ) | 0.2 | -4.2 |
| 2021 | 7,469.5 | 146.0 (உ) | 74.4 | 64.3 |
| 2022 | 8,198.6 | 112.9 (உ) | 9.8 | -22.7 |
| 2023 | 8,232.9 | 93.0 (உ) | 0.4 | -17.6 |
| **2024 (இ)** | **8,239.7** | **92.0 (உ)** | **0.1** | **-1.1** |
| **முறைசாரா தனியார் துறை ஊழியர்களின் கூலி வீதச் சுட்டெண் (2018=100) (ஊ)** | | | | |
| 2020 | 112.7 | 102.6 | 6.4 | 0.2 |
| 2021 | 123.1 | 104.7 | 9.2 | 2.1 |
| 2022 | 153.3 | 88.3 | 24.5 | -15.7 |
| 2023 | 170.8 | 82.0 | 11.4 | -7.1 |
| **2024 (இ)** | **181.1** | **85.6** | **6.0** | **4.4** |

(அ) தே.நு.வி.சுட்டெண் அடிப்படையிலமைந்தது (2013=100)

(ஆ) பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சினால் 2016 பெப்புருவரி 25இல் வெளியிடப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 03/2016இல் பொதுத்துறை சம்பள கட்டமைப்பிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட மாற்றங்களைப் பிரதிபலிப்பதற்காக பொதுத்துறை கூலி வீதச் சுட்டெண்ணின் அடியாண்டு 2016க்கு (2012 இலிருந்து) மீள்தளப்படுத்தப்பட்டது. அடிப்படை ஆண்டு தொழில்நிலை கட்டமைப்பு தொடர்பான தரவு நவெம்பர் 2016இல் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட அரசு மற்றும் அரசுசார் துறை தொழில் நிலை கணக்கெடுப்பிலிருந்து பெறப்பட்டது.

(இ) தற்காலிகமானது

(ஈ) 1978 திசெம்பர் 31இல் தொழிலிலுள்ளோரின் எண்ணிக்கையின் அடிப்படையில் நிலையான நிறைகளில் சுட்டெண்கள் கணிக்கப்படுகின்றன.சுட்டெண்களின் கணிப்புக்கு பயன்படுத்தப்பட்ட கூலி வீதங்கள், கூலி நிர்ணய சபையினால் ஒவ்வொரு வர்த்தகத்திற்கும் தீர்மானிக்கப்பட்ட குறைந்த கூலிகளாகும்

(உ) கொ.நு.வி.சுட்டெண் அடிப்படையிலமைந்தது (2006/07=100)

(ஊ) முறைசாரா தனியார் துறை கூலிகள் மற்றும் தொழில்நிலைக் கட்டமைப்பில் ஏற்பட்ட அண்மைய மாற்றங்களை வெளிப்படுத்தும் நோக்கத்தில் முறைசாரா தனியார் துறை கூலி வீதச் சுட்டெண் 2018இற்கு (2012 இலிருந்து) மீள்தளப்படுத்தப்பட்டது. சுட்டெண் இலக்கங்கள் நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையின் மூலம் சேகரிக்கப்பட்ட முறைசாரா தனியார் துறை கூலித் தரவுகளைப் பயன்படுத்தி கணிக்கப்படுகின்றன. 2018இல் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட காலாண்டு தொழிற்படை அளவீட்டிலிருந்து அடிப்படையாண்டு தொழில்நிலை கட்டமைப்பு பெறப்பட்டது.

## ஏற்றுமதிகளின் உள்ளடக்கம்

ஐ.அ.டொலர் மில்லியனில் பெறுமதி

| வகை | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 (அ) பெறுமதி | 2024 (அ) பங்கு (%) | மாற்றம் (%) 2023/2024 |
|---|---|---|---|---|---|---|---|
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | **2,336.2** | **2,729.5** | **2,568.0** | **2,566.5** | **2,774.5** | **21.7** | **8.1** |
| தேயிலை | 1,240.9 | 1,324.4 | 1,258.8 | 1,309.9 | **1,435.9** | 11.2 | 9.6 |
| வாசனைத்திரவியங்கள் | 333.5 | 454.8 | 368.7 | 392.9 | **454.7** | 3.6 | 15.7 |
| தேங்காய் | 345.2 | 425.2 | 400.3 | 336.8 | **416.5** | 3.3 | 23.7 |
| கடலுணவு | 189.8 | 274.1 | 269.0 | 262.2 | **233.0** | 1.8 | -11.2 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 134.7 | 148.8 | 178.8 | 180.9 | **154.2** | 1.2 | -14.8 |
| காய்கறிகள் | 36.6 | 28.5 | 26.7 | 27.7 | **28.5** | 0.2 | 3.1 |
| இறப்பர் | 30.1 | 42.2 | 41.4 | 28.0 | **26.0** | 0.2 | -7.4 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 25.5 | 31.6 | 24.4 | 28.1 | **25.7** | 0.2 | -8.4 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **7,672.0** | **9,702.0** | **10,465.3** | **9,277.7** | **9,946.9** | **77.9** | **7.2** |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 4,423.1 | 5,435.1 | 5,952.0 | 4,878.9 | **5,061.0** | 39.6 | 3.7 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 373.6 | 506.4 | 568.0 | 539.4 | **1,063.5** | 8.3 | 97.2 |
| இறப்பர் உற்பத்திகள் | 786.1 | 1,050.4 | 977.0 | 902.2 | **975.6** | 7.6 | 8.1 |
| உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை | 464.0 | 586.9 | 519.5 | 539.3 | **651.5** | 5.1 | 20.8 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 337.5 | 500.9 | 580.9 | 598.2 | **485.5** | 3.8 | -18.8 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 181.5 | 276.7 | 450.6 | 500.0 | **381.9** | 3.0 | -23.6 |
| இரசாயன உற்பத்திகள் | 172.7 | 223.2 | 223.5 | 193.5 | **234.1** | 1.8 | 21.0 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 110.9 | 156.4 | 176.7 | 178.3 | **186.8** | 1.5 | 4.8 |
| விலங்குத்தீன் | 102.9 | 149.4 | 170.5 | 145.6 | **133.4** | 1.0 | -8.3 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 99.3 | 129.9 | 136.9 | 114.0 | **123.6** | 1.0 | 8.4 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 71.4 | 148.2 | 129.3 | 149.3 | **107.0** | 0.8 | -28.3 |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 53.9 | 58.4 | 85.8 | 71.2 | **62.2** | 0.5 | -12.7 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 176.3 | 78.6 | 60.9 | 56.3 | **53.8** | 0.4 | -4.4 |
| அச்சிடல் கைத்தொழில் பொருட்கள் | 47.9 | 50.0 | 53.1 | 55.1 | **47.5** | 0.4 | -13.9 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 24.0 | 37.4 | 38.1 | 34.0 | **32.1** | 0.3 | -5.6 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 247.0 | 314.1 | 342.4 | 322.5 | **347.3** | 2.7 | 7.7 |
| **கனிம ஏற்றுமதிகள்** | **25.1** | **44.5** | **50.0** | **38.5** | **24.5** | **0.2** | **-36.2** |
| **வகைப்படுத்தப்படாதவை** | **14.1** | **22.6** | **23.2** | **28.0** | **26.1** | **0.2** | **-6.6** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **10,047.4** | **12,498.6** | **13,106.4** | **11,910.7** | **12,772.0** | **100.0** | **7.2** |

(அ) தற்காலிகமானவை

*மூலங்கள்:* இலங்கைச் சுங்கம்
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை
இலங்கை மத்திய வங்கி

## இறக்குமதிகளின் உள்ளடக்கம்

ஐ.அ.டொலர் மில்லியனில் பெறுமதி

| வகை | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 (அ) | | மாற்றம் (%) 2023/2024 |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | பெறுமதி | பங்கு (%) | |
| நுகர்வுப் பொருட்கள் | 3,401.7 | 3,848.7 | 2,813.0 | 3,043.9 | 3,465.7 | 18.4 | 13.9 |
| உணவு மற்றும் குடிவகைகள் | 1,554.4 | 1,666.5 | 1,607.9 | 1,693.0 | 1,914.3 | 10.2 | 13.1 |
| காய்கறிகள் (ஆ) | 352.9 | 384.3 | 318.4 | 358.6 | 446.0 | 2.4 | 24.4 |
| சீனி மற்றும் சிற்றுண்டிகள் | 277.1 | 288.8 | 257.8 | 435.5 | 389.5 | 2.1 | -10.6 |
| எண்ணெய்யும் கொழுப்பும் | 106.9 | 184.1 | 43.9 | 133.9 | 247.9 | 1.3 | 85.1 |
| பால் உற்பத்திகள் | 333.8 | 317.7 | 225.3 | 273.7 | 239.7 | 1.3 | -12.4 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 33.6 | 97.4 | 430.5 | 116.9 | 163.2 | 0.9 | 39.6 |
| கடலுணவு | 188.6 | 122.3 | 66.4 | 79.4 | 118.8 | 0.6 | 49.5 |
| வாசனைத்திரவியங்கள் | 126.9 | 127.2 | 136.6 | 133.4 | 115.7 | 0.6 | -13.2 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 134.7 | 144.7 | 128.9 | 161.6 | 193.6 | 1.0 | 19.8 |
| ஏனைய நுகர்வுப் பொருட்கள் | 1,847.3 | 2,182.2 | 1,205.1 | 1,350.9 | 1,551.4 | 8.2 | 14.8 |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 595.5 | 882.5 | 533.4 | 667.0 | 575.6 | 3.1 | -13.7 |
| புடவை மற்றும் துணைப்பொருட்கள் | 200.7 | 221.3 | 215.6 | 170.0 | 225.8 | 1.2 | 32.8 |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 174.2 | 257.1 | 85.5 | 72.4 | 155.6 | 0.8 | 115.1 |
| தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் | 268.4 | 382.9 | 69.0 | 98.8 | 141.9 | 0.8 | 43.6 |
| வீட்டுச் சாதனம் மற்றும் தளபாடங்கள் | 146.9 | 161.2 | 116.3 | 122.1 | 138.1 | 0.7 | 13.1 |
| இறப்பர் உற்பத்திகள் | 58.3 | 102.3 | 60.6 | 59.2 | 84.9 | 0.5 | 43.4 |
| அழகுசாதன மற்றும் குளியலறைப் பொருட்கள் | 52.6 | 69.7 | 46.5 | 55.0 | 75.2 | 0.4 | 36.8 |
| தனியாள் ஊர்திகள் | 282.9 | 12.8 | 11.7 | 27.7 | 66.2 | 0.4 | 139.2 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 67.9 | 92.5 | 66.7 | 78.7 | 88.0 | 0.5 | 11.8 |
| இடைநிலைப் பொருட்கள் | 9,076.5 | 12,308.9 | 12,438.8 | 11,006.6 | 11,914.5 | 63.2 | 8.2 |
| எரிபொருள் | 2,542.6 | 3,742.9 | 4,896.8 | 4,702.6 | 4,354.4 | 23.1 | -7.4 |
| மசகெண்ணெய் | 583.0 | 625.1 | 483.8 | 1,137.5 | 863.6 | 4.6 | -24.1 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 1,742.2 | 2,840.0 | 4,048.2 | 3,095.4 | 3,173.3 | 16.8 | 2.5 |
| நிலக்கரி | 217.3 | 277.8 | 364.8 | 469.8 | 317.4 | 1.7 | -32.4 |
| புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள் | 2,335.1 | 3,066.9 | 3,065.2 | 2,371.2 | 2,847.1 | 15.1 | 20.1 |
| இரசாயன உற்பத்திகள் | 831.5 | 1,074.4 | 966.2 | 814.7 | 987.0 | 5.2 | 21.2 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 540.2 | 765.7 | 650.8 | 474.6 | 609.3 | 3.2 | 28.4 |
| அடிப்படை உலோகங்கள் | 460.3 | 866.4 | 323.2 | 313.8 | 473.4 | 2.5 | 50.8 |
| தாள் மற்றும் அட்டை மற்றும் அதன் பொருட்கள் | 383.1 | 468.9 | 465.9 | 412.4 | 447.0 | 2.4 | 8.4 |
| கோதுமை மற்றும் சோளம் | 384.4 | 418.3 | 303.1 | 338.2 | 382.5 | 2.0 | 13.1 |
| இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் | 218.7 | 400.7 | 334.7 | 200.2 | 316.5 | 1.7 | 58.1 |
| ஊர்திகளும் பொறி உதிரிப்பாகங்களும் | 239.4 | 349.4 | 254.9 | 232.5 | 301.1 | 1.6 | 29.5 |
| வேளாண்மை உள்ளீடுகள் | 200.8 | 264.2 | 214.5 | 233.8 | 263.8 | 1.4 | 12.9 |
| உணவுத் தயாரிப்புக்கள் | 235.1 | 269.9 | 189.7 | 171.3 | 223.0 | 1.2 | 30.1 |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள் அல்லது பகுதியளவிலான கற்கள் | 117.2 | 143.6 | 203.8 | 268.4 | 216.9 | 1.2 | -19.2 |
| வளமாக்கி | 258.9 | 158.2 | 275.9 | 235.0 | 201.1 | 1.1 | -14.4 |
| கனிம உற்பத்திகள் | 168.9 | 158.9 | 123.7 | 80.9 | 127.2 | 0.7 | 57.3 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 160.3 | 160.4 | 170.4 | 156.9 | 164.1 | 0.9 | 4.6 |
| முதலீட்டுப் பொருட்கள் | 3,563.2 | 4,462.7 | 3,030.5 | 2,744.6 | 3,448.2 | 18.3 | 25.6 |
| பொறி மற்றும் கருவிகள் | 2,176.1 | 2,809.5 | 1,969.0 | 1,867.6 | 2,363.1 | 12.5 | 26.5 |
| கட்டடப் பொருட்கள் | 1,035.6 | 1,248.9 | 926.3 | 775.1 | 927.2 | 4.9 | 19.6 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 348.3 | 398.5 | 132.1 | 98.5 | 154.8 | 0.8 | 57.1 |
| ஏனைய முதலீட்டுப்பொருட்கள் | 3.2 | 5.8 | 3.0 | 3.3 | 3.1 | 0.0 | -6.6 |
| வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள் | 14.0 | 17.1 | 8.8 | 16.0 | 13.0 | 0.1 | -18.8 |
| மொத்த இறக்குமதிகள் | 16,055.4 | 20,637.4 | 18,291.0 | 16,811.1 | 18,841.4 | 100.0 | 12.1 |
| எண்ணெய் அல்லாத இறக்குமதிகள் | 13,512.8 | 16,894.6 | 13,394.2 | 12,108.5 | 14,487.0 | 76.9 | 19.6 |

(அ) தற்காலிகமானவை
(ஆ) பருப்பு வகை, வெங்காயம், உருளைக்கிழங்கு, அவரை வகை மற்றும் பிற காய்கறிகளை உள்ளடக்குகின்றது

*மூலங்கள்:* இலங்கைச் சுங்கம்
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
லங்கா ஐஓசி பிஎல்சி
இலங்கை மத்திய வங்கி

## வர்த்தகத்தின் போக்கு - ஏற்றுமதிகள் (அ)

ஐ.அ.டொலர் மில்லியனில் பெறுமதி

| நாடுகள் | 2020 | | 2021 | | 2022 | | 2023 | | 2024 (ஆ) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பெறுமதி | பங்கு (%) | பெறுமதி | பங்கு (%) | பெறுமதி | பங்கு (%) | பெறுமதி | பங்கு (%) | பெறுமதி | பங்கு (%) |
| **2024இல் பாரிய ஏற்றுமதி சேரிடங்கள்** | | | | | | | | | | |
| ஐக்கிய அமெரிக்கா | 2,500 | 24.9 | 3,108 | 24.9 | 3,321 | 25.3 | 2,769 | 23.2 | **2,911** | **22.8** |
| ஐக்கிய இராச்சியம் | 908 | 9.0 | 938 | 7.5 | 963 | 7.3 | 849 | 7.1 | **906** | **7.1** |
| இந்தியா | 606 | 6.0 | 829 | 6.6 | 860 | 6.6 | 853 | 7.2 | **884** | **6.9** |
| ஜேர்மனி | 570 | 5.7 | 758 | 6.1 | 742 | 5.7 | 589 | 4.9 | **629** | **4.9** |
| இத்தாலி | 455 | 4.5 | 581 | 4.6 | 641 | 4.9 | 675 | 5.7 | **596** | **4.7** |
| நெதர்லாந்து | 290 | 2.9 | 426 | 3.4 | 428 | 3.3 | 343 | 2.9 | **393** | **3.1** |
| ஐக்கிய அரபு இராச்சியம் | 190 | 1.9 | 287 | 2.3 | 355 | 2.7 | 364 | 3.1 | **337** | **2.6** |
| கனடா | 213 | 2.1 | 316 | 2.5 | 361 | 2.8 | 294 | 2.5 | **321** | **2.5** |
| சீனா | 225 | 2.2 | 277 | 2.2 | 255 | 1.9 | 279 | 2.3 | **273** | **2.1** |
| பிரான்சு | 184 | 1.8 | 252 | 2.0 | 249 | 1.9 | 304 | 2.5 | **264** | **2.1** |
| **ஏனைய ஏற்றுமதி சேரிடங்கள்** | | | | | | | | | | |
| அவுஸ்திரேலியா | 175 | 1.7 | 260 | 2.1 | 256 | 2.0 | 228 | 1.9 | **248** | **1.9** |
| ஆஸ்திரியா | 33 | 0.3 | 44 | 0.4 | 51 | 0.4 | 45 | 0.4 | **42** | **0.3** |
| அசர்பைஜான் | 53 | 0.5 | 49 | 0.4 | 69 | 0.5 | 51 | 0.4 | **65** | **0.5** |
| வங்காளதேசம் | 153 | 1.5 | 222 | 1.8 | 211 | 1.6 | 174 | 1.5 | **241** | **1.9** |
| பெல்ஜியம் | 295 | 2.9 | 341 | 2.7 | 310 | 2 | 223 | 2 | **251** | **2.0** |
| பிரேசில் | 43 | 0.4 | 60 | 0.5 | 65 | 0 | 73 | 1 | **85** | **0.7** |
| சிலி | 55 | 0.5 | 56 | 0.4 | 46 | 0 | 47 | 0 | **57** | **0.4** |
| ஹொங்கொங் | 108 | 1.1 | 179 | 1.4 | 168 | 1.3 | 173 | 1.4 | **134** | **1.1** |
| இந்தோனேசியா | 35 | 0.3 | 49 | 0.4 | 50 | 0.4 | 50 | 0.4 | **46** | **0.4** |
| ஈரான் | 79 | 0.8 | 78 | 0.6 | 82 | 0.6 | 43 | 0.4 | **68** | **0.5** |
| ஈராக் | 110 | 1.1 | 177 | 1.4 | 156 | 1.2 | 129 | 1.1 | **160** | **1.3** |
| அயர்லாந்து | 60 | 0.6 | 75 | 0.6 | 96 | 0.7 | 81 | 0.7 | **89** | **0.7** |
| இஸ்ரேல் | 103 | 1.0 | 234 | 1.9 | 189 | 1.4 | 180 | 1.5 | **118** | **0.9** |
| யப்பான் | 188 | 1.9 | 227 | 1.8 | 231 | 1.8 | 190 | 1.6 | **180** | **1.4** |
| ஜோர்டான் | 37 | 0.4 | 47 | 0.4 | 62 | 0.5 | 88 | 0.7 | **73** | **0.6** |
| கென்யா | 25 | 0.2 | 40 | 0.3 | 44 | 0.3 | 44 | 0.4 | **49** | **0.4** |
| லிபியா | 29 | 0.3 | 47 | 0.4 | 42 | 0.3 | 42 | 0.4 | **42** | **0.3** |
| மலேசியா | 57 | 0.6 | 74 | 0.6 | 66 | 0.5 | 62 | 0.5 | **89** | **0.7** |
| மாலைதீவு | 78 | 0.8 | 103 | 0.8 | 106 | 0.8 | 113 | 0.9 | **143** | **1.1** |
| மெக்சிக்கோ | 135 | 1.3 | 205 | 1.6 | 190 | 1.4 | 183 | 1.5 | **182** | **1.4** |
| நோர்வே | 16 | 0.2 | 22 | 0.2 | 29 | 0.2 | 36 | 0.3 | **51** | **0.4** |
| பாகிஸ்தான் | 74 | 0.7 | 92 | 0.7 | 78 | 0.6 | 74 | 0.6 | **76** | **0.6** |
| பேரு | 39 | 0.4 | 31 | 0.2 | 41 | 0.3 | 35 | 0.3 | **47** | **0.4** |
